கோயம்புத்தூர்
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
வணிகவியல் பள்ளி, மொழித்துறை, இந்திய அறிவு அமைப்பு(IKS)



முத்தரசி – கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை

(Muththarasi - Arts Literature and Culture Tamil Journal, Madurai)

(E.ISSN: 2584-1238)


இணைந்து நடத்தும்

அறிவுச் சங்கமம் (Knowledge Confluence)
பன்னாட்டுக் கருத்தரங்கம்

# “வணிகமும் தமிழும்”


பதிப்பாசிரியர்
முனைவர் அ.ஸ்ரீதேவி
தமிழ்த்துறைத் தலைவர்

இதழ் ஆலோசகர்
முனைவர். ரா.ராஜராஜன்
உதவிப்பேராசிரியர், பிஷப் ஹீபர் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 620017


“வணிகமும் தமிழும்”


E-ISSN : 2584-1238

ஆகஸ்டு 2025

E-ISSN : 2584-1238

கோயம்புத்தூர்

நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),

வணிகவியல் பள்ளி, மொழித்துறை, இந்திய அறிவு அமைப்பு (IKS)

&

முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை

**(Muththarasi - Arts Literature and Culture Tamil Journal, Madurai)**

**(E.ISSN: 2584-1238)**

**இணைந்து நடத்தும்**

**அறிவுச் சங்கமம் (Knowledge Confluence)**

**பன்னாட்டுக் கருத்தரங்கம்**

# “வணிகமும் தமிழும்”

பதிப்பாசிரியர்

முனைவர் அ. ஸ்ரீதேவி - தமிழ்த்துறைத் தலைவர்

இதழ் ஆலோசகர்

**முனைவர் ரா. ராஜராஜன்,**

உதவிப்பேராசிரியர் , பிஷப் ஹீபர் கல்லூரி

திருச்சிராப்பள்ளி – 620017

# பதிப்புக்குழு

- முனைவர் சா. சதீஸ்குமார் - தமிழ்த்துறை
- முனைவர் ப. விக்னேஸ்வரி - தமிழ்த்துறை
- முனைவர் அ. கல்பனா - தமிழ்த்துறை
- முனைவர் மா. பாலமுருகன் - தமிழ்த்துறை
- முனைவர் மு. ரஞ்சிதா - தமிழ்த்துறை
- முனைவர் ப. கீதா - தமிழ்த்துறை

## கருத்தரங்கப் புரவலர்கள்

❖ **வழக்கறிஞர் முனைவர் P. கிருஷ்ணதாஸ்**

அறங்காவலர், நேரு கல்விக் குழுமம்,

மொரீஷியஸின் கௌரவ வர்த்தக ஆணையர்

❖ **முனைவர் P. கிருஷ்ணகுமார்**

செயலர் மற்றும் முதன்மைக் கல்வி அதிகாரி, நேரு கல்விக் குழுமம்.

❖ **முனைவர் H. N நாகராஜா**

நிர்வாக இயக்குநர், நேரு கல்விக் குழுமம்.

## கருத்தரங்க ஆலோசனைக் குழுத்தலைவர்

❖ **முனைவர் வே. விஜயகுமார்**

முதல்வர், நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## கருத்தரங்க அமைப்பாளர்கள்

❖ **முனைவர் கா. மைதிலி ஞானப்பிரியா**

தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர், நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

❖ **முனைவர் சா. சரஸ்வதி**

கல்விப் புல முதன்மையர், நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## **நூல் விவரம்**

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | வணிகமும் தமிழும் |
| முதற்பதிப்பு | : | ஆகத்து, 2025 |
| பதிப்புரிமை | : | தங்கமாரி சுடலை,<br>12/6, மேலப்பொன்னகரம் 8வது தெரு,<br>4வது குறுக்கு, ஆரப்பாளையம்,<br>மதுரை – 625016. |
| வெளியீடு | : | **நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர்.** |
| மின்னஞ்சல் முகவரி | : | laks@muththarasi.org |
| வலைதளம் | : | https://muththarasi.org/ |
| E.ISSN No | : | 2584 – 1238 |
| புத்தக அளவு | : | A4 |
| பக்கங்கள் | : | 214 |
| விலை | : | ரூ.350/- |
| அச்சிட்டோர் | : | லேசர் பாயிண்ட், வசந்த நகர்,<br>முதன்மைச் சாலை,மதுரை – 625 003 |



**Late P. K. Das – Founder Chairman, NGI**

Late P. K. Das, the visionary Founder Chairman of Nehru Group of Institutions (NGI), was a towering figure in the educational landscape of South India. A true architect of academic excellence, he emerged as a pillar of leadership, whose legacy continues to shape the lives of countless students and educators. Starting with a humble vision in 1968, he founded the **Nehru College of Aeronautics and Applied Sciences** in Kuniyamuthur, Coimbatore—laying the foundation of what would grow into a vast educational empire. Through unwavering determination, relentless hard work, and iron will, he went on to establish **12 premier institutions** across Tamil Nadu and Kerala. These include four Engineering Colleges, Arts & Science Colleges, a Pharmacy College, an Aviation Institute, three Management Institutions, and the state-of-the-art **P. K. Das Institute of Medical Sciences**, a super specialty hospital at Vaniyamkulam.

By the age of 29, in 1986, he had already embarked on his academic journey as a young visionary in Coimbatore. His leadership transcended administrative duties—he was instrumental in defining strategic goals, fostering academic excellence, and building a strong institutional culture based on discipline, innovation, and global standards. A relentless champion of education, he foresaw and adapted to the changing educational landscape, integrating technological advancements and aligning NGI with global benchmarks. Under his direct guidance and close supervision, each institution blossomed into a Center of Excellence—earning widespread recognition for quality, efficiency, and integrity.

His flagship institution, Nehru College of Aeronautics and Applied Sciences, stands tall as the only college in India offering such a wide array of specializations in Aeronautical Maintenance Engineering. Despite facing countless hurdles and challenges, he never faltered. He stood like a colossus in the field of Technical and Higher Education, earning accolades year after year. His steadfast dedication and visionary leadership transformed NGI into a beacon of excellence. Today, though he is no longer with us, his legacy lives on through his sons—**Adv. Dr. P. Krishnadas**, Chairman & Managing Trustee, and **Dr. P. Krishnakumar**, CEO & Secretary of NGI—who have continued his mission with admirable dedication and brilliance.

**He dreamt of creating a world-class University**—and today, that dream stands fulfilled. With immense pride and reverence, we announce the birth of **P K Das University**, a tribute to his enduring legacy and a testimony to his lifelong commitment to education. It is not merely the realization of his vision but a celebration of the man known as the **Bheeshmacharya of Higher Education**—a title befitting his wisdom, leadership, and unshakable commitment to knowledge.

The saga of P. K. Das is not just history—it is an inspiration for generations to come.



**ADV. DR. P. KRISHNA DAS, Managing Trustee**

More than five decades ago, Nehru Group of Institutions (NGI) was founded with a visionary commitment to serving the community — encompassing both students and society at large — through a unique blend of education and humanitarian initiatives. From its very inception, NGI has stood as a beacon of excellence, driven by the belief that education is a powerful instrument for social transformation. Today, our consortium of 24 institutions stands proudly among the most venerable educational organizations in Coimbatore and Kerala, consistently fostering empowerment and societal progress through diverse disciplines including Aeronautics, Architecture, Arts, Engineering, Science, Medicine, Research, and Technical Education.

Being entrusted with the privilege of leading NGI — an institution adorned with such a rich legacy — is an honour, but also a profound responsibility. I take immense pride in affirming that our institutional growth does not merely stem from impressive infrastructure or cutting-edge technology, but rather from our deeply embedded culture of holistic learning and the unwavering dedication of our human capital. This steadfast focus on nurturing intellectual and ethical excellence has been the cornerstone of NGI's journey over the past fifty years.

NGI was conceived with the primary objective of fostering research-driven education and collaborative academic programs, with the ultimate goal of evolving into a globally renowned centre of excellence. I firmly believe that maintaining intellectual leadership requires active engagement with the corporate world — facilitated through internships, panel discussions, entrepreneurial development programs, and direct interaction with industry leaders. Moreover, our emphasis on innovative pedagogical strategies — encompassing transitional training, coaching, mentoring, and leadership development — will undoubtedly empower our students to become visionary entrepreneurs rather than mere job aspirants. I extend my heartfelt wishes for your continued success and look forward to collectively propelling NGI to new heights of academic and institutional excellence.



**CEO& Secretary**

**DR.P.KRISHNAKUMAR**

At Nehru Group of Institutions, our unwavering commitment lies in empowering both students and professionals to pursue academic excellence and forge successful careers. Every initiative we undertake is meticulously designed to illuminate the right path for them, providing the essential guidance and final impetus needed to help students and faculty realize their fullest potential. In today's highly interconnected and rapidly evolving world, education must transcend conventional boundaries — a philosophy we have consistently upheld by equipping our students with the critical competencies and global perspectives required to thrive in the competitive international landscape.

With this objective at the core of our institutional vision, we continuously strive to enhance awareness of academic programs, practical learning opportunities, internships, communication proficiency, and holistic personal development. To support these efforts, we have created an ecosystem that provides extensive resources, ensuring students gain access to premier employment opportunities in leading institutions and organizations. Through these endeavours, we consider it our privilege to contribute, however modestly, to shaping the innovative, socially responsible leaders and entrepreneurs of tomorrow.

As technology rapidly reshapes the educational and professional realms, we are steadfast in our mission to transform NGI into a globally recognized hub of excellence — a true 'global village' where innovation, inclusive, and intellectual rigor converge. Our vision places particular emphasis on reaching students from economically disadvantaged backgrounds, nurturing their talents, and empowering them to emerge as globally competitive entrepreneurs and thought leaders.

Our unwavering support shall always remain with you, and I extend my best wishes for success in every endeavor you undertake toward the holistic growth and transformative development of the students and faculty of Nehru Group of Institutions.

## PRINCIPAL MESSAGE



Phone: +91 9443417456
Email: veluvijay20@gmail.com

**Dr. V.VIJAYAKUMAR**
**PROFESSOR & PRINCIPAL**
**NEHRU ARTS AND SCIENCE COLLEGE**
**(An Autonomous Institution)**
**(Affiliated to Bharathiar University,**
**Accredited with "A+" Grade by NAAC)**
**Nehru Gardens, Thirumalayampalayam**
**Coimbatore**

Dr.V.Vijayakumar has 25.6 years of experience in Teaching, Research & Development, and Administration. Previously, he served as Controller of Examinations & HoD of Computer Science with Data Analytics, Computer Science with Cyber Security, Digital and Cyber Forensic Science in Sri Ramakrishna College of Arts & Science (Formerly SNR Sons College), Coimbatore, Associate Professor in Computer Applications at Sri Ramakrishna Engineering College, Coimbatore, and as Lecturer & HOD in Computer Science (SF) at Sri Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science, Coimbatore. He was awarded his PhD degree in the area of Video Data mining at Bharathiar University, Coimbatore. He has been recognized as M. Phil and Ph.D Research guide at Bharathiar University and produced two Ph.D. scholars and nine M.Phil. scholars. Currently, he is guiding three Ph.D. Scholars.

He completed the AICTE Research Promotion Scheme project grant to the tune of Rs.10.5 lakh in 2014. He completed the ICSSR-IMPRESS Major Research Project grant of Rs.10 Lakh in September 2021. Also, he completed a minor research project with the support of CST Trust, Coimbatore in 2018 with a grant of Rs. 25,000. He has also completed three minor research projects under a seed money grant from SNR Sons Charitable Trust, Coimbatore in June 2019, December 2020 and July 2024 with a total grant of Rs. 95,000. He has published a patent in the area of cyber safety. He has published sixty-three papers in International/ National Journals/Conferences including Springer and IEEE, of which, eighteen were indexed in Scopus and six in WoS. He has delivered more than a hundred guest lectures in the area of Outcome Based Education and recent trends in information technologies. He has organized more than twenty-five sponsored seminars/Conferences/ workshops for the benefit of the faculty and student community. His research interests include Data Mining, Computer Vision, Data Science and Big Data Analytics.

He was honoured with the Research Project Appreciation Award by Bharathiar University, Coimbatore. He was also appreciated by Analog and Digital Systems for support of the development Coimbatore city surveillance project. He was honoured with the Best Academic Officer Award in 2012 by EMC Corporation Bangalore and was also honoured with the EMC Excellency Award in 2015 for five years of contribution to the Academic and Research community.

He is currently serving as a Chairman / Coordinator / Member of the Board of Studies, Curriculum Development Council, Academic Council and Governing Body. He is serving as a Coordinator for Cyber Lab, Cyber Club and Anti-Ragging Committee. He has actively coordinated for NAAC, NIRF, Magazine rankings and other report preparations. He has also served as an expert member for Academic Audits and Exam Audits. He continues to initiate various MoUs and served as SPoC for TCSiON & ICT Academy.

He is serving as NPTEL Course Translator for Computer Science and Engineering Subjects. He serves as a Subject Matter Expert and Adjunct Faculty at Texila American University, Guyana, South America. He has also developed E-contents for computer science courses for Texila Distance and Blended Learning Program and Bharathiar University – Online Degree Programmes. He is a reviewer of various International Conferences and journals. He is a member of ISTE, IAENG, CSI, IACSIT and CSTA professional societies. He is a Research Fellow at INTI International University, Malaysia.

*******

# வாழ்த்துரை



**முனைவர் பி.மலர்விழி**
இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை
பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரி, குன்னூர், நீலகிரி மாவட்டம்

கோவை, நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் மதுரை, முத்தரசி கலை இலக்கியப் பண்பாட்டு தமிழ் ஆய்விதழும் அறிவுச் சங்கமும் இணைந்து வணிகம் பற்றிய பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்துவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் இலக்கியங்களில் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் சமைந்த சங்க இலக்கியமும், தொடர்ந்து சங்கமருவிய கால நீதி இலக்கியமும், அதன் பிறகு தோன்றிய சமய இலக்கியமும், காப்பிய இலக்கியமும் தனி மனிதனிடம் பரிணமிக்க வேண்டிய வாழ்வியல் அறங்களை வலியுறுத்தி காட்டி அவற்றின் வாயிலாக குடும்பம் செழிக்கவும், நாடு நகரங்கள் மேன்மையுறவும், பல்லுயிர் ஓம்பவும் வழிகாட்டின.

தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே கிரேக்கம், ரோமாபுரி, அசிரியா போன்ற பல மேற்றிசை நாடுகளிலும் இலங்கை,கடாரம் போன்ற பல கீழ்த்திசை நாடுகளிலும் கடல் வாணிகம் சிறப்புறச் செய்தது குறித்து நமக்கு ஏராளமான சான்றுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஓடுகளும் நாணயங்களும் குறிப்பிடத்தக்கவை. மேலும் சில அயல்நாட்டு வணிக ஆவணங்களும் கிடைத்துள்ளன. சங்க காலப்பாடல்களில் பட்டினப்பாலை புறநானூறு,சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பல நூல்கள் தமிழக வாணிபத்தை பற்றிய நிறைய தகவல்கள் தருகின்றன. இதன் மூலம் அங்காடிகள், வணிகர் வீதிகள், துறைமுகங்கள், அயலார் பேசும் மொழிகள், அவர்தம் பழக்க வழக்கங்கள் போன்றவற்றை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. தமிழர்களும் அயல் நாட்டினரும் திருமணம் செய்து கொண்டதாக கூட தெரிகிறது. பட்டினப்பாலை என்ற சங்க நூல் தமிழக வணிகப் பண்பாட்டின் ஒரு பதிவேடாகவே கருதப்படுகிறது. அக்காலத்து தமிழ் வணிகர்கள் அறவழியில் நின்று கொள்வதும் மிகை கொடாது கொடுப்பதும் குறைபடாது பல நாட்டினருடன் வணிகம் நடத்தியது அறிந்து நாம் பெருமை கொள்ளலாம். நீரினின்று நிலம் சேரும் இறக்குமதியான பண்டங்களும் நிலத்திலிருந்து நீர்வழிப் பரவும் ஏற்றுமதியான பண்டங்களும் குவிந்து கிடந்த துறைமுகங்கள் பற்றியும் பட்டினப்பாலை பகிர்வதை இக்கால இளைஞர்கள் தெரிந்து உணர வேண்டும். இன்றைய பொருளாதார நிலை, பண வணிகம், இணைய வணிகம், சுங்கம், சங்கம், கபடம், தடைகள் என பல பரிமாணமான இக்கால வணிகத்தையும் ஒப்பிட்டு, கலந்தாய்ந்து விவாதித்து, இந்த பன்னாட்டு கருத்தரங்கம் வெற்றிகரமாக நடைபெற்று ஆக்கப்பூர்வமான கருத்துக்களை முன்வைக்க வாழ்த்துகிறேன்.அன்றைய வணிக மரபையும் அறத்தையும் ஆராய்ந்து இன்றைய நிலைகளோடு ஒப்பிட்டு பார்த்து தகவல்களைப் பலருக்குக் கொண்டு சேர்க்கும் பணியை இக்கருத்தரங்கு சிறப்பாக நிறைவேற்றும் என்பதில் ஐயமில்லை.

பி.மலர்விழி

# நன்றியுரை



**Dr. A. Sridevi**

**Head, Department of Tamil**
**Nehru Arts and Science College, Coimbatore**

Dr. A. Sridevi is an accomplished academician with over 18.7 years of teaching experience across schools and colleges. She has been serving as an Assistant Professor at Nehru Arts and Science College, Coimbatore, for the past six years and currently holds the position of Head of the Department of Tamil, a role she has undertaken for 5.5 years with dedication and vision.

She pursued her entire academic journey, from Undergraduate to Doctoral studies, at the Government Arts College, Coimbatore, a testimony to her strong foundational training in Tamil studies.

Her areas of academic interest and research include Folklore and Contemporary Tamil Literature, through which she continually engages with cultural narratives and modern literary trends. As a Programme Officer of the National Service Scheme (NSS), she is equally committed to social outreach and student development.

Dr. A. Sridevi has contributed scholarly articles to for edited volumes and seven UGC CARE-listed journals, and has also successfully organized an international conference, showcasing her leadership in academic and cultural forums. She has also guided a scholar at the M.Phil. Level, further enriching her academic contributions.

Her profile reflects a blend of academic excellence, research engagement, and community service, making her a valued contributor in the field of Tamil studies and higher education.

# பதிப்புரை

காலந்தோறும் மக்களின் வாழ்வியலை எடுத்தியம்பும் கருத்துப் பேழையாக இலக்கியங்கள் திகழ்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் நாகரிகத்தையும் எடுத்துரைக்கும் சான்றாதங்களாகச் சங்க இலக்கியங்கள் இருக்கின்றன. அதனைத் தொடர்ந்து வரும் கால வரிசையில் இடம்பெறும் அற இலக்கியங்களும் காப்பிய இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் சிற்றிலக்கியங்களும் இக்கால இலக்கியங்களும் அவ்வவ் காலத்திய வரலாற்றையும் மக்களின் பண்பாட்டையும் எடுத்தியம்புகின்றன. ஆகையால் தான் இலக்கியங்களைக் காலத்தின் கண்ணாடி எனச் சுட்டுகின்றனர்.

இலக்கிய ஆதாரங்கள் பதிவுக்கு உரியதான காலகட்டத்தில் இருந்தே பழந்தமிழகத்தில் உள்நாட்டு வணிகமும் அயல்நாட்டு வணிகமும் மிகுதியாக நடந்திருப்பதைக் காண முடிகின்றது. குறிப்பாக, எட்டுத்தொகை நூல்களில் மிகுதியாக உள்நாட்டு வணிகம் பற்றிய தரவுகளும் பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் உள்நாட்டு வணிகத்தோடு அயல்நாட்டு வணிகமும் நடைபெற்ற தரவுகளும் நிரம்பக் கிடைக்கின்றன.

சிலப்பதிகாரத்தில் கூறப்படும் பூம்புகார் நகரத்தின் மருவூர்ப்பாக்கம் முழுவதுமாகத் திட்டமிட்ட வணிகத் தளமாக விளங்கிற்று. இங்கு உள்நாட்டு வணிகங்கள் மட்டுமல்லாமல் கிரேக்கர்கள், உரோமர்கள், சீனர்கள் போன்ற யவன மக்களும் விரவிக் காணப்பட்டனர். இங்குப் பண்டமாற்று முறையே மிகுதியாக நடைபெற்றது. கரிகாற்பெருவளத்தானின் பூம்புகார் துறைமுகத்தில் உள்ள பொதிகளை வெள்ளிடை மன்றத்திலுள்ள பூதம் காத்தது. மேலும், மதுரைக் காண்டத்தில், மதுரை மாநகரில் உள்நாட்டு வணிகம் செழித்தோங்கிக் காணப்பட்டதையும் கொற்கை முத்து அயல்நாட்டு வணிகத்தில் முதன்மைப் பொருளாக விளங்கியதையும் அறிய முடிகின்றது.

இன்றைய பணப்புழக்கம் இல்லாத அன்றைய காலகட்டத்தில் பண்டமாற்று முறையே உலகம் முழுவதும் இருந்தது என்ற வரலாறு நாம் அனைவரும் அறிந்த உண்மை. 'பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' என்ற பட்டினப்பாலை அடி கிரேக்கர்களும் உரோமர்களும் பண்டைய சேர நாட்டின் மேற்குக் கடற்கரைத் துறைமுகம் வாயிலாகத் தங்கத்தைக் கொண்டு வந்து இறக்குமதி பொருளாக்கி இங்கிருந்து கறியை (மிளகை)ப் பண்டமாற்று முறையில் ஏற்றுமதி பொருளாகக் கொண்டு சென்றதையும் பட்டினப்பாலையின்வழி அறிய முடிகின்றது.

இங்கு நாம் கூர்ந்து நோக்க வேண்டியது யாதெனின், பண்டங்களை இவ்வாறு மாற்றி செல்லும் கடைகளுக்கும் பண்டமாற்றுக்கடை என்ற பெயர் இருந்துள்ளது. இந்த மாற்றுக் கடையே மாறுகடை என்று ஆயிற்று. சான்றாக வேற்று உலகம் -

வேறு உலகம், சாற்றைப்பிழி - சாறுபிழி என்ற பகுதிச் சொற்களின் நடுநின்ற வல்லொற்று நீங்கினாலும் பொருள் மாறாத் தன்மை பெற்றது போல மாற்றுக்கடை என்பது மாறுகடை என்று ஆனாலும் பொருள் மாறாமல் விளங்கிற்று என்பதை நாம் அறியலாம். இந்த மாறுகடை என்ற சொல்லே காலப்போக்கில் குறிப்பாக ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகு அவர்தம் உச்சரிப்பாக 'மார்க்கெட்' என்று ஆனது. குரோம்பேட்டை - குரோம்பேட், சிந்தாதிரிப்பேட்டை - சிந்தாதிரிப்பேட் என்று ஆனதைப் போல மாறுகடை - மார்க்கெட் என்று ஆனதை நாம் எளிதில் உணரலாம்.

அந்த வகையில் உலக அரங்கில் வணிகத்தில் சிறப்புற்று விளங்கிய / விளங்கும் தமிழர்கள் குறித்த இலக்கியப் பதிவுகளைத் தக்க சான்றுகளுடன் எடுத்தியம்பும் ஆவணமாக 'வணிகமும் தமிழும்' எனும் இக்கருத்தரங்கு நடைபெறுகிது. கட்டுரையாளர்கள் அனைவரும் தாம் எடுத்துக்கொண்ட இலக்கியப் படைப்புகளில் காணலாகும் வணிகப் பதிவுகளை நேர்த்தியாக எடுத்தியம்பியுள்ளனர்.

தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் கேரளாவிலும் பல்வேறு கல்வி நிலையங்களை நிறுவி கல்விச் சேவை செய்து வரும் நேரு கல்வி குழுமத்தோடு இணைந்து இக்கருத்தரங்கை நிகழ்த்துவதில் முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ் மகிழ்ச்சியடைகிறது.


இவண்

முனைவர் ரா. ராஜராஜன்

இதழ் ஆலோசகர்

(முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ், மதுரை)

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை

பிஷப் ஹீபர் கல்லூரி ,திருச்சிராப்பள்ளி - 620 017.

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | ஆய்வாளர்கள் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 1 | அமைப்பியல் நோக்கில் தமிழ்த்திரைக்கதைகள் | அ.செல்வக்குமார் | 1 |
| 2 | புறநானூற்றில் காணலாகும் வணிகம் | முனைவர் அ.கல்பனா | 7 |
| 3 | சங்க இலக்கியத்தில் கடல் வணிகம் | முனைவர் அ. ஸ்ரீதேவி<br>ரா. ஸ்ரீ. சாய் ஸ்ரீ ராம் | 12 |
| 4 | பட்டினப்பாலையில் ஏற்றுமதி இறக்குமதி வணிகம் | முனைவர் கி.புவனேஸ்வரி | 16 |
| 5 | தமிழ் இலக்கியத்தில் வணிக இலக்கியம் | முனைவர் மு.ரஞ்சிதா | 21 |
| 6 | திருக்குறளில் இடம் பெற்றுள்ள வணிக மேம்பாட்டுச் | முனைவர் பா.கீதா | 24 |
| 7 | எட்டுத்தொகை நூல்களில் காணலாகும் பண்டமாற்று வணிகம் | முனைவர்<br>மா. சண்முகப்பிரியா | 28 |
| 8 | புறநானூற்றில் பொருள் உற்பத்தியும் பண்டமாற்று மரபுகளும் | முனைவர் பி.மலர்விழி | 32 |
| 9 | **சிலப்பதிகாரம்** காப்பியம் காட்டும் வாணிகம் | முனைவர் சா. சதீஸ்குமார் | 37 |
| 10 | புறநானூறு காட்டும் **வாழ்வியழும் வணிகமும்** | முனைவர் ச.சரளா | 42 |
| 11 | பட்டினப்பாலையை முன் வைத்துத் தமிழரின் வாணிகத் தொடர்பு | முனைவர். ஹெலன்<br>ஜெபா றோஸ் செ.லீ | 46 |
| 12 | திணைக் கோட்பாட்டு நோக்கில் ‘கூழாங்கல்’ திரைப்படம் | ஜெ. காமாட்சி காயத்ரி | 51 |

| வ. எண் | தலைப்பு | ஆய்வாளர்கள் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 13 | புறப்பாடல்களில் நீதி மற்றும் பொருளாதாரம் - ஓர் மார்க்சிய நோக்கு | கு.பவித்ரா | 58 |
| 14 | ஆற்றுப்படை நூல்களில் தரைவழி வாணிகம் | செல்வி அ.கீர்த்தனா, முனைவர் ப.சங்கீதா, | 65 |
| 15 | ‘தப்பலியு நீனாடே மகனே’ நாவலில் வணிகச் சிந்தனைகள் | பை.லட்சுமி | 69 |
| 16 | பழந்தமிழர் வாழ்வில் நீர்ச்சடங்குகள் | மா.போகராஜ் | 75 |
| 17 | பத்துப்பாட்டு கூறும் வணிகர் வாழ்வியல் | ரா. மிருதுளா | 79 |
| 18 | முல்லைக்கலியில் மகளிரின் வணிகச் செய்திகள் | வி. மோனிகா யாழினி | 83 |
| 19 | திருக்குறளில் வணிகவியல் சிந்தனைகள் | முனைவர் ப.விக்னேஸ்வரி | 86 |
| 20 | தமிழர் பண்பாடும் வணிக துறைமுகங்களும் | ஆ. பிரபாகரன் | 89 |
| 21 | சங்க கால பண்டமாற்று வணிகமும் தற்போதைய வணிக நிலையும் ஒரு ஒப்பீடு - | திரு.நா.கிருஷ்ணராஜ் | 97 |
| 22 | இலக்கியங்கள் காட்டும் வணிகர் வாழ்வியல் அறம் | முனைவர் கி. நாகரத்தினம் | 102 |
| 23 | பூமணியின் அஞ்ஞாடி புதினம் வெளிப்படுத்தும் வாழ்வியலும் வணிகமும் | முனைவர் மா. பாலமுருகன், | 106 |
| 24 | வணிகமும் தமிழும் | ஷாபினா. ச வெலன்சியா. ஜா | 109 |

| வ. எண் | தலைப்பு | ஆய்வாளர்கள் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 25 | தாலாட்டுப் பாடல்களில் தொழில் மற்றும் வணிகம் குறித்த பதிவுகள் | கி. ராஜ்குமார் | 114 |
| 26 | சங்க இலக்கியங்கள் கூறும் வணிகத்தின் சிறப்புகள் | மனோஜ்.பி,<br>ஆகாஷ்.ர | 120 |
| 27 | புறநானூறு மற்றும் வாணிகம்: ஓர் ஆய்வு | அப்ரினா பானு .அ,<br>மயூரப்பிரியா .க.சௌ | 124 |
| 28 | பெருமாள் முருகன் சிறுகதைகளில் மனித உறவுகள் | திரு.நா.கிருஷ்ணராஜ் | 127 |
| 29 | தமிழ் இலக்கியத்தில் வணிகக் கூறுகள் | ரித்திஷ் பா.ர,<br>ரித்திகா ர. | 134 |
| 30 | நெய்தல் வாணிகம் | முனைவர் மா.இளையராஜா, | 136 |
| 31 | பட்டினப்பாலையில் வாணிகம் சார்ந்த தொழில்கள் | திரு.அ. ராஜசேகர் | 139 |
| 32 | மருத வாணிகம் | முனைவர். சு செல்வநாயகி | 146 |
| 33 | மறைந்து போன அயலக வணிகத்தளம் காவிரிப்பூம்பட்டினம் | முனைவர் பா.கீதா,<br>முனைவர்அ.இருதராஜ், | 149 |
| 34 | திருக்குறளில் வாணிகம் | முனைவர் ப.சு.மகேஸ்வரி | 153 |
| 35 | கரிப்பு மணிகள் நாவல் உணர்த்தும் உப்பளத் தொழிலாளர்கள் வாழ்வியல் | ஆ.மீரா | **156** |
| 36 | தொல்காப்பியம் கூறும் வணிகம் | சூரிய ஆனந்த்.சு.தி,<br>அபிநயா.ஆ | 160 |
| 37 | பத்துப்பாட்டு கூறும் வணிகர் வாழ்வியல் | ரா. மிருதுளா | 162 |
| 38 | மீளாய்வு பார்வையில் வணிகம் | திரு.நீ.ரஞ்சித் | 166 |

| வ. எண் | தலைப்பு | ஆய்வாளர்கள் பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 39 | தமிழர் பண்பாடும் உப்பு வணிகமும் | உ.ச.எ.தமிழரசன் | 171 |
| 40 | சங்க இலக்கியத்தில் குமரி மலரணியாமை | Prof.THALINJAN Murugaiya | 175 |
| 41 | மதுரைக்காஞ்சி காட்டும் வணிக வாழ்வியல் | முனைவர் கா.சந்தானலெட்மி | **180** |
| 42 | பழந்தமிழகத் துறைமுகங்களும் வணிகமும் | முனைவர் சோ.ஹரிபாண்டிராஜன் | **184** |
| 43 | தமிழர் வணிகத்தில் நாணயங்கள் | முனைவர் ஜெ.குணசீலி | 189 |
| 44 | சிலப்பதிகாரப் புகார் காண்டமும் வணிகப் பண்பாடும் | முனைவர் சு.வினோத் | 194 |

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 1. அமைப்பியல் நோக்கில் தமிழ்த்திரைக்கதைகள்

**அ.செல்வக்குமார்,**
**முனைவர்ப் பட்ட ஆய்வாளர்,**
**திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்.**
**அலைபேசி:7708914015 மின்னஞ்சல் : aselvakumar2811@gmail.com**
ORCID Number: 0009-0009-3704-2742
DOI 10.5281/zenodo.16368445.

**Abstract:**

Studies have been conducted all over the world that have applied the scientific theory of structure to ancient and modern stories and analyzed their elements. The next extension of stories is the development of screenplays. Therefore, the purpose of this study is to examine the possibility of analyzing the visual forms of screenplays using the theory of structure. In this regard, an attempt will be made in this research article to analyze and apply the theory of structure to some specific films of MGR and Sivaji.

**Keywords :** Tamil Film - MGR - Sivaji - Structuralism

## முன்னுரை:

மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்தே ஒரு செய்தியை கடத்துவதற்கு பல்வேறு விதமான செயல்முறைகளை பயன்படுத்தினர்.தொடர் வளர்ச்சியின் காரணமாக எழுத்து உருவாக்கப்பட்டு தங்களின் உள்ள உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் இலக்கியமாக பதிவுசெய்ய ஆரம்பித்தனர். கதை என்னும் இலக்கிய வடிவம் தோன்றி ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு மரபுகளையும் பண்பாட்டு கூறுகளையும் எழுத்து வழியாக கடத்தின. தொழில்நுட்ப வளர்ச்சி, மனித அறிவு வளர்ச்சியில் ஏற்பட்ட புரட்சி காரணமாக கதைவடிவங்கள் காட்சிவடிவங்களாக மாற்றம் பெற்றன. காட்சிவடிவங்களும் சமூகத்தில் நிகழும் பண்பாட்டு கலாச்சார கூறுகளை அடிப்படையாக வைத்தே திரையில் உருவாகின. மனிதர்களையும் அவர்கள் சார்ந்த பண்பாட்டையும் ஆராயும் போது பல்வேறு விதமான ஆய்வுப் போக்குகள் தோற்றம் பெற்றுள்ளன. அவ்வகையில்,எம்.ஜி.ஆர் மற்றும் சிவாஜி ஆகியோரின் திரைப்படங்களை முன்வைத்து "அமைப்பியல் நோக்கில் தமிழ்த்திரைக்கதைகள்" என்ற பொருண்மையில் இவ்ஆய்வுக் கட்டுரை அமையவிருக்கிறது.

## அமைப்பியல் - அறிமுகம்:

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு ஆய்வுமுறைகள் செல்வாக்கு பெற்று ஆய்வுத்தளத்தில் இயங்கின. அதன் அடிப்படையில் அமைப்பியல் ஆய்வுமுறையானது, 20ஆம்நூற்றாண்டு வாக்கில் இரஷ்யாவில் தோற்றம் பெற்று பிராகுமொழி வட்டார அறிஞர்கள், ஐரோப்பிய மற்றும் பிரெஞ்சு அறிஞர்களின் செயல்பாட்டால் பலகட்ட வளர்ச்சியைப் பெற்று உலகம் முழுவதும் பரவத்தொடங்கியது. பெர்டினன்ட் டி சசூர், ரோமன்யாக்கப்சன், விளாடிமிர்பிராப் லெவிஸ்ட்ராஸ் ஆகியோர் அமைப்பியல் ஆய்வில் மிக முக்கியப் பங்காற்றியவர்கள்.

சசூரின் பிரத்தியேகமான மொழியியல் விளக்கங்கள், லெவிஸ்ட்ராஸின் எதிரிணைவு கோட்பாடு, விளாதிமிர்பிராப் மேற்கொண்ட நாட்டுப்புறத் தேவதைக்கதைகளை ஆராய்ந்து அவற்றை பகுத்து பொதுவானப் பண்புகளின் அடிப்படையில் அமைத்த முப்பத்தியொரு உத்திமுறையும் அமைப்பியல் ஆய்வுமுறையை அடுத்தகட்டத்திற்கு எடுத்துச்சென்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

இவ்வாய்வு முறையானது முதலில் மொழியியலில் பயன்படுத்தப்பட்டு பிறகு இலக்கியம், பண்பாடு, அரசியல் சமூகவியல், உளவியல் போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் ஆய்வுமுறையாக வளர்ந்து தற்பொழுது தவிர்க்க முடியாத ஆய்வுமுறையாகப் பார்க்கப்படுகிறது. அமைப்பியல் மொழி, தொன்மம், இலக்கியம் ஆகியவற்றின் உள்ளீடான ஒழுங்கு, முழுமை, கட்டமைப்பு ,உருவம், ஆகியவற்றை ஆராய்ந்து சமூக யதார்த்தத்தில் இருந்து இலக்கியத்தைப் பிரித்து வைத்து இலக்கியத்தை இலக்கிய அலகுகளுக்கு இடையிலான உறவுகளாலும் உறவுகளின் கட்டமைப்பாலும் விளக்கிட முனைகிறது.

“இலக்கியத்தை (அல்லது எந்தப்பொருளையும்) ஆய்வுக்கென எடுத்துக் கொள்கின்றபோது அதனைத் தனக்குள் பலஉறுப்புகள் கொண்ட குறிப்பிட்ட ஓர் ஒழுங்கமைவுடன் கூடிய ஓர் அமைப்பாக அமைப்பியல் காணுகிறது. அமைப்பு என்பது ஒரு முழுமை- இந்த முழுமை அதன் ஒவ்வொரு உறுப்பையும் பகுதியையும் குறிக்கும் என்கிறார்"[1] இலக்கியத்தைப் பிரித்து வைத்து பார்ப்பதைப் போலவே சமூக யதார்த்த உலகில் காட்சிமொழி வடிவமாக விளங்கும் திரைப்படங்களையும் இம்மாதிரியான ஆய்வுமுறை மூலம் நாம் அணுகமுடியும் விளாடிமிர்பிராப் குறிப்பிட்ட 31 வகை உத்திகளின் வழி தமிழ்த் திரைப்படங்களை நோக்கும் போது அவர் குறிப்பிடாத சில உத்திமுறைகளையும் காணமுடிகிறது தற்போது இதனை இன்னொரு ஆராய்ச்சித் தளத்திற்கு எடுத்துச் செல்லவேண்டியுள்ளது. அதன் அடிப்படையில் தமிழ் சினிமாவின் முகங்களாக 1950-களிலிருந்து அறியப்பட்ட எம்ஜிஆர், சிவாஜி கணேசன் ஆகியோரின் படங்களை இக்கோட்பாட்டு அடிப்படையில் ஆராயப்படுகிறது. மனித புலன்களின் விரிவாக்கமாக உருவாக்கப்படும் எந்த ஒரு தொழில்நுட்பமும் ஒட்டு மொத்தமாக மனித உளவியல் அமைப்புகளையும் சமூக அமைப்புகளையும் பாதிக்கிறது. தமிழ் சினிமாவானது மற்ற மொழி சினிமாக்களை விட தனித்த கூறுகளை உள்ளடக்கிய வடிவமாக இருந்து வருகிறது.

**கதையமைப்புகளில் அமைப்பியல் கூறுகள்** :

தொல்கதையை ஆராய்வதற்கு அமைப்பியல் ஆய்வுமுறை மிகவும் பொருத்தமானது. கதையமைப்புகள் தொடர்பான ஆய்விற்கு இவ்வாய்வுமுறை அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பழங்கதையின் ஒருமுனை புராணிகம், ஐதீகங்கள், தெய்வக்கதைகள் போன்ற நாட்டார் மரபைச் சார்ந்து என்றால் மற்றொருமுனை காப்பியங்கள், நாடகங்கள், சிறுகதை புதினங்களுடன் இணைந்துள்ளது. பழங்கதைகளின் நீண்ட வரலாற்றில் கதையமைப்பு, காட்சியமைப்பு, பாத்திரங்களின் குணச்சித்திரங்கள், உரையாடல், முடிவு போன்ற சில அமைப்புக்கூறுகள் இரண்டுக்கும் பொதுவானவை. கண்ணுக்கு புலனாகாத உள்ளார்ந்த அமைப்பையும், கதைகளின் அருவ ஒழுங்கமைவுகளையும் ஆராய அமைப்பியல் கோட்பாட்டு முறையே பொருத்தமுடைதாக இருக்கிறது. இதனை, பழங்கதைகளில் பொருத்திப்பார்த்து ஆய்வுமுடிவுகளை ரஷ்ய நாட்டு அமைப்பியல் அறிஞர் விளாதிமிர் பிராப் வெளியிட்டார். “நாட்டுப்புற தேவதை கதைகளையெல்லாம் தொகுத்து வைத்து அவற்றின் அடியில் ஓடும் பொது அமைப்புகளை கண்டு பல கதைகளை ஒரு குறிப்பிட்ட அமைப்புள்ள சில கதைச் செயல்களாய் சுருக்கினார். இவர் வாக்கிங்களை கிடப்பு போக்கில் படித்து அதனை சுருக்கினார். ப்ராப் நூறு பழங்கதைகளை தேர்ந்தெடுத்து அவற்றை பகுத்தாராய்ந்து பாத்திரங்கள் மற்றும் அவற்றின் செயற்பாங்குகளின் அடிப்படையில் அவற்றின் உள்ளார்ந்த அமைப்புகளை திறந்துகாட்ட முடியும் என்று கூறினார்.”[2] இந்த கதைகளின் பொதுத்தன்மை கூறுகளைப் பகுத்தாராய்ந்து அவர் இந்த கதைகளின் பாத்திரங்கள் மாறிக்கொண்டிருந்தாலும், செயல்பாடுகள் நிச்சயிக்கப்பட்டவை. எல்லா கதைகளிலும் ஒன்று போலவே உள்ளன என்ற முடிவுக்கு


http://Creativecommons.org//license/by/4.0/.

வந்தார். அதுபோலவே தமிழ்த்திரைக்கதையின் கூறுகளும் உள்ளார்ந்த அமைப்பில் எவ்வித மாற்றமில்லாமல் பொதுத்தன்மையோடே இயங்குகின்றன.

கதைகளில் பாத்திரங்களின் செயல்பாட்டை ஆராய்ந்த பிராப் முப்பத்தியொரு உத்திகளுக்கு மேல் போகாது என்ற முடிவுக்கு வந்தார் ஆனால் தமிழ்த்திரைக்கதைகள் அதற்கும் மேற்பட்ட சில உத்திகளை கொண்டு செயல்படுகின்றன. “முப்பத்தியொரு செயல்பாடுகளுடன் ஏழு செயல்துறைகளையும் குறிப்பிடுகிறார். இவை பாத்திரங்கள் ஆற்றும் பங்கு மற்றும் அவற்றின் இயல்பை அடிப்படையாகக் கொண்டவை.

1. வில்லன் (போட்டியாளன் அல்லது விரும்பத்தகாத பாத்திரம்).
2. உபகாரம் செய்பவன்.
3. உதவியாளன்.
4. அரசகுமாரி(காதலி)யும் அவளுடைய தந்தையும்.
5. அனுப்புபவன்.
6. கதாநாயகன் (காதலன் அல்லது 'இரை')
7. மாறுவேடம் பூண்ட (கதா)நாயகன்.”[3]

மேற்கண்ட செயல்துறைகளின் அடிப்படையில் தமிழ்த்திரைக்கதைகள் ஆராயப்பட்டு சில புதிய கூறுகள் கண்டையப்பட்டுள்ளன.

**நாயகன் குணநலன்கள்**

1950 களில் இருந்தே கதாநாயகன் சமூகசிந்தனை உடையவனாக சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு முன் நின்று குரல் கொடுப்பவனாகக் காட்டப்படும் வழக்கம் தோன்றியது. நடுத்தர குடும்பத்தில் பிறந்து உழைத்து முன்னேறும் பாத்திரமாக அமைக்கப்பட்டிருக்கும். தாயின் மீதும், தங்கையின் மீதும் அளவுகடந்த அன்பு, பாசம் போன்ற உணர்வுரீதியாக இப்பாத்திரம் காட்டப்பெறும்

எ.கா- பாசமலர்.,எங்கள் தங்கராசா

கொலை, சண்டை ஆகிய தவறான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் மக்கள் நலன் என்ற அடிப்படையில் மட்டுமே காட்டப்படும்.

எ.கா-பட்டாக்கத்தி பைரவன்

நாயகன் கதாபாத்திரம் தாங்கள் அடைய விரும்பும் அரசியல் இடத்தையும், அவரவர் சார்ந்த இயக்கத்தின் கொள்கைகளையும் பிரதிபலிப்பதாக அமைக்கப்படும்.

எ.கா-பராசக்தி

சில திரைப்படங்களில் நாயகன் பைத்தியக்காரனாகவும், வெகுளியாகவும். பிச்சைக்காரனாகவும் இருந்துகொண்டு சமூகப்பிரச்சினைகளைப் பேசுவான்.

எ.கா- பராசக்தி, மன்னவன்வந்தானடி

நாயகன் செல்வந்தராகவும் மேற்குடி வர்க்கத்தை சார்ந்தவனாகவும் சில திரைப்படங்களில் காட்டப்படுவர்

எ.கா- தீபம்,அவன் தான் மனிதன்,கௌரவம்

**நாயகி குணநலன்கள்**

நாயகி கதாநாயகனை மட்டுமே சுற்றிச்சுற்றி வருவாள் உத்தமியாகவும். வேறு எந்தவொரு நபரையும் பார்க்காதவளாகக் காட்டப் பெறுவாள்.


http://Creativecommons.org//license/by/4.0/.

எ.கா- எங்கள் தங்கராசா

வேறு எந்த ஒரு செயலின் மீதும் அக்கறைக் கொள்ளாமல் கதாநாயகனைக் காணுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருப்பாள்.

எ.கா- பட்டக்கத்தி பைரவன்

பெரும்பாலும் கதாநாயகிகள் செல்வசெழிப்புடைய குடும்பத்தில் ஒற்றைப் பெண்ணாக பிறந்து தந்தையால் வளர்க்கப்படுகிறார்கள்.

எ.கா- தீபம்

தங்கை எனும் பாத்திரம் தந்தை இல்லாமல் தாய் அல்லது அண்ணன் அரவணைப்பில் மட்டுமே வளர்க்கப்படுகிறார்கள்.

எ.கா- பாசமலர்

இது மாதிரியான குணநலன்கள் கொண்ட மனோபாவம் காட்சித் திரையின் வழியாக ஊடுருவி மக்களும் அம்மாதிரியான உளவியலுக்கு ஆட்படுகிறார்கள்.

**மரணம்:**

தமிழ்த் திரைப்படங்களில் இறுதியில் மரணமடையும் துன்பியல் நிகழ்வு காட்டப்பட்டிருக்கும் இதனை நாம் மூன்று வகையாக பிரிக்கலாம் நாயகன் மரணம், நாயகன் குடும்பத்தில் யாரோ ஒருவர் மரணம், பகையாளி மரணம். பெரும்பான்மையான மேலைநாட்டு திரைப்படங்களில் நாயகன் இறுதியில் வெற்றி பெறுபவனாக காட்டப்பட்டிருக்கும். மேலைநாட்டு திரைப்படங்களில் நாயகன் மரணம் அடைவது போன்ற காட்சிகள் பெரும்பாலும் இடம் பெறுவதில்லை.

எ.கா- பாசமலர், அவன் தான் மனிதன், தீபம்

**இரத்த உறவுடையவர்கள் பகையாளியாக இருத்தல்:**

ஒரு தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் மற்றும் ரத்த உறவு உடையவர்களை பகையாளியாக இறுதிவரை காட்டி மகனோ, தாயோ இறக்கும் பொழுது யாரோ ஒருவரின் மூலமாக தன் பகையாளி உறவுடையவன் என்று அறிந்து கொள்ளும் கூறு தமிழ்த்திரைக்கதை அமைப்பில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இருக்கிறது.

எ.கா - கர்ணன் , பட்டாகத்தி பைரவன்

**ஒருவரை ஒருவர் அறியாதிருத்தல்:**

ஒருதாயின் வயிற்றில் பிறந்தவர்கள். ஏதேனும் ஒரு சூழ்நிலை காரணமாக குழந்தை பருவத்திலேயே தங்களை அறியாமல் பிரிந்துவிடுவார்கள். இரத்த உறவுமுறை என்று தெரியாமலேயே பழகியும், நேசித்தும் வருவார்கள். தாய் -மகன் ,அண்ணன் - தம்பி, தந்தை - மகன் போன்ற உறவுமுறைகளை அடிப்படையாக வைத்து இக்கூறு வெளிப்படுகிறது.

எ.கா- எங்கள் தங்கராசா, பராசக்தி, மன்னவன் வந்தானடி, எங்கள் வீட்டுப்பிள்ளை

**இரட்டை வேடம்:**

இரட்டை வேடங்களில் எம்.ஜி. ஆர், சிவாஜி ஆகிய இருவருவருமே குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவில் நடித்திருக்கிறார்கள். எம்.ஜி.ஆர் மட்டும் பதினான்கு படங்களில் இரட்டை வேடமாக நடித்திருக்கிறார். இத்திரைப்படங்களில் எம்.ஜி.ஆர் தன்னை ஒடுக்கப்பட்டவர்களில் ஒருவராகக் கட்டமைத்துக் கொண்டு நீதி வழங்கும் உரிமையைத் தானே எடுத்துக் கொண்டு அவர்களில் இருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டிக்கொள்வார். மற்றொரு வேடத்தில் தன்னை படித்த, செல்வந்த குடும்பத்தில் உள்ளதைப் போலவும் காட்டப்


http://Creativecommons.org//license/by/4.0/.

பட்டிருக்கும். படித்த வேடத்தில் உள்ள எம்.ஜி.ஆரை ஒடுக்கப்பட்ட ஏழ்மை நிலையில் இருக்கும் எம்.ஜி.ஆர் வெல்வதாக சில திரைப்படங்கள் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் சிவாஜிவின் இரட்டை வேடத் திரைப்படங்கள் நடிப்பினை முழுமையாக வெளிப்படுத்தும் தன்மையில் மட்டுமே எடுக்கப்பட்டிருக்கும் இத்திரைப்படங்களில் நாயகன்கள் அண்ணன்- தம்பி, தந்தை - மகன் என்ற உறவு அடிப்படையிலும், பகையாளி என்ற எதிர்தரப்பு அடிப்படையிலும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

எ.கா- ராஜா தேசிங்கு, எங்கள் வீட்டுப் பிள்ளை, அடிமைப்பெண், மாட்டுக்கார வேலன், கௌரவம்

**சத்தியம் வாங்குதல்**

நம்சமூத்தில் ஒருவரிடமிருந்து உறுதியை பெறுவதற்கு சத்தியம் வாங்குதல் அல்லது சத்தியம் செய்தல் என்னும் நம்பிக்கை மிகுதியாக பயன்டுத்தப்படும். இதனை அடிப்படையாக வைத்து திரைப்படங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. கதையின் தொடக்கத்தில் அல்லது இடையில் சாத்தியம் செய்துகொடுக்கும் ஒரு நபர் இறுதியில் அதனை செய்து முடிப்பவராக காட்டப்படும். பெரும்பான்மையாக நாயகனே சத்தியம் செய்து கொடுக்கும் கதாபாத்திரமாகவும் அல்லது பெறப்பட்ட சத்தியத்தை காப்பவனாகவும் கட்டமைக்கப்பட்டிருக்கும்.

எ.கா நம் நாடு

**கருத்துரை:**

தொல்கதைகளான தேவதைக்கதைகளை ஆராய்ந்து அக்கதைகள் அனைத்து குறிப்பிட்ட சில செயல்கூறுகளுக்குள்ளேயே அடங்கி விடுகின்றன என்று விளாதிமிர் பிராப் குறிப்பிட்டுள்ளார். அதுபோலவே தமிழ்த்திரைக்கதைகளை ஆராயும் போது அவற்றின் உள்ளடக்கமும் உள்ளார்ந்த செயல்பாடுகளும் ஒரு சில கூறுகளுக்குள்ளேயே அடங்கி விடுகின்றன. தமிழ்த்திரைக்கதைகளின் செயல்பாடுகள் ஒற்றுமை உடையன என்றும் ஒரே அமைப்பை கொண்டு உருவாகின்றன என்றும் நம்மால் அறிய முடிகிறது. மேலும் எம்.ஜி.ஆர்,சிவாஜி ஆகியோரின் முழுத்திரைப்படங்களையும் ஆய்வுக்குட்படுத்தி இன்னும் புதிய ஆய்வு முடிவுகளை அடையமுடியும்.

**தொகுப்புரை**

அமைப்பியல் கோட்பாட்டை தொடக்க நிலையிலிருந்து விளக்கி பழங்கதைகள் முதல் நவீன கதைகள் வரை அவற்றின் அமைப்புக்கூறுகளையும் செயற்பாங்குகளையும் இக்கட்டுரையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை ஆதாரமாக கொண்டு எம்.ஜி.ஆர்.,சிவாஜி நடித்த குறிப்பிட்ட சில படங்களை ஆராய்ந்து கண்டறியப்பட்ட அமைப்பியல் கூறுகள் புதிய முடிவுகளாக இக்கட்டுரையில் தெரிவு செய்து வழங்கப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. 1.தி.சு நடராசன், திறனாய்வுக் கலை, ப.201.
2. தமிழவன், ஸ்ட்ரக்சுரலிசம், பக்.227.
3. கோபிசந்த் நாரங், அமைப்புமையவாதம் பின் அமைப்பியல் மற்றும் கீழைக் காவியஇயல் பக்.93.


http://Creativecommons.org//license/by/4.0/.

**துணை நூற்பட்டியல்**

1. ஸ்ட்ரக்சுரலிசம், தமிழவன், பாரிவேல் பதிப்பகம்
2. அமைப்புமையவாதம் பின்அமைப்பியல் மற்றும் கீழைக் காவியஇயல், கோபிசந்த் நாராங்க், தமிழில் மொழியாக்கம்: எச்.பாலசுப்பிரமணியம், சாகித்திய அகாதெமி.
3. அமைப்பியல் கோட்பாடும் ஆய்வுகளும் (தொடர்பாட்டு அணுகுமுறை),ஞா. ஸ்டீபன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்.
4. சினிமாத்துவம் காட்சி எந்திரங்களும் காணும் எந்திரங்களும் (சினிமா கோட்பாட்டாக்க கட்டுரைகள்), ஜமாலன்,பாரதி புத்தகாலயம்.
5. அமைப்பியமும் பின்அமைப்பியமும், க.பூரணச்சந்திரன், அடையாளம் பதிப்பகம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 2. புறநானூற்றில் காணலாகும் வணிகம்

**முனைவர் அ.கல்பனா,**
**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை**
**நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை-105**
DOI 10.5281/zenodo.16369375.

**Abstract:**

The life styles of human life can be seen in Tamil literature. The Purananuru is a Sangam Tamil book based on Purathinai, consisting of four hundred poems. It is also known as Puram, Purappattu, and Nanda Parivar. It is one of the eight Puranuru books in the Sangam period Tamil book collection, and Purananuru is one of the Puranuru books that reflects the life of ancient Tamils. The purpose of this article is to point out such commercial news.

**Keywords :** Sangam Literature - Puranaanooru - Commerce & Ethics

## முன்னுரை

தமிழ் இலக்கியத்தின் மனிதவாழ்வின் வாழ்வியல் முறைகளை காணமுடிகிறது. புறநானூறு என்னும் தொகைநூல் நானூறு பாடல்களைக் கொண்ட புறத்திணை சார்ந்த ஒரு சங்கத் தமிழ் நூலாகும். புறம், புறப்பாட்டு, நந்தா விளக்கம் என்றும் வழங்கப்படும். இது சங்க காலத் தமிழ் நூல் தொகுப்பான எட்டுத்தொகை நூல்களில் புறநூல்களுள் ஒன்று. பண்டைத் தமிழர் வாழ்வை உணர்த்துகின்ற ஒன்று புறநானூறு. அத்தகைய வாணிகச் செய்திகளைச் சுட்டிக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வாணிகம்

புறநானூற்றில் இடம் பெற்ற வாணிகம்பற்றியசெய்திகள் காணமுடிகிறது. தாங்கள் தயாரித்த பொருட்களை வியாபாரம் செய்வதும் அதனை பண்டமாற்று முறையில் நடைபெற்றது. நிலத்தில் உற்பத்தியாகும் பொருள்களை விலை கூறி வாணிகம் செய்துள்ளனர். புறநானூற்றில் இடம் பெற்றிருக்கிறது.

> **"மீன்நொடுத்து நெல்குவைஇ.**
> **மிசை யம்பியின் மனைமறுக்குத்து"** (புறம், பா. 343)

என்ற இப்பகுதியில் மீனுக்கு விலையாக நெல்லைப் பெற்ற பண்டமாற்று முறை குறிப்பிடப் பெறுகிறது.

## பண்டமாற்று

பண்டமாற்று அடிப்படையில் தங்களுடைய புலமை அமைவதாகக் கொள்ளக் கூடாது என்று புலவர்கள் பாடிய செய்தியும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

> **"காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்**
> **வாணிகப் பரிசிலன் அல்லேன் "**(புறம், பா. 208)

என்ற பாடல் பெருஞ்சித்திரனார், அதியமான் நெடுமான் அஞ்சி தன்னைக் காணாது தந்த பரிசிலை ஏற்க மறுத்துப் பாடிய பாடலாகும். இதில் புலமை என்ற அறிவுக்குப் பொருள் என்ற பண்டமாற்றத்தைப் பெறுகின்ற வணிகன் அல்லேன் என்று புலவர் குறிப்பிடுகிறார்.

## உப்பு

புறநாநூற்றில் இடம் பெற்றுள்ள வாணிகத்தில் பெரிதும் இடம் பெற்றுள்ள வாணிகம் உப்பு வாணிகமாகும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**“எருதே இளைய நுகம்உண ராவே**
**சகடம் பண்டம் பெரிதுபெய தன்**
**அவல்இழியினும் மிசைஏறினும்**
**அவணது அறியுநர் யார்என உமணர்**
**கீழ்மரத்து யாத்த சேமஅச்சு அன்ன"** (புறம், பா. 102)

என்ற இப்பகுதியின் பொருள் - வண்டியில் பூட்டப் பெற்ற எருதுகள் இளைமை வாய்ந்தன. வண்டியில் ஏற்றப் பெற்ற பொருளோ சுமை பெரிது. ஆகையால் பள்ளம் மேடுகளில் ஏறி இறங்கும் பொழுது அச்சு முறியாத பாதுகாப்பிற்கு அச்சிற்குப் பக்கத்தில் பாதுகாப்பு அச்சு என்ற சேம அச்சு இணைக்கப் படும் என்ற செய்தி பொருளாக அமைந்துள்ளது.

உப்பு கடற்கரை நீரில் விளைவதால் கடற்கரையில் மட்டும் உப்பை விற்காது, உப்பைச் சேகரித்து வண்டிகளில் சுமையாக ஏற்றி, மலைநாடு போன்ற இடங்களுக்குச் சென்று உப்பு வணிகர், உப்பு வாணிகத்தைச் செய்தனர் என்பதும் புறநானூற்றில் பதிவு செய்யப் பெற்றுள்ளது.

**“கழிஉப்பு முகந்து கல்நாடு மடுக்கும்**
**ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்**
**உரனுடை நோன்பகட்டு அன்ன"** (புறம், பா. 60)

என்ற இப்பகுதி உப்பு வண்டி மலைநாடு நோக்கிச் சென்றதையும், பாரம் மிகுந்த உப்பு வண்டியை எருதுகள் இழுத்துச் செல்லும் என்பதையும் குறிப்பிடுகிறது. இதனையே புறநானூற்று மற்றொரு பாடலும் குறிப்பிடுகிறது.

**“பீரை நாறிய சுரைஇவர் மருங்கி**
**ஈத்திலைக் குப்பை ஏறிஉமணர்**
**உப்புஒய் ஒழுகை எண்ணுப மாதோ"** (புறம், பா. 116)

என்ற பகுதி பாரிமகளிரின் துன்ப நிலையைக் குறிப்பிடுவதாகும். பாரி வாழ்ந்த காலத்தில் அவனுடைய மகளிர் பறம்பு மலையில் ஏறி வருகின்ற பகைவரின் குதிரைகளை எண்ணினர். ஆனால் பாரி இறந்த பிறகு இப்பொழுதோ ஈச்ச மரத்தின் இலைகள் உதிர்ந்து குவிந்திருக்கும் குப்பை மேட்;டில் ஏறி இருந்து கொண்டு, அவ்வழியே செல்லுகின்ற உப்பு வாணிர்; ஓட்டிச் செல்லும் வண்டிகளை எண்ணுகின்றனர் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது.

**“கழியே சிறுவெள் உப்பின் கொள்ளை சாற்றி**
**பெருங்கல் நன்னாட்டு உமண்ஒலிக் குந்து"** (புறம்,பா. 386)

என்ற இப்பகுதியில் உப்பு வாணிகம் செய்வோர் உப்பு விலையை உரக்கக் கூறி விற்பர் என்பதும், உயர்ந்த மலைப் பகுதிக்குச் சென்று விற்பர் என்பதும் பெறப்படுகிறது. உப்பு வாணிகம் சிறந்தது என்பதையும் புறநானூறு பதிவு செய்துள்ளது.

**“களிறொடு நெழுந்தேர் வேண்டினும் கடவன்**
**உப்பொய் சாகாட்டு உமணர் காட்ட**
**கழிமுரி குன்றத்து அற்றே"** (புறம், பா. 313)

என்ற இப்பகுதியில் பிறருக்குக் கொடை கொடுக்கக் கூடிய பொருள் தன்பால் இல்லை என்றாலும் பொருளற்ற வள்ளல் ஒருவன் கொடுக்கும் மனம் இருப்பதால் இகழ்ச்சிக்கு உரியவன் அல்லன். எதுபோல என்றால் உப்பு விற்கும் வணிகராகிய உமணருக்குப் பெருஞ் செல்வத்தைத் தேடித் தருகின்ற உப்பு விளையும் இடம் அழுக்குடைய கடல்நீர் சூழ்ந்த உப்பங் கழியாக இருந்தாலும், கிடைக்கும் உப்பு சிறந்ததாக அமைவது போல என்று உப்பின் சிறப்பு


http://Creativecommons.org//license/by/4.0/.

உவமையாகக் கூறப் பெற்றுள்ளது. இவ்வாறு உப்பு வாணிகம் பற்றிய செய்திகள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

**கப்பல்**

புறநானூற்றில் இடம் பெற்றிருக்கும் உப்பு வாணிகம் போல, நெய்தல் நிலத்தில் சிறப்பிடம் பெறுகின்ற மரக்கல வணிகமும் புறநானூற்றில் பல பாடல்களில் பதிவு செய்யப் பெற்றுள்ளன. மரக்கல வாணிகத்திற்குப் பயன்படுத்தப் பட்ட மரக்கலங்கள் பற்றிய செய்திகளைப் பலவாறாகப் புறநானூறு குறிப்பிடுகிறது. அரசர்களின் யானைகளைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது மரக்கலம் போன்று பெரிய உருவம் உடையது என்று குறிக்கப் பெறுகிறது.

**“மறலி யன்ன களிற்றுமிசை யோனே**
**களிறே முந்நீர் வழங்கு நாவாய் போலவம் "** (புறம்,பா. 13)

என்ற இப்பகுதியில் களிறு போன்று மரக்கலம் கண்ணுக்குப் பெரிதாகக் காட்சி அளிக்கக் கூடியது என்று குறிப்பிடுகிறது.

**“நளிகடல் இருங்குட்டத்து**
**வளிபுடைத்த கலம் போலக்**
**களிறு சென்று களன் அகற்றவும்"**(புறம், பா. 26)

என்று களிற்றுக்கு மரக்கலம் உவமையாகக் கூறப்பெற்றுள்ளது. இந்த மரக்கலம் காற்றினால் செலுத்தப் படுவது என்பதையும் குறிப்பிடுகிறது. கடலில் செலுத்தப் படுகின்ற மரக்கலம் பாய்மரக் கப்பலாக அமைந்தது என்பதையும் புறநானூறு குறிப்பிடுகிறது.

**பிற வாணிகங்கள்**

உப்பு வணிகம், கடல் வணிகம் போன்ற பெரு வணிகத்தோடு சிறு சிறு வணிக முறைமைகளும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன.

**கள் வாணிகம்**

புறநானூற்றில் கள்ளை உணவாகப் பயன்படுத்துகின்ற முறைமை காணப் பெறுகின்றது. இந்தக் கள் உணவு சிறப்பு நாட்களில் பெரிதும் பயன்பெற்றது. இந்தக் கள்ளுக்கு விலையாகப் பண்டமாற்று முறையில் வேற்று நாட்டிலிருந்து கொண்டு வந்த ஆநிரைகளைக் கொடுத்துக் கள்ளினைப் பெற்று உண்ட மகிழ்வுச் செய்தியைக் கீழ்வரும் பாடல் குறிப்பிடுகிறது.

**“முட்கால் காரை முதுபழன் ஏய்ப்பத்**
**தெறிப்ப விளைந்த தேங்கந் தாரம்**
**நிறுத்த ஆயம் தலைச்சென்று உண்டு"** (புறம்,பா. 258)

என்ற இப்பாடற் பகுதியின் பொருள் - முள் பொருந்திய தாளை உடைய காரைச் செடியின் முதிர்ந்த பழத்தைப் போன்ற, நன்கு விளைந்த கள்ளினைக், காந்தாரம் என்ற இடத்திலிருந்து கொண்டு வந்த ஆநிரைகளை விலையாகக் கொடுத்து உண்டனர் என்ற செய்தி இதில் அமைந்துள்ளது. இந்தக் கள்ளை வியாபாரம் செய்கின்றவர்கள் குடங்களில் கள்ளை நிரப்பி, வியாபாரம் செய்துள்ளனர்.

**“அருப்பம் பேணாது அமர்கடந் ததூஉம்**
**துணைபுணர் ஆயமொடு தசும்புடன் தொலைச்சி"** (புறம்,பா..224)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற இப்பகுதியில் குடத்தில் இருந்த கள் குடிக்கப் பெற்றது என்பதால் கள் வைக்கப் பெற்ற மட்கலம் குறிக்கப் பெறுகிறது எனலாம்.

**மீன் வாணிகம்**

கள் விற்கப்படும் பொருளாக அமைந்தது போல தூண்டிலால் பிடிக்கப் பெற்ற மீனும் விலைக்கு விற்கப் பட்டு மீன் வாணிகம் நடந்ததைப் புறநானூறு குறிப்பிடுகிறது. பண்ட மாற்று முறையில் மீன் விற்கப் பட்டு நெல் கொள்ளப் பட்டது முன்பு கூறப்பட்டது. பிறிதொரு பாடலில் மீன் விற்கப் பட்ட பொருளைக் கொண்டு உணவுப் பொருள்கள் வாங்கி வந்து புளிங் கூழ் தயாரிக்கப் பட்டது என்பதைப் புறநானூறு குறிப்பிடுகிறது.

**"நெடுங்கழைத் துண்டில் விடுமீன் நொடுத்துக்**
**கிணைமகள் அட்ட பாவற் புளிங்கூழ்"** (புறம்,பா. 399)

என்ற பகுதி முன்குறித்த பொருளைத் தருகின்ற பகுதியாகும். இதில் மூங்கில் குச்சியால் தூண்டில் செய்யப் பெற்று, மீன் பிடிக்கப் பெற்றது என்றும், அது நொடுத்து என்பதால் விற்கப் பெற்றது என்பதும் , பண்ட மாற்று முறைமையால் உணவுப் பொருள்கள் வாங்கப் பெற்றுப் பாணர் மகள் புளிச்சுவையை உடைய கூழைத் தயாரித்தாள் என்பதும் பெறப்படுகிறது.

**கரும்புச்சாறு வாணிகம்**

புறநானூற்றுக் காலத்தில் விளைபொருள்களில் ஒன்று கரும்பு ஆகும். கரும்பினை வெட்டிச் சாறு எடுத்துக் காய்ச்சிக் கரும்புக் கட்டிகளை வியாபாரத்திற்கு உரியதாக ஆக்குகின்ற கரும்பாலை இருந்தமை புறநானூற்றுப் பகுதியால் தெரிகிறது.

**"கரும்பின் எந்திரம் சிலைப்பின் அயலது**
**இருஞ்சுவல் வாளை பிறழும் ஆங்கண்"** (புறம், பா. 322)

என்ற இப்பகுதியில் போர் வீரனின் ஊரில் கரும்பைப் பிழியும் ஆலை இருந்திருக்கிறது. அந்த ஆலையில் எழுந்த ஒலியால் பக்கத்து நீர் நிலையில் உள்ள வாளை மீன்கள் துள்ளிப் பாய்ந்தன என்று கூறப்பெற்றுள்ளது.

**பூ வாணிகம்**

புறநானூற்றில் பூவினை விலைக்கு விற்கின்ற வாணிகமும் கூறப் பெற்றுள்ளது.

**"ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகஎன**
**மாட மதுரையும் தருகுவன்"** (புறம், பா. 32)

என்ற இப்பகுதியில் பண்டமாற்று முறையில் பூவானது விற்கப் பெற்றுள்ளது என்பது தெரிகிறது. மேலும் வீடுகள் தோறும் பூ விற்கப் பட்டது என்பதும் தெரிய வருகிறது.

**தயிர் வாணிகம்**

உழவுத் தொழில் செய்யும் உழவர் வீட்டில் இடையராம் கோவலர் வீட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட தயிர்ப்பானை நிறைந்திருக்கிறது என்ற செய்தி புறநானூற்றுப் பாடலில் இடம் பெற்றுள்ளது. பாடற் பொருள் குறிப்பைப் பார்க்கும் பொழுது, உழவர் வீட்டில் இடையரின் தயிர் பானையில் இருந்தது என்று கூறப்பட்டுள்ளதால் தயிர் வாணிகம் இருந்தமை குறிப்பாகத் தெரிகின்றது.

**"ஆய்மகள்**
**தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய**
**ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்"** (புறம், பா. 33)


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238


என்ற இப்பகுதியில் ஆய்மகள் என்ற சொல் இடையர்; மகளையும், ஏரின் வாழ்நர் என்ற தொடர் உழவர் மகளையும் குறித்து, இரண்டு பெண்களையும் தொழில் அடிப்படையில் குறிப்பிடுவதால் பண்டமாற்று முறைமையில் வாணிகம் நடந்தது பெறப்படுகிறது.

**முடிவுரை**

வாணிகம் என்பது மக்களுக்கு எந்த சூழ்நிலையிலும் தேவையாகவே உள்ளது வாணிபத்தில் வளர்ச்சி பெறுவது முக்கியமான முன்னேற்றமாகும்.பண்டைய காலத்தின் வாணிபவளர்ச்சி மக்களின் உழைப்பைக்காட்டுகிறது புறநானுறு பாடல் வீரத்தை மட்டும் உணர்த்தாமல் உழைப்பை வெளிப்படுத்துகிறது

**துணைநூற்பட்டியல்:**

1. புறநானுறு ; பதிப்பாளர். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1981
2. தமிழின்பக் கட்டுரைகள் (பேரா.ரா.பி. சேதுப்பிள்ளை), பழனியப்பா பிரதர்ஸ் கோனார் மாளிகை' 14, பீட்டர்ஸ் ரோடு, சென்னை - 600 014
3. தமிழர் நாகரீகமும் பண்பாடும் (அ. தட்சணாமூர்த்தி), ஐந்திணைப் பதிப்பகம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 3. சங்க இலக்கியத்தில் கடல் வணிகம்

முனைவர் அ. ஸ்ரீதேவி
துறைத்தலைவர் - தமிழ்த்துறை
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.105 கைப்பேசி:9788137991
மின்னஞ்சல் முகவரி : a.sridevi4@gmail.com

ரா. ஸ்ரீ. சாய் ஸ்ரீ ராம்
முதலாம் ஆண்டு கணினி அறிவியல்
மற்றும் தரவு அறிவியல்
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருமலையாம்பாளையம்
கோயம்புத்தூர்



DOI 10.5281/zenodo.16411978.

---

**Abstract:**

Sangam literature vividly portrays the flourishing sea trade of ancient Tamilakam, highlighting its pivotal role in shaping the region's economy and culture. The texts reveal extensive maritime networks connecting Tamil lands with distant shores like Sri Lanka, Southeast Asia, and the Arabian Peninsula. Merchants traded spices, precious gems, textiles, and aromatic goods, showcasing Tamil expertise in navigation and commerce. Sea trade fostered prosperity, leading to the rise of wealthy port cities and vibrant cultural exchanges. The Sangam poets celebrate the courage of sailors and the allure of the ocean, reflecting the deep bond between the people and the sea. This maritime commerce not only enriched Tamil society materially but also enhanced its political and diplomatic stature. Sangam works such as *Purananuru* and *Pathinenkilkanakku* immortalize the grandeur and significance of sea trade. The literature honours the adventurous spirit of traders who braved the vast ocean to establish far-reaching trade links. Ultimately, Sangam poetry presents sea trade as a symbol of Tamil civilization's dynamism, resilience, and cosmopolitan outlook. It stands as a timeless testament to the ancient Tamil mastery over the seas and commerce.

**Keywords:** Passage – sea route - Cargo – cargo - Ocean – sea - Storm – sea-borne wind - Crossroads – merchant

## முன்னுரை:

> **"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு**
> **இவ்வுலகம் இல்லாகி யாங்கு"1**

சங்க இலக்கியம் தமிழரின் தொன்மையான இலக்கியச் சேமிப்பாகும். சங்கக் கவிஞர்கள் கடல் வணிகத்தின் முக்கியத்துவத்தையும் அதன் அழகையும் கவிதைகளில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளனர். சங்க இலக்கியம் தமிழர் பழங்கால சமூகத்தையும் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் மிக முக்கியமான நூல்கள் ஆகும். அந்தக் காலத்தில் தமிழகம் கடல் வணிகத்தில் சிறந்த முன்னேற்றத்தை அடைந்திருந்தது. கடல் வழியாக பல நாடுகளோடு வணிகம் நடைபெற்று வர்த்தகம் விருத்தியடைந்தது. மிளகு, கொடங்கு, வாசனைப்பொருட்கள் போன்றவை கடல்மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டன. சங்க இலக்கியத்தில் கடல் வணிகம் சமூகத்தின் பொருளாதார மற்றும் பண்பாட்டு முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகித்தது. இதன் மூலம் தமிழர்கள் கடல் வழிப்பயணத்தில் மற்றும் வணிகத்தில் திறமை பெற்றவர்கள் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

தமிழ் இலக்கியங்களில் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பட்டினப்பாலைப் போன்ற நூல்கள் கடல் வணிகத்தைப் பற்றியப் பலக் குறிப்புகளைத் தருகின்றன. தமிழகத்துடன் பல நாடுகளுக்குக் கடல் வணிகம் நடைபெற்றதை


http://Creativecommons.org//license/by/4.0/.

**"வேறு பன்னாடிற் காறர வந்த**
**பல வினை நாவாய் தோன்றும் பெருத்துன"2**

என்ற நற்றிணை பாடல் கூறுகிறது.

**'சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்**
**கருவி லோச்சிய கண்ணகன் எறுழ்த்தோள்**
**கடம்பமர் நெடுவேள் அன்ன மீளி**
**உடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்**
**தடவு நிலைப் பலவின் முழுமுதற் கொண்ட**
**சிறுசுளைப் பெரும்பழம் கடுப்ப மிரியல்**
**புணர்ப் பொறைதாங்கிய வடுவாழ் நோன் புறத்து**
**அணர்ச் செவிக் கழுதைச் சாத்தோடு வழங்கும்**
**உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்**
**வில்லுடை வைப்பின் வியன்காட் டியவு' 3- (பெரும்பாண், 73-82)**

**கடல் வணிகம்:**

சங்க காலத்தில் தமிழர்கள் கடல் வழி வணிகத்தில் முன்னணி நாடாக இருந்தனர். கடல் வழியாக இலங்கை, மலேசியா, சுமாத்திரா மற்றும் ஆந்திரப் பகுதிகள் உட்பட பலதுறை நாடுகளோடு வியாபாரம் நடைபெற்றது. மிளகு, கொடங்கு, வாசனைப்பொருட்கள், முத்துக்கள், மற்றும் ஆடைப் பொருட்கள் போன்றவை அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. சங்க இலக்கியங்களில் கடல் வணிகம் மிகப் பெரிய பொருளாதார வளமாகக் கருதப்பட்டது. புறநானூறும், பூங்குயிலும், ஐம்புலியும் போன்ற சங்கப் பாடல்களில் கடல் வணிகத்தின் முக்கியத்துவம் தெளிவாகக் காணப்படுகிறது. கடல் வழி பயணிகள் தங்கள் துணிச்சலுடன் பல கடல் அலைகளை எதிர்கொண்டு வியாபாரம் செய்தனர். இவர்கள் கடல் வீரர்கள் என்றும் கவிதைகளில் புகழப்பட்டனர். கடல் வணிகம் தமிழர் பண்பாடு மற்றும் அரசியல் வலிமையை அதிகரிக்க உதவியது. இந்த வணிகம் மூலமாக பல பண்பாட்டு பரிமாற்றங்களும் நிகழ்ந்தன. சங்கக் கவிஞர்கள் கடல் வணிகத்தை வெற்றிகரமாக விளக்கியதால், அது அந்த காலத்தின் சமூக நிலையை வெளிப்படுத்துகிறது. வணிகர்கள் மற்றும் கடற்பயணிகள் பெருமிதத்துடன் கவிதைகளில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளனர். சங்க இலக்கியம் கடல் வணிகத்தில் தமிழரின் திறமை, துணிவு மற்றும் சந்திரவெளியின் மேல் கட்டுப்பாட்டைப் பிரதிபலிக்கிறது. கடல் வணிகம் அந்தக் கால தமிழர் வாழ்வின் அங்கமாக இருந்து, அவர்கள் உலகம் முழுவதும் தங்கள் பெயரை அறிமுகப்படுத்தினர். இந்தத் துறை தமிழர் பண்பாட்டு மரபின் முக்கிய அங்கமாகும். இதன் மூலம் சங்க இலக்கியம் தமிழரின் கடல் வணிகத்திற்கான சமூகவியல், பொருளாதார மற்றும் பண்பாட்டு ஆதாரமாக நின்றது.

**"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக**
**களியியல் யானைக் கரிகால் வளவ!"4**

பாண்டியன் ஒருவன் தன் அடி, அலம்பக் கடலில் நின்றான் என்றும், கடலில் தன் வேலை எறிந்து அதை அடக்கினான் என்றும் கூறப்படுகிறான். இதன் கருத்து என்னவென்றால், அவன் கடலை அடக்கிக் கடலில் நாவாய் செலுத்திக் கடற்பிரயாண்த்தை எளிதாக்கினான் என்பது. இவற்றிலிருந்து கடலில் பிரயாணம் செய்வதைத் தமிழர் ஆதி


http://Creativecommons.org//license/by/4.0/.

காலத்திலிருந்து நடத்த்தினார்கள் என்பது தெரிகின்றது. கடலில் கப்பலோட்டுவது அக்காலத் தமிழருக்குக் கைவந்த செயலாயிற்று.

**எரித்ரேயக் கடலில் பெரிப்ளஸ்:**

திரு.ஸ்காப் அவர்களுடைய 'எரித்ரேயக் கடலில் பெரிப்ளஸ்' என்ற ஆங்கில நூல் மொத்தம் 325 பக்கங்களைக் கொண்டுள்ளது. அதில் பெரிப்ளஸ் அவர்களுடைய மூல நூலின் பக்கங்கள் 28 ஆகும். (பக்:22-49). மீதி உள்ள பக்கங்களில் 234 பக்கங்கள் (பக்:50-283), ஸ்காப் அவர்களின் விரிவான விளக்கக் குறிப்புகளைக் கொண்டவை. பண்டைய தமிழகத் துறைமுகங்கள், நகரங்கள், வணிகப்பொருட்கள் பற்றி மட்டும் 40 பக்கங்கள் (பக்:203-242) உள்ளன. பெரிப்ளஸ் காலத்தில் இருந்த நாடுகள், நகரங்கள், வணிகப் பொருட்கள் குறித்த முழுமையான வரலாறுகளையும், நிலவியல் தரவுகளையும், இன்ன பிறவற்றையும் திரு.ஸ்காப் அவர்கள் நன்கு அறிந்து கொண்டுதான் விளக்கக் குறிப்புகளை அளித்துள்ளார்.

பண்டைய தமிழகம் இன்றைய தமிழகம் போன்று மூன்று மடங்கு நிலப்பரப்பு கொண்டதாகவும், இன்றைய தமிழகக் கடற்கரை போல மூன்று மடங்கு நீளம் கொண்டதாகவும் இருந்த, ஒரு பரந்த விரிந்த மாபெரும் பரப்பாகும். இன்றைய தமிழகம் முழுமையும், இன்றைய கேரள மாநிலம் முழுமையும், அதன் கடற்கரைகளும் பண்டைய தமிழகத்தில் இருந்தன. இவை போக இன்றைய கர்நாடகத்தின் மேற்குப் பகுதியில் உள்ள கோவா வரையிலான துளு நாடு முழுமையும் அதனை ஒட்டிய கடற்கரையும் (பழந்தமிழகத்தில் இதனை நன்னர்கள் ஆண்டனர்), கர்நாடகத்தின் தென் பகுதியும், தற்போதைய ஆந்திர மாநிலத்தின் தென் பகுதியிலுள்ள ஒரு சில மாவட்டங்களும், அதனை ஒட்டிய கடற்கரையும் பண்டைய தமிழகத்தில் இருந்தன.

**"தீவுகடல் ஓடிச் செல்வம் பெருகும் வானகம்,**
**கடல்நாடு எல்லாம் வியாபாரம் ஆனம்."5**
**கடல் ஓடிப் பயணித்து குயில்போல் கூவி,**
**படைப்பெரும் வணிகர் ஆற்றின் இரு ஓடல்"6.**

**அகநானூறு:**

வணிகத்தில் ஈடுபட்ட பல மொழிகள் பேசும் அயல்நாட்டினர் தமிழர்களோடு இணைந்து வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றாகிறது. அவ்வாறு, பிறநாட்டிலிருந்து வந்து தமிழகத்தில் வாழ்ந்தவர்களை யவனர்கள் என்றும் மிலேச்சர் என்றும் குறிப்பிடுவதை 'முல்லைப்பாட்டு' என்ற இலக்கியம் எடுத்துக்காட்டுகின்றது. யவனர்கள் பொன்னைக் கொடுத்துப் பண்டமாற்றாக 'கறி' என்றழைக்கப்பட்ட மிளகை எடுத்துச் சென்றனர் என்ற செய்தி,

**"யவனர் தந்த வினைமா ணன் கலம்**
**பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"**
**"கடல் தாண்டி வந்தர் கொள்கின்ற கொடுங்கொள்,**
**மருந்து வாசனை மிக்க பொருள்கள்."7**

என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் தெரிய வருகின்றது. மேலும், இன்றையச் சுங்க வரி, பழங்காலம் முதலே இருந்து வந்திருக்கிறது என்பதைப் 'பட்டினப்பாலை' என்ற நூல் சான்றுகளோடு விளக்குகிறது. இலக்கியத்தில் 'வரி' என்பது 'உல்கு' என்ற சொல்லால் அறியப்பட்டிருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் பொருட்களுக்கு வரி செலுத்தும் நடைமுறை இருந்தது என்றால், அதற்கும் முந்தைய


http://Creativecommons.org//license/by/4.0/.

நூற்றாண்டுகளிலேயே தமிழகத்தில் வணிக முறை தோன்றி, செழித்திருக்க வேண்டும் என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

**'மழைபெயல் மறந்த கழைதிரங்கு இயவில்**
**செல்சாத்து எறியும் பண்பில் வாழ்க்கை**
**வல்வில் இளையர்.'** 8 (**அகம்** 245:5-7)

**முடிவுரை:**

சங்க இலக்கியத்தில் கடல் வணிகம் முக்கியமான இடம் பெற்றது.பொதிநி, நவதீபம் போன்ற துறைமுக நகரங்கள் வர்த்தக மையங்களாக இருந்தன. சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை போன்ற நூல்கள் கடல் வாணிபத்தைத் தெளிவாக பதிவு செய்கின்றன. யவனர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு வாணிகர்கள் தமிழருடன் வணிகம் செய்தனர். முத்து, காஞ்சணம், காரம் போன்ற பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்டன. தமிழர்களின் கடல் மூலமான பொருளாதார முன்னேற்றம் குறிப்பிடத்தக்கது. வணிகம் மட்டும் அல்லாமல் பண்பாட்டு பரிமாற்றமும் நடந்தது. தமிழ் பெண்கள் கூட வாணிகத்தில் பங்கு பெற்றதற்கான சான்றுகளும் உள்ளன.கடல் வணிகம் தமிழ் மக்கள் வாழ்க்கைமுறையில் புதிய சிந்தனைகளை ஏற்படுத்தியது.அந்தக் காலத்தில் நவீன கடற்படை அறிவு இருந்தது என்பதற்கும் இது சான்றாகும்.மக்கள் வாழ்க்கையில் சுதந்திரமும், செழிப்பும் கடல் வணிகத்தால் உருவாயிற்று. எனவே, சங்க இலக்கியம் தமிழர்களின் வணிக அறிவையும், கடல் மேலாண்மையையும் வெளிப்படுத்தும் மரபுச் சான்றாக உள்ளது.

**பார்வை நூல்கள்:**

1. சுவாமிநாத ஐயர், UV (2014) புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சா.நூலகம், சென்னை, இந்தியா.
2. வெங்கடசுவாமி நாட்டார், என்எம் (2014) அகநானூறு மூலமும் உரையும், கவுர பதிப்பகம், சென்னை, இந்தியா.
3. பேராசிரியர் வி. சுப்பிரமணியம் - சங்ககாலக் கடல் வணிகம், பாரதியர் பல்கலைக்கழகம் பதிப்பகம், கோவை.
4. டாக்டர் மாலதி ராமசாமி - தமிழ்சங்கக் காலம்: வர்த்தகம் மற்றும் கடல் பயணம், தொலைநகர் பதிப்பகம், சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.

# 4. பட்டினப்பாலையில் ஏற்றுமதி இறக்குமதி வணிகம்

**முனைவர் கி. புவனேஸ்வரி,**
**உதவிப்பேராசிரியர் , தமிழ்த்துறை,**
**மகாராணி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,தாராபுரம்.**
Cell : 99446 54399 Mail: bhuvanaaruj@gmail.com

DOI 10.5281/zenodo.16412171.

**Abstract :**

The reason why the people of the Sangam period enjoyed and felt the value of nature was the reason for creating quality products. They enriched trade through the goods they sold and improved their economy. This is because Karikala Chola did not only aim to defeat his enemies, but also expanded the forests and lakes, increased wealth, cultivated excellent agriculture in the fields, and with his commercial skills, he was constantly exporting and importing various types of goods. In addition, the Sangam literary work Pattinapalai explains the characteristics of merchants and the characteristics of waving flags to identify the types of goods.

**Keywords:** Pattinapalai, export, import, trade.

## முன்னுரை:

வாணிகம் என்பது வெறும் பணத்திற்காக நடைபெறாமல் நம்பிக்கையோடு, உணர்வு கலந்து அமைவது என்பதை பண்டமாற்று முறை விளக்குகிறது. நாட்டில் திருமகள் நிலைத்திருக்க வேண்டுமானால் நிலங்களை வளமை உடையதாக மாற்றுவதோடு விளைந்த பொருட்களை பெருக்குதல் வேண்டும். அவ்வாறு பட்டினப்பாலையில் வாணிகத்தின் சிறப்பு, வணிக வீதிகள், வணிகர்களின் செயல்கள், ஓயாது செய்து கொண்டிருக்கும் ஏற்றுமதி இறக்குமதி பொருட்களின் வகைகள்,வணிகம் காரணமாக வெளிநாட்டினரோடு கொண்டிருந்த நட்பு போன்றவைகளை ஆய்ந்து அறிவதாக இக்கட்டுரை அமைகின்றது .

## காவிரிப்பூம்பட்டினம்:

சங்க காலத்தில் சோழ நாட்டில் காவிரி ஆறு கடலில் கலக்கின்ற புகார் முகத்தில் இருந்த காவிரிப்பூம்பட்டினம் அக்காலத்தில் உலகப் புகழ் பெற்றிருந்தது. "காவிரிப்பூம்பட்டினத்திக்கு 'புகார் 'என்னும் பெயர் உண்டு. பழைய பௌத்த மத நூல்களில் இது 'கவீரபட்டினம்' என்று கூறப்படுகிறது. ' காகந்தி' என்னும் பெயரும் இதற்கு உண்டு. கிபி முதல் இரண்டு நூற்றாண்டுகளில் ரோமபுரியில் இருந்து யவன வணிகர் இங்கு வந்து வாணிகம் செய்தார்கள், சாவக நாட்டிலிருந்தும் வட இந்தியாவில் இருந்தும் கப்பல் வணிகர் இங்கு வந்து வணிகம் செய்தார்கள். சோழ நாட்டுக் கப்பல் வணிகர்கள் இத்துறைமுகத்திலிருந்து புறப்பட்டு சாவக நாடு காழகம் கங்கை துறைமுகம் முதலான இடங்களுக்கு சென்று வணிகம் செய்தார்கள். பெரிப்ளூஸ் என்னும் கிரேக்க நூலில் இந்த துறைமுகம் 'கமரா' என்று கூறப்படுகிறது கமரா என்பது காவிரிப்பூம்பட்டினம் என்பதன் சுருக்கமாகும். தாலமி என்னும் கிரேக்க யவனர் இத் துறைமுகத்தை 'சபரிஸ்' துறைமுகம் என்று கூறுகிறார்"1 இதனை பழங்கால தமிழர் வாணிபம் என்னும் நூல் கூறுகிறது. சங்க இலக்கியத்தில் காவிரிப்பூம்பட்டினம் என்ற பெயர் இல்லை 'பட்டினம்' என்றே கூறப்படுகிறது .என்பதை பட்டினப்பாலையில் உருத்திரங் கண்ணனார் " *முட்டா சிறப்பின் பட்டினம் பெறினும்" (215) 2. என்ற வரியில் பட்டினம் என்ற பெயரில் குறிப்பிடுவதைக் கொண்டு அறியலாம்.



http://Creativecommons.org//license/by/4.0/.

**கரிகாலனின் சிறப்பு:**

கரிகாலன் வீரத்தில் மட்டும் இன்றி விவேகம் மிக்கவனாகவும் திகழ்ந்தான் என்பதை,

**"காடுகொன்று நாடாக்கிக்**
**குளந்தொட்டு வளம் பெருக்கி"** (183-184 )3
**"திருநிலைஇய பெருமன் யேயின்"** (291*)4.

என்ற வரிகளில் தன்னுடைய நாட்டில் உள்ள காடுகளை அழித்து வளமிக்க நாடாக மாற்றினான் என்பதிலிருந்து நாடும் நாட்டு மக்களின் நலத்தையும் எவ்வாறு பாதுகாத்துள்ளான் என்பதை அறிய முடிகிறது .

**வாணிபத்தின் சிறப்பு:**

பண்டைய காலத்தில் பண்டத்திற்கு பண்டம் மாற்றம் முறை இருந்தது அதற்கு பண்டமாற்று முறை என்பர். அகநானூற்றில் *"பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"(149* ) 5 என்ற வரியின் மூலமும் , பட்டினப்பாலையில் " *வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி* *நெல்லோடு வந்த வல்வாய்ப் பஃறி "(29)* 6 என்ற வரியின் மூலமாகவும் பண்டமாற்று முறையை அறியலாம். இம்முறையில் பண்டத்தின் மதிப்பிற்கு அதிகமாக பொருட்களை வாங்காமலும், வாங்கிய பொருளுக்கு குறைய பண்டங்களை கொடுக்காமலும்,பல பண்டங்களின் இலாபத்தை வெளிப்படையாகக் கூறி விற்பார்கள் என்று வாணிபத்தின் நியாயத்தன்மையை,

**"கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது**
**பல்பண்டம் பகர்ந்துவீசும்"** (210-211) 7

பட்டினப்பாலை வரிகளில் காணலாம்.

இதனைப்போன்று திருவள்ளுவர்,

**"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோற் செயின் " குறள்** (120) 8

என்ற திருக்குறளில் வாணிகத்தின் சிறப்பை வலியுறுத்துவதைக் கொண்டும் வாணிகம் என்பது ஒளிவு மறைவின்றி நம்பிக்கைக்கு உரிய செயல் என்பதை உறுதிப்படுத்தி உள்ளதை உணர முடிகிறது.

**ஏற்றுமதி:**

சங்ககாலத்தில் உள்நாட்டு வணிகமும் நல்ல வளர்ச்சி அடைந்து அதிகப்படியான செல்வத்தைப் பெற்றிருந்தனர் என்பதை

**"கோழி யெறிந்த கொடுஞ்காற் கனங்குழை**
**பொற்காற் புதல்வர் புரவியின் உருட்டும்"**(23-24)9

என்ற வரிகளில் கோழியை விரட்டுவதற்காக தன்னுடைய காதில் அணிந்த குழையை வீசினர் என்பதிலிருந்து அறிய முடிகிறது. அதோடு, குலைகளை உடைய தெங்கினையும்' குலைகளில் உள்ள வாழையினையும், காயை உடைய மூங்கிலையும், மணம் நாறும் மஞ்சளையும், இனமான மாமரங்களையும், குலைகளை உடைய பனையினையும், அடி பரந்த சேம்பினையும், முளையினையுடைய இஞ்சியையும் கொண்டவை காவிரிப்பூம்பட்டினம். அதோடு வெண் பூங்கொத்துக்களையும் தாழைகளையும் உடைய கடற்கரையில் இருக்கும் பரதவருடைய அகன்ற தெருக்களில் அரசருக்குரிய


http://Creativecommons.org//license/by/4.0/.

பொருட்களை காக்கும் காவலர்கள் ஒவ்வொரு நாளும் சலிப்பின்றி பொருள்களுக்கு புலிச் சின்னத்தை அடையாளமாக இட்டு பண்டகசாலைகளில் இருந்து மலை போன்ற பொருட்களை ஏற்றுமதி செய்தார்கள். என்பதை,

**"அளந்தறியாப் பலபண்டம்**
**வரம்பறியாமை வந்தீண்டி**
**அருங்கடிப் பெருங்காப்பின்**
**வலியுடை வல்லணங்கினோம்**
**புலிபொறித்துப் புறம்போக்கி"** (131-135)10

என்ற பட்டினப்பாலை பாடல் வரிகளின் மூலம் தமிழன் தனக்கான அடையாளத்தை (புலி சின்னம் பொறித்து)உலக நாடுகளிலும் பரப்பியுள்ளான் என்பதை உணர முடிகிறது .அதோடு தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்பதற்கு ஏற்ப தலை நிமிர்ந்து வாழ்ந்துள்ளான் என்பதையும் அறிய முடிகிறது.

**இறக்குமதி:**

சங்க கால மக்கள் தங்கள் பொருட்களை ஏற்றுமதி செய்வதோடு தனக்கு வேண்டிய பொருட்களை இறக்குமதியும் செய்துள்ளனர். என்பதை,

**"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்***
**காலின் வந்த கருங்கறி மூட்டையும்**
**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலைப் பிறந்தவாரமு மகிலும்**
---------------------------------------------------
**தென்கடன் முத்தும் குணகடல் துகிரும்**
**வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின் "**(185-193)*11

என்ற பட்டினப்பாலை வரிகளில் காற்று வீசியதால் வந்த குதிரைகளும், நிலத்தின் வழியே வந்த கரிய மிளகு மூட்டைகளும், இமயமலையில் பிறந்த மணியும் சாம்பூநதம் என்னும் பொன்னும், பொதிகை மலையிலே பிறந்த சந்தனமும் அகிலும், தென்கடலில் பிறந்த முத்தும், குண கடலில் உண்டான பவளமும், கங்கை ஆற்றில் உண்டான பொருட்களும், காவிரியில் உண்டான வளங்களும் ஈழ நாட்டிலிருந்து வந்த உணவு பண்டங்களும், கடாரத்தில் உண்டான நுகரும் பொருட்களும் சீனா முதலிய நாடுகளில் இருந்து வந்த கற்பூரம், பனிநீர், பொருள்களை பொருட்களை இறக்குமதி செய்தனர் என்பதிலிருந்து அறிய முடிகிறது.

**கொடிகள்:**

கடைவீதிகளில் பொருட்களை விற்கும் இடங்கள் என்பதை அறிவிக்கும் பொருட்டு கொடிகளை பறக்க விட்டனர். என்பதை,

**"வாலரிசிப் பலிசிதறிப்**
**பாகுகுத்த பசுமெழுக்கிற்**
**காழுன்றிய கவிகிடுகின்**
**மேலூன்றிய துகிற்கொடியும்"** (165-168 )*


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற வரிகளில் பண்டகசாலைகளில் பெயர்ப்பலகைக்கு பதிலாக துணியாலான வண்ணக் கொடிகளை பறக்க விட்டிருந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**வணிகர்களின் செயல்கள்;**

வணிகர்கள் தாம் வாணிபம் செய்வதில் மட்டுமின்றி தொழில்கள் செய்வதிலும் திறம்பட அமைந்திருந்தனர். செய்யும் தொழிலே தெய்வம் என்பதை உணர்ந்து தான் செய்யக்கூடிய செயல்களில் நீதியையும் நேர்மையையும் கொண்டிருந்தனர். என்பதை,

**"அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்**
**நல்லானோடு பகடோம்பியும்**
**நான்மறையோர் புகழ்பரப்பியும்**
**பண்ணி மட்டியும் பசும்பதங் கொடுத்தும்**
**புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்** "(200-204) 13

என்ற பட்டினப்பாலை வரிகளில் மீன் மற்றும் இறைச்சி தொழிலில் ஈடுபடுபவர்கள் தேவர்களுக்கு வேள்விகளைச் செய்து அதற்குரிய பாவத்தினை போக்கிக் கொள்வர் அதோடு பசுக்களையும், எருதுகளையும் பாதுகாப்பவர்கள் நான்மறையோர்களின் புகழ் பரப்புவதோடு தான, தர்மங்களைச் செய்வர் என்பதிலிருந்து இறைச்சி விற்பவர்கள் ஒரு உயிரை கொல்லுதல் பாவம் என்று உணர்ந்து அதற்கான பரிகாரமாக புண்ணிய செயல்களைச் செய்தனர் என்பதை அறிய முடிகிறது .

**வெளிநாட்டாரின் நட்பு:**

சோழருடைய நாட்டில் வாணிகம், உள்நாட்டில் மட்டும் இன்றி வெளிநாடுகளிலும் சிறந்து இருந்தது. துறைமுகத்தில் வந்து தங்கிய கப்பல்கள் யானைகள் அசைந்து கொண்டு நிற்பன போல அசைந்து கொண்டிருந்தன எனவும் பாய்மரத்தின் மேலே கொடிகள் பறந்தன. என்பதையும்,

**"வெளில் இளக்கும் கயிறு போலத்**
**தீம்புகார்த் திரை முன்துரைத்**
**தூங்கு நாவாய் துவன்றிருக்கை**
**மிசைக் கூம்பின் நசைக்கொடி** "(172 -175) - 14

பட்டினப்பாலை வரிகளில் துறைமுகத்தை அடுத்த மருவூர்பாக்கத்தில் அயல்நாடுகளில் இருந்து கப்பல் ஓட்டி வந்த மாலுமிகளும், கப்பலோட்டிகளும் கடற்கரை பக்கத்தில் தங்கி இருந்தார்கள் அவர்கள் வெவ்வேறு நாடுகளில் இருந்து வந்த படியால் வெவ்வேறு மொழிகளை பேசினர் எனவும், திருவிழாவுக்கு பல ஊர்களிலும் குழுமிய கூட்டங்களை போல காவிரிப்பூம்பட்டினத்து துறைமுகம் விளங்கியது என்பதை,

**"மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்**( 216 - 218)15

பட்டினப்பாலை வரிகளும்,

**"கலந்தரு திருவில் புலம்பெயர் மாக்கள்**
**கலந்தினி துறையும் இளங்குநீர் வரைப்பு**" (11-12) 16

என்ற சிலப்பதிகார வரிகளும் உறுதிப்படுத்துகிறது. இதன் வழி வெளிநாட்டவர்கள் வாணிகத்தின் பொருட்டு தமிழகம் வந்ததையும் தமிழகத்தில் அவர்கள் நட்பு உணர்வோடு இருந்த தன்மையையும் அறிய முடிகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**முடிவுரை:**

சங்க கால மக்கள் நம் முன்னோர்கள் என்பதை காட்டிலும் நல்லதொரு வழிகாட்டிகளாக இருந்துள்ளனர் என்பதே சாலச்சிறந்தது. காடுகளை அழித்து வளம் அற்றதாக மாற்றிக் கொண்டிருக்கக் கூடிய இக்காலகட்டத்திற்கு மாற்றாக இயற்கையை போற்றி புகழ்ந்தால் மட்டுமே தரமான பொருட்களை உருவாக்க முடியும் என்பதையும், அவ்வாறு உருவாக்கிய பொருட்களை பண்டமாற்று செய்து மனிதனின் நம்பிக்கை தன்மையை உயர்த்தும் பண்பை உணர்த்தியும், செய்யும் தொழிலில் நேர்மையும் அதில் பாவத்தன்மை இருப்பின் அதற்கான புண்ணிய தன்மையைச் செய்து அனைத்து உயிர்களும் சமமானது என்பதை வலியுறுத்தியும் உள்நாடு மட்டும் இன்றி வெளிநாடுகளோடு நட்புறவு கொண்டு பழகும் தன்மையை நிரூபித்து காட்டியுள்ளனர் என்பதே இவ்வாய்வின் முடிவாகும்.

**துணை நூற்பட்டியல்:**


1. பழங்காலத் தமிழர் வாணிகம், மயிலை. சீனி. வெங்கடசாமி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை- 600098
2. பட்டினப்பாலை - கழக வெளியீடு - திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், திருநெல்வேலி-6 சென்னை-1
3. அகநானூறு- அ.மா .பரிமணம்- கு.வே. பாலசுப்பிரமணியன்(ப.ஆ),நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்,சென்னை- 600098 முதல் பதிப்பு - ஏப்ரல் - 2004
4. சிலப்பதிகாரம்- புலியூர்கேசிகன் - பாரி நிலையம்,சென்னை -600018, மறுபதிப்பு - 2006.



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 5. தமிழ் இலக்கியத்தில் வணிக இலக்கியம்

முனைவர் மு.ரஞ்சிதா,
தமிழ்த்துறை,உதவிப்பேராசிரியர்,
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருமலையாம்பாளையம், கோயம்புத்தூர்.642105
அலைபேசி - 9361856291
DOI 10.5281/zenodo.16523410.

**Abstract:**

When we look at business and commercial literature in Tamil literature, only the business system based on manufactured goods is seen. Beyond this, if we look at literature, most importantly based on business, there are literatures written with a commercial purpose. Based on Jayamohan's words that literature should not be written for the readers only for commercial purposes, this essay is about literatures created with a commercial purpose.

**Key Words:** Tamil Literature - Business Literature - Jayamohan - Commercial

தமிழ் இலக்கியத்தில் வணிகம், வணிக இலக்கியம் என்று நாம் பார்க்கையில் உற்பத்தி பொருட்கள் சார்ந்த வியாபார முறை மட்டுமே பார்க்கப்படுகிறது. இதனைக் கடந்து இலக்கியத்தில், மிகமுக்கியமாக வணிகம் சார்ந்து பார்த்தோமானால் வணிக நோக்கில் எழுதப்படும் இலக்கியங்கள் உள்ளன. இலக்கியம் வாசகர்களுக்கு வெறும் வணிக நோக்கத்திற்கு மட்டும் எழுதப்படக்கூடாது என்ற ஜெயமோகனின் வார்த்தைகள்வழி இவ்ஆய்வுக்கட்டுரை வணிக நோக்கில் படைக்கப்படும் இலக்கியங்களைக் குறித்து அமைகிறது.

## முன்னுரை

வணிகம் என்றாலே ஒரு பொருளை விற்பதும், வாங்குவதுமான செயல்களைக் குறிக்கின்றது. அவ்வகையில் இலக்கியங்கள் வெறும் புத்தக விற்பனைகளுக்காக இயங்குதல் கூடாது என்பது எடுத்துரைக்கப்படுகிறது. அவ்வாறு புத்தக விற்பனை நோக்கோடு எழுதப்படுகின்ற படைப்பு இலக்கியங்களால் ஏற்படும் நன்மை, தீமைகள் குறித்து பார்க்கப்படுகிறது. தமிழ் இலக்கியத்தில் வணிக நோக்கோடு செயல்படும் இலக்கியங்களைக் குறித்த செய்திகள் எடுத்தியம்பப்படுகிறது.

## வணிக இலக்கியம்

சங்ககாலம், காப்பியகாலம், பக்தி இலக்கியகாலம், நவீனகாலம் என பல்வேறு காலங்களில் வாழ்ந்த மக்களின் தனிப்பட்ட வணிக வாழ்க்கையைப் பற்றி எடுத்துரைப்பவைகளாக இவ் இலக்கியங்கள் இருந்தன. இலக்கியங்கள் பொதுவாக ஒருவரின் தனிப்பட்ட வாழ்க்கையையும், அவனது வணிகத்தையும் குறிப்பிடுவதல்ல. சமூகத்தில் மக்களின் வாழ்க்கைமுறை அவற்றுள் அடங்கியுள்ள வாழ்வியல், வணிகம் போன்ற கருத்தாக்கங்களை வெளிப்படுத்துகிறது.

எழுத்தாளர் ஜெயமோகன் தனது “வணிக இலக்கிய” நூலில் இலக்கியப் படைப்புகள் குறிப்பாக எவ்வாறு வணிக விற்பனைக்காக மட்டும் இலக்கியங்கள் படைக்கப்பட்டன என்பதை பதிவு செய்கிறார். **“இலக்கியம்னா இன்னதுன்னெல்லாம் சொல்லிட முடியாது. எல்லாமே இலக்கியம்தான்’ என்று சொல்லக்கூடிய ஒருவன், நல்லது கெட்டதுனெல்லாம் சொல்ல நாம யாரு? காலம் தீர்மானிக்கட்டும்’ என்று**


http://Creativecommons.org//license/by/4.0/.

**சொல்லக்கூடிய ஒருவன், மனித இனம் இதுவரையில் வளர்த்தெடுத்துவந்த சிந்தனை மரபையோ இலக்கியமரபையோ பற்றி எதுவுமே தெரியாத பாமரன்"**1 என்று குறிப்பிடுகிறார். ஆக இலக்கியம் என்பது வெறுமனே வணிகம் சார்ந்து மட்டும் இருக்கக்கூடாது.

## வணிக எழுத்து

இலக்கிய வாசிப்பாளர்கள் மத்தியில் இலக்கியத்தில் வணிக எழுத்து என்பது உள்ளதா? என்பதே பலரின் கேள்வியாக உள்ளது. ஏனெனில் இலக்கியம் எல்லாமே இலக்கியம்தானே அதிலென்ன வேறுபாடு என்ற விவாதம் உள்ளது. ஆனால் வணிக இலக்கியத்தில் வணிக நோக்கத்தின் பொருட்டே எழுத்துக்கள் மக்களை கவர்வதாக இருக்கின்றது. சமூகம் சார்ந்த இலக்கியங்கள் வெறும் வணிக எழுத்துக்களாக மாறும் பொழுது அது வெறும் சுவை தரக்கூடிய சுவைஊட்டிகளாக இருக்கின்றதே ஒழிய அர்த்தம் தரக்கூடிய மானிட வாழ்வியலைப் பேசுவதில்லை. **"வணிக எழுத்து ஆத்மார்த்தமானதல்ல, வாசகனுடைய ரசனைக்காக எழுதப்படுவது. அது சுதந்திரமானதல்ல, சமூகப் பொதுவான கருத்தியலை அது மீறமுடியாது. அதற்கு அழகுணர்வு முக்கியமல்ல, சுவாரசியம் மட்டுமே அதன் இலக்கு"**2 என்ற வணிக எழுத்தின் நிலையை அறியமுடிகிறது.

## தமிழ் வணிக எழுத்து

தமிழ் இலக்கியம் என்பது வேறு வணிக இலக்கியம் என்பது வேறு. வணிக இலக்கியம் என்பது தமிழில் எழுதப்பட்டாலும் அது இலக்கியம் ஆகாது. வாசகர்களின் பொழுதுபோக்கிற்காகவும், மகிழ்விற்க்காகவும் எழுதப்பட்ட இலக்கியம் வணிக இலக்கியமாகிறது. ஆனால் இலக்கியம் மானுட சமுதாயத்தின் நன்மை, தீமைகளையும், மானுடத்தையும் கற்பிக்கிறது. **"இலக்கியக் கலைக்கும் வடிவமும் பொருளும் பலவகையாக உண்டு. ஆதலால் இலக்கியம் வடிவம் நோக்கிச் சில வகையாகவும், பொருள் நோக்கிச் சில வகையாகவும், புலவர்களின் மனநிலை பற்றி வேறு சில வகையாகவும் வகைப்பாடு செய்யப்படும். உலகமொழிகள் யாவற்றிலும் வழிவழியாகச் சில வகைகளும் பெயர்களும் இருந்து வருகின்றன. தமிழிலும் சிலவகைப் பாகுபாடுகளை மரபாகச் செய்துள்ளனர்"**3 இவ்வகைப் பாகுபாடுகள்வழி வணிக எழுத்தின் வேறுபாட்டை அறிந்துகொள்ளலாம்.

தமிழில் வணிக எழுத்துக்கள் வந்த பிறகு இலக்கியத்திற்கான மதிப்பும், இலக்கிய ஆசிரியர்களின் மதிப்பும் வாசகர்களிடமிருந்து குறைய ஆரம்பித்தது. வணிக எழுத்தைப் படிக்க ஆரம்பித்த பின் வாசகர்கள் இலக்கியத்திற்கு வர சிரமப்படுகிறார்கள். **"வணிக எழுத்தை வாசிப்பவர்கள் வேறொரு அறிவுப்புலத்தில் இருக்கிறார்கள். அவர்களை அங்கிருந்து இலக்கியத்தின் அறிவுப்புலத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று சுந்தரராமசாமியின் தலைமுறை நம்பியது. அதற்கு முதலில் தாங்கள் வாசித்துக்கொண்டிருப்பவை இலக்கியங்கள் அல்ல என்று அந்த வாசகர்கள் உணரவேண்டும். இலக்கியம் என இன்னொன்று உள்ளது என அவர்கள் தெளிவடையவேண்டும். அப்போதுதான் அவர்கள் வணிக எழுத்தின் புலத்திலிருந்து இலக்கியப்புலத்திற்கு வரமுடியும்"**4 இலக்கியப் புலத்திற்கு வாசகர்கள் வரும்பொழுதுதான் தமிழ் இலக்கியம் வளர்ச்சியடையும்.

## வணிக கேளிக்கை எழுத்து

வணிக எழுத்தை இரண்டு விதமான கண்ணோட்டங்களில் பார்க்கலாம். இலக்கியப்புலத்தை இல்லாமலாக்குவது, உருவாக்குவது என்ற இரண்டுவித நிலைப்பாட்டை வணிக எழுத்து உருவாக்குகிறது. **"நவீன வணிக எழுத்து நிறைய வந்தால் மட்டும்தான்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**லட்சக் கணக்கானவர்கள் தமிழில் வாசிக்க ஆரம்பிப்பார்கள். வாசிப்பு ஒரு சமூக இயக்கமாக நிகழும். அவ்வாறு 10 லட்சம் பேர் தமிழில் எதையாவது வாசித்தால்தான் அதில் 10 ஆயிரம் பேர் தரமான இலக்கியத்துக்கு வருவார்கள்.”**[5] என்பதாக வணிக எழுத்து இலக்கியப் புலத்திற்கு உதவினாலும், இன்னொரு புறம் வணிக எழுத்தினால் இலக்கியம் சற்று நலிவடைந்து வருவதையும் பார்க்கப்படுகிறது. வணிக எழுத்தின் வாசகர்கள் இலக்கியத்தின் நுட்பத்தை அறிய முன்வர மாட்டாதவர்களாக உள்ளார்கள். சிலர் இதிலிருந்து விதிவிலக்காய் வணிக எழுத்தின்வழி ஆழ்ந்த இலக்கியப்புலத்திற்குள் வருகிறார்கள்.

**முடிவுரை**

வணிகம் என்பது மக்களுக்கிடையே நடக்கின்ற இறக்குமதி, ஏற்றுமதி பொருள்கள் மட்டுமல்ல. அது இலக்கியத்திற்குள் நடக்கின்ற ஏற்றம், இறக்கமும் ஆகும். இலக்கியம் வணிக நோக்கோடு வாசகனை அடையும்பொழுது அது அவனை ஆக்கிரமித்து இலக்கியப் புலத்திற்குள் செல்லவிடாமல் தடுக்கிறது. ஆனால் வணிக இலக்கியம் இன்றையப் பொழுதில் பெரும்பான்மையான வாசகர்களை இலக்கியத்திற்குள் கொண்டுவரவும் உதவியாய் இருக்கிறது. இருப்பினும் வணிக இலக்கியம் வெறுமனே வணிக நோக்கத்தோடு மட்டும் இருந்துவிடக் கூடாது.

**அடிக்குறிப்புகள்**

1. ஜெயமோகன் - வணிக இலக்கியம், ப.14.
2. மேலது, ப.19.
3. முனைவர் செந்திலாண்டவன் - தொன்மை இலக்கிய வகைமையும் மாற்றமும், ப. 2
4. ஜெயமோகன் - வணிக இலக்கியம், பக்.24-25.
5. மேலது, ப.36.


http://Creativecommons.org//license/by/4.0/.

# 6. திருக்குறளில் இடம் பெற்றுள்ள வணிக மேம்பாட்டுச் சிந்தனைகள்

**முனைவர் பா.கீதா,**
**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை**
**நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**
**திருமலையாம்பாளையம் கோயமுத்தூர்**
geethajeganathan14@gmail.com - 9788244940

DOI 10.5281/zenodo.16523854

**Abstract:**

Today's world is commercialized. The number of people starting their own businesses is increasing, and there are many people who have failed after starting a business. If you want to turn failure into success, the best way is to correct the mistakes made in the business and achieve success. This is what Valluvar has recorded in Thirukkural, from whom one should get knowledge about the business before starting a business. One should have basic knowledge about the material, place, time, and tools. One should do business with justice and dharma. He has recorded the general business thinking in Thirukkural.

**Keywords:** Act-Industry - Material-Capital - Time-Season - Tool-Machine

## முன்னுரை:

நாம் அனைவரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டு பொருளை வாங்கி பயன் பெறுகிறோம்.மக்களின் தேவை அறிந்து பொருட்களை எவ்வாறு சந்தை படுத்துவது என்ற தொழில் சிந்தனையை உருவாக்கியதால் சந்தை படுத்துதல் எளிமை ஆகி விட்டது.தொழில் தொடங்குவதற்கு சிறந்த அனுபவ பயிற்சியினை எடுத்து பின்பு தொழிலை மேற்கொள்கிறார்கள் இன்றைய வணிக சிந்தனையை வள்ளுவர் கருத்துடன் இணைத்து நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும் .

## வணிகம் செய்வோரின் தன்மை:

பொருளை விற்பனை செய்யும் போது அதனை வாங்குவோரின் நலனில் அக்கறை கொள்ள வேண்டும்.நடுவு நிலமையோடு செயல்பட வேண்டும்.பொருளின் தரம் மற்றும் உயிர் பாதுகாப்பு முக்கியம் என்பதனை,

**வாணிகஞ் செய்வார்க்கு வணிகம் பேணிப்**
**பிறவும் தம்போற் செயின்**

இக்குறளில் எடுத்துக் கூறி அதனை கடைபிடிக்குமாறு வழியுறுத்துகிறார்

## தொழில் பற்றிய ஆலோசனை :

தொழிலை தொடங்கும் முன் அத்தோழிலைப் பற்றிய அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து பயிற்சி மேற்கொண்டோ அல்லது அவர்களின் அனுபவ அறிவை பெற்ற பின்பு தொழிலை தொடங்க வேண்டும்.

**கற்றில னாயினும் கேட்க அஃதொருவருக்கு**
**ஒற்கத்தின் ஊற்றாத் துணை**

தொழில் பற்றிய ஆலோசனை அறிவை எவ்வாறு பெறுவது என்றுரைக்கிறார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**தொழில் திறனை கண்டறிதல்:**

தன்னிடம் எத்தகைய திறமை உள்ளது என்பதனை கண்டறிந்து அதற்கான முழுமுயற்ச்சியை மேற்கொள்ளவேண்டும் அத்தகைய முயற்சி சிறந்த பலனைத்தரும் என்கிறார் வள்ளுவர். தன்னுடைய சுயமதிப்பீடு மிகவும் முக்கியம் இவற்றையே,

**ஒவ்வுவது தறிவது அறிந்தன் கந்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்**

என்ற குறளும் வெளிப்படுத்துகிறது.

**தவறான மதிப்பீடு:**

தன்னுடைய திறமை பற்றி சரியாக சிந்திக்காமல் ஊக்கத்தால் முனைந்து தொடங்கி இறுதியில் தோல்வி அடைந்து அழிந்தவர் பலர் அதனால் எத்தொழில் ஆனாலும் அடிப்படை அறிவுடன் செயல்பட வேண்டும் என்கிறார்.

**உடைத்தும் வழியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைகண் முரிந்தார் பலர்**

தவறான மதிப்பீடு செய்து வாழ்வை இழந்தவர்கள் பற்றியும் கூறுகிறார்.

**காலம் அறிந்து செயல்படல்**

தொழில் மேலாண்மையில் காலம் மிகவும் முக்கியம் பருவநிலை அறிந்து செயல் படவேண்டும் அவ்வாறு செயல்படவில்லை என்றால் தொழிலில் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி வரும்.நுகர்வோரின் நுகரும் தன்மை மாறுபடும் போது அதற்கு ஏற்றார் போல செயல்பட வேண்டும் அவ்வாறு செயல்பட்டால் பொருள் இழப்பை தவிர்கலாம் .

**பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்**
**நீராமை ஆர்க்கும் கயிறு**

**தொழிற்கான இடம்:**

தொழில் செய்வதற்கான காலம் மற்றும் சரியான இடத்தை தேர்ந்தெடுத்தால் இந்த உலகம் போற்றும் வளமன வளர்ச்சி எப்பொழுதும் நிலையாக நிற்கும் .

**ஞாலம் கருதினுங் கைகூடும் காலம் கருதி இடந்தாற் செயின்**

**தொழில் கருவிகள்:**

**அருவினை என்ப உளவோ கருவியான்**

தொழில் செய்வதற்கு எற்ற கருவிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவை மிக முக்கியமான ஒன்று கருவிகளின் தரம் மற்றும் விலை பற்றி தெளிந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.அவற்றை இயக்கும் முறை அடிப்படை அறிவு பெற்றிருக்க வேண்டும். மேற்கண்டவற்றை ஒரு தொழில் முனைவோர் தெரிந்து இருந்தால் சிறந்த தொழில் வல்லுநராகிவிடுவார்.

**பணி ஆட்கள் தேர்வு :**

நிறுவனங்களில் பணிபுரிய ஆட்களை தேர்ந்து எடுக்கும் போது அன்பு அறிவு, ஐயம்மில்லாமல் தெளியும் ஆற்றல், அவா இல்லாமை இவை நான்கும் இல்லாத பண்புடையவர்களைத் தேர்ந்து எடுக்கவேண்டும். சிறந்த தொழில் திறமை மிக்க வல்லுநர்களை பணி நியமனம் செய்ய வேண்டும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**இதனை இதனால் இவன்முடிக்குக் என்றாய்ந்து**
**அதனைஅவன் கன விடல்**

**தன்மேம்பாடு:**

**அருமை உடைத்தென்று அசவாமை வேண்டும்**
**பெருமை முயற்சி தரும்**

தொழில் செய்வதற்கு அருமையானது என்று எண்ணி சோர்வு கொள்ளாமல் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

**வினை கண் வினைகெடல் ஓம்பல் வினைகுறை**
**நீர்தாரின் நீர்த்தன்று உலகு**

தொழிலின் குறைகளை கண்டு அவற்றை சரி செய்ய முயற்சிக்க வேண்டும் அத்தகைய முயற்சி இல்லாதவர்களை இந்த உலகம் கைவிடும் என்கிறார்.

**தொழில் இடம்பெற்றுள்ள தவறுகளை களைதல்:**

**இளையர் இனமுறையர் என்றிகழார்**

எனக்கு வேண்டியவர் ,எனக்கு இளையவர் என்ற கருத்தின் அடிப்படையில் தொழில் பங்கு தாரர்களை சேர்த்துக் கொள்ளக் கூடாது.குணம் திறன் அறிந்து சேர்க்க வேண்டும்.

**சூழ்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு**

முடிவு எடுப்பதற்கு காலம் தாழ்த கூடாது அதுவே துன்பமாக மாறிவிடும்

**தூக்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**

காலம் தாழ்தி செய்யவேண்டியவற்றை காலம் தாழ்திசெய்ய வேண்டும்.விரைந்து முடிக்க வேண்டியவற்றை விரைந்து முடிக்க வேண்டும்.

**ஒல்லுவா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்**

வாடிக்கையாளர்களின் தேவைகளை செய்துகொடுக்க முடியும் என்றால் முடியும் என்றும், அந்த பணியை முடிப்பதில் சிக்கல் இருந்தால் முடியாது என்று உறுதியாக கூறிவிட வேண்டும்

**பொருள் கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்**

பொருள், கருவி, இடம், காலம், தொழில் இவை ஐந்தும் தொழில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய காரணிகள் ஆகும் இதன் முக்கியத்துவம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

**மக்களின் விருப்பம்:**

பொருட்களை விரும்பி வாங்கி நுகர்வோரின் நுகரும் தன்மையை அறியவேண்டும். **நுண்ணியம் என்பார் அளக்குங்கோல்**

**பொருளீட்டல்:**

பொருள்சேர்க்கும் திறன் அறிந்து நல்வழியில் பொருள் சேர்க்க வேண்டும் **திறனறிந்து தீதின்றி வந்த பொருள்** எந்த தொழிலாக இருந்தாலும் பிறரை ஏமாற்றாமல் பொருள் சேர்க்க வேண்டும்.அறவழியில் வந்த பொருள் நிலைது நிற்கும்.

**தொழிலுக்கான முதலீடு:**

கைப் பொருளைக் கொண்டு தொழில் தொடங்கினால் .அதிக வருமானம் பெற முடியும் பயம் இல்லாமல் தொழிலை நடத்தலாம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று**
**உண்டாகச் செய்வான் வினை**

**உழவுத்தொழில்:**

நிலத்தை எவ்வாறு பண்படுத்துவது,மண்ணின் தன்மை,உரமிடல்,நீரின் அளவு,பயிர் நடுதல் போன்ற செய்திகளை விளக்கி கூறி உள்ளார்.

**தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**
**ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின்**

மேற்கண்ட குறள்கள் உழவுத்தொழிலின் பயிற்சி முறையை விளக்கி கூறுகிறது.

**நூலறிவு உலகறிவு:**

நூலறிவால் செயல்களைச் செய்யும் அறிவை அறிந்த போதிலும் உலகத்தின் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்துமாறு செய்ய வேண்டும்.

**மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்**
**யாஉள முன்னிற் பவை**

**தீய தொழில்:**

பழியை மேற்கொண்டு இழிவான தொழிலை செய்ய கூடாது . அதற்கு வறுமையிலே இருந்து விடலாம் தீய தொழில் செய்து பணம் ஈட்டுதல் பாவ செயல் ஆகும்.சமூக அக்கறை இல்லாத மனிதர்கள் செய்யும் அறம் மற்ற செயலாகும் என்று வள்ளுவர் கடிந்துதுரைக்கிறார்.

**பழிமலைத்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை**

**முடிவுரை:**

தொழில் தொடங்கும் முறை, அதற்கான தேவைகள்,தொழில் மேற்கொள்ளும் பொழுது வரும் இடையூறுகள் அதனை எவ்வாறு சரி செய்ய வேண்டும் என்பதனை விளக்கி தொழில் மேம்பாட்டுச் சிந்தனையைத் திருக்குறளில் எடுத்துக் கூறுகிறார்,

**துணைநூற்பட்டியல்**

1. **திருக்குறள், சிற்பி(உ.ஆ), நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.**
2. **நாலடியார், நியூ செஞ்சுரி புத்தக நிலையம் , சென்னை.**
3. **நான்மணிக்கடிகை, கழக வெளியீடு, சென்னை.**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 7. எட்டுத்தொகை நூல்களில் காணலாகும் பண்டமாற்று வணிகம்

**முனைவர் மா. சண்முகப்பிரியா**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,
புரட்சித்தலைவி அம்மா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
பல்லடம்,திருப்பூர் - 641 664
அலைபேசி : 9095606080
DOI 10.5281/zenodo.16523968.

**Abstract:**

The Tolkappiyam divides the lands of ancient Tamil Nadu into five regions: Kurinji, Mullai Marutham, Neithal, and Palai, and describes their topography, the people living there, their food, the deity worshipped, the crop, the drum, and their profession, etc. The Tolkappiyam defines fourteen types of themes. In the Sangam period society, there were industrial systems suitable for the land groups. Products obtained through agriculture, products naturally grown in the mountains, handmade mats, baskets, yogurt, buttermilk, butter, salt, fish, and carob were transported from one land to another and traded in a barter system. The barter system of Tamil Nadu at that time has been clearly recorded in the Sangam literature. The aim of the article is to reveal the data on barter trade that can be found in the eight volumes of texts.

**Key Words:** Tholkappiyam - kurinji - Mullai - Marudham - Neithal

பண்டைய தமிழ்நாட்டின் நிலப்பகுதிகளை குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல், பாலை என ஐந்தாகப் பகுத்து அவற்றின் நிலஅமைப்பு அங்கு வாழும் மக்கள், அவர்களின் உணவு, வழிபடும் தெய்வம், பண், பறை, தொழில் முதலான பதினான்கு வகையான கருப்பொருள்களை தொல்காப்பியம் வரையறுத்துக் கூறுகிறது. சங்க கால சமுதாயத்தில் நிலப்பிரிவினருக்கு ஏற்ற தொழில் முறைகள் இருந்துள்ளன. வேளாண்மை மூலம் கிடைத்த பொருட்கள், மலையில் இயற்கையாக விளைந்த பொருட்கள், கைத்தொழிலாக செய்யப்பட்ட பாய், கூடை, தயிர், மோர், வெண்ணெய், உப்பு, மீன், கருவாடு போன்ற பொருட்களை ஒரு நிலத்திலிருந்து கொண்டு சென்று மற்றொரு நிலத்தில் பண்டமாற்று முறையில் வணிகம் செய்துள்ளனர். அன்றைய தமிழகத்தின் பண்டமாற்று முறையினை சங்க இலக்கியங்கள் தெளிவாக பதிவு செய்துள்ளன. அதன் வழி எட்டுத்தொகை நூல்களில் காணலாகும் பண்டமாற்று வணிகம் குறித்த தரவுகளை வெளிக்கொணர்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

## பண்டமாற்று வாணிகம்

பணத்தைப் பயன்படுத்தாமல் பொருள்களின் பரிமாற்றம் வழி நேரடியாக நிகழும் வாணிப முறையே பண்டமாற்று முறையாகும். இது தொன்மையான முறையாகும். இன்று நாம் பணடமாற்று வணிக முறைகளைத் தமிழக கிராமங்களில் காண முடிகிறது .

## நற்றிணையில் பண்டமாற்று முறை

எட்டுத்தொகை இலக்கியங்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் பண்ட மாற்று செய்திகள் மிக விரிவாக பேசப்பட்டுள்ளன. நற்றிணையில் மருத நிலத்தை சேர்ந்த உப்பு வணிகர்கள் தம்முடைய நிலத்தில் விளைந்த வெண் நெல்லை கொடுத்து நெய்தல் நிலப்பகுதியில் உப்பை பெற்று வந்த செய்தியை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**“தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிற நாட்டு உப்பின் கொள்ளை சாற்றி”**

(நற். 183 : 1-2)

என்னும் பாடல் அடிகளால் அறியலாம். இதில் கொள்ளை என்கிற சொல் கொண்டும் கொடுத்தும் செய்யப்படும் வணிகத்தை உணர்த்துகின்றது.

நெய்தல் நிலத்தில் பரதன் கடலில் பிடித்த மீன்களே பரதநில மக்கள் மாற்றியதை

**‘இனிது பெறு பெருமீன் எளிதிற் மாறி’ (நற். 293 : 3)**

என்னும் பாடலால் அறியலாம்.

சங்க கால தமிழர் அன்றாட தேவைகளான தானியங்கள், உப்பு, தயிர் மீன், இறைச்சி முதலான பொருட்களைப் பண்டமாற்று முறையில் பெற்றுக் கொண்டனர். இடையர் பாலை கொடுத்து அதற்கு ஈடாக தானியத்தை பெற்றுக் கொண்டனர் என்பதை,

**“பாலோடு வந்து கூழொடு பெயரும்**
**ஆடுடை இடைமகன் சென்னிச்**
**சூடிய எல்லாம் சிறுபசு முகையே” (குறுந். 221)**

எனும் பாடல் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. உப்பை மாற்றி வெண்ணெய் பெற்றதை,

**“...,............... யாயும்**
**உப்பை மாறி வெண்ணெல் தரீஇய**
**உப்புவிளை கழனிச் சென்றனள்”. (குறுந். 269)**

என்னும் வரிகள் காட்டுகின்றன.

கொல்லிமலையில் காந்தள் மிகுந்த நாட்டில் உள்ள சிறுகுடிமக்கள் அருவியை சார்ந்து இருக்கும் நிலத்தில் ஐவகை நெல் விதைத்து உழவுத் தொழில் செய்து வந்தனர். அவர்கள் பசியால் வாடும் நிலை வந்தபோது தம்மிடம் இருக்கும் யானை கொம்பினை விற்று உணவுப் பொருளினை பெற்றனர்.

**“அருவிப் பரப்பின் ஐவமை வித்திப்**
**பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும்**
**காந்தள்அம் சிலம்பில் சிறுகுடி பசித்தென” (குறுந். 100 : 1-3)**

எனும் கபிலர் பாடலால் அறிகிறோம்.

**அகநானூறில் பண்டமாற்று முறை**

பண்டமாற்று முறையில் நடைபெற்ற வணிகத்தில் பெரும்பாலும் பெண்கள் ஈடுபட்டதாக குறிப்புகள் அகநானூற்றில் காணப்படுகின்றன.

**“காதல் கோள் உமணர் காதல் மடமகள்**
**சில்கோல் எல் வலை தெளிர்ப்ப வீதி**
**நெல்லின் நேர விண்கல் ஒப்பென**
**சேரி விலை மாறு கூறலின்” (அகம். 140 : 5-8)**

ஊர் தெருக்களில் உப்பு பெற்ற உமணப்பெண் நெல்லுக்கு அதை மாற்றியதை அம்மூவனார் காட்சிப்படுத்தியுள்ளார். மேலும் நெல்லின் அளவுக்கு உப்பு விற்கப்பட்டது என்பதால் உப்பின் மதிப்பும் உயர்ந்த பொருளாக மதிக்கப்பட்டதும் விளங்கும். இதனை பின்வரும் பாடலும் உறுதி செய்கிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**"நெல்லும் உப்பும் நேரே ஊரீர்!**
**கொள்ளீ ரோஎனச் சேரிதொரும் நுவலும்** (அகம். 390 : 8-9)

காவிரி ஆற்றின் மடுவில் பிடித்த வாளை மீன்களுக்கு மாற்றாக நெல்லை ஏற்காமல் கழற்சிக்காய் அளவிலான முத்துக்களையும் ஆபரணங்களையும் பண்டமாற்று பெற்ற செய்தியை அகம் 126 (11-12) பாடல் தெரிவிக்கிறது.

**"பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்**
**கழங்கு உறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்"** ( அகநானூறு -126)

தமிழர்கள் மரக்கலங்களில் பொன்னைக்கொண்டு வந்து கொடுத்துவிட்டு மிளகை ஏற்றிச் சென்றதை,

**"யவனர் தந்த வினைமாண் நன்கலம்**
**பொன்னோடு வந்து கறியோடு பெயரும்**
**வளம்கெழு முசிறி"** (அகம். 149 : 9-11)

எனும் பாடலும் புலப்படுத்துகின்றது.

உப்பை கொடுத்து வாங்கிய நெல்லை கொண்டு வெண்மையான சோறு சமைக்கப்பட்டதை அகம் 60 ஆம் பாடல் தெரிவிக்கிறது.

சங்கத் தமிழர்களின் சிறப்பான நுகர் பொருளாக மது விளங்கியது. பண்டமாற்றில் மதுவும் இடம்பெற்று இருந்ததையும் யானை கொம்பை கொடுத்து கள் வாங்கியதையும் அகநானூறு 245 (10-12) பாடல் காட்டுகிறது. மீன்பிடித்த போது கிடைத்த முத்தைக் கொடுத்து கள் வாங்கியதை அகம் 296 (8-9) பாடல் காட்டுகிறது

**"பசுமீன் தொடுத்த வெண்நெல் மாஅத்**
**தயிர்மிதி மிதவை ஆர்த்துவம் நினைக்கவே"**(அகம். 340 : 14-15)

என்னும் பாடலால் அறியலாம்.

**ஐங்குறுநூறில் பண்டமாற்று முறை**

உணவு பொருளான மீன் பண்டமாற்றில் இடம்பெற்று இருந்ததையும் உப்பும் நெல்லும் சமமாக மதிக்கப்பட்ட நிலையில் மீன் நெல்லை விட கூடுதலான மதிப்பு பெற்றிருந்ததை,

**'அம்சில் ஓதி அசை நடைப் பாண்மகள்**
**சில்மீன் சொரிந்து பல் நெற்பெற உம்** (ஐங்.149 : 1-2)

என்னும் ஐங்குறுநூற்று செய்யுளடிகள் விளக்குகின்றன.

பாணர் குடி பெண்ணன் இன்சுவை மிக்க கெடிற்று மீனுக்குப் பதிலாக பெரும்பயிறு பெற்றதை ஐங்குறுநூற்றுச் செய்யுள் குறிப்பிடுகிறது

பாணர்கள் நீர் நிலைகளில் வலை வீசியும் தூண்டிலிட்டும் பிடித்த மீன்களை பாண் மகளீர் மருத நிலத்தில் விளைந்த பயிற்றுக்கும் தானியத்திற்கும் மாற்றினார்கள் என்பதை,

**"............................ பாணமகள் இன் கெடிறு சொரிந்த**
**அகன் பெரு வட்டி நிறைய மனையோள்**
**அரிவாள் பெரும் பயிறு நிறைக்கும் ஊர** (ஐங். 47 : 1-3)

மற்றும்


http://Creativecommons.org//license/by/4.0/.

**“வளைவல் பாண்மகன் வால் ஆயிற்று மடமகள்**
**வாராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்**
**யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர!** (ஐங். 48 : 1-3)

என்னும் பாடல் வரிகளின் மூலம் அறியலாம்

**புறநானூற்றில் பண்டமாற்று முறை**

வேட்டைத் தொழிலை மேற்கொண்டு காட்டில் வாழும் வேட்டுவர் மானிறைச்சிக்கு மாற்றாக நெல்லையும் ஆயர்குல மகளிர் தயிருக்கு மாற்றாக நெல்லையும் பெற்றுச் சென்றுள்ளனர் என்பதை,

**“கான் உறை வாழ்க்கை கதாநாய் வேட்டுவன்**
**மான் தசை சொறிந்த வட்டியும் ஆய்மகள்**
**தயிர் கொடு வந்த தசும்பும் நிறைய**
**ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்**
**குளக் கீழ் கொடுப்ப உகந்தனர் பெயரும்**
**தென்னம் பொருப்பன் நல் நாட்டுள்ளும்”** (புறம். 33 : 1-6)

எனும் கோவூர்கிழார் பாடலால் தெரிய வருகிறது.

**முடிவுரை**

பண்டைக் காலத்தில் ஏற்றுமதி, இறக்குமதி முறையில் கடல் கடந்து வணிகத்தை தமிழர்கள் செய்திருப்பினும் உள்நாட்டு வணிகத்தில் பண்டமாற்று முறை வாணிகம் மிகப்பெரும் அளவு நடைபெற்று வந்துள்ளது. பண்டமாற்றில் பெரும்பாலும் உணவுப் பொருள்கள் இடம் பெற்றுள்ளன. விதிவிலக்காக முத்துக்களும் அணிகலன்களும் காணப்படுகின்றன. நெல்லும் உப்பும் சமமாக மதிக்கப்பட்ட நிலையில் மீன் நெல்லின் மதிப்பை விட கூடுதல் மதிப்பு பெற்றிருந்தது. பண்டமாற்று வணிகத்தில் வாங்குவோர், விற்போர் பாகுபாடு இன்றி தேவையே முன் நிறுத்தப்பட்டது. பண்டமாற்று வணிகம் மக்களின் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்ததுடன் வெவ்வேறு நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் மொழி மற்றும் கலாச்சார மாற்றத்திற்கும் வழிகோலியது என்று கூறின் அது மிகையன்று.

**துணை நூற்பட்டியல்**

1. அகநானூறு (மூலமும் உரையும்) - முனைவர் இரா. செயபால் உரையாசிரியர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட் சென்னை.ஐந்தாம் பதிப்பு - அக்டோபர் - 2013
2. ஐங்குறுநூறு (மூலமும் உரையும்) - முனைவர் அ. தட்சிணாமூர்த்தி (உரையாசிரியர்), ஆறாம் பதிப்பு - அக்டோபர் - 2017
3. நற்றிணை (மூலமும் உரையும்) - முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன், ஆறாம் பதிப்பு - அக்டோபர் 2017
4. குறுந்தொகை (மூலமும் உரையும்)- முனைவர் வி. நாகராசன், ஐந்தாம் பதிப்பு - அக்டோபர் - 2013
5. புறநானூறு (மூலமும் உரையும்)- முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன், முனைவர் அ.விசுவநாதன்,ஆறாம் பதிப்பு - அக்டோபர் - 2017

********


http://Creativecommons.org//license/by/4.0/.

# 8. புறநானூற்றில் பொருள் உற்பத்தியும் பண்டமாற்று மரபுகளும்

**முனைவர் பி.மலர்விழி,**
**இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்**
**பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), குன்னூர்.**
**DOI 10.5281/zenodo.16524130.**

**Abstract:**

The Sangam literature helps us to understand the various characteristics of ancient times, the way of life of the people, the nature of industries such as politics, trade, agriculture, etc., the life culture of the people, the nature of the tools they used, etc.

The economy of the Sangam period is largely self-sufficient. As it is today, there were rich and poor people, and people in between. Most of the people in ancient Tamil society were farmers, hunters, shepherds, fishermen, merchants, industrialists, and political workers. Mercenaries and pirates were the lower class of society. The food, clothing, occupations, customs, and names of different sections of the people living in different parts of a country differed depending on the situation.

If a country and society are to be prosperous, the economy of that country must also be prosperous. There is a close relationship between the life of the society and the economic condition of that group. During the Sangam period, richly worded situations were sung, while situations of poverty were abundantly described.

**Keywords :** Sangam Literature - Sangam period - Sangam Society

பண்டைக்காலத்து நானில இயல்புகளும் மக்கள் ஒழுகலாறும், அரசியல், வணிகம், உழவு முதலிய தொழில்துறை இயல்புகளும் மக்களின் வாழ்க்கைப் பண்பாடும்,அவர்கள் கையாண்ட கருவிகளின் இயல்பும் பிறவும் அறிதற்கு சங்க இலக்கியங்கள் துணைசெய்கின்றன.

சங்ககாலப் பொருளாதாரம் பெரும்பாலும் தன்னிறைவுடையதாய்க் காணப்படுகின்றது இன்று போல் .அன்றும் செல்வந்தர்களும் வறியவரும் இவர்களுக்கு இடைப்பட்ட நிலையில் உள்ளவர்களும் இருந்தனர். பழந்தமிழ் சமுதாயத்தில் பெரும்பாலானோர் உழவர்கள், வேட்டுவர், இடையர், மீனவர், வணிகர், கைத்தொழில் செய்வோர், அரசியல் பணி செய்பவர்களாக இருந்தனர்கூலிப்படையினர் ஆறலை கள்வர் . போன்றோர் சமூகத்தின் பிற்பகுதியினராக இருந்தனர்ஒரு நாட்டின் வெவ்வேறு . நிலப்பகுதியில் வாழ்ந்த வெவ்வேறு பிரிவினரது உணவு, உடை, தொழில், பழக்க வழக்கங்கள், பெயர்கள் ஆகியவை சூழ்நிலையால் வேறுபட்டவை.

ஒரு நாடும் சமூகமும் வளம் பெற்றிருக்க வேண்டும் என்றால் அந்நாட்டின் பொருளாதாரமும் செழிப்பாக இருத்தல் வேண்டும்சமுதாயத்தின் வாழ்க்கைக்கும் . அச்சமுதாயத்தின் பொருளாதார நிலைக்கும் நெருங்கிய தொடர்புண்டுசங்க காலத்தில் . ல்சொல்வளம் மிக்க சூழல்கள் பாடப்படுவதோடு வறுமையி உழலும் சூழல்களும் மிகுதியாக வரையறுக்கப்பட்டன.

## பொருளாதாரம் வரையறை

பொருளாதாரவியல் பற்றி பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே அறிஞர்கள் சிந்தித்து பல கருத்துக்களைக் கூறியுள்ளனர்பொருளியல் அறிஞர்கள் நுகர்வு ., உற்பத்தி, மாற்று, பகிர்வு என்ற நான்கு பெரும் பிரிவுகளின் கீழ் பொருளியலை ஆய்வு செய்துள்ளனர். சமீபகால பொருளியலாளர்கள் பொது நிதியையும் பொருளியலின் மற்றொரு முக்கிய பங்காக சேர்த்து


http://Creativecommons.org//license/by/4.0/.

உள்ளனர்‘ .தாரம்என்ற சொல்லுக்கு அரும் பண்டம் என்று ’ விளக்கம் தருகிறது செந்தமிழ் சொற்பிறப்பியல் பேர் அகரமுதலி தொகுதி)5)

**வருவாய் வாயில்கள்**

**“உறுபொருளும் உல்குபொருளும் தன் ஒன்னார்த்**
**தெறுபொருளும் வேந்தன் பொருள்”**

என்கிறது திருக்குறள்.

**உறுபொருள்**

ஒரு நாட்டின் இயற்கை வளம் மன்னனின் வருவாயில் இன்றியமையா இடம் பெற்றதுமலைபடுபொருள் ., கடல்படு பொருள், காடுபடுபொருள், நிலம் படுபொருள் என இயற்கையில் கிடைத்த வருவாய் குறித்து புறநானூற்றில் சான்றுகள் உள்ளன.

**“உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே**
**ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல் விளை யும்மே**
**இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம் ஊழ்க் கும்மே:**
**மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க் கும்மே**
**நான்கே, அணி நிற ஓரி பாய்தலின் மீது அழிந்து**
**திணி நெடுங் குன்றம் தேன் சொரியும்மே”** (புறம் 109)

என்ற பாடல் அடிகளால் பாரியின் பறம்பு மலைவளத்தை பாராட்டுகிறார் கபிலர்.

**“நெல்லும் நீரும் எல்லோருக்கும் எளிய என**
**வரைய சாந்தமும், திரைய முத்தமும்**
**இமிழ்குரல் முரசும் மூன்றுடன் ஆளும்”**(புறம் 58)

என்ற புறப்பாடல் வரி பாண்டியன் நெடுஞ்செழியனின் நாட்டுவளத்தைக் காட்டுவனவாய் அமைகின்றன.

**உலகு பொருள்**

ஒரு நாட்டின் அல்லது அரசின் வருவாய்க்குரிய வழிகள் மிகப் பலவாகும் அவற்றுள் வரிவிதிப்பின் மூலம் பெறும் வருவாயும் ஒன்றுஇறை ., திறை, புரவு, கடமை, குடிமை, ஆயம், முதலிய சொற்கள் மக்கள் அரசருக்கு வழங்கும் பல்வேறு பட்ட வரிகளைக் குறிப்பனவாகும்பழந்தமிழகத்தில் வணிகம் சிறப்புற்று திகழ்ந்தமையால் வணிகவரி . பெருமளவில் பெற பட்டிருக்கலாம் (புரத்தல்) வரி குடிமக்களைப் பாதுகாப்பதன் காரணமாய் . வாங்கபட்டமையின் சங்க காலத்தில் புரவு எனப்பட்டதுமிகுதியான வரி வாங்குவதை . அக்கால அரசர்கள் வெறுத்தனர். அளவுக்கு மீறிய வரி பெரும் அரசனே உள்ளத்தால் சிறியவர் என்று சோழன் நலங்கிள்ளியின் புறப்பாட்டு இகழ்கிறதுஇதனை .

**“மூத்தோர் மூத்தோர் கூற்றம் உய்த்தனப்**
**பால் தர வந்த பழவிறல் தாயம்**
**எய்தினம் ஆயின் எய்தினம் சிறப்பு எனச்**
**குடி புரவு இரக்கும் கூரில் ஆண்மைச்**
**சிறியோன் பெறின் அது சிறந்தன்று மன்னே”**(புறம்75)

என்று உணர்த்துகிறார் சோழர் நலங்கிள்ளி.


http://Creativecommons.org//license/by/4.0/.

பிசிராந்தையார், குடிமக்களிடத்து அரசன் வரி பெறும் வகையினைப் பாண்டியன் அறிவுடைநம்பிக்குத் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

**"பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்**
**யானை புக்க புலம் போலத்**
**தானும் உண்ணான் உலகமும் கெடுமே"** (புறம் 184)

என்று அரசை எச்சரிக்கிறார் புலவர்.

**கொண்டி**

சங்க காலத்தில் அரசர்களுக்கு இடையே நடந்த போர்களில் வென்ற அரசன் தோற்றவனிடமிருந்து கொண்ட பெரும் பொருள் கொண்டி எனப்பட்டதுகொண்டி . வேண்டுவனாயின் புறம்)51) எனும் தொடர் இதனைப் புலப்படுத்தும் படையெடுத்து வந்தவனின் தலைமையை ஏற்றுத் தாமே முன்வந்து கொள்க என அளித்த திறையை கொண்டி என குறித்துள்ளனர்தோற்றவர் நாட்டில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட . கொண்டி பொருளையும் என்றே வழங்கினர்இதனை ஐயூர் முடவனார் என்னும் புலவர் தம் . புறநானூற்றுப்பாடலில்,

**"........போரெதிர்ந்து**
**கொண்டி வேண்டுவன் ஆயின் கொள்கெனக்**
**கொடுத்த மன்னர் நடுக்கற்றனரே"** (புறம் 51)

எனப் பதிவு செய்துள்ளார்தம் தலைமையை. ஏற்காது பணிந்து திறை செலுத்தாத மன்னரைப் போரால் பணித்து அவரிடமிருந்து செல்வத்தை பெற்றனர். அவ்வாறு பணித்து பெற்ற செல்வமும் கொண்டி என்று குறிப்பிட பெற்றுள்ளதுஇதனை .,

**"தண் தமிழ் வரைப்பகம் கொண்டியாகப்**
**பணித்துக் கூட்டுண்ணும் தணிப்பு அருங்கடுந்திறல்"** (புறம் 198)

என வடமவண்ணக்கண் பேரிச்சாத்தனரும்.

**"பொருநனும் இளைஞன் கொண்டியும் பெரிதென**
**எள்ளி வந்த வம்பமள்ளர்"**( புறம் 78)

என இடைக் குன்றூர்க்கிழாரும் பாடிய புறநானூற்று பாடல்கள் அறிவிக்கின்றன . கடற்படையை கொண்டு படை எடுத்து வெற்றி பெற்று திரட்டி வந்த கொள்ளையடித்த பெரும் செல்வத்தைக் கோவூர்கிழார்

**"கடற்படை அடற் கொண்டி"**(புறம் 386) என்கிறார்.

**பண்டமாற்று**

பண்டைக்காலத்தில் பெரும்பாலும் வணிகம் பண்டமாற்று அடிப்படையிலேயே அமைந்திருந்ததுஉணவுப் பொருள்களும் இவ்வகை பண்டமாற்று முறையின் . அடிப்படையிலே பரவலாக்கப்பட்டனமிகுதியாக உற்பத்தி நாட்டின் ஒரு பகுதியில் . செய்யப்பட்ட பண்டங்களை மற்றொரு பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களுக்கு மாற்று செய்து கொண்டனர்சங்ககாலத்தில் . வாழ்ந்த தமிழர் அன்றாடத் தேவையான அரிசி, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலான பொருட்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று செய்து கொண்டதைப் பல அறிஞர்கள் கூறியுள்ளனர் சங்க இலக்கியம் சில ) பார்வைகள் பக்கம் 141). உள்நாட்டு வணிகத்தில் பண்டமாற்று முறை அடிப்படையாக இருந்தது .


http://Creativecommons.org//license/by/4.0/.

கடற்கரையில் விளைந்த உப்பை வலிமையுடைய எருதுகள் பூட்டிய வண்டியில் ஏற்றி குறிஞ்சி நிலத்திற்கு கொண்டு சென்றதை

**"கழியுப்பு முகந்து கன்னாடு மடுக்கும்**
**ஆரைச் சாகாட் டாழ்ச்சி போக்கும்"**

என்று மருத்துவன் தாமோதனார் பாடல் அடிகள் உணர்த்துகின்றனமீன் கொடுத்து . அவற்றுக்கு பதிலாக பண்டமாற்று முறையில் நெல் பெற்றதை

**"மீன் நொடுத்து நெற் குவைஇ"** (புறம் 343)என்ற வரிகளால் அறிய முடிகின்றதுஅதேபோல். பாண்டிய நாட்டின் வளமை கூறும் கோவூர்கிழார் மான் தசைக்கும் தயிருக்கு ஈடாக வெண்ணெல் பெற்றதைப் பாடுகிறார்.

கள் விலைக்கு ஈடாக பகைவரது ஆநிரைகளைப் பற்றி கொணர்ந்து கொடுத்த வீரனை

**"முட் கால் காரை முது பழன் ஏய்ப்பத்**
**தெறிப்ப விளைந்த தீங்கந் தாரம்**
**நிறுத்த ஆயம் தலைச் சென்று உண்டு"** (புறம் 258)

என்று உலோச்சனார் போற்றுகிறார் இப்பாடல் சான்றுகளால் .பண்டைத் தமிழகத்தில் பண்டமாற்று முறை இருந்தமை புலனாகிறது.

**வெளிநாட்டு வணிகம்**

"நாடென்ப நாடா வளத்தன" என்று வள்ளுவர் நாட்டின் குறிக்கோளை கூறியிருப்பினும் ஒரு நாடு தன் மக்களுக்கு வேண்டிய யாவற்றையும் பெற்றிருத்தல் முடியாதுஎனவே ஒரு . நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கும் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கும் பொருள் பரிமாற்றம் நிகழ வேண்டி இருந்ததுபண்டைத் தமிழர் கடல் வணிகத்தில் . தலை சிறந்து விளங்கியதற்கும் கடல் வணிகம் சிறப்புற்று ஓங்குதற்கும் துணையாக கப்பல் ஒட்டும் மாலுமிகள் ஆழ்கடலிலும் அச்சமின்றி சென்றதற்கும் புறநானூற்றில் சான்றுகள் உள. அவ்வாறு கலம் செலுத்துவோர் '**பெருங்கலந்தகாஅர்**' (புறம் 30) எனப்பட்டனர்கப்பல் ., வங்கம் கலம், நாவாய் போன்ற சொற்கள் அந்நாளில் வழக்கில் இருந்த கடல் வணிகத்தின் சிறப்பை காட்டுவன.

**"வளி வழக்கறுத்த வங்கம்"**( புறம் 368 )
**"கடலே கால் தந்த கலன் எண்ணுவோர்"**( புறம் 386)

என்பன பண்டங்களை ஏற்றி நெடுந்தொலைவு கடலில் செல்வதற்கு பயன்பட்ட பெரு மரக்கலன்களை கலம், வங்கம், நாவாய் என்று வழங்கியதை குறிக்கிறது.

**ஏற்றுமதி இறக்குமதி -**

சங்ககாலத்தில் வணிகம் செழிப்புற்றிருந்த நிலையை புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்துகின்றனகுட் .டுவன் என்ற சேர மன்னனின் துறைமுகப்பட்டினமாகிய முசிறியில் தமிழகத்து பல பண்டங்கள் நிறைந்திருக்கும் சிறப்பினை பரணர் எடுத்துரைக்கின்றார். மீனை விற்று நெற்குவியலை பெறுவார்கள் ஓடத்தில் ஏற்றி வந்த அந்நெற் குவியல்கள் வீட்டையே மருகச் செய்யும்வீட்டில் வைக்கப் பெற்ற .ிருந்த மிளகு மூட்டைகள் வணிகத்திற்காக முழக்கமுடைய கடற்கரைக்குச் கொண்டு சேர்க்கப்படும்அம்மிளகு முட்டைகளை . வெளிநாட்டு கப்பல் மூலமாக ஏற்றுமதி செய்து அக்கப்பல் வழி வந்து பொற் பரிசங்களை ஓடங்கள் கரைக்கு கொண்டு வந்து சேர்க்கும் முசிறியின் கடற்கரையில் மலையின் பல பண்டங்களும் கடலில் பல பண்டங்களும் நிறைந்திருக்கும் (புறம் 343) என்று பரணர் விளக்குகின்றார்ல்இதனால் முசிறி துறைமுகத்தின் வழி பெருமளவி . வெளிநாட்டாரோடு


http://Creativecommons.org//license/by/4.0/.

வணிகம் நடைபெற்றது என்பதை அறியலாம்வெளிநாடுகளில் இருந்து தமிழ்நாட்டுக்கு . மது கொண்டுவரப்பட்டது என்பதை **"யவணர் நன்கலம் தந்த தண் கமழ் தேறல்"**( புறம் 56) என்ற நக்கீரரின் புறநானூற்றுப் பாடல் அடிகள் உணர்த்துகின்றது.

**போரும் பொருள் அழிவும்**

பொருளாதாரச் சூழல் சூழ்நிலைக்கும் மேம்பாட்டிற்கும் தகுந்தவாறு போர் முறைகளும் வேறுபட்டிருந்தன.

**“ஏம நன்னா டொள் ளெரி யூட்டினை**
**நாம நல்லமர் செய்ய**
**ஓராங்க மலைந்தன் பெரும நின் களிறே"** (புறம் 16)
**"கடுந்தேர் குழித்த ஞெள்ளல் லாங்கண்**
**வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்**
**பாழ் செய் தனையவர் நனந்தலை நல் லெயில்"** (புறம் 15)

என்னும் பாடல்களில் வருவது போல் வேந்தர்களின் போர் நோக்கங்கள் எல்லாம் பொருளாதார அடிப்படையிலான விளைநிலங்களை அழிப்பனவாகவும் பொருளாதார பாதுகாப்பதற்கான மதில்களை அழிப்பதாகவும் நாட்டிற்குத் தீயிடுதலாகவும் நீர் நிலைகளைப் பாழ்படுத்துவதாகவும் இருந்துள்ளனபுறநானூற்று மகட்பாற் காஞ்சி பாடல்களும் . மருத நில வயல்களைக் கவர்வது வேந்தன் நோக்கமாய் இருந்ததை தெளிவாய் காட்டுகின்றன" **பிறர் மண் உண்ணும் செம்மல்"** (புறம் 20) என வேந்தன் புகழப்பட்டுள்ளனர். வேந்தர் பற்றிய பாடல்கள் அவர்கள் பகைவர்கள் ஊரை தீயிட்டு அழித்ததைக் காட்டுகின்றன.

**நிறைவுரை**

புறநானூற்றுப் பாடல்களில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானில வளங்களை குறித்து செய்திகள் விரிவாக இடம் பெறுகின்றனஅரசனுக்குரிய உறுபொருள் ., உல்குபொருள், தெறுபொருள் ஆகியன குறித்தும் மக்களுக்குரிய வணிகம், உணவு நெசவு ,போன்ற வருவாய் வாயில்கள் பற்றியும் புறநானூறு எடுத்துரைக்கின்றது. போரில் தோற்ற பகைவரிடமிருந்து அரசர் கவரும் கொண்டி பற்றிய குறிப்பும் இடம்பெறுகின்றது. செல்வர் வறியோர் ஆகிய இருத்திறத்தாரின் வாழ்க்கை தரங்களையும் அறியும் வகையில் புறநானூற்றுப் பாடல்கள் புனையப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

1. புறநானூறு,(தொகுப்பு), நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.
2. சங்க இலக்கியக் காட்சிகள், நியூ செஞ்சுரி புத்தக நிலையம், சென்னை.
3. அகமும் புறமும், கோவே(தொ.ஆ), கற்பகம் புத்தகாலயம், திருச்சி.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 9. சிலப்பதிகாரம் காப்பியம் காட்டும் வாணிகம்

**முனைவர் சா. சதீஸ்குமார்,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**கோயம்புத்தூர்-641 105.**
**Mail: satheeshkumar870@gmail.com - Phone: 6382483424.**
DOI 10.5281/zenodo.16524241.

**Abstract :**

Today's world is running according to the saying of the poet, "Thiraikadal odiyum diraviyam thedu". Literature helps to understand the commercial skills of Tamils. The entire Silappadhikaram, one of the five great epics, has the business industry in the foreground. This is because the Silappadhikaram reflects the lifestyle of the merchant clan. This article examines the story of the trade that was carried out across the sea in the Pukarankandam, which was divided into two large parts, Pattinapakkam and Maruvurpakkam, in the beginning of this epic, and the story of the trade that took place when Kovalan went to explore the beauty of the city of Madurai, where the Nalankaadi, which was in the form of a street, was replaced by an Allankaadi.

**Key Words** : Silambu - Merchant - Naal angaadi - al angaadi - Kavalan

**“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற ஔவையார்** வாக்கிற்கேற்ப இன்றைய உலகம் இயங்கி வருகின்றது. **தமிழர் வணிகத் திறன் அறிய இலக்கியங்கள் கைகொடுக்கின்றன**. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் முழுவதிலும் வணிகத்தொழில் முன்னிறுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் சிலப்பதிகாரம் வணிக குலத்தைச் சார்ந்தவர்களின் வாழ்வியலை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. இக்காப்பியத்தின் தொடக்கத்திலேயே புகார்க்காண்டத்தில் பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் எனும் இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கடல் கடந்து சென்று வாணிகம் செய்த செய்தியும், மதுரைக் காண்டத்தில் கோவலன் மதுரை நகரின் சிறப்பினை அறிய செல்லும் போது அங்கே நடை முறையில் இருந்த நாளங்காடி மட்டும் அல்லங்காடி என்று அமைத்து வாணிகம் நடைபெற்ற செய்தியினையும் ஆய்ந்து அறிவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## முன்னுரை:

**சிலப்பதிகாரத்தில் வணிகம் குறித்த பல செய்திகள் உள்ளன. காவிரிப்பூம்பட்டினம் வணிகத்தில் சிறந்து விளங்கியது, அங்கு பல நாட்டு வணிகர்கள் வந்து தங்கியிருந்தனர்**. அக்காலத்தில் ஒரு முக்கிய வணிகத் துறைமுகமாக இருந்தது. வெளிநாட்டு வணிகர்களும் இங்கு வந்து தங்கியிருந்தனர். யவனர்கள், சாவகத் தீவிலிருந்து வந்தவர்கள் போன்ற பல்வேறு நாட்டு வணிகர்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் தங்கியிருந்தனர். தமிழர் கிழக்கிந்திய தீவுகளுக்கு சென்று அங்கிருந்து கொண்டு வந்த பொருட்களை வாங்கிய வணிகர்கள், அவற்றை வெளிநாடுகளுக்கு விற்றனர். சிலப்பதிகாரத்தில் கடையமைப்பு, விற்பனைப் பொருட்கள், தெருக்களின் அமைப்பு, உணவுச்சாலைகள், சிறுபொருள் விற்பனை பற்றிய செய்திகளை இனி காணலாம்

## பிறநாட்டு வாணிகர்

பழங்காலத்துத் தமிழர் தரை வழியாகவும் கடல்வழியாகவும் பாரதநாடு முழுவதும் சென்று வாணிகம் செய்தார்கள், உஞ்சை (உச்சயினி), கலிங்கப்பட்டினம், காசி (வாரணாசி), பாடலி (பாடலிபுரம்) முதலான இடங்களிலும் கடல் கடந்த நாடுகளாகிய காழகம் (பர்மா


http://Creativecommons.org//license/by/4.0/.

தேசம்) அருமணவன் (Rāmañña), தக்கோலம் (Takkolas), கிடாரம் (கடாரம்), சாவகம் (கிழக்கித்தியத் தீவுகள்) முதலான இடங்களுக்கும் சென்று வாணிகஞ் செய்ததை முன்னமே கூறினோம்.

தமிழ் வாணிகர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கைக்குச் சென்று அங்கே அநுராதபுரத்தில் தங்கி வாணிபம் செய்திருந்தனர் என்பது, சமீப காலத்தில் அந்நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துக் கல் வெட்டினால் அறியப்படுகிறது என்பதையும் கூறினோம்.

தமிழக வாணிகர் அயல் நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தது போலவே அயல்நாட்டு வாணிகரும் தமிழகத்துக்கு வந்து வாணிகஞ் செய்தார்கள். அக்காலத்தில் வாணிகத்தில் உலகப் புகழ்பெற்ற காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்திலே அயல் நாடுகளிலிருந்து கப்பலோட்டி வந்த வேறு பாஷைகளைப் பேசின மக்கள் தங்கியிருந்ததைர் சிலப்பதிகாரம் கூறுகிறது.

**'பயனற வறியா யவனர் இருக்கையும்**
**கலந்தரு திருவிற் புலம் பெயர் மக்கள்**
**கலந்தினி துறையும் இலங்கு நீர் வரைப்பும்.'(சிலம்பு,** 5:10-12)

இந்த வரிகள் மூலம், பூம்புகார் துறைமுகம் ஒரு பன்னாட்டு வணிக மையமாக விளங்கியதையும், பல்வேறு நாட்டு வணிகர்கள் அங்கு வந்து தங்கியிருந்ததையும் அறியலாம்.

**'மொழி பெயர் தேத்தோர் ஒழியா விளக்கம்'(சிலம்பு,** 6:43)

இத்தொடர், காவிரிப் பூம்பட்டினம் என்னும் சங்ககால துறைமுக நகரத்தில் பல மொழி பேசும் மக்கள் வந்து தங்கியிருந்ததைக் குறிக்கிறது. அவர்கள் தங்கள் மொழியைப் பேசவும், பண்பாட்டைக் கடைப்பிடிக்கவும் சுதந்திரமாக இருந்தனர் என்பதையும் இது காட்டுகிறது

**'மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம் பெயர் மாக்கள் கலந்தினி துறையும்**
**முட்டாச் சிறப்பிற் பட்டினம்.' (பட்டினப்பாலை,** 216-218)

என்ற பட்டினப்பாலை வரிகளில், பல மொழிகள் பேசும் மக்கள் வந்து தங்கும் சிறப்புமிக்க காவிரிப் பூம்பட்டினம் என்று கூறப்படுகிறது.

இந்த தொடர்கள் மூலம், பண்டைய தமிழகத்தில் வெளிநாட்டு வாணிகர்கள் வந்து சென்றதற்கான சான்றுகளும், காவிரிப் பூம்பட்டினம் ஒரு பன்னாட்டு வணிக மையமாக திகழ்ந்ததையும் அறிய முடிகிறது.

**சிலப்பதிகாரத்தில் வாணிகம்**

புகாரில் பல தேசத்து வணிகர்களும் ஒரு தேயத்தார் போலக் கலந்து வாழ்ந்தமை காட்டும் சிலப்பதிகாரமும் கடைவீதிகளில் சுற்றிவருகிறது. இங்கு விற்பனையாளர்கள் கடைகளுக்குள்ளும் இருந்தனர். கைகளில் பொருட்களுடன் வீதிகளில் திரிந்தும் விலை கூவி விற்றனர். 'பகர்வனர் திரிதரு நகர வீதியாகச் சிலம்பு இதைக் காட்டும். பட்டு, மயிர், பருத்தியால் செய்த உடைவகைகள் கடைகளை நிறைத்திருந்தன. மயிரால் செய்யப்பட்ட உடைகள் விலங்குத் தோலாடைகளைக் குறித்து நிற்கின்றனவோ என்று கருதவேண்டியுள்ளது. நறுமணப் பொருட்களை விற்றவரைச் சிலம்பு, வாசவராகக் காட்டுகிறது. வெண்கலக் கன்னார், செப்புப் பாத்திரம் செய்பவர், மரம் கொல் தச்சர், கொல்லர், மண்ணீட்டாளர், தட்டார், தையல் தொழிலர் எனப் பலரும் மருவூர்ப் பாக்கத்தில் கடைகள் பெற்றிருந்தனர். பல்லவர் காலத்திற்கு முற்பட்ட தமிழ்நாட்டு வணிகச் சூழல் அறிய, சிலப்பதிகாரம் இணையற்ற சான்றாகும். கடையமைப்பு, விற்பனைப்பொருட்கள்,


http://Creativecommons.org//license/by/4.0/.

வணிகமாக்கள், தெருக்களின் அமைப்பு, உணவுச்சாலைகள், சிறுபொருள் விற்பார் என வணிகத்தின் பல பரிமாணங்களைச் சிலப்பதிகாரம் சீர்படச் சொல்கிறது. இதனால் தமிழ்நாட்டின் விளைபொருட்கள் பற்றிய விரிவான அறிவு பெறல் கூடுகிறது.

பண்டைக் காலத்தில் சோழர்களின் தலை நகராகிய புகார் ஒரு பெரிய வாணிகக் களமாக (சந்தையாக) விளங்கிற்று. புதிய புதிய நாடுகளிலிருந்து பல்வேறு பண்டங்கள் கால் வழியாகவும், கப்பல் வழியாகவும் கொண்டுவரப் பெற்றுப் புகாரில் ஒருங்கு குவிக்கப் பட்டிருந்தனவாம். இது சிலம்பு - மனையறம் படுத்த காதையில்,

**"அரும்பொருள் தரூஉம் விருந்தின் தேஎம்**
**ஒருங்கு தொக்கன்ன உடைப்பெரும் பண்டம்**
**கலத்தினும் காலினும் தருவன ரீட்ட.."( மனையறம் படுத்த காதை** - 5-7)

என்ற வரிகளில் புதிய நாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் அரிய பொருட்கள், கப்பல்கள் மூலமாகவும், மனிதர்கள் மூலமாகவும், கொண்டுவரப்பட்டு பண்டமாற்று முறையில் விற்கப்படுவதை இது விவரிக்கிறது. இத்தகைய பன்னாட்டுப் பண்டங்களும் புகாரில் ஒருங்கு குவிந்திருப்பதால், பல நாடுகளும் ஓரிடத்தில் - ஒன்று சேர்ந்த காணப்படுவது போன்ற தோற்றம் புகாரில் காணப்பட்டதாம்.

காண்போரைப் போக விடாமல் தடுக்கும் அழகிய பயன் நிறைந்த யவனர் இருக்கை - பல நாடுகளிலிருந்து கப்பலில் பல்வேறு பண்டங்களை ஏற்றி வந்தவர்கள் தங்கும் இருப்பிடம் - வண்ணக் குழம்பும் சுண்ணமும் சாந்தமும் (சந்தனமும்) பூவும் புகைக்கும் பொருள்களும் நறுமணப் பொருள்களும் ஆகியவற்றைப் பலர் கூவித் திரிந்து விற்கும் தெருக்கள் - அளவிட முடியாத உடை வகைகள், மணி வகைகள், கூல (தானிய) வகைகள், உண்ணும் பொருள்கள் - மீன், இறைச்சி, உப்பு, வெற்றிலை, இன்னும் பல்வேறு பொருள்கள் விற்கப்படும் பகுதிகள், பல்வேறு தொழில் வல்லுநர்கள் இருக்கும் இடங்கள் முதலியன மருவூர்ப் பாக்கத்தில் இருந்தன.

**"கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்**
**பயன்அறவு அறியா யவனர் இருக்கையும்,**
**கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்** ( 9-11)

என்ற வரிகள் சிலப்பதிகாரத்தில் வரும் மருவூர்ப்பாக்கத்தைக் குறிக்கின்றன.

**விற்பனைக் கொடி**

பல்வேறு நாடுகளிலிருந்து கப்பல்களின் வாயிலாகப் பல்வேறு பொருள்களைக் கொண்டு வந்த வணிகர்கள், கடல் கரையில் உள்ள வெண் மணல் பகுதியில் பொருள் களைப் பரப்பி விற்பனை செய்கின்றனர். ஒவ்வொரு பொருளையும் அறிவிக்கும் - அறிவிப்புக் கொடிகளை அவ்வப் பொருள்கள் குவிக்கப்பட்டிருக்கும் பகுதியில் நட்டு விற்பனை செய்யப்படுகிறதாம்.

**"கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்**
**வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பில்**
**கூல மறுகில் கிடியெடுத்து நுவலும்**
**மாலைச் சேரி மருங்கு......"(130-133)**

என்பது பாடல் பகுதி. இந்தக் காலத்தில் வணிகர்கள் சிலர், அகல - நீள வாட்டமுள்ள துணியில் எழுதி விளம்பரப் படுத்தி விற்பனை செய்கின்றனர். துணியின் வாயிலாக விளம்பரப்படுத்தும் வழக்கு அந்த நாளிலும் இருந்ததாகத் தெரிகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

இவ்வளவு சிறப்புடன் திகழ்ந்த காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டது வேதனைக்கு உரியது. இதுகாறும் சோழரின் புகார் நகர வணிக வளம் இடம் பெற்றது. அடுத்து, பாண்டியரின் மதுரை நகரின் வணிக வளம் காணலாம்.

மதுரை மாநகரின் புறஞ்சேரியிலே (புறநகர்ப் பகுதியில்) கண்ணகியைக் காக்குமாறு கவுந்தியிடம் ஒப்படைத்துவிட்டுக் கோவலன் மதுரையைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான். அவன் கண்ட வணிகப் பகுதிகள் இவண் வருமாறு:ஒன்பான் மணிகள் (நவரத்தினங்கள்) விற்கும் கடைத்தெருகொடி கட்டி விளம்பரம் செய்து பொன் விற்கப்படும் பகுதி - பருத்தி நூலாலும் பட்டு நூலாலும் பல் வகை மயிர்களாலும் நெய்யப்பட்ட பல்வேறு வகை ஆடைகள் விற்கும் பகுதி - மிளகுப் பொதியுடனும் நிறுக்கும் துலாக் கோலுடனும் ஒரிடத்தில் நில்லாது நேரம் பாராது கூலங்களைச் (தானிய வகைகளைச்) சுமந்து திரிந்து விற்கும் பகுதிகள் - இன்ன பிற வணிக நிறுவனங்கள் உள்ள பகுதிகள் ஆகியவற்றையும் மற்றுமுள்ள நகர்ப் பகுதிகளை யும் கோவலன் சுற்றிப் பார்த்தான்:

**"வகைதெரி மாக்கள் தொகைபெற் றோங்கிப்**
**பகைதெறல் அறியாப் பயங்கெழு வீதியும்,**
**சாத ரூபம் கிளிச்சிறை ஆடகம்"** ( 199-201)

பாண்டி நாட்டின் தலைநகரான மதுரை அக்காலத்தில் கோட்டை மதிலுக்குள் இருந்தது. கோட்டை. வாயில்களில் யவன வீரர்கள் காவல் இருந்தனர். கோவலன் மதுரைக்குச் சென்றபோது கோட்டை வாயிலை யவன வீரர்கள் காவல் காத்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

**'கடிமதில் வாயில் காவலிற் சிறந்த**
**அடல்வாள் யவனர்க்கு அயிராது புக்கு' (சிலம்பு, ஊர்காண்.** 66-67)

பாண்டியனுடைய பாசறையில் யவன வீரர்கள் இருந்ததை முல்லைப்பாட்டு கூறுகிறது. முழங்கால் வரையில் குறுகிய பாவாடை போன்ற ஆடை (வட்டுடை) அணிந்து உடம்பில் மெய்ப்பை (சட்டை) அணிந்து குதிரையோட்டும் பாத்திகையை (சம்மட்டியை)க் கையில் வைத்திருந்தனர். அவர்களுடைய தோற்றம் அச்சஞ்தருவதாக இருந்தது.

**'மத்திகை வளைஇய மறிந்து வீங்கு செறிவுடை**
**மெய்ப்பை புக்கு வெருவருந் தோற்றத்து**
**வலிபணரி யாக்கை வன்கண் யவனர்'** ( **முல்லைப் பாட்டு** ( 59-61)

என்ற வரிகள் குதிரைச் சவுக்கினை மடக்கி வளைத்துக் கட்டியதால் புடைத்துத் தோன்றும் நெருக்கிக் கட்டிய ஆடையும், சட்டையும் அணிந்த, அச்சம் தரும் தோற்றமும் வலிமையான உடம்பும் வீரமும் உடைய யவனர், புலிச்சங்கிலி தொங்கவிடப்பட்டு, அலங்கரிக்கப்பட்ட பெருமை பொருந்திய (மன்னன் இருக்கும்) நல்ல இல்லத்தில் அழகிய மணி விளக்கினை ஒளிரச் செய்தனர் கூறுகிறது.

அந்தக் காலத்தில் எல்லா நாடுகளிலும் என்ணெய் விளக்கு உபயோகிக்கப்பட்டது. மண்ணால் செய்த அகல் விளக்கையும் இரும்பினால் செய்த விளக்கையும் (இரும்பு செய் விளக்கு) நெடுநல்வாடை, தமிழர் உபயோகித்தார்கள். யவன நாட்டிலிருந்து வந்த அன்னப் பறவையின் உருவமாக அமைக்கப்பட்ட 'ஓதிம' விளக்கையும், பெண் வடிவமாக அமைத்த 'பாவை' விளக்கையும் தமிழர் உபயோகித்தார்கள். இவ்விளக்கைச் செல்வர் வாங்கி உபயோகித்தார்கள்.


http://Creativecommons.org//license/by/4.0/.

'யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேத் தையகல் நிறைய நெய் சொரிந்து
பருஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிர் எரி'

(நெடுநல் வாடை: 101-103),

என்ற இந்த வரி, பழங்காலத் தமிழ் இலக்கியமான நெடுநல்வாடை பாடலில் இடம்பெற்றுள்ளது. இதில், "யவனர்" எனப்படும் கிரேக்கர்களால் செய்யப்பட்ட, வேலைப்பாடமைந்த பாவை விளக்கில், கையில் ஏந்தியவாறு, அகன்ற தட்டில் நெய் ஊற்றி, பருத்த திரியிட்டு, எரியும் விளக்கைக் குறிக்கிறது.

**முடிவுரை:**

பண்டைய தமிழர்களின் வாணிக முறைகளை அறிந்துகொள்ள ஒரு முக்கிய ஆதாரமாக சிலப்பதிகாரம் விளங்குகிறது.அக்காலகட்டத்தின் பொருளாதார மற்றும் சமூக நிலைகளை புரிந்து கொள்ள உதவுகிறது.வணிகர்கள் எவ்வாறு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர் என்பதை காட்டுகிறது.வணிகத்தில் நேர்மை மற்றும் நீதியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இதன் மூலம் அக்காலகட்டத்தின் வணிக முறைகள், பொருட்கள், சந்தைப்படுத்துதல் மற்றும் வாணிகர்களின் வாழ்க்கை முறை போன்றவற்றை அறிய முடிகிறது. மேலும், சிலப்பதிகாரம் காட்டும் வாணிகம், அக்காலத்திய பொருளாதார நிலை மற்றும் சமூக கட்டமைப்பை புரிந்து கொள்ள உதவுகிறது.

**பார்வை நூல்கள்:**

1. சிலப்பதிகாரம் - புலியூர்க் கேசிகன் உரை,மூலமும் உரையும்,பாரி நிலையம் சென்னை-600 108
2. பட்டினப்பாலை - இர. பிரபாகரன், I Floor, 15A, CASA Major Rd, Sulaiman Zackria Avenue, Egmore, Chennai, 600008
3. முல்லைப் பாட்டு - **முனைவர் கதிர் முருகு**, மூலமும் உரையும் **பழனியப்பா பிரதர்ஸ்**, கோனார் மாளிகை,25, பீட்டர்ஸ் சாலை, சென்னை- 600 014


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 10. புறநானூறு காட்டும் வாழ்வியலும் வணிகமும்

**முனைவர் ச.சரளா,**
**உதவிப் பேராசிரியர் , தமிழ்த்துறை**
**பொள்ளாச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,பூசாரிப்பட்டி.**
DOI 10.5281/zenodo.16524388.

**Abstract**

The purpose of this article is to convey the life and business messages of Purananuru, one of the Sangam literary texts. The article conveys the life through small topics such as hospitality, homeliness, business excellence, academic excellence, the virtue of the king, the virtue of war, scientific thinking, and selflessness.

**Key Words :** Puranaanuru - Sangam literature - Selflesness

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றைப் போன்றே தமிழரின் வாழ்வியலும் நெடிய வரலாற்றைக் கொண்டது. நம் தமிழ் இலக்கியங்கள் வாழ்வியலை பிரதிபலிக்கும் கண்ணாடி என்பதில் ஐயமில்லை. இன்றைய நவீன அறிவியல் உலகத்திலும் நாம், தமிழ் இலக்கியங்களின் வழி பல வாழ்வியல் செய்திகளை பின்பற்றி வருகின்றோம். உதாரணம் காட்டி வாழ்கின்றோம். அந்த வகையில் புறநானூற்றின் வழி வாழ்வியல் மற்றும் அதன் ஒரு அங்கமாகத் திகழும் வாணிகத்தைக் குறித்தும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

## விருந்தோம்பல்

பழந்தமிழர் வாழ்வியலின் முக்கிய அங்கமாக விருந்தோம்பல் பண்பு இருந்தது. அன்புடைய கணவனும் மனைவியும் இணைந்து விருந்தினரை உபசரிப்பது வழக்கமாக இருந்தது. மேலும், சங்க கால மகளிரின் தலைசிறந்த பண்புகளில் இதுவும் ஒன்றுஎன்பதனை,

> **"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
> **பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"1 (தொல்.கற்.150)**

என்ற தொல்காப்பியச் செய்யுள் வழி அறியலாம். இச்செய்தியையே புறநானூறும் உணர்த்துகின்றது. தன் இல்லத்திற்கு எவ்வளவு விருந்தினர் வந்தாலும் மனம் கோணாது இருப்பவள். உணவுப் பொருள் குறைவாக இருந்தாலும் வந்த விருந்தினர் அனைவரையும் பந்தலில் வரிசையாக அமரச் செய்து முறையாக உணவிட்டு உபசரிப்பாள்என்பதனை,

> **"தவச் சிறிதாயினும் மிகப்பலர் எண்ணாள்**
> **நீள் நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்**
> **இவ்வொலி மகடூ உப்போல" 2 (புறம். 331)**

மேற்கண்ட வரிகள் உணர்த்துகின்றன. விருந்தோம்பல் பண்பு வாழ்வியல் அறமாகக் கருதப்பட்டது.

## புறநானூற்றில் வாணிகம்:

வாணிகமானது சங்க கால குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை போன்ற நிலப் பிரிவுகள் தோன்றிய போதே தொடங்கிவிட்டது எனலாம். ஏனெனில் பண்டமாற்று முறையே இதற்கு உதாரணம். புறநானூற்றிலும் பண்டமாற்று முறை வாணிகம் அமைந்திருந்தது என்பதை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**"மீன் நொடுத்து நெல்குவைஇ**
**மிசை யம்பியின் மனை மறுக்குத்து"** 3 (புறம். 343)

என்ற பாடலால் மீனுக்கு விலையாக நெல்லைப் பெற்ற முறையை காண முடிகின்றது. மேலும் புறநானூற்றில் ஒப்பு வாணிகம் பெரிதும் இடம்பெற்றுள்ளது.

**"எருது இளையநுகம் உணராவே ……**
**அவணது அரியுநர் யார்என உமணர்"** 4 (புறம். 102)

என்ற பாடலால் வணிகத்திற்கு மாட்டு வண்டிகள் பயன்படுத்தியமை, உப்பு வணிகர்களை '**உமணர்**' என்றும் குறிப்பிடுவதை அறிய முடிகின்றது.

புறநானூற்றில் கடல் கடந்து வாணிகம் செய்த செய்திகளையும் காணமுடிகின்றது. வாணிகத்திற்கு பயன்பட்ட மரக்கலங்கள், அவற்றை இயக்கும் பரதவர் மற்றும் அவர்களது நுண்ணறிவு, காற்றால் இயக்கப்படும் மரக்கலம் போன்றவை குறித்த செய்திகளையும் அறிய முடிகின்றது. மேலும்,

கள்வாணிகம், மீன்வாணிகம், பூ, தயிர், கரும்புச்சாறு போன்ற பொருட்களை மக்கள் வாணிகம் செய்திருந்ததை புறநானூற்றின் வழி அறிய முடிகின்றது.

**இல்லறத்தில் வள்ளல் பண்பு**

இல்லறம் நல்லறமாகத் திகழ்வதற்கு காரணம் நம் பழந்தமிழர் உழைப்பையும் அதன் வழி வரும் பொருள் மூலம் உற்றார், உறவினருக்கு உதவியதுமே ஆகும். பெருஞ்சித்திரனார் குமண வள்ளலைப் பாடி, பரிசில் பெற்று வந்ததும், தன் மனைவியிடம் கூறியதாவது 'என்னிடம் கேட்டுத்தான் உற்றார் உறவினருக்கு பொருள் கொடுத்து உதவ வேண்டும் என்பதில்லை, இப்பொருளை வைத்து நீண்ட காலம் நாம் உயிர் வாழ்வோம் என எண்ணாது எல்லோருக்கும் கொடுப்பாயாக',

**"இன்னோர்க்குஎன்னாது,என்னோடும்சூழாது**
**வல்வாங்கும் வாழ்வதும் என்னாது நீயும்**
**எல்லார்க்கும் கொடுமதி**
**மனை கிழவோயே "**5 (புறம். 163)

என்ற வரிகளால் வறுமையான நிலையிலும், வள்ளல் பண்போடு திகழ்ந்த கணவன் - மனைவியின் இனிய இல்லறத்தை அறிய முடிகின்றது.

**தன்னலமின்மை**

பழந்தமிழர் சுயநலம் இன்றி வாழ்ந்தனர் என்பதற்கு புறநானூற்றின் இப்பாடல் ஒன்றே போதுமானது. உலகில் உயிர்கள் தோன்றுகின்றன. அழிகின்றன. மக்கள் பிறக்கின்றனர். இறக்கின்றனர். ஆனால், உலகம் மட்டும் அழியாது நின்று நிலை பெறுவதற்குக் காரணம் சில சான்றோர்கள் இருப்பதால் தான் என்று இளம்பெருவழுதி என்ற புலவர் கூறும் அச்சான்றோர்களின் இயல்புகள்,

**"உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத்**
**தமியர் உண்டலும் மிலரே முனிவிலர்**
**துஞ்சலுமிலர் பிறரஞ்சுவது அஞ்சிப்**
**புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர் விலர்"** 6 (புறம்.182)


http://Creativecommons.org//license/by/4.0/.

போன்ற வரிகளால் குறிப்பிடுகிறார். மேலும், உணவு, உடை மட்டுமின்றி பொன், பொருள் அனைத்தையும் நல்ல எண்ணத்தோடு வழங்கும் வள்ளல்களாக வாழ்ந்திருந்தனர் என்பதைக் காண முடிகின்றது.

**கல்விச்சிறப்பு**

சங்க காலத்தில் கல்வி என்பது சிறப்பான நிலையில் இருந்தது. மிகுதியான புலவர்கள், தமிழ் சங்கங்களே இதற்கு சான்றாக அமைகின்றன. மேலும், ஆண் - பெண் இருபாலரும் கல்வியை சமமாகக் கற்றனர். சமுதாயத்தில் மன்னன் முதல் பொதுமக்கள் வரை கல்வி கற்பதில் பெருமிதம் கொண்டிருந்தனர்.

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிச்சை நிலை முனியாது கற்றல் நன்றே"** 10 (**புறம்**.183)

என்ற பாடலால் கல்வி கற்கும் சிறப்பை உணர முடிகின்றது. மேலும் கல்வி கற்றுக் கொடுக்கும் குருவிற்கு தகுந்த மரியாதை அளித்து, பணிவிடைகள் செய்து, குருவின் மனம் மகிழும்படி நடக்கும் சிறந்த மாணாக்கர்களாக விளங்கினர்.

**அரசனுக்குரிய அறம்:**

அறமானது அரசனிலிருந்து தொடங்கப்பட்டது. மன்னன் வழி அமைச்சர், மக்கள் போன்றோர் கடைபிடித்தனர். அந்த வகையில் மன்னனுக்குரிய அறமாக, மக்களின் வறுமையை போக்கும் வழி வகையை பாடல் வழி புலவர் குடபுலவியனார் உணர்த்துகின்றார்.

**"நீரின்றமையா யாக்கைக் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப்படுவது நிலத்தொடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரே"** 11 ( **புறம்**.18)

பண்டைத் தமிழரின் வாழ்வியல் நிலைகளை எடுத்துக் கூறும் பாடல் அடிகள் இவை. சங்க காலப் புலவர்கள் அரசனுக்கு அறிவுரை கூறும் நிலையிலும் இருந்துள்ளனர். நீர் வளம், உணவு, வேளாண்மைப் பெருக்கம் போன்ற கடமைகளைச் செய்வது மன்னனுக்குரிய அறமாக போதித்துள்ளனர்.

**அறிவியல் சிந்தனை**

இன்றைய நவீன அறிவியலுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர்கள் நம் பழந்தமிழர்களே. அவர்கள் வரலாறு, இலக்கியம்,கணிதம், நுண்கலைகள், வானநூல் போன்ற பலவற்றிலும் சிறந்தவர்களாக இருந்துள்ளனர். சூரியனின் வழி, அதன் இயக்கம், காற்றின் திசை, பரந்த வானம் போன்றவற்றின் எல்லையளவு சென்று நேரில் அளந்து ஆராய்ந்து சொல்லும் ஆழ்ந்த அகன்ற அறிவுடையவர்கள் இருந்தனர் என்பதை,

**"செஞ்ஞாயிற்றுச் செலவும்,**
**அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்,**
**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்,**
**வளி திரிதரு திசையும்,**
**வந்து நிலை இய காயமும்,**
**என்றிவை சென்றளந்து அறிந்தார் போல…"** 14 (**புறம்**.30)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலால் அறியலாம். எனவே நமது முன்னோர்களின் வழியே நாம் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை உணரலாம்.

**தொகுப்புரை**

தமிழ் இலக்கியங்கள் அனைத்துமே வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இருக்கும் நிலையில், சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுபவை என்ற கூற்றை மெய்ப்பிக்கும் வகையில், வரலாற்றுப் பெட்டகமாகத் திகழும் புறநானூறு வழி வாழ்வியலை உணர்த்துவதே இக்கட்டுரையின் சிறப்பாகும். அந்த வகையில் வாழ்வியலின் சில பகுதிகளான விருந்தோம்பல், இல்லறத்தில் வள்ளல் பண்பு, வாணிகச்சிறப்பு, தன்னலமின்மை, கல்விச்சிறப்பு, அரசனுக்குரிய அறம் மற்றும் அறிவியல் சிந்தனை குறித்த செய்திகளை உணர்வுகளைத் தந்துள்ளது.

**முடிவுரை**

பழந்தமிழரின் வாழ்வியலே இலக்கியங்களாகவும், வாழ்வியலை உணர்த்தும் கருவியாகவும் திகழ்கின்றன. இன்றைய இளம் தலைமுறையினர் தடம்மாறி செல்லாமல் தடுக்க இவ்விலக்கியங்கள் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. நம் தமிழ் இலக்கியங்களின் பெருமையை அவர்களுக்கு உணர்த்தி அவர்களது வாழ்விற்கு சிறந்த வழிகாட்டியாக முன்நிற்போம். நம் தமிழரின் பெருமையை காப்போம்.

**துணை நூல் பட்டியல்:**

1. தொல்காப்பியம் - தமிழ் வளர்ச்சிக்கழகம், புலியூர்க்கேசிகன் உரை எழும்பூர், சென்னை - 600 008
2. சிலப்பதிகாரம் மூலமும் உரையும் 184/88, பாரி நிலையம், பிராட் வே, புலியூர்க்கேசிகன் உரை சென்னை - 600 108
3. புறநானூறு - புலியூர்க்கேசிகன் உரை சாரதா பதிப்பகம்,5050/1 பொன்னி குடியிருப்பு, அண்ணா நகர், சென்னை - 600040

***********


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 11. பட்டினப்பாலையை முன் வைத்துத் தமிழரின் வாணிகத் தொடர்பு

**முனைவர். ஹெலன் ஜெபா றோஸ் செ.லீ**
**இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை,**
**அரசுக் கல்லூரி மூணார்.**
**மின்னஞ்சல் :** helenjapani@gmail.com - **அலைபேசி :** 9446171049
DOI 10.5281/zenodo.16524500

**Abstract**

A large part of Tamil Nadu is located near the sea. The coastal districts were inhabited by people called Bharatavars or seafarers. These people were engaged in various occupations. Our country's merchants had trade relations with the West. They especially had relations with countries like Egypt, Greece, Rome, Babylonia, etc., and exported various goods like spices, expensive pearls, ivory and imported the goods they needed. The purpose of this article is to study the reasons for the rise in the quality of a country due to trade relations.

**Key Words** : Bharadhavars – Pattina paalai – Seafarers – Trade Relations

## முன்னுரை

"திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற மூத்தோர் மொழிக்கேற்ப சங்ககாலத்திலேயே மனிதன் பொருள் ஈட்ட ஆரம்பித்தான். பண்டைய தமிழரின் பொருளாதாரம் உழைப்பை உயர்வாகக் கொண்டது. அதனால் வாழ்க்கையின் தேவைக்கு ஏற்ப தொழில் புரிந்து உற்பத்தியைப் பெருக்கினான். உற்பத்திக்கு ஏற்ப வணிக மூலங்கள் பெருகின. அத்துடன் பண்டமாற்று முறையும் உருவாயிற்று. பண்டமாற்றில் உப்புக்குச் சரியாக நெல் மதிக்கப்பட்டிருந்தது என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

## புகார் நகரின் சிறப்பு

கரியமிளகு, மாணிக்க மணிகள், சாம்பூநதம் என்னும் பொன், சந்தனம், அகில்கட்டைகள், பவளம், கங்கையாற்றைச் சார்ந்த பகுதியில் உற்பத்தியாகும் பொருள்கள், காவிரிக்கரைப் பகுதியில் விளையும் பொருள்கள் புகார் நகரில் விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்டன. அதுபோலவே, ஈழநாட்டில் உள்ள உணவுப் பொருட்களும் கடாரநாட்டில் உண்டாகும் நுகர் பொருள்களும் சீனம் முதலிய பிற நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்ட கருப்பூரம், பன்னீர், குங்குமம் போன்ற பொருள்களும் நீர் வழியாகவும் நிலம் வழியாகவும் புகார் நகரில் விற்பனை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்டன. கொண்டுவரப்பட்ட பொருள்கள் புகாரில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

புகார் நகரம் கடல் வாணிகத்திலும் தரை வாணிகத்திலும் சிறந்து காணப்பட்டது. புகார் வணிகர் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கினர். அரேபியா, ஈழம், கடாரம், சீனம், யவனம் போன்ற நாடுகளுடன் வாணிகம் புரிந்தனர். இதனை,

**"காவின் வந்த கருங் கறி மூடையும்**
**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்தும் குணகடல் துகிலும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்"[1]**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற அடிகள் வாயிலாகச் சோழ நாட்டின் செல்வச் செழிப்பிற்கு வாணிகம் மிகச்சிறந்த காரணமாய் விளங்கியமை உணரமுடிகிறது.

**பண்டசாலை முற்றம்**

பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் இடத்தில் பிறர் திருடாமல் காப்பதற்காகச் சுங்கம் கொள்பவர் காணப்பட்டனர். அவர்கள் இளைப்பில்லாமலும் குறையாமலும் நாள் தோறும் சுங்கத்தினைப் பெறுவர். பண்டசாலையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கும் சுங்கம் விதிக்கப்பட்டன. சுங்கச் சாலையில் காவல் புரிபவர் கால ஒழுங்கும் கடுமையும் உடையவர் என்பதைக் கதிரவன் தேரில் பூண்ட குதிரையினை உவமை கூறுவதால் புலப்படுகிறது. இதனை,

**“தொல் இசைத் தொழில் மாக்கள்**
**காய் சினந்த காதிர்ச் செல்வன் தேர் பூண்ட மாஅ போல**
**வைகல் தொறும் அசைவு இன்றி உல்கு செயக் குறை படாது”**[2]

**வணிகரின் அறச்செயல்கள்**

கொலைத் தொழிலைத் தான் செய்யாமையோடு பிறரும் செய்யாத வண்ணம் விலக்கியும் களவுத் தொழிலை நீக்கியும் தேவர்களுக்குப் பலி செலுத்தி வழிபட்டும் பசுக்களையும் எருதுகளையும் பாதுகாத்தும் தானம் வழங்கியும் விளைந்த நெல்லையும் பாக்கையும் உணவாகத் தந்தும் அறச்செயல்கள் பலவற்றைத் தடையின்றிச் செய்தும் வணிகர் பலர் புகார் நகரில் வாழ்ந்தனர்.

நடுவு நிலை என்ற குணமும் நல்ல உள்ளமும் உடையவராய் விளங்கினர். இவர்கள் பொய் கூறின் தம் குடிக்குப் பழி வந்து சேரும் என அஞ்சி உண்மையைக் கூறுவர். தாம் கொள்ளும் பொருள்களைத் தாம் கொடுக்கும் பொருள்களுக்கு மிகுதியாகக் கொள்வதில்லை. தாம் கொடுக்கும் பொருள்களையும் வாங்கும் பொருள்களுக்குக் குறைவாகக் கொடுப்பதில்லை. இந்நெறியில் நின்றமையால் வாணிகத்தில் சிறந்து செல்வத்தில் மிகுந்து காணப்பட்டனர் என்பதை,

**“கொலை கடிந்தும் களவு நீக்கியும்**
**அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்**
**நல் ஆனொடு பகடு ஓம்பியும்**
**நான் மறையோர் புகழ் பரப்பியும்**
**பண்ணியம் அட்டியும் பசும்பதம் கொடுத்தும்**
**புண்ணியம் முட்டாத் தண்நிழல் வாழ்க்கை**
**கொடு மேழி நசை உழவர்**
**நெடு நுகத்துப் பகல் போல**
**நடுவு நின்ற நல் நெஞ்சினோர்**
**வடு அஞ்சி வாய் மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்பநாடி**
**கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம்**
**குறை கொடாது”**[3]

என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன.


http://Creativecommons.org//license/by/4.0/.

**வாணிகப் பொருட்கள்**

தமிழகம் ஏற்றுமதி செய்த வணிகப் பொருள்களில் அரிசி, அகில், ஆடைகள், ஆரம், இஞ்சி, இலவங்கம், ஏலம், கருங்காலி, மயில், மிளகு, முத்து ஆகியன சிறப்பிடம் பெற்றிருந்தன. தமிழர்கள் கப்பல்களில் சென்று பொருளை விற்றுப் பொன்னுடன் திரும்பி வருதலை மதுரைக்காஞ்சி குறிப்பிட்டுள்ளது.

**"பொன்மலிந்த விழுப்பண்டம்**
**நாடு ஆர நன்கு இழிதரும்**
**ஆடியல் பெருநாவாய்"**[4]

**உப்பு வாணிகம்**

உமணர்கள் வெள்ளை நிறமுடைய உப்பினைப் படகுகளில் உப்பங்கழி வழியே எடுத்துச் சென்று விலை கூறி விற்று, அகநாடுகளிலிருந்து நெல்லைப் பெற்று உப்பு வாணிகர் படகுகளில் தம் ஊர் திரும்பியதை,

**"வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி"**[5]

இப்பாடல் அடிகள் வாயிலாகப் புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் எடுத்துரைத்துள்ளார்.

உப்பு வணிகத்தின் சிறப்பு குறித்து எட்டுத்தொகை நூல்களான குறுந்தொகை, அகநானூறு போன்ற நூல்களிலும் புலவர்கள் சுட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**"உப்பை மாறி வெண்ணெல் நரீ இய"( குறுந்தொகை** - 269)
**"தெண்கழி விளைந்த வெண்கல் உப்பின்"( அகநானூறு** - 159)
**"நெல்லின் நேரே வெண்கல் உப்பு"( அகநானூறு** - 140)

என்ற சங்க இலக்கியப் பாடல் அடிகளால், உப்பு வணிகர்கள் வெண்கல் உப்பு எனப்படும் தூய்மையான உப்பைக் கொண்டு வந்து 'வெண்ணிறக் கல் உப்பு நெல்லினுக்கு ஒத்த அளவினதே' எனச் சேரியின் கண் பண்ட மாற்றாக விலை கூறிச் செல்வது வணிகத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.

உப்பை விற்று நெல்லைப் பெற்று அதனை உரலில் இட்டுக் குற்றி அரிசியாக்கிச் சமைத்து உண்ணும் உமணர் நிலையை அகநானூறு பாடல் எடுத்துரைத்துள்ளது. இதனை,

**"நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்! கொள்ளீரோ" (அகநானூறு : 8 - 9)**

**நெல் வாணிகம்**

மருத நிலத்தில் விளைந்த வெண்ணெல்லை வண்டிகளில் ஏற்றிக்கொண்டு போய் விற்று, அதற்கு விலையாகப் பிற நாடாகிய நெய்தல் நிலப்பகுதியில் விளைந்த உப்பைப் பெற்று வந்து விலை கூறியதை,

**"தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து,**
**பிற நாட்டு உப்பின் கொள்ளை சாற்றி (நற்றிணை** - 183)

என்ற பாடல் அடிகளால் அறியலாம்.

**பிற வாணிகம்**

ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குத் தம் நாட்டுப் பொருள்களைக் கொண்டு சென்று விற்றுத் தமக்குத் தேவையான பொருளைப் பெற்று வரும் பண்டமாற்று பெறும் முறை பண்டைக் காலத்தில் இருந்தமையைப் பெரும்பாணாற்றுப்படை சுட்டியுள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.

மலையில் கிடைக்கும் மணி, பொன், சந்தனம் முதலான பொருள்களும் கடலில் கிடைக்கும் முத்து, பவழம், சங்கு முதலிய பொருள்களும் கொடுத்துப் பெறுதற்கரிய பொருளைப் பெற்றுக் கொண்டமை கீழ்க்காணும் பாடல் அடிகளால் தெளியலாம்.

**"மலையவும் கடலவும் மாண்பயம் தரூஉம்**
**அரும்பொருள் அருத்தும் திருந்து தொடை நோன்தாள்"**

(பெரும்பாணாற்றுப்படை : 67 - 68)

**வாணிபம் செய்யும் முறை**

அரசனுடைய அரண்மனையைச் சூழ்ந்து விளங்கும் நான்கு பெருந்தெருக்களில் வாணிகம் நடைபெற்ற முறையை மதுரைக்காஞ்சியால் அறிய முடிகிறது. அறுத்த சங்கினை வளையாகக் கடைபவரும் மணிகளைத் துளை போடுபவரும் பொன்னால் அணிகலன்கள் செய்யும் தட்டாரும் பொன்னின் தரத்தை அறுதியிடும் பொன்வாணிகரும் ஆடைகளை விற்பவரும் பூக்களையும் சந்தனத்தையும் ஆராய்ந்து விற்பவரும் ஓவியம் தீட்டுபவரும் தெருக்கள் தோறும் ஒருவர் கால் ஒருவர் காலொடு நெருங்க நின்று வாணிகம் புரிந்துள்ளனர். இதனை,

**"கோடு போழ் கடைநரும்**
**திரு மணி குயினரும்**
**சூடுறு நன்பொன் சுடர் இழை புனைநரும்**
**பொன்னுரை காண்மரும் வம்புநிறை முடிநரும்**
**பூவும் புகையும் ஆயும் மாக்களும்" (மதுரைக்காஞ்சி** : 511 - 515 )

என்ற பாடல் அடிகள் பல்வேறு தொழில்புரியும் மக்கள் கூட்டத்தைப் புலப்படுத்துகின்றன.

**தொகுப்புரை**

சங்கத் தமிழரின் அன்றாடத் தேவைகளான அரிசி, உப்பு, தயிர், மீன், இறைச்சி முதலான பொருள்களைப் பண்டமாற்று முறையிலேயே பெற்றுக் கொண்டனர். " யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் கூற்றுக்கேற்ப நம் நாட்டு வணிகர்கள் பல்வேறு நாடுகளுடன் அறவழியில் வணிகத் தொடர்பு புரிந்து, தமது செல்வத்தைப் பெருக்கியுள்ளனர்.

**முடிவுரை**

தமிழர் வாணிகத்தில் பண்டமாற்று முறை வழக்கில் இருந்தது. பண்டமாற்றில் நெல்லுக்குச் சரியாக உப்பு மதிக்கப்பட்டு இருந்தது. வணிகம் செய்த மக்கள் அறவழியில் ஈடுபட்டிருந்தனர். தமிழர்கள் மிளகு, முத்து, வாசனைப் பொருள்கள் ஆகியவை அதிகமாக ஏற்றுமதி செய்தனர்.

**அடிக்குறிப்புகள்**

1. பட்டினப்பாலை, பாடல் வரிகள் 186 - 191
2. பட்டினப்பாலை, பாடல் வரிகள் 121 - 125
3. பட்டினப்பாலை, பாடல் வரிகள் 199 - 211
4. மதுரைக்காஞ்சி, பாடல் வரிகள் 81 - 83
5. பட்டினப்பாலை, பாடல் வரிகள் 29 - 30


http://Creativecommons.org//license/by/4.0/.

### துணைநூற் பட்டியல்

1. தமிழர் நாகரிகமும் தமிழ் மொழி வரலாறும், பேராசிரியர் முனைவர் அரங்க. இராமலிங்கம், 2021, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 600 017.
2. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன், 2011, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098.
3. சங்க இலக்கியம் குறுந்தொகை,
4. முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன், 2011, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098.
5. சங்க இலக்கியம் நற்றிணை,
6. முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன், 2011, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098.
7. சங்க இலக்கியம் அகநானூறு, முனைவர் கு. வெ. பாலசுப்பிரமணியன், 2011, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை - 600 098.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 12. திணைக் கோட்பாட்டு நோக்கில் 'கூழாங்கல்' திரைப்படம்

**ஜெ. காமாட்சி காயத்ரி,**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்.**
**அலைபேசி:**7539948727,7904172123
**மின்னஞ்சல் :** contactatkamatchi@gmail.com
DOI 10.5281/zenodo.16524623.
ORCID Number: 0009-0003-3255-3283

**Abstract:**

Tamil people divide their lives into internal and external. There are seven screens for both the sections respectively. The purpose of this study is to apply the concept of internal aspect to the film 'Koozhangal' directed by P.S. Vinothkumar. Tholkappiyar divides the objects belonging to the seven aspects into the main, secondary and secondary aspects. By identifying these objects, the completeness of the song and the feeling expressed by the song can be fully understood. This article proposes an alternative approach to using them in the film as well.

**Key Words :** Koozhangal - Film - Tholkappiyar

**முன்னுரை:**

பழந்தமிழர் தம் வாழ்வினை வெளிப்படுத்த பயன்படுத்தியக் கோட்பாடு திணைக்கோட்பாடு ஆகும். வாழ்க்கை நிகழ்வுகளை சூழலோடு இயைபுப்படுத்திக் கூறுவதால் இதனை 'சூழலியல் கோட்பாடு' என்றும் கொள்ளலாம். தொல்காப்பியரால் பரிச்சயப்படுத்தப்பட்ட திணைக்கோட்பாடு இலக்கியத்திற்கு உரியதாகும். அதனை இலக்கியத்துறை மட்டுமல்லாது வெளிப்பாட்டு கலைத்துறையாகிய (Expressive Art) திரைத்துறையிலும் பொருத்திப் பார்க்க இயலும். இயக்குநர் P.S.வினோத்குமாரால் இயக்கப்பட்ட 'கூழாங்கல்' திரைப்படத்தில் இதனைப் பொருத்திப் பார்ப்பதன் வழி திணைக் கோட்பாட்டை விரிவாக்கம் செய்ய முடியும்.

**திணைக் கோட்பாடு - விரிவாக்க முயற்சிகள்**

இந்திய இலக்கியக் கொள்கைகள் பழங்காலந்தொட்டு விவாதிக்கப்பட்டு வந்துள்ளன. இன்று உருவாகி வரும் இலக்கியக் கொள்கைகளுக்கெல்லாம் அடியாக, மூலமாக பழமையான இலக்கியக் கொள்கைகளே விளங்குகின்றன. அவற்றின் தடயங்களையும் கூறுகளையும் விவரித்தே புதியவை மெருகேறுகின்றன. தமிழ்ப் பண்பாட்டில் மிக முக்கிய இலக்கியக் கொள்கையாக விளங்குவது திணைக் கோட்பாடு.

"தென்னிந்திய வாழ்க்கையும், வாழ்க்கைப் பார்வையும், மொழியமைப்பும் கூட மாற்றம் பெற்றுள்ளன. ஆகையால் இன்று யாரேனும் தொல்காப்பியக் கருத்துகளைக் கேள்விக்குள்ளாக்குவது, மறுப்பது, விமர்சிப்பதும் கூட நியாயமானதே. அந்த உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். அத்தருணத்தில் மட்டுமே இக்கோட்பாடுகளின் சமகால ஏற்பமைவினைக் கண்டடைய இயலும்"[1]

என்று அய்யப்ப பணிக்கர் சொல்வதன் வழி இக்கால நில, மனித, சமூக மாற்றத்திற்கேற்ப திணைக்கோட்பாட்டை வளர்க்க வேண்டிய, மீட்டெடுக்க வேண்டிய தேவையை அறியமுடிகிறது.

உலகப் பொருண்மையை மொழி வழியாகக் கட்டமைப்பது தொல்காப்பியம்.எட்வர்ட் சயீத் என்னும் அறிஞர் திணைக் கோட்பாட்டை 'சூழலியக் கவிதையியல்' (Eco Poetics)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்கிறார். புலன்கள் வழியாக காணக்கூடிய காட்சிகளும், கேட்கக்கூடிய ஒலிகளும், உணரக்கூடிய வாசமும் ஒரு கட்டமைப்பை உருவாக்கும். பல்வேறுபட்ட வகைப்பாடுகளை உள்ளடக்கியது தான் ஒரு கட்டமைப்பு. தொல்காப்பியம் உலகத்தின் பொருள்களை பாகுபடுத்தி மொழிக்குள் கட்டமைக்கிறது. நிலமும் பொழுதும் உலகப் பொருள்களுக்கு மட்டுமல்ல மொழிக்கும் இவைதான் முதற்பொருள். ஐந்நில பாகுபாடானது கவிதையியலை தாண்டி மொழிக்கானதாகவும் விளங்குகிறது.

பிற்காலத்தில் தோன்றிய இலக்கண நூலாகளாகிய நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, இலக்கண விளக்கம், வீரசோழியம் ஆகியவை திணைக் கோட்பாட்டை விரிவாக்கம் செய்ய முயன்றுள்ளன. ஆனால், திணைக்கோட்பாடு, அகம், புறம், உள்ளுறை ஆகிய தொல்காப்பியர் வரையறைகளை நவீன மொழியில் கெ.அய்யப்ப பணிக்கர் உரையாடலுக்கு உட்படுத்துகிறார். முதற்பொருட்களின் அடிப்படையில் திணைகளைப் பகுத்து விட்டால் கரு, உரிப்பொருட்களைக் கண்டடைந்து விடலாம் என்கிறார். இவர் ஷேக்ஸ்பியரின் 'ஹேம்லெட்' என்னும் நாடகத்தை திணைக்கோட்பாட்டு நோக்கில் ஆய்வு செய்திருக்கிறார்.

வி.ஜெ.செபாஸ்டியன் என்பவரும் கெ.அய்யப்ப பணிக்கர், என்.என். கக்காடு, சச்சிதானந்தன், உரூப், பி.வல்சரா போன்றோரின் கவிதைகளில் முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற பொருண்மைகளைக் கண்டறிந்து கோட்பாட்டு விரிவாக்கம் செய்துள்ளார். 2009-ல் 'ஆதுனிககவிதயும் திணசங்கல்ப்பனவும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்துள்ளார்.

தனிநாயகம் அடிகளார், தமிழவன், நிர்மல் செல்வமணி, கா.சிவத்தம்பி, குளோரியா சுந்தரமதி, ஞானி, அம்மன்கிளி முருகதாஸ், சோ.கிருஷ்ணராஜா, க.ஜவகர், துரை.சீனிச்சாமி, கே.பழனிவேலு, சண்முக. விமல் குமார் போன்ற பலரும் திணைக் கோட்பாடு குறித்த புதிய விளக்கங்களையும், ஆக்கங்களையும் தந்துள்ளனர்.

1997ல் முனைவர் சா.சிவமணி 'சங்க அகத்திணைக் கோட்பாட்டு நோக்கில் தமிழ், மலையாள நெய்தல் நில நாவல்கள்' என்ற முனைவர்ப் பட்ட ஆய்வினை முன்வைத்தார். இவரைத் தொடர்ந்து க. ஜவகர், எஸ்.ராமகிருஷ்ணனின் நெடுங்குருதி நாவலை திணைக்கோட்பாட்டு நோக்கில் ஆய்வு செய்துள்ளார். இவரே, 'திணைக்கோட்பாடும் தமிழ் இலக்கிய மரபும்' என்ற தலைப்பில் தனது முனைவர்ப் பட்ட ஆய்வினை சமர்ப்பித்தார். சிலப்பதிகாரம், திருவாசகம், கலிங்கத்துப்பரணி, ஜெயமோகனின் காடு நாவல் ஆகியவற்றுடன் திணைக்கோட்பாட்டைப் பொருத்தி விரிவாக்கம் செய்துள்ளார்.

நவீன, புதுவிய கவிதைகளை முன்வைத்து 'திணை விரிவாக்கம் :குறிஞ்சி' என்ற தலைப்பில் 'திணைக் கோட்பாடு' என்னும் தம் நூலில் துரை.சீனிச்சாமி எழுதியுள்ளார். கூடல் என்ற அடிக்கருத்தை நடப்பு சார்ந்த வாழ்வியல் பார்வை வழி விரிவாக்கம் செய்து, அவற்றை நற்குறிஞ்சி, பெருங்குறிஞ்சி, இயற்குறிஞ்சி, வன்குறிஞ்சி என்று பகுத்துக் காட்டியுள்ளார்.

தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகளாகிய கூற்று, கேட்போர் ஆகியவற்றை கோட்பாட்டு விரிவாக்கம் செய்யும் முயற்சியில் கே.பழனிவேலு ஈடுபட்டுள்ளார். இவ்வாறு பலரும் இலக்கியங்களில் பரந்துபட்டு திணைக்கோட்பாட்டு விரிவாக்க முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.இலக்கியக் கோட்பாடாக மட்டுமல்லாமல் நிலத்தையும் பொழுதையும் அடிப்படையாகக் கொண்ட எல்லா கலைத்துறைகளுக்கும் உரிய கோட்பாடாக விளங்கும் திறன் திணைக்கோட்பாட்டிற்கு உள்ளது. அதன் முன் முன் முயற்சியாக திரைத்துறையில் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**‘கூழாங்கல்’திரைப்படத்தின் கதைச்சுருக்கம்**:

மதுரையின் வறண்ட நிலப்பரப்பை பின்னணியாகக் கொண்டு படம் நகர்கிறது. கணவன் (கணபதி) மதுவிற்கு அடிமையாகி குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து மனைவியை (சாந்தி) அடித்து துன்புறுத்துவதால் மனைவி தன் இளம் பெண்குழந்தையை தூக்கிக் கொண்டு தன் பிறந்த ஊராகிய இடையப்பட்டிக்கு சென்று விடுகிறாள். அவளை மீண்டும் வீட்டிற்கு அழைத்து வர மகனோடு(வேல்) கணபதி அவ்வூருக்குச் செல்கிறான். அவன் அங்கு செல்லும் முன்பே மகனின் பிரிவை தாங்காமல் அவள் புகுந்த வீட்டிற்கு வந்து விடுகிறாள். சாந்தியின் பிறந்த வீட்டார்க்கும் கணபதிக்கும் சச்சரவு உண்டாகிறது. எனவே, சாந்தியை வீட்டிற்குச் சென்று துன்புறுத்தப் போவதாக சொல்லி கணபதி கிளம்புகிறான். தாயை துன்புறுத்திவிடுவானோ என்று பயந்து கணபதி தந்த ரூபாய் நோட்டுகளைக் கிழித்தெறிந்துவிட்டு மகன் ஓடிவிடுகிறான். பேருந்துக்குச் செல்ல பணம் இல்லாததால் நடந்தே போகிறார்கள். வழியில் மிக நுணுக்கமான காட்சிகளை இயக்குநர் காட்சிப்படுத்தியிருக்கிறார். சிறுவனாகிய வேலைச் சந்திக்கும் அவனது பள்ளி ஆசிரியர், அவனை வண்டியில் அழைத்துச் சென்று வீட்டில் விட்டுவிடுவதாக தந்தையிடம் கூறி மகனை அழைத்துச் செல்கிறார். ஊரை விட்டு கிளம்பும்போது ஒரு பாறையில் சாந்தி, லட்சுமி, வேல் என்று மகன் எழுதி இருக்கும் காட்சி காட்டப்பட்டிருக்கும். இப்போது ஊரை அடைந்ததும் அதில் கணபதி என்ற பெயரையும் அவன் எழுதி இருப்பான். கணபதி மனைவி மீது கோபத்துடன் வீட்டிற்குள் நுழையும் போது ஏற்கனவே அவள் சோறாக்கி வைத்துவிட்டு ஊற்றுக்கு நீர் எடுக்கச் சென்றிருப்பாள். அவன் சாந்தமாகி சோறு போட்டு உண்பதாகவும், அண்ணனும் (வேல்) தங்கையும் (லட்சுமி) நாய்க்குட்டியோடு விளையாடுவதாகவும், ஊர்ப்பெண்கள் ஊற்றில் நீர் எடுத்து ஊற்றிக் கொண்டிருப்பதாகவும் திரைப்படம் நிறைவு பெறுகிறது.

**அடிக்கருத்து அமைவு முறை (Thematic Structure)**

கதைக்கு மையக்கருத்து ஒன்றிருக்கும். அம்மையக்கருத்து உருவாகுவதற்கு முக்கியமான கூறு அதன் அடிக்கருத்து ஆகும். கதையின் ஒவ்வொரு நகர்வும் அடிக்கருத்தை வலுப்படுத்துவதாகவே அமைய வேண்டும்.

- வறுமையும் வறட்சியும் மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்படுத்தும் தாக்கம்
- தந்தை மீதான கோபத்தையும் வெறுப்பையும் சுமந்திருக்கும் குழந்தை தன் திறத்திற்கு ஏற்ப தந்தையை பழிவாங்குதல்.
- தந்தை தன் இயலாமையை கோபமாகவே வெளிக்காட்டுதல்
- ஒரு நாளில் நிகழும் முரணான நிகழ்வுகள் (உதாரணமாக காலையில் கோபமும் வெறுப்புமாய் தொடங்க,மாலையில் அன்பும் சாந்தமுமாக முடிவது)
- எப்போதும் மாறாது இருப்பது வறுமையும் பசியும் வறட்சியும் அவற்றோடு வாழ பழகிவிட்ட மனிதர்களின் வாழ்க்கை முறையும் தான்.

ஆகியவையே இத்திரைப்படத்தின் அடிக்கருத்து அமைவாக திகழ்கின்றன.

**திரைப்படத்தை முன்வைத்து திணை அறிதல்:**

மொழிக்கு இலக்கணம் கூறுவதாக மட்டுமல்லாமல் இலக்கியத்திற்கும் இலக்கணம் உரைப்பது தொல்காப்பியப் பொருளதிகாரம். திணை என்ற சொல் ஒழுக்கம், நிலம், உயிர்பகுப்பு போன்ற பொருண்மைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. வாழ்வின் நிலைகளை அகம், புறம் என்று பிரிக்கிறது. இருதிணைகளுக்கும் பொதுவாக ஏழு உட்திணைகள் உள்ளன. அகமும் புறமும் ஒவ்வொரு உட்திணைக்கு புறனாகவும் உள்ளன. திரைப்படத்தில்


http://Creativecommons.org//license/by/4.0/.

அகத்திணை கூறுகளை உட்பகுத்தி ஆராயலாம். கே.பழனிவேலு முதல், கரு, உரிப் பொருள்களின் பொருண்மைகளை கீழ்க்காணும்வாறு வகைப்படுத்துகிறார்.

முதற்பொருள் - இயற்கை

கருப்பொருள் - இயற்கை + மனித செயல்பாடு

உரிப்பொருள் - தன்னிலைகளின் மன உணர்வு[2]

இலக்கியத்தில் திணையை அறிந்து கொள்ள பயன்படும் முதல், கரு, உரிப்பொருள்களை திரைப்படத்திலும் பொருத்திக் காட்டலாம்.

| முதற்பொருள் | கண்டறியப்பட்ட முடிவு | அறிதிரைக்காட்சி |
|---|---|---|
| நிலம் | வறண்ட நிலம் / பாலை நிலம் | பாளம் பாளமாக வெடித்த நிலப்பரப்பையும், வறண்ட நிலத்தையும் படம் நெடுகிலும் காணலாம் |
| பொழுது | நண்பகல் | 1.மகனை பள்ளிக்கூடத்திலிருந்து பாதியில் அழைத்துச் செல்லுதல்<br>2.பத்தரை மணி பேருந்திற்கு காத்திருத்தல் (நண்பகல் பொழுதின் வரையறை 10 மணி முதல் 2 மணி வரை என்பதை நினைவிற் கொள்ளலாம்)<br>3.இடையப்பட்டி மக்கள் சந்தைக்குக் கிளம்புதல் |

| கருப்பொருள் | கண்டறியப்பட்ட முடிவு | அறிதிரைக்காட்சி |
|---|---|---|
| தெய்வம் | பெண் அணங்கு | 1.நடந்து செல்லும் வழியில் கணபதிக்கு கொலுசுச் சத்தம் கேட்டல்<br>2.அக்கொலுசொலியை கடந்து செல்லவும் கட்டை விரலில் அடிப்பட்டு இரத்தம் வருதல்.<br>3.இரத்தக்காவு வாங்கி விட்டு அணங்கு காணாமல் போகுதல் |
| மரம் | சப்பாத்திக்கள்ளி, கருவேல மரங்கள், தணக்கு மரங்கள்[3] (நுணாமரம்) மற்றும் பல வறண்ட மரங்கள் | 1. இம்மரங்கள் பேருந்திலும், நடந்தும் செல்லும் போது வழி நெடுக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.<br>2. வழியில் இருளர் இன குடும்பம் ஒன்று காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். அதில் ஒரு சிறுமி காய்ந்த தணக்கு மர காய்களை பொறுக்கி வான் நோக்கி மேல் எறிந்து விளையாடிக் கொண்டிருப்பாள். |
| நீர் | சுரநீர் | படத்தின் கடைசிக் காட்சியில் சுரந்து வரும் சிறுஊற்றிலிருந்து மக்கள் குடிதண்ணீரை தங்கள் குடங்களில் ஊற்றுதல். |


http://Creativecommons.org//license/by/4.0/.

**புதிதாய் கண்டறிந்த கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| மக்களின் மொழி | மதுரை வட்டார மக்கள் பேசும் மொழி | 1.பெட்டிக்கடையில் என்னமாச்சும் வேணுமாயா ? என்று கடைக்காரர் கேட்பது<br>2.மகனிடம் தந்தை ஒனக்கு என்னிய புடிக்குமா? ஒங்காத்தாள புடிக்குமா? என்று கேட்பது. |

| உரிப்பொருள் | கண்டறியப்பட்ட முடிவு | அறிதிரைக்காட்சி |
|---|---|---|
| பிரிதல் | கதாநாயகியும் கதாநாயகனும் பிரிந்திருத்தல் | திரைப்படம் முழுவதும் அவர்கள் பிரிந்து காணப்படுகிறார்கள் |

உரிப்பொருள் பிரிதலாக இருப்பினும் பிரிதல் நிமித்தமானது மரபு வழியாய் சொல்வது போல, தலைவன் தலைவியைப் பிரிதலாக அல்லாது, திரைப்படத்தில் தலைவி தலைவனைப் பிரிந்து செல்வதாக உள்ளது.

**பிரிவு:**

கதாநாயகனாகிய கணபதி மது அருந்திவிட்டு தன்னைத் துன்புறுத்தியதால் கதாநாயகியாகிய சாந்தி அவனைவிட்டு தற்காலிகமாக பிரிந்து செல்கிறாள். மேலும் இத்திரைப்படத்தில் கணவனை பிரிந்து அவள் திரும்ப வருவதாக இல்லாமல் மகனின் பிரிவால் வாடி திரும்ப வருவதாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றை ஓதல் முதலாகிய ஐந்து பிரிவுகளுக்குள்ளும் அடக்க இயலாது. ஆக, இத்திரைப்படத்தின் படி மூன்று புதுவகை பிரிவுகளை விரிவாக்கம் செய்யலாம்

1. **கோபம் மேற்செல்லும் பிரிவு** - கணவனின் தகாத செயல்களின் காரணமாக, கொண்ட கோபத்தினால் மனைவி அவனைப் பிரிதல்
2. **தாய்வீடு சேர் பிரிவு** - கணவனைப் பிரிந்து தாய்வீடு செல்லுதல்
3. **மகன்பாற் பிரிவு** - கணவனைப் பிரிந்ததன் வழி, மகனையும் பிரிய நேரிடுதல்

**வாயில்கள்:**

ஊடலைத் தீர்த்து வைக்கும் வாயில்களாக தொல்காப்பியம் சுட்டும் பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் ஆகிய 12 வாயில்களும் இத்திரைப்படத்தில் இடம்பெறவில்லை. பதிலாக மகனையே ஊடல் தீர்க்கும் 'வாயிலாக' தந்தை தாயிடம் அனுப்புகிறான். இதன்வழி, புதிய **நேர்மறை வாயில்** கண்டறியப்பட்டுள்ளது. போலவே, இந்தப் பிரிவு நீடிப்பதன்வழி தலைவியின்(சாந்தி) வாழ்க்கை சிறிதேனும் சிறப்புறும் என்று கருதி உரையாடும் காட்சிகள் படத்தில் உள்ளன. சாந்தியின் தாய் கணபதியிடம் மகள் குறித்து வருந்தி, இப்படி அவளைத் துன்புறுத்துவதை விட அவளைக் கொன்றுவிடுவதே மேல் என்று கூறுவதையும், அவ்வூரைச் சேர்ந்த இரு பெண்கள் தங்களுக்குள் கணபதியை குறித்து குறைபேசி பிரிவு சரியான முடிவுதான் என உரையாடிக் கொள்வதையும் **எதிர்மறை வாயில்களுக்கு** எடுத்துக் காட்டலாம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**கூடல்:**

தலைவனுக்காக தலைவி வீடு திரும்பாமல், தன் குழந்தைகளை கருத்திற் கொண்டும் அவர்களின் நலனை எண்ணியுமே மீண்டும் வீட்டிற்கு வந்து சேர்கிறாள். இதனை புதிய கூடல் வகையாக '**சேய்க்கண் நலனறிச் சேறல்**'என்று அடையாளப் படுத்தலாம்.

**காட்சி கொளப்பெறாஅர்:**

சங்கப் பாடல்களின் அகமரபுப்படி தலைவன் தலைவியின் பெயரைச் சுட்டுதல் கூடாது. அப்போது தான் படிக்கும் எவராயினும் பாடலை தங்களோடு தொடர்புப் படுத்திக் கொள்ள இயலும்.

"மக்கள் நுதலிய அகனைந் திணையுஞ்

சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்" -(தொல். அகம்- 54)

படத்தின் இறுதிவரை சாந்தியைக் காட்சிப்படுத்தவே இல்லை. 'சாந்தி ' என்ற பெயர் தான் அவளை உணரவைக்கிறதே தவிர அவளை காட்சிகளில் காணமுடியவில்லை. ஆகையால், எந்த மெனக்கெடலும் இல்லாமல் எளிதாக, சாந்தியை நாம் வாழ்வின் பிற மனிதர்களோடு பொருத்திப் பார்க்க முடிகிறது.

இவையெல்லாவற்றையும் நோக்குங்காலை இத்திரைப்படம் "பாலைத்திணையை" முன்னிறுத்தி இயக்கப்பட்டிருக்கிறது என்ற முடிவிற்கு வரலாம்.

**கருத்துரை:**

படைப்பாக்க உத்திகளை விளக்குகிற திணைக்கோட்பாட்டினை திரைப்படத்தில் பொருத்திப் பார்ப்பதன் சாத்தியக்கூறுகள் எந்தளவிற்கு பயன்தருகின்றன என்பதை அறியும் முயற்சியாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது. இலக்கியத்தில் முதல், கரு, உரிப்பொருள்களைக் கொண்டு திரையை அறிவது போல,திரைப்படத்திலும் திணையைக் கண்டறிந்து கதையின் புறவமைவையும் அகவமைவையும் புதிய கோணத்தில் அணுக முடிகிறது.

**தொகுப்புரை:**

"திணைக் கோட்பாட்டு நோக்கில் 'கூழாங்கல்' திரைப்படம் என்ற தலைப்பிலமைந்த இக்கட்டுரையில் ஆய்வின் நோக்கம் தெளிவுற குறிப்பிடப்பட்டுள்ளது. படைப்பாக்க உத்திகளை வரையறுக்கும் திணை என்னும் கொள்கையை கோட்பாடாக விரிவாக்கம் செய்த அறிஞர்களைப் பற்றியும் அவர்தம் ஆக்கங்கள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது. திரைப்படத்தின் கதைச்சுருக்கமும் அடிக்கருத்து அமைவும் கூறப்பட்டுள்ளன. பின்னர் தொல்காப்பியர் கூறிய முதல், கரு, உரிப் பொருள்கள், பிரிவு, வாயில்கள் ஆகியவற்றை திரைப்படத்தில் கண்டறிந்து புதிய முடிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்:**

1. கெ. அய்யப்ப பணிக்கர் , இந்திய இலக்கியக் கோட்பாடுகள் சூழல்-பொருத்தம் , தமிழில் மொழியாக்கம் : ந. மனோகரன் , பக்க எண் - 124
2. கே.பழனிவேலு, தொல்காப்பியத் திணைக் கோட்பாடு: திறனாய்வியல் நோக்கு , பக்க எண் - 81
3. தணக்கு மரம் என்பது நுணா மரத்தைக் குறிக்கும். குறிஞ்சிப் பாட்டில், "பாங்கர் மராஅம், பல்பூந்தணக்கம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நச்சினார்க்கினியர் இந்த தணக்கம் பூவை, நுணாப்பூ என்று விளக்கியுள்ளார். இது மலையிடத்துக் காடுகளில் வளரும் ஒரு வகை மரம் ஆகும். ஹெலிகாப்டர் மரம் என்றும் காத்தாடி மரம் என்றும் கூட இம்மரம் அழைக்கப்படுகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**துணை நூற்பட்டியல்:**

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் (அகத்திணையியல்-புறத்திணையியல்) இளம்பூரணர் உரையுடன் - கழக வெளியீடு .
2. தொல்காப்பியம் -பொருளதிகாரம்-நச்சினார்க்கினியம் - கழக வெளியீடு
3. இந்திய இலக்கியக் கோட்பாடுகள் சூழல்-பொருத்தம், கெ.அய்யப்ப பணிக்கர்; தமிழில் மொழியாக்கம்: ந.மனோகரன், பரிசல் வெளியீடு
4. திணைக்கோட்பாடும் தமிழ்க் கவிதையியலும் - க.ஜவகர், காவ்யா வெளியீடு
5. திணைக் கேட்பாடு - துரை.சீனிச்சாமி , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
6. திணைக்கொள்கை உருவாக்கமும் சடங்கில் தொன்மவியல் மூலங்களும் - அலெக்சாந்தர் எம்.துபியான்ஸ்கி , தமிழில் மொழியாக்கம்: பு.கமலக்கண்ணன் , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
7. தொல்காப்பியத் திணைக் கோட்பாடு : திறனாய்வியல் நோக்கு - கே.பழனிவேலு , மாற்று வெளியீட்டகம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 13. புறப்பாடல்களில் நீதி மற்றும் பொருளாதாரம் - ஓர் மார்க்சிய நோக்கு

கு.பவித்ரா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
திராவிடப் பல்கலைக்கழகம்,குப்பம்.
அலைபேசி : 9344404739 - மின்னஞ்சல் : kuttipavithra7@gmail.com
DOI 10.5281/zenodo.16524770.
ORCID Number: 3965-5463-0002-0009

**Abstract**

Ancient Tamil social literature has a background of various periods. Literatures are shaped by time and have the nature of originating that time. Currently, there is an environment of applying Western theories in Tamil literature. Based on that, this article is designed to see the Marxist nature of justice and economics prevailing in the external poems such as Purananuru and Sirupanatrupadai.

**Key Words : Ancient Tamil - Social Literature - Sirupanaatrupatai.**

## முன்னுரை

இலக்கியங்கள் ஒவ்வொரு காலகட்ட சமூகத்தினைப் பிரதிபலிக்கிறது. புறவயமாக மக்கள் அறியும் வகையில் கலைப் படிமங்களிலும் காணப்படுகிறது. மக்கள் சமூகமானது முடியுடை வேந்தர், அரசர், வேளிர், குறுநில மன்னர், இனக்குழு சமுதாயம் என்ற படிநிலையில் இயங்கிக் கொண்டிருந்தது. பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் மையத்தைக் காட்டிலும் விளிம்புநிலை மக்களை ஆராய்வதன் மூலம் சமூக வரலாற்றினை அறிந்துகொள்ள முடியும். இலக்கியங்களானது தனக்கென கால நிர்ணயம் கொண்டுள்ளது. அதனை அந்நிலையில் வைத்து மட்டும் நோக்காது அதன் நீட்சியைக் காண்பதன் மூலம் மாற்றுச்சிந்தனைகளை உருவாக்க முடியும். இலக்கிய உருவாக்கமானது சமூக உருவாக்கத்திற்கும் இன்றியமையாதது. மேலும், தனக்கென இலக்கியம் இல்லாத சமூகம் ஓர் ஒழுங்கமைவுக்குள் இருக்காது. தமிழகத்தில் வெவ்வேறு காலகட்ட அடிப்படையில் இலக்கியங்கள் இனங்கண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன. பண்டைத் தமிழ்ச்சமூகம் மகோன்னத காலமாகக் காணப்பட்டாலும் நீதி மற்றும் பொருளாதார நிலையில் ஆதிக்க வர்க்கத்திற்கும் உழைக்கும் வர்க்கத்திற்குமான வேறுபாட்டை மார்க்சிய நோக்கில் காண்பது புதுச்சிந்தனையை வளர்த்தெடுக்கும்.

## கோட்பாடுகளும் சிந்தனைகளும்

உலகமொழி இலக்கியங்கள் ஒவ்வொன்றும் தங்களுக்கு உரித்தான கோட்பாடுகளைக் கொண்டுள்ளன. அவ்வாறு மேலைநாடுகளான ஐரோப்பிய, சோவியத் நாடுகளில் தோன்றிய கோட்பாடுகள் தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு கோட்பாடுகளை முன்வைத்து எழுதும் சிந்தனையாளர்களும் தமிழ் படைப்புலகில் உள்ளனர். இவர்கள் முன்வைக்கும் சிந்தனைகள் ஏற்கப்படலாம் அல்லது எதிர்க்கப்படலாம். இத்தகையச் சிந்தனையாளர்களால் தமிழ் இலக்கியங்கள் நவீன வடிவம் பெற்று வருகின்றன. நவீனக் கோட்பாடுகளும் சிந்தனைகளும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பொருந்தும் வகையில் உள்ளன. பழந்தமிழ் இலக்கியங்கள் தனது கோட்பாடுகளை **அகம்**, **புறம்** என்றும் **அறம்**,**பொருள்**, **இன்பம்** என்ற அடிப்படையிலும் அமைத்திருக்கின்றன. நவீனக் கோட்பாடுகள் அத்தகையத் தன்மை கொண்டதல்ல. இவை இலக்கியங்களின் பல்வேறு கூறுகளை ஆராயும்


http://Creativecommons.org//license/by/4.0/.

நோக்கில் பயன்படுகின்றன. மாற்றுச்சிந்தனைகள் மென்மேலும் புதிய கோட்பாடுகளை உற்பவிக்கவும், அவற்றை இலக்கியங்களில் பயன்படுத்தும் முறையினையும் காண்பிக்கின்றன.

**மார்க்சியம் - அறிமுகம்**

**கார்ல் மார்க்ஸ், ஃபிரடரிக் ஏங்கெல்ஸ், விளாடிமிர் லெனின்** ஆகியோர் மார்க்சிய முன்னோடிகளாக இருந்து மார்க்சியத்தை வளர்த்தெடுத்தனர். தொடக்க கால நிலப்பிரபுத்துவம் போல, பிற்காலத்தில் முதலாளித்துவம் உழைக்கும் மக்களின் சுரண்டலுக்கு எதிராக உருவாக்கப்பட்டது மார்க்சியம். இது தனிமனித வரலாற்றை காண்பது மட்டுமல்லாது, மக்களின் வரலாறு காணும் கொள்கையைக் கொண்டது. மக்கள் அனைவரையும் பொருளாதார நிலையில் அதிகார வர்க்கத்திற்கு இணையாக உருவாக்குவதையும் , பட்டினி அற்ற சூழலையும் முன்வைக்கும் மார்க்சியம், இயங்கியல் தன்மைக் கொண்டது. இதனை இயங்கியல் பொருள்முதல்வாத அடிப்படையில் அறிஞர்கள் வளர்த்தனர்.

"சீர்திருத்தங்களுக்காகவும் ஜனநாயகத்திற்காகவும் மக்கள் நடத்தும் போராட்டம், அவற்றின் குறுகிய எல்லைகளைக் கடந்து, ஏகபோக எதிர்ப்பு - புரட்சிப் போராட்டமாக உருவெடுக்கிறது".[1]

மார்க்சியத்தின் இயங்கியல் சிந்தனை, வர்க்கம் மற்றும் வரலாற்றுப் போக்கினைக் காட்டுகிறது. முதலாளித்துவ நாடுகளில் சுரண்டலுக்கு எதிராக சமூக வர்க்கங்கள் செயல்பட்டால் அதனை ஆதரிக்கும் தன்மை படைப்பாளிகளுக்கு உண்டு. இவ்வாறு மார்க்சியத்தை அடிப்படையாகக் கொண்டு பழந்தமிழ் நூல்களையும் விமர்சிக்கும் போக்கு உள்ளது.

**ஆதிக்க வர்க்கமும் உற்பத்தியும்**

திணை அடிப்படையில் ஒவ்வொரு சமூகமும் பொருளாதாரத்திற்கு சில உற்பத்தி முறைகளைக் கைக்கொண்டனர். மக்களிடம் வெவ்வேறு விதமான உற்பத்தி காணப்பட்டாலும் அவையாவும் பொருளாதாரத்தில் செயல்படும் ஒரு கட்டமைவுக்குள் அடங்கும். வணிகக் குழுக்கள் மற்றும் பிரபுத்துவ மேற்கிளம்புகையால் உற்பத்தி குழுக்கள் மற்றும் சமூக உறவுகளில் பிளவு ஏற்பட்டது.

"தமிழ்நாட்டின் சாதியமைப்புக்கும் விவசாய உற்பத்தி முறைமைக்கும் நிலவிய உறவினையும் தமிழ்நாட்டில் நிலவிய நிலம் சார்ந்த உற்பத்தி முறையில் உபரி எவ்வாறு உழைப்பாளிகளிடமிருந்து உறிஞ்சியெடுக்கப் பெற்றதனையும் நன்கு அறிந்துகொள்ளாது இவ்விடயத்துக்கு நாம் விடை கூறிவிடல் முடியாது.

தமிழ்நாட்டின் சமூக-பொருளாதார உருவாக்கங்களின் தன்மையை நிர்ணயஞ் செய்கின்றபொழுது இரண்டு விடங்கள் பற்றி ஒரே சமயத்தில் நோக்க வேண்டியுள்ளது.

அ.தமிழ்நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் சமனற்ற வளர்ச்சித் தன்மை

ஆ. சமூக அதிகாரப் படிநிலையும், உற்பத்தியுடன் அதற்குள்ள உறவும், அதாவது சமூகச் சுரண்டல் எவ்வாறு நிகழ்கின்றது என்பது பற்றி தெளிவு'[2]

என்று கா. சிவத்தம்பி உற்பத்தி முறைமை பற்றி விளக்கியுள்ளார். மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் முக்கியமான பங்கு வகிக்கிறது. பொருளாதாரமும், உற்பத்தி முறையும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளன, இதனால், இவை ஆதிக்க மேலாண்மையுடன் இயங்குகிற தேவையும் உள்ளது. ஆதிக்க அடிப்படையில் மக்கள் உற்பத்தி முறையினை மாற்றி அமைத்துக்கொண்டனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

**சிறுபாணாற்றுப்படை, புறநானூறு - அறிமுகம்**

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரால் ஓய்மான் நாட்டு நல்லியங்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டது சிறுபாணாற்றுப்படை. இது 269 அடிகளைக் கொண்டது. ஐந்திணைச் சார்ந்த நிலம் காட்டப்பட்டு அதன்வழியே செல்லும் பாணர் மற்றும் விறலியின் வறுமையும் நல்லியங்கோடனின் மாவிலங்கை அடைந்தால் இன்ன பொருள்களைத் தருவான் என்ற செய்தியும் காணப்படுகிறது. புறநானூறு, பண்டைத் தமிழ்ச் சமூகத்தை அறிவதற்குச் சிறந்த வரலாற்றுப் பெட்டகமாக உள்ளது. புறம் சார்ந்த 400 பாடல்களைக் கொண்டது. சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வீரம், கொடை, புகழ் ஆகியவை மூலம் அன்றைய சமூக நிலை காட்டப்பட்டுள்ளது.

**அறம் அறிமுகம்**

‘அறம்’ என்ற தமிழ்ச்சொல், வடமொழியில் ‘நீதி’ என்று பயன்படுகிறது. அறச் சிந்தனை மனிதனை விலங்குகளிடமிருந்து மாறுபட வைக்கிறது. அறம் என்ற சொல் ஒழுக்கத்தினைக் குறிக்கும். பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்காமல், பிற உயிர்கள் துன்பப்படும் நிலையில் இரக்க குணத்தால் பார்ப்பது சிறந்த பண்பாக உள்ளது.

**“அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**
**மறவா திதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியு முடையு முறையுளு மல்லது**
**கண்ட தில்”** **(மணிமேகலை - 25: 228-231)**

உலக உயிர்களின் பசியை நீக்கி உயிர்களைப் பேணுவது அறமாக இருந்ததை மணிமேகலை காட்டுகிறது.

**புறப்பாடல்களில் அறம்**

**1.தனிமனித அறம்**

சாதாரண குடிமக்கள் ஒருவருக்கும் பொருந்தும் வகையில் அமையும் தன்மையுடையது தனிமனித அறம். இதனை சிறுபாணாற்றுப்படை பாடல்களில் பார்க்கும்போது,

**"எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**
**தேமா மேனிச் சில்வளை ஆயமொடு**
**ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்" (சிறுபாண் 175-177)**

என வேலூரில் வாழும் முல்லை நில மக்கள் வழிப்போக்கருக்கு வெண்சோறுடன் மான்கறியை வழங்கும் சூழல் காட்டப்பட்டுள்ளது.

**2. மரபுவழிப்பட்ட அறம்**

ஒருவனின் குடி சார்ந்து வழி வழியாக பின்பற்றப்படுவது மரபுவழிப்பட்ட அறமாக உள்ளது.

**"ஊர்ந்து பெயர் பெற்ற எழில் நடைப் பாகரொடு**
**மா செலவு ஒழிக்கும் மதனுடை நோன்தாள்**
**வாள்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ" ( சிறுபாண் 258-260)**

இப்பாடலில் நல்லியக்கோடனின் குடி சார்ந்து விளங்கும் மரபுவழிப்பட்ட அறம் வெளிப்படுகிறது. புறநானூற்றிலும் கொடைத் தன்மை அடிப்படையிலான பல பாடல்கள் உள்ளன. உதாரணமாக,


http://Creativecommons.org//license/by/4.0/.

**"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்**
**ஆற்றும் பெருமறின் செல்வம்**
**ஆற்றா மைநின் போற்ற மையே"** (புறம் -78)

என்ற பாடலைக் கொள்ளலாம்.

3. **சமூக அறம்**

தனிமனித ஒழுக்கமானது ஒரு சமூகத்தால் பின்பற்றப்படும் நிலையில், அது சமூக அறமாக மாற்றம் அடைகிறது. சிறுபாணாற்றுப்படையில் தனிமனித அறமும், மரபு வழிப்பட்ட அறமும் சமூக அறமாகி இருப்பது கண்கூடாக தெரிய வருகிறது. உதாரணமாக, பாணன் செல்லும் வழியிலுள்ள எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் ஆகிய ஊர்களில் வசிக்கும் மக்களின் விருந்தோம்பல் பண்பை ஆராயும் போது, திணைசார் அடிப்படையில் அது தனிமனித அறமாகவும், அதன் நீட்சியாக சமூக அறமாக மாறும் நிலையும் வெளிப்படுவதை அறியலாம்.

**"பழம்படு தேறல் பரதவர் மடுப்ப**
**……………………………**
**……………………...............**
**வறற் குழற் சூட்டின்வயின் வயின் பெறுகுவீர்"** (சிறுபாண்- 159 - 163)

பாணன் வழிபோக்கனாகச் செல்லும் நிலையில் அவனை ஆற்றுவிக்கும் மற்றொரு பாணன் 'எயிற்பட்டினத்தை அடைந்தால் பழமையான கள்ளின் தெளிவையும் உலர்ந்த குழல் மீனை சமைத்து சூடாக மீண்டும் மீண்டும் வழங்கும் பரதவ மக்களின் இயல்பையும் காணலாம்' என்பதன் மூலம் விருந்தோம்பல் பண்பு சமூக வயப்பட்ட அறமாக இருந்ததை அறிய முடிகிறது.

**இயங்கியல் தன்மை**

அறம் என்னும் ஒழுக்கம், தனிமனித அறமாக இருந்து மரபுவழிப்பட்டதாக மாறி பின்னர் சமூக அறமாக மாறும் இயங்கியல் தன்மை கொண்டதாக அமைகிறது. மார்க்சியத்தின் இயங்கியல் தன்மை முடியுடை வேந்தனின் வீரயுகக்காலத்திலிருந்து, களப்பிரர் ஆட்சியில் நீதி இலக்கிய காலமாக உருபெற்றதை இலக்கியங்கள் வழி அறியலாம்.

பாணர்களும் பாடினியும் பொருள் பெற்றனர், ஆனால் கற்ற புலவனுக்கு ஒரு பொருளும் வழங்கப்படவில்லை. அறிவை பன்முகத் தன்மையில் காண்பது மார்க்சியம். புலவர்கள் அரசர்க்கு செவியறிவுறூஉ என அறிவுறுத்தினாலும் பழங்காலத்தில் சிற்சில இடங்களில் போற்றப்படாமலும் இருந்துள்ளனர்.

ஸ்டாலின், சோஷலிச ரியலிசத்தை விளக்குவதன் மூலம் புரட்சிகர சிந்தனைகள் வெளிப்படுகின்றன. சாதாரண நிலையில் உள்ள மக்கள் விவசாயி, தொழிலாளி, கடைநிலை ஊழியர் போன்றோர் சமூக உயர்தட்டில் இருப்பவர்களின் ஆதிக்கத்தால் அடிமைப்படுத்தப்படுவதை உணர்ந்து புதிய தன்னுணர்வும், சமூக உறவும் பெறுவது சோஷலிச ரியலிசம் ஆகும். இதற்கு உதாரணமாக புறப்பாடல்களின் வெட்சி, கரந்தை திணைகளை எடுத்துக்கொள்ளலாம்.

**"வல்வில் மறவர் ஒடுக்கம் காணாய்**
**செல்லல் செல்லல் சிறக்கநின் உள்ளம்**
**முருகுமெய்ப் பட்ட புலித்தி போல"** - (புறம் 259)


http://Creativecommons.org//license/by/4.0/.

கரந்தை மறவன் தன் பசுக்கூட்டத்தை வெட்சி வீரனிடமிருந்து மீட்கும்போது அங்கு காவல் புரியும் வீரனைக் கொன்று ஆனிரைகளைக் கொண்டு வரும் பாடல்கள் மூலம் தன்மீது ஆதிக்கம் செலுத்தும் வர்க்கத்தினருக்கு எதிராக தனது உணர்வு மற்றும் சமூக உணர்வை வெளிப்படுத்தும் மக்கள் புரட்சிப் பாடலாக அமைந்துள்ளது.

**பொருளாதாரம்**

மக்கள் அனைவரும் சமத்துவ நிலையில் வாழ வேண்டியதையும், பட்டினி அற்ற சூழலை ஏற்படுத்துவதையும் உணர்த்துவது மார்க்சியச் சிந்தனை. இதனைப் பண்டைத் தமிழ் நூல்களில் விளக்கும்போது அரசை சார்ந்து மக்கள் வாழும் நிலை இருந்து வந்தது.

சிறுபாணாற்றுப்படையின் தொடக்கப் பாடல்வரிகளில் விறலியின் வர்ணனை சிறப்பாகச் சொல்லி, பின்னர் பாலையின் கொடுமையில் பாணனும் விறலியும் வெயிலின் வெம்மையில் நடப்பது காட்டப்பட்டுள்ளது. இதற்கான பின்னணி அவர்கள் வாழும் இடத்தில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடர், உற்பத்தி நிலம் இல்லாமை, புரவலர் இல்லாத காரணத்தால் வறுமை ஏற்பட்டுள்ளது. மேலும் 'கல்லா இளையர்' என்று பாணர்களைக் கூறுவதன் வழி, தனது குடித்தொழில் மட்டுமே செய்து வாழ்வதால் பிறரை சார்ந்து வாழும் நிலை இருந்துள்ளதை அறிய முடிகிறது. வறுமையில் வாழ்ந்த எனக்கு, அரசன் இன்ன பொருள் கொடுத்தான்; உனக்கும் அவ்வாறு கொடுப்பான் என்று சிறுபாணாற்றுப்படை நிறைவடைகிறது. ஆனால், இன்ன பொருள்களைத் தருவான் என்று மட்டுமே காட்டப்பட்டுள்ளதே தவிர அங்கு உண்மையில் பாணனின் வறுமை தீர்க்கப்பட்டதா என்ற வினா எழுகிறது. அரசனால் பொருள் கொடுக்கப்பட்டு புலவரால் அரசனின் புகழ் எழுதப்பட்டிருக்கும் என்றும் தோன்றுகிறது. இதனைப் போன்று மற்ற ஆற்றுப்படை நூல்களிலும் எனக்கு இன்னப் பொருள்களைத் தருவான் என்று தான் காட்டப்பட்டுள்ளது தவிர, உண்மையில் பாணர் மற்றும் விறலியின் வறுமை தீர்க்கப்பட்டிருப்பின் அவ்வகையான பாடல்கள் ஒன்றும் இலக்கியங்களில் இடம்பெறவில்லை.

பாணன் வெள்ளிநாரால் செய்த பூ பெற்றான், பாடினி அணிகலன் பெற்றாள் , ஆனால் புலவனாகிய நான் எப்பொருளையும் பெறவில்லை என்று கூறும் போது பாணர்களுக்குக்கூட பரிசில் கிடைக்க புலவர்கள் கைவிடப்பட்டது தெரிகிறது.

> **"கறிசோறு உண்டு வருந்துதொழில் அல்லது**
> **பிறிதுதொழில் அறியா ஆகலின் நன்றும்"** (புறம் - 11)

மன்னனை மட்டும் சார்ந்து வாழும் புலவர்கள் இருந்தனர். மேலும் அரசன் இறந்த பின்பு புலவர்களும் பாணர்களும் தான் வாழும் நாள் முற்று அடைய வேண்டும் என்று இருந்துள்ளனர்.

> **"நெல்விளை கழனிப் படுபுள் ஒப்புநர்**
> **ஒழிமடல் விறகின் கழிமீன் சுட்டு**
> **வெங்கள் தொலைச்சியும் அமையார் தெங்கின்**
> **இளநீர் உதிர்க்கும் வளமிகு நன்னாடு"** (புறம் -29 )

மனிதரிடம் போதுமென்ற வளமையான நிலைக் காணப்பட்டதை இப்பாடல் காட்டுகிறது. இதனால் இவர்கள் மற்றவரை தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரும் சூழல் இல்லை. ஒன்றின் இல்லாமையே பிற இடத்தின் சுரண்டலுக்கு காரணம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**நில வணிகம்**

பழந்தமிழகத்தில் பண்டமாற்று முறையில் தொடங்கி, வணிகம் சிறப்பான முறையில் நடந்ததை இலக்கியங்கள், அயல்நாட்டு குறிப்புகள், நாட்குறிப்புகள் ஆகியவை பதிவு செய்கின்றன. அவ்வகையில் சிறுபாணாற்றுப்படையில் உப்பு வணிகம் குறித்து

**"நோன் பகட்டு உமணர் ஒழுகையோடு வந்த**

**மகாஅர் அன்ன மந்தி"** ( **சிறுபாண்** - 55, 56)

என்று காட்டப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்படும் எயிற்பட்டினம் பற்றி "வடக்கே இருந்தது சோபட்மா என்னும் துறைமுகப்பட்டினம் என்று பெரிப்ளஸ் நூலாசிரியர் குறிப்பிடுகிறார். சோபட்மா என்பது சோபட்னா என்பதன் திரிபு. சோபட்னா என்பது சோபட்டினம் ஆகும். அதாவது எயிற்பட்டினம். சோ என்றாலும் எயில் என்றாலும் மதில் என்பது பொருள். மதில் சூழ்ந்த கோட்டைக்குள் அமைந்திருந்தபடியால் எயில் பட்டினம் என்றும் சோபட்டினம் என்றும் பெயர் பெற்றிருந்தது "[3] அயல் நாட்டு குறிப்பு மூலம் பண்டைய வணிகத் தொடர்பு விளக்கப்பட்டுள்ளது.

**கடல் வணிகம்**

நில வணிகத்தைக் காட்டிலும் கடல் வணிகம் மூலம் பழந்தமிழர் பெரும் வருவாய் ஈட்டினர். நிலம்படு பொருள், கடல்படு பொருள் என இரண்டு வகையான பொருள்கள் ஏற்றுமதி ஆகின. புறநானூற்றில் யானைக்கு உவமையாக கலங்கள் காட்டப்பட்டுள்ளது

**"களிறே முந்நீர் வழங்கும் நாவாய் போலவும்"** ( **புறம்** - 13)

யானையின் பலத்திற்கு உவமையாக கலங்கள் இருந்தது என்பதை

**"நளிகடல் இருங் குட்டத்து**

**வளிபுடைத்த கலம்போல"** ( **புறம்** - 26)

மரக்கலம் நீரைப் பிளந்து போவது போல அரசனின் ஆண்யானை செயல்படுவது என்று வலிமைக்குக் காட்டப்பட்டுள்ளது.

**"மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது**

**புகாஅர்ப் புகுந்த பெருங்கலத் தகாஅர்**

**இடைப்புலப் பெருவழிச் சொரியும்**

**கடல்பல் தாரத்த நாடுகிழ வோயே"** (**புறம்** - 30)

கடல்படு பொருள்கள் வணிகம் நடந்ததை இவ்வரிகள் விளக்குகின்றன.

**கருத்துரை**

ஆற்றுப்படை நூல்களில் ஆற்றுப்படுத்தப்படும் பாணன் தான் பொருள்கள் பெற்றிருப்பின் அதற்கான பின்னணியை நோக்குதல் வேண்டும். மார்க்சிய இயங்கியல் தன்மை கொண்டு நோக்கும் போது புறம்சார் பாடல்களில் இருந்து நீதிசார் இலக்கியமாக மாறிய தன்மைகள் குறிப்பிடத்தக்கது.

**தொகுப்புரை**

சிந்தனைகள் மனிதனை இயங்க வைக்கும் சூழலில் கோட்பாடுகள் தோன்றி அதன் மூலம் இலக்கியங்களை நவீனப் படுத்தும் நிலை உள்ளது. நிலவுடைமைச் சமூகத்தால் அடிமைச் சமூகத்தின் நிலை காட்டப்பட்டுள்ளது. அரசர்கள் தங்களின் புகழிற்காக புலவர்களுக்கு பொருள் கொடுத்து பாடல் இயற்றிருக்கலாம் என்ற கருத்து


http://Creativecommons.org//license/by/4.0/.

முன்வைக்கப்படுகிறது. வளமைச் சமூகம் தனது ஆதிக்கத்தை மற்றச் சமூகம் மீது செலுத்தும் பாடல்கள் புறநானூறு, சிறுபாணாற்றுப்படை பாடல்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. பேரா. நா. வானமாமலை, மார்க்சிய ஆய்வுகள், பக். 187
2. கார்த்திகேசு சிவத்தம்பி, தமிழில் இலக்கிய வரலாறு, பக். 220
3. மயிலை. சீனி வேங்கடசாமி, சிறுபாணன் சென்ற நெடுவழி (கட்டுரை), பத்துப்பாட்டு ஆய்வுகள், பக். 202-203

**துணைநூற் பட்டியல்**

1. பத்துப்பாட்டு ஆய்வுகள், நைசி. கரிகாலன் (தொகுப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
2. மார்க்சிய ஆய்வுகள், பேரா. நா. வானமாமலை, முத்து புக்ஸ்.
3. தமிழில் இலக்கிய வரலாறு, கார்த்திகேசு சிவத்தம்பி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
4. பத்துப்பாட்டு மூலமும் உரையும் (முதல் தொகுதி), உரையாசிரியர் அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம்.
5. புறநானூறு மூலமும் உரையும் (முதல் தொகுதி, இரண்டாம் தொகுதி), உரையாசிரியர் அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 14. ஆற்றுப்படை நூல்களில் தரைவழி வாணிகம்

**செல்வி அ.கீர்த்தனா,**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல் மற்றும் தமிழ்க் கல்லூரி,
பேரூர், கோவை- 641 010.
keerthanaalagarsamy9@gmail.com. - 9715742669

நெறியாளர்,
**முனைவர் ப.சங்கீதா,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல் தமிழ்க்கல்லூரி,பேரூர்-10

DOI 10.5281/zenodo.16524903.

**Abstract:**

Among the Atrupada texts, Sirupanatrupada and Perumpanatrupada contain information related to overland trade. It is noteworthy that in Sirupanatrupada, the Umanars go to sell salt with their families. In Perumpanatrupada, there are reports that Korkai merchants went to Kanchi to sell salt, and that customs duty was collected from them, and that a shepherd's daughter sold buttermilk, etc.

**Keywords :** Korkai merchant, merchant nature, carts, donkey feed, overland trade, customs duty, shepherd selling buttermilk

## முன்னுரை

தமிழகத்தில் பண்டைய காலங்களில் வணிகம் உலகப்புகழ்பெற்று விளங்கியது என்பதனை தொல்லியல் சான்றுகள் எடுத்தியம்புகின்றன. வணிகம் என்பது தேவைக்கு அதிகமாக இருக்கும் பொருள்களை பிற நாடுகளுக்குச் சென்று விற்பனை செய்வது மற்றும் பிற நாடுகளில் இருக்கும் பொருள்களை வாங்கிவந்து விற்பனை செய்வது. இதனால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சிபெறும். சங்க இலக்கியங்களில் வணிகம் தொடர்பான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருட்கள் பற்றிய செய்திகள் பல இடம்பெற்றுள்ளன. உள்ளூர் வாணிகம் மற்றும் வெளிநாடுகளில் மேற்கொள்ளும் வாணிகம் என வணிகம் இரண்டு வகைப்படும். சங்க இலக்கிய நூல்களுள் ஆற்றுப்படை நூல்கள் தனித்த சிறப்பினை உடையன. ஆற்றுபடை நூல்களுள் வணிகம் சார்ந்த செய்திகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## வாணிகம்

வணிகம் என்ற சொல்லுக்கு வியாபாரம் என்று அகராதி பொருள்படுத்துகின்றன(1). தமிழ்மொழியின் பழைமையான இலக்கண நூலான தொல்காப்பியத்தில் வணிகர் மரபினர் பற்றி மரபியல் நூற்பாவில் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

**"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"(2)**

மேலும் தொல்காப்பியத்தில் வாணிகத் தொழில் வணிகர்க்கு உரியது. சங்க இலக்கியங்களில் வாணிகம் குலம் சார்ந்த புலவர்கள் இருந்தனர். சீத்தலைச் சாத்தனார் கூல வாணிகர் மரபினர் என்பது குறிப்பிடத்தக்கது. பிற்கால காப்பியங்களிலும் வணிகர்களை பாட்டுடைத் தலைவன் மற்றும் தலைவியாகக் கொண்டு சிறப்பித்துக் கூறியுள்ளனர். உழுது அதனால் உண்டாகும் பயனைக் கைக்கொண்டு பசுவைப் பாதுகாத்துக் குற்றமற்ற பண்டங்களைவிற்று நான்மறை முதலியவற்றைக் கற்று முத்தீயை ஆராதித்துப் பொருளின் தன்மையைச் சீர்தூக்காமல் வழங்கும் கொடையினையுடையவர் வணிகர் என்று புறப்பொருள் வெண்பாமலைக் கூறுகிறது.(3)


http://Creativecommons.org//license/by/4.0/.

**ஆற்றுப்படை நூல்கள்**

ஆற்றுப்படை நூல்கள் பத்துப்பாட்டு நூல்களுள் ஒரு பகுதியாகும். அரசன் அல்லது வள்ளலிடம் சென்று பரிசில் பெற்றுத் திரும்பும் கலைஞன் அல்லது மனிதன் தான் பரிசில் பெற்ற வள்ளலிடம் சென்று பரிசில் பெறுமாறு மற்றொருவனை ஆற்றுப்படுத்துதல் ஆற்றுப்படையாகும். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாகும்.

**சிறுபாணாற்றுப்படை**

ஓய்மான்நாட்டு நல்லியங்கோடனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படையை இயற்றியுள்ளார். சிறுபாணாற்றுப்படையில் கொற்கை நகரின் வளங்களைப் பற்றிக் கூறும் பொழுது உமணர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. உப்பை வாணிகம் செய்பவர் உமணர்.

**"நோன்பகட் டுமணர் ஒழுகையொடு வந்த**
**முகாஅர் அன்ன மந்தி மடவோர்…"(4)**

துளியாக நிற்கும் தேனைப் பூக்கள் தம்மிடத்தே கொண்டிருக்கும் இளமை முதிர்ந்த நுணா மரத்தின் வெட்டிய வாயையுடைய குறிய மரக்கட்டையை கூர்மையான உளிகள் கொண்டு குடைந்த கைத்தொழில் திறத்தால் செய்த மாலையினையுடையதும், நெட்டியால் செய்த பூவினையுடைய மாலையை, செவியடியிலே நெற்றிமாலையாகச் சூடப்பட்டுள்ள வலிமையுடைய எருத்தினையுடைய உப்பு வாணிகருடைய வண்டி ஒன்றன்பின் ஒன்றாக ஒழுங்கோடு வந்தது. அதில் அவர்கள் வளர்த்ததால் அவர்கள் பிள்ளைகள் போன்ற மந்தி, மடப்பத்தினையுடைய மகளிரின் எயிற்றை ஒத்த செறிந்த நீர்மையுடைய முகத்தினை, வாளின் வாயினைப் போல வாயையுடைய கிளிஞ்சிலின் வயிற்றிடத்தே இட்டுப்பொதிந்து, நல்கூர்ந்த இடையினையும் உடைய தோளையும் முதுகையும் மறைக்கின்ற ஐந்து பகுதிகளையுடைய கூந்தலினை உடைய உப்பு வாணிகத்தியர்.

வாணிகத்தியர் பெற்ற அணிகலன்களை அணிந்த பிள்ளைகளுடனே கிலுகிலுப்பையாகக் கொண்டு விளையாடும் முரிகின்ற நீரைத் தனக்கு எல்லையாகவுடைய கொற்கை என்னும் ஊருக்கு அரசனும் தெற்கு நிலத்தினைக் காக்கும் தொழிலினைச் செய்பவனும் நிலத்தை மாறுபாட்டாலே கைக்கொண்ட முத்துமாலை அணிந்த வெண்கொற்றக்குடையினையும், கண்ணியையும் உடைய கடுமையான தேரினையுடைய பாண்டியனுடைய தமிழ் வீற்றிருந்தமையானே பொறுத்தற்கரிய மனமகிழ்ச்சியைத் தோற்றுகின்ற தெருவினையுடைய மதுரையிற் பெறும் பரிசிலும் சிறியதாயிருக்கும்.

இவ்வரிகளின் வழி உப்பு வணிகர்கள் உப்பு விற்கச் செல்லும் பொழுது தம் மனைவி மக்களுடன் தாங்கள் வளர்க்கும் பிள்ளையைப் போன்ற குரங்கினையும் அழைத்துச் செல்வர் என்பது புலனாகின்றது. இவ்வகை வணிகம் தரைவழி வணிகமாகும். வணிகர்கள் குடும்பத்துடன் அனைத்து இடங்களுக்கும் சென்று வாணிகம் செய்து வந்தனர் என்பதனை அறியமுடிகின்றது.

**பெரும்பாணாற்றுப்படை**

தொண்டைமான் இளந்திரையனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் இயற்றப்பெற்ற நூல் பெரும்பாணாற்றுப்படையாகும். உப்பேற்றிச் செல்லும் உமணர் வண்டிகள் குறித்து பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**"சில்பத உணவின் கொள்ளை சாற்றிப்**

**பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி…"(5)**

இப்பாடலில் கொம்பில் பூக்களையுடைய வேம்பினது மேன்மையையுடைய இலையை இடையிடையே கட்டப்பட்ட தழை விரவிய மாலையையும் மிகுந்த அழகினையும் வலிமைமிகுந்த தோல்களையும் முறுக்குண்ட உடம்பினையும் நிரம்பிய மெய்வலியினையும் உடைய மக்கள். சிறிய துளையினையுடைய கொடிய நுகத்தின் கண்ணே எருதுகள் ஒரு வழிப்படுமாறு வரிசையாகக் கட்டின பெரிய கயிற்றுயுடைய சகட ஒழுங்கினை எருதுகள் திருகாமலும் அச்சு முறியாமலும் பக்கத்தில் காத்துச் செல்ல உப்பாகிய உணவினது விலையைக் கூறி பல எருதுகளையுடைய உப்புவாணிகர் ஊர்கள் தோறும் செல்லாநின்ற நீண்ட சாலைகள் வழி பகற்பொழுதிலே செல்வதால் அவர்களுடன் செல்பவர்க்கு பாதுகாவலாக அமைகிறது.

இப்பாடல் வழி உமணர்கள் வேம்புமாலை சூடியிருந்தமையால் இவர்கள் கொற்கை உமணர்களாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இதனால் உமணர் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு உப்பு விற்கச் சென்றனர் என்பதனை அறியமுடிகிறது. அவர் நேர்த்தியான வரிசையில் எருதுகளை ஓட்டிச் சென்றனர் என்றும் இவர்கள் எழுப்பும் சத்தத்தினால் அந்த வழியில் செல்வோர் பயமில்லாமல் சென்றனர் என்றும் உமணர்கள் வழிதோறும் உப்பு விற்றுக்கொண்டு சென்றனர் என்பதனையும் அறியமுடிகியது. இதன் வழி உமணர்களின் உப்பு விற்பனைச் செய்வதில் அவர்கள் கொண்ட பல ஆண்டுகால அனுபவம் இவர்களின் செயல்கள் வெளிப்படுத்துகின்றன. வணிகர்கள் மலைகளிளும் கடலிலும் விளையும் பொருட்களை ஊரில் உள்ள மக்கள் அனைவருக்கும் கொண்டுவந்து விற்கும் தொழில் செய்து வந்தனர் என்பது புலனாகிறது.

**"உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்**

**வில்லுடை வைப்பின் வியன்காட்டு இயவின்…"(6)**

கழுதைகள் திரளோடு செல்கின்ற வழியில் சுங்கம் வசூலிக்கப்பட்டது. பெரிய வழிகளில் பாதுகாத்தல் தொழில் செய்யும் விற்படை இருக்கின்ற ஊரினையுடைய காட்டுவழியில் செல்கின்றனர். இவ்வரிகளின் வழி பண்டைக் காலத்தே ஒரு நாட்டின் பொருள் மற்றொரு நாட்டிற் புகும்பொழுது வழிகளிலே மன்னர்கள் சுங்கவரி வசூலிப்பது வழக்கமாக இருந்தது என்பது புலனாகிறது. வணிகர்கள் வரி செலுத்தினர் என்பதை அறியமுடிகிறது.

**கோவலர் மகளிர் மோர் விற்றல்**

இருள் புலருகின்ற விடியலில் பறவைகள் எழும்போதே எழுந்து தன் கடமைமேற்கொண்டு புலிபோன்ற முழக்கத்தையுடைய மத்தினை ஆரவாரம் எழுப்பும்படி கயிற்றை வலித்து, குடைககாளானின் முகிழ்போன்ற முகிழையுடைய உறையிட்டு இறுகிய தயிரைக் கடைந்தனர் இடையர் மகள்.

**"புகர்வாய் குழிசி பூஞ்சுமட் டிரீஇ**

**நாண்மோர் மாறு நன்மா மேனிச்…"(7)**

தலையின்மேலே மெல்லிய சுமட்டின்கண் அம்மோர்ப்பானையை ஏற்றிச்சென்று, புதிய மோரை விற்கும் இடையர் மகள். இதனை உள்ளூர் வாணிகம் என்று கூறுவர். இப்பெண் பக்கத்திலிருக்கும் இடங்களுக்குச் சென்று மோர் விற்கும் வழக்கத்தினை இடையர் மகளிர்


http://Creativecommons.org//license/by/4.0/.

கொண்டிருந்தனர் என்பதை இப்பாடல் வரிகள் விளக்குகின்றது. பெண்களும் சிறிய வகையில் வாணிகம் செய்தனர்.

## முடிவுரை

ஆற்றுப்படை நூல்களுள் சிறுபாணாற்றுப்படை மற்றும் பெரும்பாணாற்றுப்படை ஆகிய நூல்களில் மட்டுமே தரைவழி வாணிகம் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன. உப்புவணிகர்கள் தங்கள் குடும்பத்துடன் வளர்ப்புப் பிராணிகளை உடனழைத்துச்சென்றனர் என்ற செய்தியை சிறுபாணாற்றுப்படை வழி அறியமுடிகிறது. கொற்கை வணிகர்கள் காஞ்சிக்கு வண்டிகளில் சென்று வழிகள்தோறும் உப்பு விற்பனை செய்தனர். ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் பொருட்களை எடுத்துச் செல்பவர்களிடம் சுங்கவரி வசூலிக்கப்பட்டச் செய்தியையும், இடையர் மகள் மோர் விற்பதற்காக அருகே உள்ள இடங்களுக்குச் செல்லுதல் முதலிய தகவல்களை பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக்கின்றன. சங்ககால வணிக மக்களின் வாழ்வையும், அவர்கள் வாணிகம் செய்த முறைகளையும் இப்பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

## அடிக்குறிப்பு

1. சங்கரலிங்க முதலியார்,எஸ்.,வெள்ளிவிழா தமிழ்ப் பேரகராதி,தொகுதி-2,ப.எண்-505.
2. திருஞானசம்பந்தம்,ச.(உரை.),தொல்காப்பியம்(பொருளதிகாரம்), பக்க எண்-377.
3. சுவாமிநாதையர்,உ.வே., புறப்பொருள் வெண்பாமாலை, பக்க எண்-11.
4. சோமசுந்தரனார்,பொ.வே.,(வி.),சிறுபாணாற்றுப்படை, பக்க எண்-2.
5. சோமசுந்தரனார்,பொ.வே.,(வி.),பெரும்பாணாற்றுப்படை, பக்க எண்-3.
6. சோமசுந்தரனார்,பொ.வே.,(வி.),பெரும்பாணாற்றுப்படை, பக்க எண்-3.
7. சோமசுந்தரனார்,பொ.வே.,(வி.),பெரும்பாணாற்றுப்படை, பக்க எண்-5.

## துணைநூற்பட்டியல்

1. கந்தையா,ந.சி.,(உரை.), செவ்விலக்கியக் கருவூலம்(சங்க இலக்கியம்), தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை-17,மு.ப.-2008.
2. சங்கரலிங்க முதலியார்,(எஸ்.), வெள்ளிவிழா தமிழ்ப் பேரகராதி, தமிழ்மண் பதிப்பகம், சென்னை-17,மு.ப.-1;935.
3. சோமசுந்தரனார், பொ.வே.,(வி.), சிறுபாணாற்றுப்படை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1.
4. சோமசுந்தரனார், பொ.வே.,(வி.), பெரும்பாணாற்றுப்படை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1.மு.ப.-1955.
5. திருஞானசம்பந்தம்,ச.(உரை.), தொல்காப்பியம் (பொருளதிகாரம்), கதிர் பதிப்பகம், திருவையாறு-04, மு.ப.-2020.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 15. ‘தப்பலியு நீனாடே மகனே’ நாவலில் வணிகச் சிந்தனைகள்

**பை.லட்சுமி,**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**திராவிடப் பல்கலைக்கழகம்,குப்பம்.**
**அலைபேசி** : 8870243241 **மின்னஞ்சல்** : lax2699@gmail.com ORCID Number: 000-00096-4183-3721
**DOI 10.5281/zenodo.16525017.**

**Abstract**

This article will examine the commercial ideas and the conflicts between tradition and modernity in the novel "Thappaliyu Neenade Magane". This article will describe the social changes brought about by commercial ideas and also examine S. L. Bhairabba's perspective from a literary perspective.

**Key Words :** Novel - Commercial Ideas - Tradition - Modernity

## முன்னுரை

இன்றைய உலகில் வணிகம் என்பது அனைத்து துறைகளிலும் முக்கியமான பகுதியாக மாறியுள்ளது. இதன் தாக்கமானது கிராமம் முதல் நகரம் வரை பரவி இருக்கிறது. வணிகச் சிந்தனை என்பது பொருளாதார மற்றும் சமூக சூழ்நிலையில் பிறக்கும் ஒரு முக்கியமான சிந்தனையாகும். இன்றைய வணிக நோக்கானது வெறும் விற்பனையை, லாபத்துக்கான முயற்சியோ அல்லாது அனைத்து துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் விதமாக உள்ளது. இக்காலகட்டத்தில் கல்வி, மருத்துவம், கலாச்சாரம், ஆன்மீகம் என அனைத்தும் வணிகமும். வணிகச் சிந்தனை என்பது ஒரே மாதிரியாக இல்லாமல் பல்வேறு கோணங்களில் வளர்ந்துள்ளது. இந்நாவலில் வணிகம் என்பது ஒரு பொருளாதார ரீதியாக மட்டுமல்லாமல் அது ஒரு சமூக கலாச்சார சிக்கலாகும், மதநம்பிக்கைகளிடையே நுழையும் முடக்கமான சக்தியாகவும் அமைகிறது.

## எஸ்.எல்.பைரப்பா - அறிமுகம்

வணிக வளர்ச்சியானது பாரம்பரிய சமுதாயங்களை எவ்வாறு மாற்றுகிறது என்பதை குறித்து பல சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். அவர்களுள் ஒருவர் எஸ்.எல்.பைரப்பா. இவர் இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த இந்திய நாவலாசிரியர்களுள் ஒருவர். கன்னட மொழி எழுத்தாளர். இவர் மொத்தம் இருபத்தாறு நாவல்கள் எழுதியுள்ளார். அதில் புகழ்பெற்ற பல நாவல்கள் இந்தியாவின் முதன்மையான மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இவரது எழுத்துகள் சமூக, கலாச்சார, மதம் , அரசியல் மற்றும் மரபு நோக்கங்கள் கொண்டவை. 1968-ல் வெளிவந்த இவரின் “தப்பலியு நீனாடே மகனே” நாவல், இந்திய கிராமங்களில் மதம், மரபு மற்றும் நவீனத்தின் இடையேயான மோதல் பதிவு செய்கிறது. இந்நாவலில் வணிகப் பதிவுகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இடம்பெற்றுள்ளன.

## கதைச்சுருக்கம்

“தப்பலியு நீனாடே மகனே” நாவல் கிராமத்து சூழலில் நிலவும் பாரம்பரிய நம்பிக்கைகள், மரபுகள் மற்றும் நவீன சிந்தனைகளுக்கிடையே ஏற்படும் முரண்பாபாடுகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இது கலாச்சார பாதிப்பு, வணிகச் சிந்தனை, மனித உறவுகளின் சிக்கல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நவீன இலக்கியத்தில் தனித்துவம் பெற்றதாக விளங்குகிறது. நாவலின் முதன்மை கதாப்பாத்திரமான ‘காளிங்க கௌடா’, அமெரிக்காவில் உயர் கல்வியை முடித்த பின்பு அந்நாட்டு பெண்ணான ஹில்டாவை மணம் முடித்துக்கொண்டு சொந்த ஊருக்கு திரும்புகிறான். நகரத்தில்


http://Creativecommons.org//license/by/4.0/.

வாழ்ந்துவிட்டு கிராமத்திற்கு வந்த அவன் நவீன சிந்தனை போக்குடன் காணப்பட்டான். அவனது மனதில் அறிவியல் அணுகுமுறை பதிந்திருந்தது. ஆனால் அந்த கிராம மக்கள் மதம், மரபு, தர்மம், புனிதம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு வாழ்ந்து வந்தனர். காளிங்காவின் குடும்பத்தில் பசுமாடுகளைக் குலதெய்வமாகக் கருதி வளர்த்து வந்தனர். அவர்களின் தொழில் அதுவே ஆகும். அவற்றிற்கு பூசையெல்லாம் செய்து வழிபட்டனர். ஊர்மக்கள் அனைவரும் பசுக்களைப் புனிதமான ஒன்றாகவே கருதினர். ஆனால் காளிங்கா அந்த பசுக்களை பொருளாதார நோக்கில் பார்க்கிறான். பால் கறக்காத முதிய பசுக்களை வைத்துக்கொண்டு என்ன செய்வது? அவற்றால் ஒரு பயனுமில்லை. எனவே, அவற்றையெல்லாம் விற்று விட்டு, புதிய பசுக்களை வாங்க வேண்டும் என நினைக்கிறான். இவரின் இந்த செயலைக் கண்டு அந்த கிராம மக்களும் அவனது தாயாரும் ஒன்று சேர்ந்து கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அப்போது தனது தாய், காளிங்காவை 'தப்பலியு' என அழைக்கிறாள். 'தப்பலியு' என்றால் அனாதை என்று பொருள். புகழ்பெற்ற கன்னட நாட்டுப்புறப்பாடல் 'கோவின ஹாடு' (பசுவின் பாடல்). இந்தப்பாடலில் இடம்பெற்றுள்ள ஒரு வரிதான் இந்நாவல் தலைப்பாக "தப்பலியு நீனாடே மகனே" என்பதாகும். அந்த கிராமத்தில் புரோகிதரும் ஆசிரியருமான வெங்கட்ரமணா என்பவர் மரபுகள் மற்றும் கிராமிய நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர். காளிங்கா மற்றும் வெங்கட்ரமணா இருவருக்கும் இடையில் விவாதங்கள் அடிக்கடி ஏற்படும். பசுவை புனிதமாக கருதும் சமூகத்தில் அவற்றை விற்கும் எண்ணமானது ஒரு மதச்சிதைவாகக் கருதப்படுகிறது. இதன்மூலம் எஸ்.எல் பைரப்பா வணிகம் மற்றும் மதத்தின் இடையிலான போராட்டத்தை நாவல் வழி வெளிப்படுத்துகிறார்.

### மரபும் வணிகமும்

இந்தியாவில் வணிகம் என்பது முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. கிராமத்தில் வணிகச் சிந்தனைகள் மிக மெதுவாகவே நுழைகின்றன. முன்பு கிராமங்களில் வணிகத்திற்கு என்று இல்லாமல் தன்னிறைவு வாய்ந்த உற்பத்தி முறையினை மேற்கொண்டு இருந்தனர். ஆரியர்கள் தம்முடைய பழக்க வழக்கங்களையும், சமயக் கோட்பாடுகளையும், தெய்வ வழிபாட்டு முறைகளையும்,பண்பாடுகளையும் அவர்கள் தமிழகத்தில் பரவவிட்டனர்.[1] மக்கள் அனைத்தையும் வணிக நோக்கில் பார்க்கும் நிலை அப்போது இல்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் கொலோனியல் (Colonial) ஆட்சி வந்த பிறகு, பொருளாதார வளர்ச்சியில் மாற்றம் நிகழ்ந்தது. இங்கிலாந்தின் பொருளாதார நோக்கங்களுக்கேற்ப இந்திய உற்பத்தி முறைகள் மாறின. இயந்திரங்களின் தேவை அதிகமாயின. எனவே பாரம்பரிய தொழில்கள் அழிந்து புதிய வணிக சிந்தனைகள் நுழைந்தது. இருபதாம் நூற்றாண்டிற்குப் பிறகு தொழில்நுட்பங்கள் அதிகமாயின. தொழிற்சாலைகள் மற்றும் நுகர்வியல் சிந்தனைகள் உயர்ந்தன. இப்படி ஏற்பட்ட இந்த மாற்றங்கள் கிராம வாழ்க்கையில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

'தப்பலியு நீனாடே மகனே' நாவல் இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் அமைந்த வணிக வளர்ச்சி மற்றும் பாரம்பரியத்தின் இடையேயான மோதலைக் காட்டுகிறது. நாவலில் வெங்கட்ரமணா என்பவர் 'வணிக வளர்ச்சி என்பது ஒரு மரபை அழிக்கக்கூடியது' என எண்ணுகிறார். ஆனால் காளிங்கா, வணிகம் மற்றும் அறிவியல் வளர்ச்சி என்பது சமூக முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் என்ற எண்ணம் கொண்டவன். காளிங்கா தன் நிலத்தில் உழுவதற்கென்று மாட்டை பயன்படுத்தாமல் இயந்திரத்தை பயன்படுத்தினான். கிணற்றிலிருந்து நீர் பாய்ச்சுவதற்காகவும் விவசாயத்திற்காகவும் இயந்திரங்களையே பயன்படுத்தினான். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், கிழக்கு மேற்கு நாடுகளில்


http://Creativecommons.org//license/by/4.0/.

இருந்தும் பல்வேறு பொருட்கள் தமிழகத்துக்குத் தமிழ் வணிகர்களால் கொண்டுவரப்பட்டு, மதிப்பு ஏற்படுத்தப்பட்டும், நேரடியாகவும் அவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாயின.[2] 'நாம் இங்கிருந்து இந்த புகையிலையை கொடுத்தால் வேறு தேசவர்கள் மற்றொரு ஆகாரத்தை நமக்கு கொடுப்பர்' என்று பசுமை நிறைந்த நிலத்தில் உழுது அதில் புகையிலையை உற்பத்தி செய்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்தால் நிறைய லாபம் ஈட்ட முடியும் என்ற எண்ணத்தில் பசுமைப் புரட்சி, இயந்திர உபகரணங்கள், தொழில்துறை ஆகியவற்றை கிராமத்திற்குள் புகுத்தினான். இதனைக் கண்ட வெங்கட்ரமணாவிற்கு மரபு மற்றும் பாரம்பரியம் அனைத்தையும் இவன் அழிக்கிறான் என கடும் கோபம் வந்தது. வணிகம் பாரம்பரியத்தை ஒரு புதிய வடிவில் மாற்றுகிறது. காளிங்கா தன் தாயாரின் இறப்பிற்குப் பின்புதான் மரபின் உண்மை அடையாளத்தை புரிந்து கொள்கிறான்.

**வணிகச் சிக்கல்கள்**

பசுக்களை குடும்பத்தின் பிழைப்புக்கான ஓர் உயிரினமாக கருதி மக்கள் வளர்க்கின்றனர். ஆனால் நகரத்தில் இருந்து வரும் நவீன மக்களின் எண்ணங்கள் பசு மாடுகளை விற்று வருமானம் பார்க்கும் வணிக நோக்கத்தை ஊக்குவிக்கின்றன. இது கிராம மக்களிடம் எதிர்ப்பை உருவாக்குகிறது. காளிங்கா என்னும் கதாபாத்திரம் தன்னிடம் உள்ள பசுமந்தையில் பால் கறக்காத முதிய பசுக்களையெல்லாம் விற்றுவிட்டு புதிய பசுக்களை வாங்கலாம் என முடிவு செய்தான். அந்த முதிய பசுக்களை வாங்கிக் கொள்பவன் அதை ஹைதராபாத்தில் உள்ள ஒரு வணிகருக்கு விற்று விடுவான். அவர்கள் பசுக்களை துன்புறுத்தி கொன்று அதில் பாலாடைக் கட்டி (Cheese) செய்வார்கள். காளிங்கா முதிய பசுக்களுக்கு ஆகாரம் கொடுத்து வளர்ப்பதில் ஒரு பயனும் இல்லை என்றான். அதற்கு வெங்கட்ரமணா உன் தாய்க்கு இன்னும் சிறிது காலத்தில் முதுமை அடைந்த பிறகு அவள் சாப்பிடும் உணவையும் கணக்கிடுவாயா? என்று கேட்டதற்கு பசுவும் மனிதனும் ஒன்றல்ல என்று காளிங்கா கூறினான். இன்று பசுக்களை வணிக நோக்குடன் பார்க்கும் நிலை உள்ளது. பசுவின் பாலை கறக்கும் போது முதலில் அதன் கன்று குட்டிக்கு பால் குடிக்க விடுவார்கள். அப்பொழுது தான் பசுவிற்கு பால் சுரக்கும். பிறகு மீதமுள்ள பாலை தங்களுக்கு என எடுத்துக் கொள்வர். காளிங்காவின் தாத்தா கன்றுகள் குடித்து மீதமுள்ள பாலை கறந்து அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கு கொடுத்து விடுவார். ஆனால் காளிங்காவோ கன்றுகள் பால் குடித்தால் பால் குறைந்து விடும் என எண்ணி கன்றுகளுக்கு புற்களை போட்டுவிட்டு பசுவின் மடியில் இயந்திரத்தை பயன்படுத்தி ஒரு சொட்டு பால் கூட விடாமல் கறந்து விடுவான்.

"பசுவை நாம் இறையருளாகவே வளர்த்தோம், நம்மை தாய் போல் காப்பது அது" என்பது வெங்கட்ரமணா பின்பற்றும் நெறி. கிராமத்தில் பசுவை மதக் கொள்கையின் அடிப்படையில் தெய்வமாக பார்க்கின்றனர். அப்படி இருக்கும் நிலையில் வணிகமயமாக்கும் போது கிராம மக்கள் அவற்றை எதிர்க்கும் சிக்கலாக அமைந்துள்ளது. பசுவை கொன்று மாமிசம் உண்ணும் வழக்கம் உண்டு. இது மத அடிப்படையில் எதிர்ப்புக்குள்ளானதாகவே இன்றும் கருதப்பட்டு வருகிறது.

**வணிகத்தின் நன்மைகள்**

வணிகத்தின் நன்மை தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிப்பதே ஆகும். நாவலில் பாரம்பரிய முறையில் பசுவின் பண்ணை பயன்பாடு முக்கியமானதாக இருந்தாலும் வணிகர்கள் நிலத்தை உழுவதற்கு பசுக்களை பயன்படுத்துவதற்கு பதிலாக இயந்திரங்களை பயன்படுத்தும் போது வேலை சுலபமாக முடியும். நவீன தொழில்நுட்பங்கள், தண்ணீர் மேலாண்மை, விதை பராமரிப்பு, போன்றவற்றை பயன்படுத்துகின்ற போது இது விவசாய விளைச்சலை உயர்த்தும். வணிகர்கள் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறார்கள். நில


http://Creativecommons.org//license/by/4.0/.

உரிமையாளர்கள் தங்களின் பண்ணைகளில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி தருதல், கால்நடை பராமரிப்பு மற்றும் உரம் விற்பனை போன்ற துறைகளில் மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குகிறார்கள். இதில் பெண்களுக்கான வேலை வாய்ப்பு அதிகமாக உள்ளது. வணிகர்கள் அறிவியல் அடிப்படையில் விவசாயத்தை மேம்படுத்த முனைவார்கள். பாரம்பரியமான பசுக்களில் அதிக பால் தரக்கூடிய பசுக்கள் எதுவென்று பார்த்து வளர்ப்பார்கள். அவற்றில் எந்த வகையானது எவ்வளவு பால் தரும், அவற்றின் நோய் எதிர்ப்பு சக்தி போன்ற விஷயங்களை ஆய்வு செய்து செயல்படுகிறார்கள். பசுக்களை விற்பது என்பது பாவம் என்று யோசிப்பதை விட அது நமக்கு பயனுள்ளதா இல்லையா என சிந்திக்க வேண்டும். பசுக்கள் நமக்கு பால் தருகிறது, அதன் சாணத்தையும் உரமாக பயன்படுத்திக் கொள்ளலாம். வணிகமானது உழைப்பால் வருமானம் தரும் வாய்ப்பை உருவாக்குகிறது. காளிங்காவின் லாப நோக்கமானது அவனின் தனிப்பட்ட முயற்சியாக இருந்தாலும் கூட அது வணிகத்தால் பல மடங்கு வளர்ச்சி வாய்ப்பை உருவாக்குகிறது.

**வணிகத்தின் தீமைகள்**

வணிகமானது மக்கள் மனதில் பணத்தை மட்டுமே வாழ்க்கையின் நோக்கமாக மாற்றுகிறது. புகையிலை என்பது தீங்கு விளைவிக்கக் கூடிய ஒரு பொருள், அதை விவசாய நிலத்தில் உற்பத்தி செய்யும் போது அந்த நிலமும் சீரழியும். அதன் வணிகத்தால் மக்களுக்கு தீங்கு விளையும். நாம் விவசாயம் போன்றவற்றிற்கு நவீன இயந்திரங்களை பயன்படுத்துவது ஒரு புறம் நமக்கு நன்மையை தான் தரும். அவற்றில் அதிலும் தீமை விளைவிக்க கூடியனவும் உள்ளன. உதாரணமாக, இந்நாவலில் விவசாயத்திற்காக இயதிரங்கள் பயன்படுத்தப்பட்டது என்பது நன்மையை தரும். ஆனால், பசுக்களின் மடியில் இயந்திரத்தை புகுத்தி பால் கறப்பது என்பது அந்த உயிரினத்தை துன்புறுத்தக் கூடியதாகும். வணிகத்தால் மனித உறவுகளிலும் விரிசலை ஏற்படுத்துகிறது. கண்ணாடி போல இருந்த குடும்ப உறவுகள் வணிக நோக்கத்தின் காரணமாக உடைந்து விடுகின்றன. உதாரணமாக, ஹில்டா என்னும் கதாபாத்திரம் பசுக்கள் எல்லாம் பால் தரும் இயந்திரங்கள் மட்டுமே எனக் கூறியதால் அவளுக்கும் அந்த கிராம மக்களுக்குமான உறவில் பாசமும் புரிதலும் இல்லாமல் போகிறது. காளிங்கா விற்ற பசுக்களை அந்த வணிகன் ஹைதராபாத்திற்கு அதை கைமாற்றி விடுவார். அவர்கள் அந்தப் பசுவை கட்டிப்போட்டு அடிப்பார்கள். அதன் பிறகு தோல்வீங்க செய்து அந்த மாடு இறந்துவிடும். அதன் பிறகு மாட்டின் ரென்னட் என்னும் நொதி யூக்கியை எடுத்து பாலாடைக்கட்டி செய்ய பயன்படுத்துவார்கள். பண்டைய காலங்களிலிருந்தே இவ்வாறு உயிரினங்களை ஏற்றுமதி செய்யும் வழக்கம் இருந்துள்ளது. தமிழகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் பலவகையான பண்டங்கள் ஏற்றுமதியாயின. புலி, சிறுத்தை, யானை, குரங்கு, மயில், கிளி, வேட்டை நாய்கள் ஆகியவற்றைத் தமிழகம் ஏற்றுமதி செய்தியை கே.கே.பிள்ளை கூறுகிறார்.[3]

> **'கொல்லால் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
> **எல்லா உயிருந் தொழும்' (திருக்குறள்-260)**

எந்த ஒரு உயிரையும் துன்புறுத்தாமலும், கொல்லாமலும் இருக்க வேண்டும். இறைச்சிக்காக உயிர்களைக் கொல்வதையும் அதை உண்பதையும் தவிர்ப்பது நல்லது. இப்படி ஒரு உயிரினத்தை துன்புறுத்தி அதன் மூலம் லாபம் பார்ப்பது என்று தீங்கான செயல். பசுக்களை இறைச்சிக்கு பயன்படுத்தும் போது அது மதம், சமூகம், கலாச்சாரம் என அனைத்தும் சிதைவடைகின்றன. பாரம்பரியமான இயற்கை வேளாண்மைக்கு மாற்றாக மாடர்ன் வேளாண்மை ரசாயன உரம், அதிக உற்பத்தி, குறைந்த செலவில் லாபம் போன்ற


http://Creativecommons.org//license/by/4.0/.

வணிக கோட்பாடுகள் நுழைகின்றன. இது நிலத்தை பொருளாக்கும் நோக்கத்தை உருவாக்குகிறது. நிலமும் விற்பனைக்காண பொருளாக மட்டுமே பார்க்கப்படுகிறது.

**வணிகமும் நவீனமும்**

வணிகமானது நவீன உலகில் பணம், சுகாதாரம், கல்வி என அனைத்திலும் முதன்மையிடத்தை பெற்றுள்ளது. காளிங்கா போன்ற நகரிய பாத்திரங்கள் வணிக நோக்குடன் பசுக்களை பராமரிக்க வேண்டும் என வலியுறுத்தும் போது வணிகம் நவீன சிந்தனையாக கட்டமைக்கப்படுகிறது. பசு வளர்ப்பு என்பது ஒரு பாரம்பரிய பணியாக இருந்தாலும் நவீனம் என பார்க்கும்போது அது வருமானம் தரும் ஒரு தொழிலாகவே மாறுகிறது. பாரம்பரிய கிராம வாழ்க்கையில் உறவுகளில் பாசம், பகிர்வு மற்றும் பிரிவு போன்றவை இருந்தன. ஆனால் நவீன வணிக வாழ்க்கையானது லாபம் மட்டுமே நோக்கமாகக் கொண்டுள்ள மனிதனை தனிமையில் வாழும் நிலைக்கு தள்ளி விடுகிறது. காளிங்கா மற்றும் அவன் மனைவியின் உறவிலும் பணம் மற்றும் சுயநலமே காணப்பட்டது. பசு ஒரு கலாச்சார உயிரினமாக இருந்த இடத்தில் வணிகம் அதை ஒரு வணிகப் பொருளாக மாற்றுகிறது. இதனால் பழைய பாரம்பரியங்கள் மறைக்கப்பட்டு நவீன கலாச்சாரம் மக்களின் நம்பிக்கைகளை அழிக்கிறது. காளிங்காவின் நகர பின்னணியானது மேற்கு நாட்டு கல்வி மற்றும் சட்ட கற்றல் அவனது பார்வையை மாற்றியுள்ளது. பசு, கிராமம், தெய்வம் என அனைத்தையும் அவன் வணிக நோக்கில் மட்டுமே பார்க்கிறான் இது நவீன கல்வியில் ஏற்படும் மாற்றம் எனலாம். பசுக்களை விற்கும் முயற்சி மற்றும் வேளாண்மையை லாப நோக்குடன் மாற்றும் செயல்கள் இயற்கை, பசு, நிலம் போன்றவை கிராம மக்களுள் புனித நம்பிக்கைகளாக இருந்தன. ஆனால் நவீன வணிக நோக்கத்தில் இயற்கை ஒரு உற்பத்தி கருவியாக மட்டுமே பார்க்கப்படுகிறது. வணிதமும் நவீனமும் இணைந்து பாரம்பரியம் மற்றும் சமூகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எஸ்.எல் பைரப்பா அவர்கள் இந்நாவவல் மூலம் வணிகச் சிந்தனை பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் அளிக்கும் பயணமாகவே இருக்கக்கூடும் என ஒரு எச்சரிக்கையை முன் வைக்கிறார்.

**கருத்துரை**

"தப்பலியு நீனாடே மகனே" நாவலில் ஒரு கிராமத்தின் வழியே இந்திய சமூகத்தில் நிகழும் வணிக வளர்ச்சி மற்றும் பாரம்பரியக் கலாச்சாரத்தின் மோதலை ஆழமாகவும் சிந்தனையுடனும் பதிவு செய்கிறது. எஸ்.எல்.பைரப்பா அவர்கள் இந்த நாவலை வெறும் கதையாக மட்டுமல்லாமல் வணிக வளர்ச்சியில் ஏற்படும் நன்மைகளும், அதன் கீழ் ஒளிந்து கிடக்கும் கலாச்சார அழிவுகளும் வாசகனை சிந்திக்க வைக்கின்றன. நாவலாசிரியர் அவர்கள் வணிக வளர்ச்சியைப் பற்றி எதிர்த்து ஏதும் பேசவில்லை. ஆனால் சமூக மற்றும் பண்பாட்டு தாக்கங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறார் என்பதை இவ்வாய்வு கட்டுரை வெளிகொணர்ந்திருக்கிறது.

**தொகுப்புரை:**

எஸ்.எல்.பைரப்பா எழுதிய ‘தப்பலியு நீனாடே மகனே’ நாவல், கிராம சமூகத்தின் வாழ்வியலை, அதன் மதநம்பிக்கைகள், மரபுகள் மற்றும் கலாச்சாரம் எவ்வாறு நவீன சிந்தனைகளால் தாக்கப்படுகிறது என்பதை காட்டுகிறது. வணிகம் என்பது பொருளாதார நடைமுறையாக மட்டுமல்லாமல் அது ஒரு கலாச்சாரத் தாக்கம், சிந்தனை மாற்றம் ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது.இந்த நாவல், மரபு மற்றும் நவீனத்துவம் இடையேயான மோதலை கொண்டு வணிகம் எவ்வாறு மனித உறவுகளையும், சமுதாய மரபுகளையும் மற்றியமைக்கிறது என்பதைக் காட்டுகிறது. சமூகத்தில் வணிகம், நவீன கல்வி, அறிவியல் சிந்தனை ஆகியவற்றால் ஏற்படும் கலாச்சாரச் சிக்கல்களை பிரதிபலிக்கிறது. இந்த


http://Creativecommons.org//license/by/4.0/.

கட்டுரையில் வணிகச் சிந்தனையின் சிக்கல்கள், மரபிலிருந்து வணிகம் வேறுபடும் நிலை, வணிக வளர்ச்சியில் ஏற்படும் நன்மைகள் மற்றும் தீமைகள், நவீன நோக்கில் வணிகத்தின் தாக்கம் ஆகியவற்றைக் கொண்டு அமைந்துள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. டாக்டர் கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், ப.எண்- 63.
2. கணியன்பாலன், பழந்தமிழர் வணிகம், ப.எண்-203
3. டாக்டர் கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், ப.எண்- 59.

**துணைநூற் பட்டியல்**

1. S.L.Bhyrappa, Tabbaliyu Neenade Magane, Sahitya Bhandara, 2013.
2. கணியன்பாலன், பழந்தமிழர் வணிகம்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
3. டாக்டர் கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 16. பழந்தமிழர் வாழ்வில் நீர்ச்சடங்குகள்

மா.போகராஜ்
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை
கற்பகம் உயர்கல்விக்கழகம்,கோயம்புத்தூர்-21.
pogaraj.mayalagan@kahedu.edu.in - 9842487336
DOI 10.5281/zenodo.16525154.

## முன்னுரை

பழந்தமிழர்கள் மழை, காடு, மலை, இடி, மின்னல் போன்ற இயற்கை சார்ந்த இயக்கங்களின் மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்தனர். தங்கள் வாழ்வில் நிகழும் இன்ப துன்பங்களுக்கும் இந்த இயற்கை சக்திகளுக்கும் தெடர்பு உள்ளதாக எண்ணி அவற்றை வழிபடத் தொடங்கினர். வழிபாடு வாழ்வியலோடு கலந்து காலப்போக்கில் அன்றாட மனித செயல்பாடுகளிலும் சடங்குகள் மேற்கொள்ளவும் வழிகோலியது. நீரின் முக்கிய ஆதாரமாக உள்ள மழையையும் தமிழர்கள் வழிபாடு செய்துள்ளனர். எந்த ஒரு செயலிலும் நீர் தூவி சடங்குகள் செய்வதை பழந்தமிழர்கள் பின்பற்றி வந்தனர்

## ஆய்வுச் சுருக்கம்

பன்நெடுங்காலமாகவே தமிழர்கள் தங்களின் வழிபாட்டிலும் வாழ்வியல் செயல்பாடுகளிலும் நீரையே முதன்மைப்படுத்தி வந்துள்ளனர். ஆரியர் வருகைக்குப் பின்னரே நெருப்பு நம் சடங்கியல் நிகழ்வுகளில் கலந்ததாக பார்க்கப்படுகின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை தமிழர்கள் நீரைப் பயன்படுத்தியே பல்வேறு சடங்குகளை மேற்கொண்டதை சங்கப்பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. தமிழர்கள் எவ்வாறெல்லாம் தங்களின் சடங்குகளில் நீருக்கு முக்கியத்துவம் அளித்தனர் என்பதை சங்க இலக்கியங்கள் வழி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## திறவுச்சொற்கள்

நீர் சடங்கு, நீர், தமிழர் நம்பிக்கைகள், சடங்குகளில் நீர், புனித நீராட்டு, மழைச்சடங்கு.

## தமிழர்களின் நீராட்டுச் சடங்கு

தமிழர்களின் சடங்கியல் நிகழ்வுகளில் நீர் முதன்மையான இடத்தையும், ஆரியர்களின் சடங்கு நிகழ்வுகளில் நெருப்பு முதன்மைப் படுத்தப்படுவதையும் காணலாம். தமிழர்கள் பிறப்பு முதல் இறப்பு வரை தங்கள் சடங்குகளில் நீரினை முதன்மைப்படுத்தும் வழிகளை மேற்கொண்டு ஒழுகுபவர்களாக விளங்குகின்றனர். ‘ சங்க காலத்தில் திருமணத்திற்குப் பிறகு மணமகளை அலரிப்பூவும் நெல்லும் சேர்ந்த நீரால் குழந்தை பெற்ற வயதில் மூத்த பெண்கள் நால்வர் நீராட்டும் சடங்கினை மேற்கொள்கின்றனர். இச்செய்தியினை,

> **“நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி**
> **பல்இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க**
> **வதுவை நல்மணம் கழிந்த பின்றைக்**
> **கல்லென் சும்மையர், ஞெரேர் எனப்புகுதந்து”[1]**

என்ற அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது. திருமணத்தின் போது மணப்பெண் மற்றும் மணமகனை நீராட்டுதல் என்னும் சடங்கானது இன்றும் தமிழர்களால் நிகழ்த்தப்படுகிறது. மேலும் பெண் குழந்தைகள் பூப்பின் போது பூப்புனித நீராட்டும், மகப்பேற்றிற்குப் பிறகும்


http://Creativecommons.org//license/by/4.0/.

நீராட்டுச் சடங்கு நிகழ்த்தப்படுகிறது. ஆண்களாக இருப்பின் முடிசூட்டும் பொழுது வெற்றி நீராட்டு நடத்தப்பட்டுள்ளது.

> "**பெண்ணின் பூப்பு நீராட்டு, அரசர்களின் வெற்றி நீராட்டு (விஜயாபிஷேகம்), இறந்தார்க்கு ஊரறிய 'நீர்மாலை' எடுத்துவந்து நீராட்டுதல் என்பனவெல்லாம் தமிழர்களின் புதுமணமக்கள் மழையாடுதல் அல்லது கடலாடுதல் என்பது ஒரு சடங்காகவே பின்பற்றப்படுகிறது**".[2]

என்று நீராட்டுதல் சடங்கு பற்றி தொ.பரமசிவம் விளக்குகிறார். இதேபோல் நீர் நிலைகளில் புனித நீராடுதல் என்ற நம்பிக்கை நெடுங்காலமாகவே தமிழர்களிடையே நிலவுகின்றது. ஆறு, குளம், கடல், அருவி போன்ற நீர்நிலைகளில் நீராடினால் தங்கள் பாவங்கள் நீங்கி நலம் உண்டாகும் எனக் கருதினர். இதை,

> "**தீது நீங்க கடல் ஆடியும்**
> **மாசு போக புனல் படிந்தும்**"[3]

என்ற பட்டினப்பாலை பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இதேபோல் விழாக் காலங்களில் புனித நீராடும் வழக்கம் இருந்தமையை '**கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி**' என மதுரைக்காஞ்சி குறிப்பிடுகின்றது.[4] இறந்தவர்களுக்கு நீராட்டும் சடங்கு 'நீர்மாலை எடுத்துவருதல்' என்ற பெயரில் இன்றும் நிகழ்த்தப்படுகிறது. இவ்வாறாக தமிழர்களின் வாழ்வியலில் நீர்ச் சடங்கு முக்கியத்துவம் பெருவதாக அமைகின்றது.

**மழைச்சடங்குகள்**

சங்ககாலத் தமிழ்மக்களின் முக்கியமான உணவு ஆதரமாக வேளாண்மைத் தொழில் விளங்கியது. குறிஞ்சி, முல்லை, மருதம், ஆகிய மூன்று நிலப்பரப்பிலும் வாழ்ந்த மக்கள் வேளாண்மைத் தொழிலைச் சார்ந்தவர்களாக இருந்தனர். மலைகளில் தினையும், கிழங்கும் விளையவும், காடுகளில் உழவுத் தொழிலும், ஆநிரை மேய்த்தல் சிறந்து விளங்கவும், வயல்களில் நெல் விளையவும் நீர், இன்றியமையாத ஒரு காரணமாக அமைந்தது. அனைத்து நில மக்களுக்கும் முக்கியப் பயன்பாடாக நீர் அமைந்துள்ளது. எனவே மழையை மக்கள் பெரிதும் சார்ந்திருந்தனர். பருவத்தே நல்ல மழை பெய்யும் காலம் செழிப்பாகவும், மழை பொய்த்த காலங்கள் வளம் குன்றியும் காணப்படும். உணவை விளைவிப்பதும், தாமே உணவாகவும் இருப்பதனால் மழையை மக்கள் பெரிதும் போற்றினர். பின்னர் மழையை வழிபடவும் தொடங்கினர். மழை பெய்து உலகம் செழிக்க வேண்டுதல்களையும் மேற்கொண்டனர். மழை சரிவரப் பெய்யாத பொழுது அது தெய்வத்தின் கோபத்தால் நிகழ்கிறது என்று எண்ணி மழைக்குச் சடங்குகள் செய்தும் பலியாட்டும் பண்டைய தமிழர்கள் வழிபாடு செய்துள்ளனர். மலைகளில் உறையும் அணங்கு எனும் தெய்வத்தின் கோபத்தால் மழை பொழியவில்லை என்று எண்ணிய கானவர் விலங்கினைப் பலியிட்டு மழைவேண்டி சடங்கு செய்தனர். இதனை,

> "...**கானவன்**
> **அணங்குகொடு நின்றது மலைவான**
> **கொள்க எனக் கடவுள் ஓங்குவரை**
> **பேண்மார் வேட்டு எழுந்து**"[5]

என்னும் நற்றிணைப் பாடலில் மழை பெய்ய வேண்டி தெய்வத்திற்கு பலியிட்டு தெய்வத்தின் கோபம் தணியும் என்று கருதி இவ்வழிபாட்டுச் சடங்கினை மேற்கொண்ட செய்தியை அறியமுடிகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**மலைக்குறவரின் மழைச்சடங்கு**

மலைகளில் வாழும் குறவர் இனமக்கள் தாங்கள் விளைவிக்கும் இடத்தில் மழை பெய்ய வேண்டி உயிர்ப்பலி கொடுத்து சடங்குகள் செய்து மழை பெய்தமையும், மழை அதிகம் பெய்த காலத்து மழை நிற்க வேண்டி சடங்குகள் செய்து வழிபட்டமையும் புறநானூற்றில்,

> **"மலைவான் கொள்க! என் உயர்ப்பலி, தூஉய்,**
> **மாரி ஆன்று, மழை மேக்கு உயர்க எனக்!**
> **கடவுள் பேணிய குறவர் மாக்கள்..."[6]**

என்ற கபிலரின் பாடலின் வழி அறியலாம். நல்ல செயல்களைச் செய்தால் மழை பெய்யுமென்றும், தீய செயல்களைச் செய்தால் மழை பொய்க்குமென்றும் தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர். எனவே பிறருக்கு தீங்கு செய்தால் மழை பொய்த்துவிடும் என அஞ்சினர். மழை சரிவர பெய்யாத காலத்தில் தாம் செய்த தீமையின் விளைவாகவோ அல்லது தெய்வத்தின் சினம் காரணமாகவோ மழை பெய்யவில்லை என நம்பினர்.

> **"மழையின்றித் துயருறும் பாமர மக்களுக்கு மழையை வேண்டி இறைவனிடம் சரண் புகுவதைத் தவிர வேறு வழி தெரியாது. எனவே கடவுளை வேண்டிப் பூசை செய்கின்றார்கள், மழையை வேண்டிக் கடவுளை வணங்கும் வழக்கம் தொன்று தொட்டுத் தமிழத்தில் நிலவி வந்துள்ளது. கடவுளுக்கு இதற்காகப் பலிகொடுப்பது முண்டு".[7]**
>
> **தே.லூர்து ,நாட்டார் வழக்காற்றியல் ப.220**

என்று நாட்டுப்புறவியல் ஆய்வாளர் தே.லூர்துவின் கருத்து இங்கு நோக்கத்தக்கதாக அமைகின்றது. மேலும், விரைந்து வந்து திருமணம் செய்துகொள்வேன் என்று கூறிவிட்டு பொருள் தேடச் செல்லும் தலைமகன் மழைக்காலம் வந்ததும் திரும்பி வருவதாகச் சொன்ன செய்திகள் சங்க அகப்பாடல்கள் பலவற்றில் காணமுடிகின்றது. தலைவன் பிரிவால் வாடும் தலைவி விரைந்து மழை பொழிய வேண்டுதவதாகவும், பலியிட்டு வழிபாடு செய்வதையும் சங்கப்பாடல்களில் மூலம் அறியமுடிகின்றது. நல்ல மழை பொழிய வேண்டுமென அன்று முதல் இன்று வரை பல்வேறு இன மக்கள் கூட்டமாக கூடி வழிபாடு செய்து, மழைக் கடவுளை வேண்டுவதைக் காணமுடிகின்றது. இதன் ஒருபகுதியாக கிராமப்புறங்களில் "**மழைச்சோறு** (அ) **மழைக்கஞ்சி**" எடுத்தல் என்ற சடங்கு நிகழ்த்தப்படுகிறது. இதில் மக்கள் ஊரின் பொதுவிடத்தில் ஒன்று கூடி மழையின்மையால் தாங்கள் படும் துன்பத்தைப் பாடல்களாகப் பாடி வெளிப்படுத்துகின்றனர். மழைபெய்தால் மழைக்கடவுளுக்குச் சில சடங்குகளைச் செய்து வழிபாடு நடத்துகின்றனர். இதனை பின்வரும் சடங்குகளின் வழி அறிய முடிகின்றது.

> **"தமிழ் நாட்டில் மழையை வேண்டிச் செய்யும் சடங்குகளாக மழைக்கஞ்சி காய்ச்சுதல், 'கொடும்பாவி கட்டியிழுத்தல் 'தாரா பிஷேகம்' முதலிய சடங்குகள் நடத்தப்படுகின்றன".[8]**

மேலும் மழையைத் தற்காலத்தில் மாரியம்மன் என்ற பெண் தெய்வ வழிபாட்டுடன் சேர்த்து நாட்டுப்புற மக்கள் வழிபட்டு வருகின்றனர். இந்த மழை தொடர்பான சடங்குகள், வழிபாட்டு முறைகள் யாவும் சங்ககாலம் தொட்டு, இன்றுவரை இடைவிடாது தொடரும் நிகழ்வாகும். மழையின் சிறப்பைப் போற்றும் இளங்கோவடிகள் இயற்கை வாழ்த்தில் மழைக்கு முக்கியத்துவம் அளிப்பது இங்கு நோக்கத்தக்கதாகும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**முடிவுரை**

தமிழர்கள் வாழ்வில் மேற்கொள்ளும் சடங்குகள் அனைத்திலும் நீர் முக்கியத்துவம் பெற்றுள்ளது. அவர்களில் அன்றாட வாழ்வில் நிகழும் பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு போன்ற நிகழ்வுகளில் கூட நீரையே முதன்மையாகக் கொண்டு சடங்குகளை நிகழ்த்தியுள்ளனர். நீரின் ஆதாராமாக உள்ள மழையை கடவுளாகவே வழிபட்டுள்ளனர். இன்றும் வழிபடுகின்றனர். இவ்வாறாக நீர் தமிழர்களின் வாழ்வியலில் முக்கியத்துவம் பெற்றிருப்பதை இவ்ஆய்வின் வழி அறியமுடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. அகநானூறு 86:15-18.
2. தொ.பரமசிவம் நீராட்டும் ஆராட்டும் ப.29.
3. பட்டினப்பாலை 99.
4. மதுரைக்காஞ்சி 427.
5. நற்றிணை 165:1-4.
6. புறநானூறு 143:1-5.
7. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் ப.220.
8. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் ப.221.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 17. பத்துப்பாட்டு கூறும் வணிகர் வாழ்வியல்

ரா. மிருதுளா,
முனைவர் பட்ட ஆய்வாளர்
சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,ஈரோடு
mirudhu13@gmail.com - 9944671778

DOI 10.5281/zenodo.16525265.

**Abstract:**

Those who sold goods in barter or for money by stating the price of the goods were called merchants. There were many categories in the commercial arena such as the slave trade, salt trade, gold trade, six-type trade, sea trade, etc. Those who did such business were called slave traders, gold traders, six-type traders, and manaikars respectively. Slave traders sold various types of slaves (grains). Slave traders also engaged in farming in order to sell the grains.

**Key Words : Paththuppaattu - Sangam Literature - Vanigar - Trade**

## முன்னுரை

மக்களால் செய்யப்பெறும் அறுவகைத் தொழில்களில் உழவும் வாணிகமும் தலைசிறந்தனவாக விளங்குகின்றன. சங்க காலத்தில் இவ்விரண்டு தொழில்களும் செழித்திருந்தன என்பதை,

**இருவகையா னிசைசான்ற**
**சிறுகுடிப் பெருந்தொழுவர்**
**குடிகெழீஇய நானிலவரொடு** [1]

எனும் மதுரைக்காஞ்சியின் பாடல்வரிகள் மூலம் அறியலாம். சங்க இலக்கியமான பத்துப்பாட்டை முதன்மையாகக் கொண்டு சங்ககால வணிகர்களின் வாழ்க்கைமுறை, அறச்சால்பு, பண்டமாற்று முறைகள், அயல்நாட்டு வணிகம் முதலியவற்றை எடுத்துரைப்பதாய் இக்கட்டுரை அமைகிறது.

## குறிச்சொற்கள்

வணிகம் - சால்பு - உள்நாட்டு வணிகம் - அயல்நாட்டு வணிகம் - பண்டமாற்று முறை

## வணிகமும் அகராதி தரும் பொருளும்

மதுரைத் தமிழ் பேரகராதி, அகரமுதலி (தமிழ் - தமிழ்) ஆகிய இருநூல்களின் வாயிலாகப் பெறப்பட்ட வணிகம் மற்றும் வணிகர் தொடர்பான சொற்கள் மற்றும் அதன் பொருள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- வணிகம் - செட்டு, வியாபாரம், பொருள்களை வாங்கி விற்றல்.
- வணிகன் - துலாராசி, பொருள்களை வாங்கி விற்பவன், வைசியன், செட்டி, வியாபாரி.
- வாணிகம் - இலாபம், வியாபாரம், ஊதியம்.
- வாணிகன் - செட்டி, துலாக்கோல், துலாராசி.
- வாணிபம் - செட்டு, வைசியர், ஆறு தொழில்களில் ஒன்று.
- வாணிபர் - எண்ணெய் விற்போர், ஒரு சாதியர், செட்டிகள், வியாபாரிகள்.



http://Creativecommons.org//license/by/4.0/.

வாணிஜன், வர்த்தகர், வியாபாரி, வாணியம், வாணிஜிகன், வாணிச்சியம்[2] முதலிய சொற்கள் வணிகம் மற்றும் வணிகர்களைக் குறிக்கும் சொற்களாக மதுரைத் தமிழ் பேரகராதியில் இடம்பெற்றுள்ளது.

**வணிகப்பிரிவுகள்**

பொருள்களின் விலையைக் கூறி பண்டமாற்று முறையிலோ பணத்திற்காகவோ பொருள்களை விற்பவர் வணிகர் எனப்பட்டனர். கூலவாணிகம், உப்பு வாணிகம், பொன் வாணிகம், அறுவகை வாணிகம், கடல் வாணிகம் முதலிய பல பிரிவுகள் வணிகத் தளத்தில் இருந்துள்ளன. அவ்வணிகம் செய்வோர் முறையே கூலவாணிகர், உமணர், பொன் வணிகர், அறுவகை வணிகர், மாநாய்கர் என்று அழைக்கப்பட்டனர். கூல வணிகர் எண்வகையான கூலங்களை (தானியங்களை) விற்றனர். கூலவாணிகர், தானியங்களை விற்பதன்பொருட்டு உழவுத் தொழிலையும் மேற்கொண்டனர்.

**வணிகர்களின் பெருவாழ்வு**

சங்ககாலத்தில் வணிகர்கள் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தனர். அரசர்கள் வணிகர்களுக்கெனத் தனிப் பட்டங்களும் உரிமைகளும் அளித்து சிறப்பித்தனர். வணிகர்கள் வாழும் தெருக்களும் வணிகம் செய்யும் கடைவீதிகளும் தனித்தன்மையுடன் விளங்கின. வணிகர்கள் பெரிய மனைகளில் செல்வ செழிப்போடு வாழ்ந்தனர். வண்ணமும் சுண்ணமும் சந்தனமும் பூவும் புகைப்பொருட்கள் விற்போரும், ஆடைகளை விற்கும் நெசவு தொழிலாளர்களும் வாழும் தனித்தனி தெருக்களும் இருந்தன. அகிலும் ஆரமும் முத்தும் மணியும் பொன்னும் அளவில்லாது வணிகம் நடைபெறும் இடங்களில் நிரம்பிக் கிடந்தன. வணிக குல மகளிர் மெல்லிய துகிலையும் , பசிய வடங்கள் கோத்த மணிகளையும், பிற அணிகலன்களையும், பொன்னாலான சிலம்பையும் அணிந்திருந்தனர் என்றும் பொன்னால் செய்த கழற்சிக் காய் கொண்டு மணலில் விளையாடினர் என்னும் செய்தியும் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வணிகர் சால்பு**

பண்டைக் காலத்தில் வணிகம் உலக நன்மைக்காக நடந்தது. பொருள் ஈட்டுவதையே நோக்கமாகக் கொள்ளாமல் பல இடங்களில் விளையும் பண்டங்களை ஓரிடத்தில் குவித்து, அவற்றை அப்பொருள்கள் கிடைக்காத வேறு இடங்களுக்கு அனுப்பி அனைவரும் நலமாக வாழவே வணிகம் செய்தனர். இத்தகு வணிகர்களின் பண்பை

**நெடுநுகத்துப் பகல்போல**
**நடுவுகின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய்மொழிந்து**
**தமவும் பிறவு மொப்பநாடிக்**
**கொள்வதுவும் மிகை கொளாது**
**கொடுப்பதும் குறைப்படாது**
**பல் பண்டம் பகர்ந்து வீசும்** [3]

என பட்டினப்பாலை எடுத்துரைக்கிறது. இத்தகு குணமும் பண்பும் கொண்ட சிறந்த வணிகர்க்கு மன்னன் எட்டி என்னும் பட்டம் வழங்கியதை,

**வணிக மரபின் வருபொரு ளீட்டி**
**நீணிதிச் செல்வனாய் நீணில வேந்தனால்**
**எட்டிப் பூப்பெற்று இருமுப்பதின் யாண்டு**
**ஒட்டிய செல்வத்து உயர்ந்தோ னாயினன்**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்னும் வரிகள் மூலம் அறியலாம். கடல் வணிகத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கு நாயகன் என்ற பட்டம் கொடுத்துள்ளனர்.

**வணிகச் சாத்து**

சாத்து என்ற சொல்லுக்குத் திரள் அல்லது கூட்டம் என்று பொருள். வணிகப் பொருள்களைப் பாதுகாப்பதற்காக வணிகர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வர். அக்குழு 'சாத்து' எனப்பட்டது. பெரும் சாத்துகளுக்குத் தலைவனை மாசாத்துவான் என்று அழைத்தனர். உப்பு கொண்டு சென்றவர்களை உமணச் சாத்துக்கள் என்று அழைத்தனர். கழுதைகளும் எருதுகளும் பொதி சுமப்பதற்காகப் பயன்பட்டன. பெரும்பாணாற்றுப்படை கழுதைச் சாத்தைப் பற்றி குறிப்பிடுகிறது. கழுதையின் மேலேறி சென்ற மிளகுப்பொதிகள் பலாப்பழம் போல் தோன்றுகிறது என்பதை,

**தடவுநிலைப் பல்லின் முழு முதல் கொண்ட**
**சிறுசுளைப் பெரும்பழம் கடுப்ப மறியல்**
**புணர்பொறை தாங்கிய வடுவால் நோன்பு புறத்து**
**அனர்ச்செவி கழுதைச் சாத்தோடு வழங்கும்** [4]

என்னும் பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

இத்தகைய சாத்துக்கள் சென்றுவரும் பெருவழியில் அரசர்களது ஆணைக்கிணங்க வில்வீரர்கள் காவல் புரிந்து வந்தனர் என்ற செய்தியையும் ஆங்காங்கு சுங்கச்சாவடிகள் இருந்தன என்னும் செய்தியையும் வணிகப் பொருள்களுக்கு உல்கு (வரி) வசூலிக்கப்பட்ட செய்தியையும் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

**உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வணிகம்**

சங்ககாலத்தில் உள்நாட்டு வணிகம் மட்டுமின்றி அயல்நாட்டு வணிகமும் சிறப்பாக நடைபெற்றது. உள்நாட்டு வணிகம் பெரும்பான்மை பண்டமாற்று முறையாகவும் அயல் நாட்டு வணிகம் தங்கத்தை அடிப்படையாகக் கொண்டும் நடைபெற்றது. நானில மக்களும் தத்தம் உற்பத்தி பொருட்களை மாற்றிக் கொண்டனர். மலையில் கிடைத்த பொருள்கள், நிலத்தில் கிடைத்த பொருட்கள், நீரில் எடுத்த பொருட்கள், பல்வேறு திருமணிகள், பொன், துணி முதலிய பொருட்களை வணிகர்கள் விற்றனர் என்று மதுரைக் காஞ்சி காட்டுகிறது.

இதைப்போலவே காவேரிப்பூம்பட்டினத்தில் கடல் வழியாக வந்த வெளிநாட்டு குதிரைகளும் நிலத்தின் வழிவந்த மிளகு மூட்டைகளும் அகிலும் முத்தும் பவளமும் கங்கை, காவிரி விளைபொருட்களும் ஈழத்தின் உணவு பொருட்களும் கடாரத்திலிருந்து வந்த பொருட்களும் அங்காடியில் நிறைந்து இருந்தன எனப் பட்டினப்பாலை எடுத்துக்காட்டுகிறது.

ஒரு நாட்டின் துறைமுகங்களை வைத்தே அந்நாட்டின் அயல்நாட்டு வணிகச் சிறப்பை அறிந்து கொள்ள முடியும். அவ்வகையில் சங்க காலத்தில் இருந்த துறைமுகங்கள் அயல்நாட்டு வணிகத்திற்கு சிறந்த சான்றுகளாக அமைகின்றன. சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினமும் சேர நாட்டில் முசிறியும் பாண்டிய நாட்டில் கொற்கையும் சிறந்த துறைமுகப் பட்டினங்களாக விளங்கின. சிறுபாணாற்றுப்படையும் மதுரைக்காஞ்சியும் கொற்கை துறைமுகத்தில் நடந்த முத்து வணிகத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

**தொகுப்புரை**

- சங்க காலத்து வணிகர்கள், கலம் செலுத்தி வாணிபம் செய்து வளமோடு வாழ்ந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

- **வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**

  **பிறவுந் தம்போற் செயின்.** [5]

என்ற பொய்யாமொழியின் கூற்றுப்படி வணிகர் அறநெறி போற்றி மேம்பட்ட வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர்.

- சங்ககாலத்தில் பல பொருட்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்துள்ளனர். உள்நாட்டு வணிகம் மட்டுமல்லாமல் அயல்நாட்டு வணிகத்திலும் சிறந்து விளங்கியுள்ளனர்.
- உணவுப் பொருட்களில் மிகவும் இன்றியமையாததாகிய உப்பை அதிகமாக வணிகம் செய்துள்ளனர். அயல்நாட்டு வணிகத்தில் பிற பொருள்களை விட அதிக அளவில் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
- வணிகம் சிறப்பாக நடைபெற நல்ல பாதைகளையும் பாதுகாப்பாக நடைபெற காவல் வீரர்களையும் அமைத்திருந்தனர்.
- வணிகர்கள் பல பிரிவுகளாக இருந்துள்ளனர். பெரிய மனைகளில் செல்வ செழிப்போடு வளமான வாழ்வு வாழ்ந்துள்ளனர்.
- வணிகர்கள் தற்காப்பிற்காக படைக்கலங்களை ஏந்திச் செல்லும் உரிமையும், தலையில் பூ, கழுத்தில் மாலை அணியும் உரிமையும், நடுநிலை பிறழாத உள்ளத்திண்மையும், குறையாது கொடுத்து அளவாக பெறும் நேர்மை குணம் உடையவராகவும் வணிகர்கள் இருந்துள்ளனர் என்ற செய்திகள் சங்க இலக்கியச் சான்றுகளைக் கொண்டு இக்கட்டுரையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

**<u>அடிகுறிப்புகள்</u>**

1. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், மதுரைக்காஞ்சி (121 - 123), பக். 295, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்,ஏழாம் பதிப்பு,1974.
2. மதுரைத் தமிழ் பேரகராதி( பாகம் 2 ), இரண்டாம் பதிப்பு, பக். 551, 1956.
3. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், பட்டினப்பாலை (206- 211), பக்.524-525, 1889.
4. மேலது., பெரும்பாணாற்றுப்படை (77 - 80), பக்.184.
5. புலியூர் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, பக்.62 (அதிகாரம் 11-120).

**துணை நின்ற நூல்கள்**

1. இராசமாணிக்கனார்.மா, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ஔவை அச்சுக்கூடம், 1970.
2. மதுரைத் தமிழ் பேரகராதி, பாகம் 2, இரண்டாம் பதிப்பு, 1956 .
3. பிள்ளை. கே. கே., தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2020.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 18. முல்லைக்கலியில் மகளிரின் வணிகச் செய்திகள்

**வி. மோனிகா யாழினி,**
**முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி (தன்னாட்சி), பசுமலை, மதுரை - 625 004.**
**அலைபேசி எண் : 8870720514. - Mail Id : monicayazhini89@gmail.com**
**DOI 10.5281/zenodo.16525386.**

**Abstract**

The books Ettuthokaya and Pattupattu occupy an essential place in Sangam literature. Among these, Ettuthokaya books are unique in terms of nature, size, content, and style. Kalithokaya, one of these Ettuthokaya books, is different from other books in terms of composition, content, style, rhetoric, the speciality of the Pandya king, the culture of the people, the way of life, the style of drama, and the way of conversation. In the inner book Kalithokaya, people started doing business based on land to fulfill their needs. In that regard, the basis of this study is to examine what is known about the business style of Mullainila women.

**Key Words :** Ettuthogai - Kalithogai - Merchant - Sangam Literature

## முன்னுரை

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. இவற்றில் எட்டுத்தொகை நூல்கள் தன்மையாலும், அளவாலும், பொருளாலும், பா வகையாலும் தனித்துவம் பெறுகின்றன. இத்தகைய எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான கலித்தொகை பிற நூல்களைக் காட்டிலும் தொகுப்பு முறை, பாடுபொருள், பாவகை, சொல்லாட்சி, பாண்டிய மன்னரின் சிறப்பு, மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை, நாடகப் பாங்கு, உரையாடல் போக்கு போன்றவற்றால் வேறுபட்டு அமைகின்றது. அக நூலான கலித்தொகையில் மக்கள் தங்கள் தேவைகளைப் புர்த்தி செய்ய நிலங்களின் அடிப்படையில் தொழில்கள் செய்ய ஆரம்பித்தார்கள். அந்த வகையில் முல்லைநில பெண்களின் தொழில் முறைப் பற்றி யாது என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் அடிதளமாக அமைகிறது.

"கற்றறிந்தார் ஏத்தும் கலி" எனப் போற்றப்படும் நூல் கலித்தொகை ஆகும். பாவகையால் பெயர் பெற்றுத் துள்ளல் ஓசைமிகுந்துவர இயற்றப்பட்டது. கலித்தொகை பழந்தமிழகத்தின் ஐந்நிலமக்களையும், அவர்கள் மேற்கொண்ட பல்வேறுத் தொழில்களையும் எடுத்துரைக்கின்றது. சங்க காலத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கு மதிப்பும், சுதந்திரமும் இருந்தது. பொருள் தேடல் ஆடவரின் கடமையாயினும் நடைமுறை வாழ்வில் மகளிரும் நிலச்சூழலுக்குக் கேற்பத் தொழிலினைச் செய்து வாழ்வை வளம் பெறச் செய்ததைக் கலித்தொகை வெளிப்படுத்துகிறது. மகளிர் தினைப்புலத்தினை காவல் காத்தல், மோர் விற்று அதற்கு மாற்றாக நெல்லைப் பெற்று பண்டமாற்று முறைக்கு அடிக்கோலிட்டுள்ளனர். மேலும் பல்வேறு சிறுத் தொழில்களையும் செய்துள்ளனர். மகளிர் புரிந்த தொழில்கள் மூலம் தங்களின் ஆளுமையையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

## முல்லை நில மகளிர் தொழில்கள்

முல்லைநில மகளிரின் முதன்மைத் தொழில் ஆநிரைகள் மூலம் பெறும் பாலிருந்து பால் பொருட்களை உண்டாக்குதல், அவற்றை விற்றல், ஆநிரைகளை மேய்க்கச் சென்றிருக்கும் தந்தை, தமையனுக்கு உணவு கொண்டு செல்லுதல் போன்றவை என்பதனை


http://Creativecommons.org//license/by/4.0/.

“புனத்துளான் என்னைக்குப் புகா உய்த்துக் கொடுப்பதோ
இனத்துளான் எந்தைக்குக் கலத்தொடு செல்வதோ
தினைக் காலுள் யாய்விட்ட கன்றுமேய்க்கிற்பதோ” (கலி. 108 31-33)

என வரும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. தந்தைக்குச் சோறு கொண்டு செல்வதும், ஆநிரைகளை மேய்க்கும் தமயனுக்கு உண்கலன்களை எடுத்துச் செல்வதும் தினை அரிந்தப் புனத்தில் அன்னை விட்டக் கன்றுகளை மேய்ப்பதும் தலைவியின் பணியாக இருந்ததை அறிய முடிகிறது.

**மோர் விற்றல்**

முல்லைநில மக்கள் ஆநிரைகளை மேய்தலையும், வரகு, தினை விதைக்கும் தொழிலையும் மேற்கொண்டு வாழ்ந்தார்கள். ஆநிரைகளை மேய்த்து அதன் மூலம் கிடைக்கும் பாலையும் அப்பாலினால் உண்டாக்கியப் பொருட்களையும் விற்று வாழ்ந்தனர். ஆய்ச்சியர் மோர், நெய் போன்ற பொருட்களை விலைக்கூறி விற்றதனை

**“அகலாங்கண் அளை மாறி அலமந்து பெயருங்கால்**
**அஃது அவலம் அன்று மன**
**ஆயர் எமரானால் ஆயத்தியேம் யாம்”** (**கலி.**108 5 - 7)

என வரும் கலித்தொகைப் பாடல் விளக்குகிறது. ஊர்த்தெருகளில் திரிந்து மோர் விற்று இல்லம் திரும்பவாய் என்ற தலைவனிடம் யான் மோர் விற்றுத் திரிவது எங்கள் குலத்திற்குத் தீதன்று. ஆதலால் ஆய்ச்சியர் மோர் விற்பது எங்கள் குலத்தொழில் என்று பதிலுரைக்கிறாள். இவர்களின் உரையாடலிலிருந்து முல்லை நிலமகளிர் மோர் விற்கும் தொழிலை முதன்மைத் தொழிலாகச் செய்து வாழ்க்கை நடத்தியது தெளிவாகிறது.

**“போர்ஆரா ஏற்றின் பொருநாகு இளம் பாண்டில்**
**தேர் ஊர செம்மாந்தது போல் மதைஇனள்**
**பேர் ஊரும் சிற்றூரும் கெளவை எடுப்பவள் போல்**
**மோரொடு வந்தாள் தகை கண்டை”** (**கலி.**109. 4 -7)

வண்டில் புட்டப்பட்ட இளைய எருது செருக்கால் செம்மாந்து நிற்பதுப் போல ஆயமகள் ஒருத்தி பேரூர் மற்றும் சிற்றூரில் சென்று ஆரவாரத்துடன் மோர்விற்கும் தொழில் புரிந்ததததை முல்லைக்கலிப் பாடல் விளக்குகிறது. முல்லைநில மகளிரை எருதுக்கு இணையாகக் கூறுவதன் மூலம் அந்நிலமகளிரின் வீரமும், யாரையும் கண்டு அஞ்சாத்தன்மையும் வெளிப்படுகிறது.

**“பல்லூழ் தயிர்கடைத் தாய புள்ளியே”** (**கலி.**106)

பல்லூழ் என்பதனால் பலமுறை தயிர்கடைந்ததைப் பற்றி கூறுகிறது. முல்லைநில மகளிர் அதிகாலையில் எழுந்தவுடன்தயிரைக் கடைவர். அத்தயிரை மோராகவும், வெண்ணெயாகவும் மாற்றுவதால் அந்நிலமகளிரின் தொழில் திறம் வெளிப்படுகிறது. அவர்கள் தயாரித்த மோரையும், வெண்ணெயையும் வீதி தோறும் சென்று விற்று பொருள் ஈட்டியுள்ளனர்.

**கயிறு கொண்டு தயிர் கடைதல்**

சங்க காலப் பெண்கள் மத்தியில் கயிறு சுற்றித் தயிர் கடைந்தனர் என்பதை முல்லைக்கலிப் பாடலின் மூலம் அறிய முடிகிறது. நல்ல காய்ச்சிய பாலில் பொறையிட்டு


http://Creativecommons.org//license/by/4.0/.

வைத்திருந்து அதனைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது வழக்கம். அவ்வாறு கடையும் பொழுது கயிறு கொண்டு தயிர் கடைந்தனர் என்பதை அறிய முடிகிறது.

**"மத்தம் பிணித்த கயிறுபோல் நின்நலம்**
**சுற்றிச் சுழலும்என் நெஞ்சு" (கலி.**110. 10 -11)

மத்தைசுற்றிய கயிறு போலத் தலைவியின் நலத்தைச் சூழ்ந்து திரிகின்றது என் நெஞ்சு என்று தலைவன் கூறுவதைக் காணமுடிகிறது.

**பெட்டி - முடைதல்**

ஆடைகளைத் தூய்மை சென்ற புலைத்தியர் வறுமையைப் போக்கிக்கொள்ளத் துணைத்தொழிலாகப் பனையோலையால் பெட்டி முடையும் தொழிலினையும் செய்துள்ளனர்.

**"மாதர்ப் புலைத்தி விலையாகச் செய்தோர்**
**போழில் புனைந்த வரிப்புட்டில்" (கலி.** 117)

பனையோலையினைப் பெட்டி முடைவதற்கு ஏற்றவாறு தயார்ப்படுத்தி அதில் பெட்டி முடைந்து விற்கும் தொழிலினையும் புலைத்தியர் செய்து வருவாய் ஈட்டி மனைக்கு விளக்காகத் திகழ்ந்துள்ளனர். என்பதனைக் கலித்தொகைப் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

**"இவள் தான் திருத்தாச் சுமட்டினள் ஏனைத் தோள்வீசி**
**வரிக்கூழ வட்டி தழீஇ" (கலி.**109)

தலையில் மோர்ப் பானையையும் கையில் நெல் நிறைந்த வட்டியையும் தழுவிக் கொண்டடு ஆயர்குலப்பெண் வீதியில் மோர் விற்றுக்கொண்டுச் செல்கிறாள். இக்கலித்தொகைப் பாடல் மூலம் முல்லைநில ஆயர்மகள் மோருக்கு மரதநிலத்தில் விளைந்த நெல்லை மாற்றாகப் பெற்றுக் கொண்ட பண்டமாற்று முறை வெளிப்படுகிறது.

**முடிவுரை**

சங்க காலப் பெண்கள் ஆண்களோடு இணைந்து தொழில் செய்து குடும்பப் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளனர். முல்லைநில மகளிர் மோர் விறறுப் பொருளாதாரத்தை மேம்படுத்தியுள்ளனர். மோர் விற்பது எம் குலத்தொழில் எனத் தலைவி கூறுவதில் மகளிரின் துணிச்சல் வெளிப்படுகிறது. செல்வச் செழிப்பில் இருந்த மகளிர் இல்லறப்பணியை மட்டும் செய்து வந்துள்ளனர். முல்லைக்கலியில் மகளிர் அவர்களின் அடிப்படைத் தேவைகளின் நிறைவிற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் முக்கியப் பங்காற்றினர் என்பதை இதன் வழி அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. சரவணமுத்து.இரா., கலித்தொகை எனும் காதல் தொகை, (2018), சாரதா பதிப்பகம், சென்னை.
2. இராமையன்.த., கலித்தொகையில் நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும், (2016), நெய்தல் பதிப்பகம், சென்னை.
3. சண்முகம் பிள்ளை. மு., சங்கத் தமிழர் வாழ்வியல், (1997), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. பகுஷியா பேகம்.நா., கலித்தொகையில் கலைகளும் நுட்பங்களும் ,(2022), சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்.


http://Creativecommons.org//license/by/4.0/.

# 19. திருக்குறளில் வணிகவியல் சிந்தனைகள்

முனைவர் ப. விக்னேஸ்வரி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,கோவை 641105
vigneshwari.cbe@gmail.com - 9976576871

DOI 10.5281/zenodo.16525487.

**முன்னுரை:**

சமுதாய சீர்திருத்தச் சிந்தனைகளை தன் நோக்கங்களாகக் கொண்டு சமுதாயத்தைச் சீர்திருத்துவது, மக்களை கல்வியிலும் பிற ஒழுக்கங்களிலும், அறச் செயல்களிலும் மேம்படுத்துவது, சமதர்ம சமுதாயம் மலரச் செய்வது, ஆட்சிச் செலுத்தும் அரசனுக்குத் தேவையான பண்பு நலன்களைக் குறிப்பிடுவது போன்ற குறிக்கோள்களைக் கொண்டு திருக்குறளை யார்த்துள்ளார். திருக்குறள் மக்கள் சமுதாயத்திற்குரிய அறநெறியை உணர்த்துகின்ற அறநூலாகவும் ,தவம் செய்யும் துறவிகளுக்கு அறநெறி உணர்த்துகின்ற ஞான நூலாகவும், அரசனுக்கு அரசியல் நெறி, செங்கோன்மை பற்றி விளக்கிக் கூறுகின்ற அரசியல் நூலாகவும், பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று பொருளில் இன்றியமையாமைப் புலப்படுத்துகின்ற பொருளியல் நூலாகவும், அமைந்திருப்பதை பெருமையோடு குறிப்பிடுவதற்குரிய பெயர் பெற்றவர்கள் தமிழர்கள். “திருக்குறளில் **வணிக**வியல் சிந்தனைகள்” குறித்தச் செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**வணிகம் ஓர் அறிமுகம்:**

பொருளாதார நடவடிக்கைகளை வணிகம் என்பர். மனிதனுடைய தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவேற்ற வணிகம் தேவைப்படுகிறது. உற்பத்தி அல்லது விற்பனை பொருள் மீதான லாபநோக்கு, நுகர்வு வாழ்க்கை என இவை இரண்டு வணிகத்தின் முதன்மை காரணங்களாகும். பொருள் வாழ்வின் இன்றியமையாத தேவையாக இருக்கிறது. பொருள் இல்லாமல் வாழ்வில் இயக்கம் சீராக இருப்பதில்லை. பொருளின் முக்கியத்துவத்தை வள்ளுவர்,

> **“அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு**
> **இவ்வுலகம் இலாகி அங்கு”**
> **“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புவா**
> **செய்தொழில் வேற்றுமை யான்”**

என்னும் குறள் வழி அறியலாம் என்கிறார். வணிகத்தின் சிறப்பு பொருளீட்ட உறுதியாக இருக்கும். செய்யும் தொழில்கள் எதுவாயினும் அதை வேற்றுமைப்படுத்த வேண்டியதில்லை. எல்லா உயிர்களின் பிறப்புக்கும், வாழ்வதற்குரிய பொருள் தேவை. பொருளீட்டுதல் உலகப் பொதுவான ஒன்று. அவரவர் அவரவர்க்கு தெரிந்த தொழில்கள் மூலம் தம் வாழ்வுக்குத் தேவையான பொருளை உருவாக்க வேண்டும் என்னும் சமத்துவச் சிந்தனை கொண்டதாக வள்ளுவரின் பார்வை பரந்து விரிந்துள்ளது.

**தலைமைப் பண்பு:**

ஒரு தலைவன் தன் குழுவினரை வழிநடத்தவும், ஊக்குவிக்கவும், அவர்களைப் புரிந்துகொள்ளவும் வேண்டும். சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்கும் திறன் ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டும்.ஊழியர்களை அரவணைத்துச் செல்வதும், அவர்களின்


http://Creativecommons.org//license/by/4.0/.

திறமைகளை ஊக்குவிப்பதும் அவசியம். தலைவன் தன் குழுவினருடன் வெளிப்படையாகவும், நேர்மையாகவும் தொடர்புகொள்ள வேண்டும் என்பதை.

**வணிக மேலாண்மை**

எச்செயல் செய்வதற்கு முன்பு யோசித்து முடிவெடுப்பதும், தெளிவடைந்த பின்பு அதற்குத் தேவையான பொருள்களை உடன் வைத்துக் கொள்வதும், இடம், கருவி, காலம் முதலானவற்றை யோத்து தெரிந்து கொள்வதும் வணிகத்தின் இன்றியமையாது என்பதை,

**"பொருள் கருவி காலம் வினையிட ஐந்தும்**
**இருள்தர எண்ணி செயல"**

என்கிறார். வணிகத்தை தொடங்கும் முன் வினை பொருள், காலம், கருவி, இடம் ஆகியவற்றை ஆராய வேண்டும் என்**பது** புலனாகிறது.

**வணிகவியல் மேலாண்மை நடவடிக்கைகள்:**

**வினைத் திட்பம்**

"**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு** "(467)

என்னும் குறள் வழி எச் செயலாயினும், எத் தொழிலாயினும், எவ் வணிகமாயினும் கூர்ந்து ஆராய வேண்டும். அவ் ஆய்வின் பின்னரே அதைத் தொடங்கத் துணிய வேண்டும் என்**பது** அறியலாகிறது.

**தெரிந்து செயல் வகை**

**"தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல்" [0462]**

என்னும் குறள் வழி பொருந்தும் வணிகத்தை மட்டுமே தேர்ந்து எடுக்க வேண்டும். தேர்ந்து எடுத்த பின்னரே அவ் வணிகத்தைச் செய்ய வேண்டும் என்பது புலனாகிறது.

**வணிக முதலீடு**

எவ் வணிகமானாலும் முதலீட்டைப் போட வேண்டும். முதலீடு இல்லாத வணிகத்தால் ஊதியமும், வருவாயும் இல்லை என்பதை,

**"முதலிலார்க ஊதிய மில்லை மதலையாஞ்**
**சார்பிலார்க் கில்லை நிலை" [0449]**

இக் குறள் வழி முதலீட்டின் இன்றியமையாமையை முப்பால் செப்புகிறது.

**பாதுகாப்பான முதலீடு**

தரையில் நடைபெறும் யானைப் போரைப் பார்க்க வேண்டு மென்றால், அருகில் இருக்கும் குன்றின்மேல் ஏறி நின்றுகொண்டு பார்க்க வேண்டும். அதுதான் பார்ப்போரின் உயிருக்குப் பாதுகாப்பு. அதைப் போலவே, தாம் போடும் முதலீட்டிற்கும் பாதுகாப்பு வேண்டுமென்றால், தேர்ந்தெடுத்த வணிகம் செய்ய முனைவோர் தம் கையில் உள்ள பொருளைப் போட்டு வணிகத்தைத் தொடங்க வேண்டும்.

**"குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று**
**உண்டாகச் செய்வான் வினை" [0758]**

குறள் வழி **பாதுகாப்பான** முதலீட்டின் இன்றியமையாமையை அறியலாகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**முடிவுரை:**

திருக்குறளில் வணிகவியல் சிந்தனைகள் என்பது வணிகம் தொடர்பான திருவள்ளுவரின் கருத்துக்களை குறிக்கிறது. திருக்குறளில் பொருளாதாரம், மேலாண்மை, தொழில் முனைவு மற்றும் நீதியான வணிகம் பற்றிய பல கருத்துக்கள் உள்ளன. தலைவன் தன் குழுவினருடன் வெளிப்படையாகவும், நேர்மையாகவும் தொடர்புகொள்ள வேண்டும். வணிகத்தில் கடினமாக உழைப்பதன் முக்கியத்துவத்தை விளக்குகிறது. சுருக்கமாக, திருக்குறள் வணிகம் மற்றும் மேலாண்மை ஆகியவற்றில் ஒருவரது நடத்தையை நெறிப்படுத்தவும், வெற்றிகரமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவும் உதவும் கருத்துக்களை அறியமுடிகிறது. வணிகத்தில் அறிவைப் பயன்படுத்தி முடிவுகளை எடுப்பதன் முக்கியத்துவத்தை விளக்குகிறது.

**துணைநூற்பட்டியல்:**

1. ராஜு செட்டியார் எஸ் ,திருக்குறள் ஆராய்ச்சி கட்டுரைகள் ,கம்பன் பதிப்பகம், சென்னை 1982
2. சஞ்சீவி நா ,திருக்குறள் அமைப்பும் முறையும்,சென்னை பல்கலைக்கழகம் 1972
3. முருகன் ப.,வள்ளுவம் பண்ணோக்குப் பார்வை ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை 1991
4. முருகன். ப ,குறள்வழி சிந்தனைகள் ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,சென்னை 1991
5. திருக்குறள் எளிய உரை,தமிழ்ச்செம்மல் புலவர் சி,இராசியண்ணன்.மீனா புத்தக நிலையம் ,சென்னை
6. நன்னூல் ,புலவர் கோ வில்வபதி,பழனியப்பா பிரதர்ஸ்,2016


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 20. தமிழர் பண்பாடும் வணிக துறைமுகங்களும்

**ஆ. .பிரபாகரன்**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**நேரு தொழில்நுட்பக் கல்லூரி, காளியபுரம், கோயம்புத்தூர்**
*nitprabakaran.a@nehrucolleges.com - 9159706380*
*DOI 10.5281/zenodo.16525626.*

**Abstract:**

Since the Sangam period, Tamils have achieved high civilization and economic development. The ancient trade system, location of ports, trade goods, and currency exchanges have been studied through Sangam literature (Perumbanatrupadai, Pattinapalai, Akananuru, Purananuru etc.) and foreign documents (references by Periplus, Pliny, Ptolemy). The major ports of Tamil Nadu such as Musiri, Thondi, Korkai, and Marungurpattinam have been discovered by modern excavations. In this, the way in which merchants traveled by sea and traded with foreign countries, the use of currencies, and information related to export-import goods are confirmed. It is noteworthy that the Tamil trade system improved from a barter system to a currency-based system. This oil reveals the social, economic and cultural picture of ancient Tamil trade development and highlights the important place Tamil Nadu has played in the history of world trade. Furthermore, it establishes that trade is not only an activity rooted in Tamil life but also in culture.

**Keywords:** Tamil trade, Sangam literature, ports, coins, world trade, ancient Tamil Nadu.

## முன்னுரை:

தமிழர்கள் சங்ககாலத்திலேயே உயரிய வளர்ச்சியடைந்த சமுதாயமாக விளங்கினர்கள் அவர்கள் பண்பாடு .,கலை, இலக்கியம், இசை, நடனம், கல்வி, சமய ஆன்மிகம் மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவற்றில் உயர்ந்த நிலை பெற்றுருந்தனர். இதற்கு சமமாக வணிகத்திலும் முக்கிய பங்கு வகித்தனர்கடல் வழித்தொடர்புகள் மற்றும் . .நிலவழித்தொழில்கள் மூலம் தமிழர் வளம் பெறத் தொடங்கினர் சங்க இலக்கியங்கள் குறிப்பாக **பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, அகநானுறு, புறநானுறு** போன்றவை, தமிழர் வணிகச் சூழலை விவரிக்கின்றனவணிகம் தமிழர்களின் . பண்பாட்டில் வேரூன்றிய செயலாக விளங்கியது இதனால், தமிழர் பண்பாடும் வணிகமும் ஒருவரையொருவர் தொடர்ந்த ஊக்குவிப்பில் வளர்ந்தன .இதன் வாயிலாக தமிழர்கள் வணிகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் பண்டைய காலத் தொடர்புகள் மற்றும் பண்பாட்டின் பரிமாற்றங்களை ஆராய முடிகிறதுவணிகம் தமிழர் வாழ்வியலை மாற்றியமைத்த . சமூகபொருளாதாரக் காரணிகளாக விளங்குகிறது. அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதில் தன்நிறைவு கண்ட ஒரு சமூகத்தின் அடுத்த நிலை வளர்ச்சியானது வணிகத்தை நோக்கி நகர்ந்ததாக இருக்கலாம் என்பதற்கு ஏற்ப தமிழர் வரலாறு பல்வேறு வணிகச் சிறப்புகளைத் தாங்கி நிற்கின்றது. பொருட்களை மற்றவரோடு பகிர்ந்து கொள்ளுதல், கொடுத்து வாங்குதல் என்ற பண்புநலன்களின் அடிப்படையில் தோற்றம் கொண்ட வாணிப இயல்பைத் தமிழ் இலக்கியங்கள் போற்றி நிற்கின்றன .

## வணிகர்களின் பண்புகள்;

தமிழர் சமூகத்தில் வணிகர்கள் சிறப்பான இடத்தைப் பெற்றவர்கள்அவர்கள் . வர்த்தகத்தையே வாழ்வியலாகக் கொண்டு நெறிமுறைகளையும் நீதியத்தையும் கடைப்பிடித்தனர்பொருள் ஈட்டுவது என்ற குறிக்கோள் மட்டுமின்றி ., உலக நன்மைக்காகவே


http://Creativecommons.org//license/by/4.0/.

வணிகம் நடைபெற்றதாக முன்னோர் கருதினர்பல இடங்களி .ல் விளையும் பொருட்களை ஓரிடத்தில் சேர்த்து அவை கிடைக்காத வேறிடங்களுக்கு அனுப்பி யாவரும் வறுமையற்றிருக்க வணிகர் வழி தேடினர். அத்தகைய வணிகரின் பண்பைப் பண்டைய இலக்கியங்களிலே காணலாம் அத்தகைய சிறப்பினை சங்க இலக்கிய பாடல் குறிப்பிடுகின்றன.

**“நெடுநுகத்துப் பகல் போல**
**நடுவுநின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய்மொழிந்து**
**தமவும் பிறவும் மொப்பநாடிக்**
**கொள்வதூஉ மிகைகொள்ளாது**
**கொடுப்பதூங் குறைபடாது**
**பல்பண்டம் பகர்ந்து வீசும்” (பட்டினப்பாலை 206 - 211)**

என்ற பாடலுக்கினங்க சமன்செய்யும் கோல் போல் நடுநிலை தவறாத நெஞ்சோடு குற்றங்களுக்கு அஞ்சி கனிவாகப் பேசி உறவினர், பிறர் என வேறுபாடின்றி ஒப்ப நோக்கிப் பெறுவதை அதிகமாகப் பெறாமலும் கொடுப்பதைக் குறைவின்றிக் கொடுப்பதாயும், பல்பண்டங்களையும் பகிர்ந்து கொடுப்போரே நல்வணிகர் என்கிறது பட்டினப்பாலை குறிப்பிடுகிறது. திவாகரம் என்னும் நிகண்டு வணிகர் இயல்பை மேலும் சிறப்புறக் கூறுகின்றது.

**“தனிமை யாதல் முனிவி லனாதல்**
**இடனறிந் தொழுகல் பொழுதொடு புணர்தல்**
**உறுவது தெரிதல் இறுவதஞ் சாமை**
**ஈட்டல் பகுத்தல் என்றிவை யெட்டும்**
**வாட்டம் இல்லா வணிகர தியற்குணம்” (திவாகரம் நிகண்டு**.17)

என்று தமிழர் சிறப்பாகப் போற்றிய அறுவகைத் தொழில்களான உழவு ,வணிகம், நெசவு, தச்சு, மட்பாண்டஞ் செய்தல், கொல்லர் என்பவற்றுள் வணிகம் உழவுக்கு அடுத்து இரண்டாம் இடம் பெறுவதைக் காணலாம். இதனை வள்ளுவரும்,

**“வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தம்போற் செயின்” (திருக்குறள்**.120)

என்கின்றார்.

**“இருவகையா னிசைசான்ற இருகுடிப் பெருந்தொழுவர்”**

**(மதுரைக்காஞ்சி**.126)

என்ற மதுரைக்காஞ்சி எனும் இலக்கிய வரிகளுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார். தமிழர்களால் பெரிதும் போற்றப்பட்ட வணிகத்தொழில் உள்நாட்டிலும், கடல் கடந்தும் பெருஞ்சிறப்புப் பெற்றிருந்தது என்பதைத் தமிழ் இலக்கியங்களும், வெளிநாட்டார் குறிப்புகளும், செப்பேடுகள், கல்வெட்டுகள் எனபனவும், அண்மைக்கால அகழ்வாராய்ச்சிகளும் ஆழ்கடல் கண்டுபிடிப்புகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன. கிபி. 60 இல் எழுதிய **பெரிப்புளூஸ்** என்னும் பயணவழிநூல் தமிழக வணிகத் தொடர்புகளை மிக விரிவாகக் கூறுகின்றது. பிளைனி கி.பி. 70 இல் எழுதிய **‘இயற்கை வரலாறு’**, தொலமி எழுதிய **‘பூகோள விவரணம்’** போன்ற நூல்களும் தமிழகத்திற்கும் ஐரோப்பியருக்கும் இடையே நடைபெற்ற வணிகத்


http://Creativecommons.org//license/by/4.0/.

தொடர்புகளுக்குச் சான்றாகத் திகழ்கின்றன. இதில் தமிழ் வணிகர்களின் பண்புமுறைகள் வர்த்தகமுறைக்கு முதன்மையாக விளங்குகிறது என்றனர். இதனால் அயல்நாட்டு அதிகமாக நடைபெற்றது இதில் ஒன்றான ஐரோப்பியர் களைத் தமிழர் **'யவனர்'** என்றே இலக்கியங்களில் குறித்துள்ளனர். இவ்வாறான வெளிநாட்டார் குறிப்புகளோடு ஒத்திசைந்து பல்வகைச் சான்றுகளை வெளிப்படுத்துகின்றன. இவ்இலக்கியங்களின் மூலமாக தமிழ் வணிகர்களின் பண்புகளை அறியமுடிகிறது

**வணிகமுறை:**

தமிழர்களின் வணிகமுறை முதலில் பண்டமாற்று முறையில் தொடங்கிற்று பின்பு குறிஞ்சி, முல்லை , மருதம், நெய்தல், போன்ற திணைகளின் மூலம் முழு வளர்ச்சி கண்டது. அதன் உயரிய வளர்ச்சியாக வெளிநாட்டவர் வந்து வணிகமுறை செய்ததை சங்கஇலக்கியங்கள் எடுத்து இயம்புகின்றன வெளிநாட்டார் பொன்னோடு வந்து மிளகோடு சென்ற செய்தியை,

**"யவனர் தந்த வினைமான் நன்கலம்**
**பொன்னொடு வந்து கறியோடு பெயரும்"** (அகநானூறு, 149)

என அகநானூறு தெரிவிக்கின்றது. தமிழகத்தில் பொன் பெருகுவதற்குக் காரணமான சிறந்த பண்டங்களை பெரிய மரக்கலங்களில் ஏற்றிச் சென்றனர் என்ற செய்தியை,

**"பொன்மலிந்த விழுப்பண்டம்**
**நாடார நன்கிழிதரும்**
**ஆடியற் பெருநாவாய்"** (மதுரைக்காஞ்சி.132)

எனக் கூறுகின்றது மதுரைக் காஞ்சி. யவனர் குளிர்மையான மது வகைகளை எடுத்து வந்தனர் என்னும் செய்தியை,

**"யவனர் தந்த தண்கமழ் தேறல்**
**பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்**
**ஒண்டொடி மகளிர் மடுக்க"** (புறநானூறு.56 )

எனப் புறநானூறு கூறுகின்றது. மேலாடை அணிந்து ஐரோப்பியர் காவல் காத்த செய்தியை,

**"மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து**
**வலிபுணர் யாக்கை வன்கவர் யவனர்"** (புறநானூறு.72 )

என மற்றுமொரு புறநானூற்றுப் பாடல் தெரிவிக்கின்றது. பண்டைத் தமிழரது வெளிநாட்டு வணிகம் சங்ககாலத்தில் பெருஞ் சிறப்புற்றிருந்ததை மேற்கூறப்பட்டுள்ள சான்றுகள் வழியாக நாம் அறியலாம். தமிழர் மேற்கு, கிழக்கு, வடக்கு என முத்திசைகளுக்கும் சென்று வணிகத்தில் வரலாறு படைத்துள்ளனர். பிறநாட்டாரைக் கவர்ந்த தமிழகப் பொருட்களாக முத்து, பவளம், ஆரம், அகில், வெண்துகில், சங்கு, மிளகு, இலவங்கம், ஏலம் போன்றவை விளங்கின. தங்கம், குதிரை, இரும்பு, கம்பளி போன்றவற்றைத் தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்டன இதனால் தமிழரின் வணிகமுறை உலகளவு வளர்ச்சியடைந்து காணப்பட்டது.

**துறைமுகங்கள்:**

தமிழகத்தின் பண்டைய துறைமுகங்கள் பற்றிய செய்திகள் பலவாறாக் கிடைக்கின்றன. அதில் **சேர சோழ, பாண்டியர்** சிறந்து விளங்கினர். மேற்குக்கரையோரமான சேரநாட்டுத் துறைமுகங்களாக **முசிறி, தொண்டி, பொற்காடு** என்பவை திகழ்ந்துள்ளன. தெற்கே குமரியும், கிழக்கே **கொற்கை, காவிரிப் பூம்பட்டினம், எயிற்பட்டினம்,**


http://Creativecommons.org//license/by/4.0/.

**அழகன்குளம், அரிக்கமேடு, மருங்கூர்பட்டணம், மசுலிப் பட்டினம், மரக்காணம்** போன்றவை திகழ்ந்துள்ளன. காவிரி பூம்பட்டடினத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் இடையறாது நிகழ்ந்தன. அது எவ்வாறு இருந்ததெனில், மலையில் பெய்த நீர் கடலில் கலப்பது போலவும், வான் கொண்ட நீர் மலையில் பொழிவதைப் போன்றும் இருந்ததாகப் பட்டினப்பாலை கூறுகின்றது. துறைமுகங்கள் தோறும் பண்டகசாலைகள் இருந்திருக்கின்றன. அப்பண்டக சாலைகளில் இறக்குமதி, ஏற்றுமதிப் பொருட்கள் மீது அரச அலுவர்கள் முத்திரையிட்டிருக் கின்றனர். அங்கு சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. இதனை,

**"அளந்தறியாப் பல்பண்டம்**
**வரம்பறியாமை வந்தீண்டி**
**அருங்கடிப் பெருங்காப்பின்**
**வலியுடை வல்லணங்கினோன்**
**புலிபொறித்துப் புறம்போக்கியும்**
**மலிநிறைந்த மலிபண்டம்"** (பட்டடினப்பாலை.117)

எனப் பட்டினப்பாலை கூறுகின்றது. துறைமுகங்கள் அருகே பொருட்கள் பொதிகளாகக் கட்டப்பட்டு அடுக்கப்பட்டிருந்தன. அவற்றின் மேல் நாய்களும் ஆட்டுக்கடாக்களும் ஏறிக்குதித்து விளையாடின இது மலைச்சரிவுகளில் வருடை மான்கள் துள்ளி விளையாடுவதை ஒத்திருப்பதாக மற்றுமொரு பாடலில் பட்டடினப்பாலை தெரிவிக்கின்றது.

**"பொதிமூட்டைப் போரேறி**
**மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்**
**வரையாடு வருடைத் தோற்றம் போலக்**
**கூருகிர் ஞமலிக் கொடுந்தான் எற்றை**
**ஏழகத் தகரொடு உகளும் முன்றில்"** (பட்டடினப்பாலை.122)

தமிழரின் வணிகமுறைகளுக்கு சிறப்பாக முத்து,பவள மணிகள், துகில், மிளகு, ஆடைகள், ஆகியவை மலை போன்ற குவியலாக மூன்று மன்னர் துறைமுகங்களிலும் காணப்பட்டது. வணிகர்களுக்கென்று தெருக்களும், வீதிகளும் அமைக்கப்பட்டன. இதனால் தமிழர்களின் வர்த்தக முறை உலகளாவிய தொடர்புக்கு வழிவகை செய்தன

**கொற்கை:**

பாண்டிய அரசின் ஆட்சிக்குட்பட்ட கொற்கைத் துறைமுகம் பெரும் செல்வாக்கோடு விளங்கியது. முத்து, சங்கு விளைகின்ற இடமாகவும் இது திகழ்ந்தது என அகநானூறு கூறுகின்றது. மருங்கூர்ப் பட்டினத்துக்குத் தெற்கே கொற்கைக் குடாக் கடலும் அதன் மேற்குக் கரையில் கொற்கைப் பட் டினமும் இருந்தன. கொற்கையை பெரிப்ளூஸ் என்றும் கிரேக்க நூல் கொல்கிஸ் (Koiklus) என்று கூறுகின்றது. தாலமியும் இதைக் கூறுகிறார். கொற்கைக் குடாக்கடல் அக்காலத்தில் நிலத்தின் உள்ளே ஐந்து மைல் ஊடுருவியிருந்தது. இங்கு முத்துச் சிப்பிகளும் சங்கு வளைகளும் உண்டாயின. கொற்கை முத்து உலகப் புகழ்பெற்ற கொற்கைக் குடாக்கடலில் அக்காலத்தில் தாமிரபரணி ஆறு சென்று விழுந்தது. அந்த ஆற்றின் கரைமேல் கடற்கரைப் பக்கத்தில் பேர் போன கொற்கைப் பட்டினம் இருந்தது. இங்குப் பாண்டிய இளவரசன் இருந்தான்.

கி.பி. 10-ம் நூற்றாண் டுக்குப் பிறகு கொற்கைக் குடாக்கடல் மண் தூர்ந்துடைய மறைந்துபோய் இப்போது நிலமாக மாறிவிட்டது. கொற் கைக் குடாக்கடல் நிலமாக மாறிப் போனதற்குகாரணம், தாமிரபரணி ஆறு அடித்துக் கொண்டு வந்த மணலும் கடல் அலை


http://Creativecommons.org//license/by/4.0/.

அடித்துக் கொண்டு வந்த மணலும் ஆக இரண்டு புறத்திலும் மணல் தூர்ந்த படியினால்தான். மணல் தூர்ந்தது வெகுகாலமாக நடந்து கொண்டு வந்து கடைசியில் கடலே மறைந்து போயிற்று. கொற்கைப்பட்டினம் இருந்த இடம் இப்போது கடற்கரைக்கு மேற்கே மூன்று மைல் தூரத்தில் மாறமங்கலம் என்னும் பெயர் பெற்றிருக்கின்றது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொற்கையிலிருந்த பாண்டிய இளவரசன் வெற்றிவேற்செழியன். கொற்கைப் பட்டினம் துறைமுகப் பட்டினமாக இருந்ததுமல்லாமல், அங்கு முத்துக்களும் சங்குகளும் விற்கப்பட் கொற்கைக் கடலில் முத்துச் சிப்பிகளும் சங்குகளும் உண்டானபடியால் இங்கு முத்துகளும், சங்குகளும் கிடைத்தன. பொன்னும், இரத்தினமும், மென்மையான புடவைகளும், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகளும், பவளமும், செம்பும், ஈயமும், கோதுமையும் இங்கு இறக்குமதி செய்யப் பட்டதாகப் 'பெரிப்புளுஸ்' நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

**மருங்கூர்ப் பட்டினம்:**

மருங்கூர்ப்பட்டினம் மருங்கை என்றும் கூறப்பட்டது. இது பாண்டி நாட்டின் கிழக்குக் கரையிலிருந்த துறைமுகம். பாண்டி நாட்டுப் புலவரான நக்கீரர், காயல்களும் (உப்பங் கழிகள்) தோட்டங்களும் உள்ள மருங்கூர்ப்பட்டினத்தின் கடைத்தெரு செல்வம் கொழித்திருந்தது என்று கூறுகின்றார்.

**"விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்**
**இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து**
**எல்லுமிழ் ஆணவம்"(அகநானூறு**.227)

அங்காடியில் குவித்து வைத்திருந்த இறால்களைச் சுமந்து கொண்டு போய்க் காக்கைகள் துறைமுகத்தில் நிற்கும் கப்பல்களின் பாய்மரக் கம்பத்தில் அமர்ந்து தின்றன என்றும் அவர் கூறுகிறார்.

**"அகலங்காடி யசை நிழற் குவித்**
**பச்சிறாக் கவர்ந்த பசுங்கண் காக்கை**
**தூங்கள் வங்கத்துக் கூம்பில்சேக்கும்**
**மருங்கூர்ப் பட்டினம்" (நற்றிணை,** 258)

என்று மருங்கூர்ப் பட்டினம் நடந்த வணிகமுறையையும் அவற்றை ஏற்றி சென்ற கலங்களின் நிலைகளையும் விவரித்துக் கூறுகிறர்.

**கொடுமணல்:**

வெளிநாட்டு வணிகம் ஓங்கியிருந்த காலத்தே ஏற்றுமதிக்காகவும் உள்நாட்டுப் பயன்பாட்டிற்காகவும் உயர்ந்த அணிகலன்கள் இங்கே உருவாக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர் கருதுகின்றனர். பதிற்றுப்பத்து என்னும் இலக்கியத்தில் கபிலர் **"கொடுமணல்பட்ட..... நன்கலம்"** என்றும், அரிசில்கிழார் **"கொடுமணம் பட்ட வினைமான் அருங்கலம்"** என்றும் கொடுமணல் எனும் ஊர்ச்சிறப்பைக் குறிப்பிடுகின்றனர். ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தைப் பெருமளவில் கொண்டிருந்த தமிழகம் ஏற்றுமதிக்குரிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களையும் கொண்டிருத்தல் இயல்பு. அவ்வாறான தொழிற்கூடங்கள் பற்றிய ஆதாரங்கள் ஆங்காங்கே இலக்கியங்களில் காணப்பட்டுள்ளது. அதில் அதிகளவு அகழ்வாராய்ச்சி நடைபெற்ற இடமாகவும் கொடுமணல் விளங்குகிறது. இதுவரை பழமைகால சான்றுகளுக்கு எண்ணற்ற ஆதாரங்கள் இங்கு கிடைத்துள்ளதாகும் குறிப்பிடுகின்றனர் இதுவரை இங்கு 169 அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றுள்ளது. தமிழர்களின் தொன்மை


http://Creativecommons.org//license/by/4.0/.

முறைகளையும் வணிகமுறைகளையும் அறிந்து கொள்வதற்கு இந்த துறைமுகம் மிகவும் சான்றாக விளங்குகிறது.

**தொண்டி:**

சங்க காலத்திலே கிழக்குக் கரையிலும் மேற்குக் கரை யிலும் இரண்டு தொண்டிப் பட்டினங்கள் இருந்தன. இரண்டும் துறைமுகப் பட்டினங்கள். ஒரு தொண்டி சேர நாட்டில் மேற்குக் கடற்கரையில் இருந்தது; மற்றொரு தொண்டி பாண்டி நாட்டில் கிழக்குக் கடற்கரையில் இருந்தது. இந்தத் தொண்டி கிழக்குக் கரையிலிருந்த பாண்டி நாட்டுத் தொண்டியாகும். வெளிநாட்டார் குறிப்புகளில் பெரிதும் இடம் பெற்ற முசிறித்துறையில் மேற்கு நாடுகளுடனான வணிகம் பெருமளவில் நடைபெற்றிருக்கின்றது. வெளிநாட்டார் வணிகத்திற்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகக் கடற் கொள்ளையரை அடக்கி 'கடற்பிறக்கோட்டிய' என்னும் பட்டத்தைப் பெற்றான் செங்குட்டுவன். சேரநாட்டு மலைவளங்களில் பெருமளவில் மிளகு விளைந்தது. ஐரோப்பியர்களால் பெரிதும் விரும்பப்பட்ட மிளகே இங்கு முதன்மையான ஏற்றுமதிப் பொருளாகியது. இத்துறையில் நடைபெற்ற ஏற்றுமதி இறக்குமதி வணிகம் பற்றிப் புறநானூறு (பாடல் 343) விரிவாகக் கூறுகின்றது. கடைச் சங்க காலத்துப் புலவரான அம்மூவனார் ஐங்குறுநூற்றில் நெய்தற்றிணையில் தொண்டிப்பத்து என்னும் தலைப்பில் பத்துச் செய்யுட்களைப் பாடியுள்ளார். அது சேர நாட்டுத் தொண்டி. அந்தப் புலவரே அகநானூறு பத்தாம் செய்யுளில் பாண்டி நாட்டுத் தொண்டியைப் பாடியுள்ளார். இந்தத் தொண்டியை இவர் இவ்வாறு கூறுகிறார்.

**'கொண்ட லொடு**
**குரூஉத் திரைப் புணரி யுடைதரும் எக்கர்ப்**
**பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்**
**மோட்டு மணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி**
**மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்**
**வளங்கெழு தொண்டி' (அகநானூறு**.10)

கிழக்குக் படலிலிருந்து வீசுகிற கடற்காற்றுக்கும் கொண்டல் காற்று என்பது பெயர். இந்தத் தொண்டி கிழக்கு கடற்கரையிலிருந்தது என்பதைக் கொண்டல் காற்று வீசுகிற தொண்டி என்று கூறுவதிலிருந்து அறிகிறோம். இந்தத் தொண்டி பாண்டி நாட்டில் இப்போதைய இராமநாதபுர மாவட்டத்தில் இருந்தது என்று தோன்றுகிறது.

**'ஓங்கிரும் பரப்பின்**
**வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட**
**அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்**
**தொடு கருப்பூரமும் சுமந்துடன் வந்த**
**கொண்டலொடு புகுந்து கோயசன் கூடல்**
**வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும்**
**பங்குனி முயக்கத்துப் பனியரசு'(ஊர் காண் காதை,** 106)

இங்குக் குறிப்பிடப்பட்ட பொருள்கள் எல்லாம் கிழக்குக் கடலுக்கப்பால் கீழ்க்கோடி. நாடுகளிலிருந்து வந் தவை. கீழ்க்கடல் தீவுகளிலிருந்து கொண்டு வரப்பட்டுத் தொண்டித் துறைமுகத்தில் இறக்குமதியான பொருள்கள் அகில், துகில், ஆரம், வாசம், கருப்பூரம் முதலானவை என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இந்தத் தொண்டித் துறைமுகத்தைச் சிலப்பதிகாரக் கடல் கடந்த நாடுகளிலிருந்து காவியமும் கூறுகின்றது. அகிற் கட்டை, சந்தனக் கட்டை, பட்டுத்துணி, சாதிக்காய், இலவங்கம், குங்குமப்பூ, கருப்பூரம் முதலான


http://Creativecommons.org//license/by/4.0/.

வாசனைப் பொருள்களை ஏற்றிவந்த நாவாய்கள் கொண்டல் காற்றின் உதவியினால் தொண்டித் துறைமுகத்துக்கு வந்ததையும் இறக்குமதியான அந்தப் பொருள்களைத் தொண்டியிலிருந்து பாண்டியனின் தலைநகரான மதுரைக்கு அனுப்பப்பட்ட தையும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

**தமிழர் வணிகத்தில் நாணயங்கள்.**

தமிழரின் வணிக முறைகளுக்குச் சான்றாக நாணயங்களை குறிப்பிடலாம். அயல்நாட்டு நாணயங்கள் பெருமளவில் தமிழக ஆய்வுப் பகுதியில் கிடைத்துள்ளது. இதற்கு சான்றாகவும் ரோமாபுரி நாணயங்கள் எகிப்து நாணயங்கள் பாண்டியர்கள், சேரர்கள், சோழர்கள், பயன்படுத்திய நாணயங்கள் அனைத்தும் இப்பகுதியில் காணப்படுகிறது. இதனால் வாணிபம் அதிகளவு சிறந்து விளங்கியது என்பதனை இதன் மூலம் அறிய முடிகிறது அரிக்கமேடு என்னுமிடத்தில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்த பல பொருட்களோடு, கண்டெடுக்கப்பட்ட உரோம நாணயங்களும் இவ்வணிகத் தொடர்புகளை உறுதிசெய்கின்றன. அரேபிய, கிரேக்கக் கப்பல்கள் முசிறி என்னும் துறைமுகத்தில் நிறைந்து நின்றதாகப் பெரிப்புளுஸ் தெரிவிக்கின்றது. உரோமக் குடியிருப்புகள் மதுரையில் அமைந்திருந்ததாகவும் இவர் குறிப்பிட்டிருக்கின்றார். பாலை நிலத்து வழியிலே இருந்த நெல்லி மரங்களிலிருந்து உதிர்ந்துள்ள நெல்லிக்காய்கள் பொற்காசுகள் உதிர்ந்து கிடப்பன போலக் காணப்பட்டன என்று அவர் கூறுகிறார்.

**'புல்லிலை நெல்லிப் புகரில் பசுங்காய்**
**கல்லதர் மருங்கில் கடுவளி உதிர்ப்பப்**
**பொலஞ்செய் காசிற் பொற்பத்தாஅம் அத்தம்'** (அகநானூறு.363)

உலகலாவிய பண்டைய வணிகத்தில் தனியிடம் பெற்றிருந்த தமிழகம் நாணயப் பயன்பாட்டிலும் சிறப்புற்றிருக்கின்றது. உள்நாட்டு வணிகம் பெருமளவு பண்டமாற்று முறையில் தொடர்ந்தாலும் வெளிநாட்டு வணிகங்கள் பெரும்பாலும் நாணயங்களை அடிப்படையாகக் கொண்டே நடைபெற்றன. பொற்காசுகளை மாலையாகச் செய்து மகளிர் அரையைச் சுற்றி (மேகலை போல) அணிந்து கொண்டதைக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் கூறுகிறார்.

**ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த**
**பொலஞ்செய் பல்காசு அணிந்த அல்குல்.** (புறநானூறு.72)

மூவேந்தர்களும் தனித்தனியாகத் தம் இலச்சனைகள் பொறித்த நாணயங்களைப் பயன்படுத்தினர். குறுநில மன்னர் சிலரும் நாணயங்களைப் பயன்படுத்தியுள்ளனர். முதன்முதலாக முத்திரை நாணயங்களை வெளியிட்டவர் பாண்டியர் ஆவர். அதில் பெருவழுதி என பிராமி எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. காசுமாலை அணிந்த இன்னொரு பெண்ணை ஓதலாந்தையார் கூறுகிறார்.

**"பொலம் பசும் பாண்டிற் காசு நிறை அல்குல்**
**இலங்குவளை மென்றோள்."**

(ஐங்குறு, பாலை, செலவழுங்குவித்த பத்து 10)

இவை கி.மு 3ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். சோழர் நாணயங்களும் கி.மு 3ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. இவ்வேந்தர் நாணய சாலைகள் வைத்துத் தாமே நாணயங்களை வார்த்துள்ளனர். செப்பு போன்ற உலோகங்களை உருக்கி சதுர, வட்ட வடிவில் நாணயங்களை வார்ப்பதோடு, முத்திரைகளையும் எழுத்துகளையும் பொறிக்கத் தெரிந்து கொண்டிருந்தனர். கி.மு. 2ம் நூற்றாண்டுக்குரிய சீன நாணயங்கள் தாலிக்கோட்டை என்னும் கிராமத்திலும், 'ஒலயக்


http://Creativecommons.org//license/by/4.0/.

குன்னம்' என்னும் ஊரிலும் அதிகளவில் கிடைத்துள்ளன. தமிழர் கீழைத்தேய நாடுகளிற் பொருட்களைப் பெற்று வந்து மேலை நாடுகளுக்கு அனுப்பினர் என்ற குறிப்புகளும் உண்டு. கி.பி. 3க்குப் பின் வெளியான உரோம நாயணங்கள் தமிழகத்தில் கிடைக்கவில்லை. 4ம் நூற்றாண்டுக்குப் பின்னான நாணயங்கள் கிடைத்துள்ளன.

கிரேக்க, உரோம, சீன நாணயங்கள் பெருமளவில் பல இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன. அதே போன்று தமிழக நாணயங்கள் பிறநாடுகளிலும் கிடைத்துள்ளன. சேரரின் தலைநகரான கரூரையும் முசிறி துறைமுகத்தையும் இணைக்கும் பெருவழியில் இது அமைந்துள்ளது. இது 'கொங்கப் பெருவழி' என அழைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வழியில் கிடைக்கப்பெற்ற ஏராளமான வெள்ளி, தங்க, உரோம நாயணங்கள் இத்தொழிற்கூட வாணிபத்தை உறுதிப்படுத்துகின்றன.

**முடிவுரை:**

உலகின் பெரும்பாலான பகுதிகள் இன்னும் நாகரிக வளர்ச்சி பெறாத காலத்திலேயே, தமிழகம் வணிகத் தொடர்புகளை விரிவாக்கி, பல முன்னேறிய நாடுகளுடன் உறவுகளை அமைத்திருந்தது. தமிழர்கள் கடலையும் பயண வழிகளையும் சிறப்பாக அறிவதோடு, காற்றின் உதவியுடன் பரந்த கடல்களை கடந்துச் சென்றனர். வணிகர்களை மதிக்கும் பழக்கம் 2500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் வேரூன்றியிருந்தது. சிறந்த வணிகர்களுக்கு அரசர்கள் 'எட்டி' என்ற பட்டத்தை அளித்து பெருமைப்படுத்தினர். பண்டைய உலக வணிக வரலாற்றில் தமிழகத்தின் நிலைமையைக் கருத்தில் கொண்டதில் கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளை இணைக்கும் முக்கியக் கடல் வழிப்பாதைகள் இங்கே இருந்தன. இதன் காரணமாக உலகளாவிய வணிகத் துறையில் தமிழகம் தலைசிறந்த இடத்தை பெற்றிருந்தது. தமிழகத்தின் வணிகச்சிறப்பு மூலமாக, நம் முன்னோர் உலகிற்கு வாணிகத்திலும் பண்பாட்டிலும் முன்னோடிகளாக விளங்கியதை இவ்வாய்வின் மூலமாக உணர முடிகிறது.

**துணைநூற்பட்டியல்:**

1. டாக்டர் கே. கே. பிள்ளை தென்னிந்திய வரலாறு,சென்னை பழனியப்பா பிரதர்ஸ், முதற்பதிப்பு
2. முனைவர் அ.தட்சணாமூர்த்தி தமிழர் நாகரிகமும் பண்பாடும், தஞ்சாவூர் வெற்றிச்செல்வி வெளியீட்டகம் 1973
3. முனைவர் முத்துராசன், சங்ககாலம், எழிலகம் வெளியிடு எண் -14 முதற்பதிப்பு 1993
4. முனைவர் க.ப. அறவாணன், பண்பாட்டுப் படையெடுப்புகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி டி.டி.ஐ., தரமணி, சென்னை-600 113.
5. மயிலை சீனி வேங்கடசாமி,பழங்காலத் தமிழர் வாணிகம்-நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிட்., 41-பி. சிட்கோ இண்டஸ்ட்டிரியல் எஸ்டேட், -600 098. முதல் பதிப்பு: மார்ச், 1974
6. ரா. ராகவையங்கார்: பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும், தமிழநாடு ப்ரெஸ் மதுரை -51
7. சாமிநாதையர்.உ.வே.(ப.ஆ.) :புறனானூறு மூலமும் உரையும் உ.வே.சா நூல் நிலையம், சென்னை. (முதற்பதிப்பு) 1894,
8. இராஜகோபாலையங்கார்.வே. (ப.ஆ.): அகநானூறு மூலமும் உரையும் (உ.வே.ரா. இராகவையங்கார் சோதித்தது)
9. சாமிநாதையர்.உ.வே(ப.ஆ.): மதுரைக்காஞ்சி மூலமும் உரையும்
10. கமர்சியல் அச்சுக்கூடம், சென்னை-1918,


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 21. சங்க கால பண்டமாற்று வணிகமும் தற்போதைய வணிக நிலையும் - ஒரு ஒப்பீடு

**மு. தனலட்சுமி,**
**உதவிப்பேராசிரியை,கணிதத்துறை,**
**நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை -641105**

**DOI 10.5281/zenodo.16525723.**

**Abstract:**

Sangam literature refers to the Sangam literature composed in ancient Tamil Nadu, namely, Ettutogai and Patuppattu. These provide detailed information about the lifestyle, society, politics, economy and culture of the people of that time. These literatures show that trade was an important profession during the Sangam period and that merchants played an important role in society. Trade is the basis of the economic development of a country and the livelihood of the people. Over time, trade methods and their characteristics have evolved. In this article, we will see how trade, which excelled in Tamil Nadu during the Sangam period, has changed today.

**Key Words :** Sangam Literature - Comparative Literature & Society - Economic Development

**முன்னுரை:**

சங்க இலக்கியங்கள் என்பவை பண்டைய தமிழகத்தில் இயற்றப்பட்ட எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்ககால இலக்கியங்களைக் குறிக்கும். இவை அக்காலகட்ட மக்களின் வாழ்க்கை முறை, சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் பண்பாடு ஆகியவற்றைப் பற்றிய விரிவான தகவல்களை வழங்குகின்றன. சங்க காலத்தில் வணிகம் ஒரு முக்கியத் தொழிலாக இருந்தது என்பதையும், வணிகர்கள் சமூகத்தில் ஒரு முக்கிய பங்கு வகித்தனர் என்பதையும் இந்த இலக்கியங்கள் காட்டுகின்றன. வணிகம் என்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், மக்களின் வாழ்வாதாரத்திற்கும் அடிப்படையாகும். காலம் மாற மாற, வணிக முறைகளும் அதன் தன்மைகளும் பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளன. சங்க காலத்தில் தமிழகத்தில் சிறந்து விளங்கிய வணிகம், இன்று எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**சங்க கால வணிகம்**

சங்க காலம் என்பது கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியாகும். இக்காலத்தில், தமிழகம் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வணிகத்தில் சிறந்து விளங்கியது. சங்க இலக்கியங்களான பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, அகநானூறு, புறநானூறு போன்றவை அக்கால வணிகம் குறித்த பல தகவல்களைத் தருகின்றன. எட்டுத்தொகை நூல்களில் வணிகம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பட்டினப்பாலையில், காவிரிப் பூம்பட்டினத்தில் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி வணிகம், வாணிகர்களின் நடுவுநிலைமை, பண்டங்களைப் பாதுகாக்கும் முறை போன்ற வணிகம் தொடர்பான செய்திகள் விரிவாக கூறப்பட்டுள்ளன. மதுரைக்காஞ்சியில், மதுரை மாநகரின் வணிக நடவடிக்கைகள், திருவிழாக்கள், வணிகர்களின் வாழ்க்கை போன்றவற்றை பற்றியும் கூறப்பட்டுள்ளது.

**பண்டமாற்று முறை** :

வணிகத்தின் ஆதி வடிவம் பண்டமாற்று முறை. பணம், நாணயம் போன்ற எந்த ஒரு பொதுவான மதிப்பின்றி, ஒரு பொருளுக்குப் பதிலாக மற்றொரு பொருளை நேரடியாகப் பரிமாறிக் கொள்ளும் முறை இது. சங்க காலத்தில் தமிழகத்தில் இந்த பண்டமாற்று முறை


http://Creativecommons.org//license/by/4.0/.

எவ்வாறு செயல்பட்டது என்பதை இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம். சங்க காலத்தில், நாணயங்களின் பயன்பாடு குறைவாக இருந்தது. பெரும்பாலும் பண்டமாற்று முறையே நடைமுறையில் இருந்தது. உதாரணமாக, உப்புக்கு ஈடாக நெல்லைப் பெற்றுக் கொண்டார்கள்.

**"வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி நெல்லொடு வந்த வல்வாய் பஃறி"**

என்ற வரிகள் (பட்டினப்பாலை) இதற்குச் சான்றாகும்.**பண்டமாற்று முறையின் தோற்றம் மற்றும் தேவை:**

மனிதன் இனக்குழு சமூகமாக வாழ்ந்த காலத்தில், அவனது தேவைகள் குறைவாகவும், உற்பத்தித் திறனும் குறைவாகவும் இருந்தன. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியாத நிலையில், தன்னிடம் உள்ள உபரிப் பொருட்களைக் கொடுத்து, தனக்குத் தேவையான பொருட்களைப் பிறரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் தேவை ஏற்பட்டது. இதுவே பண்டமாற்று முறை தோன்றியதற்கான அடிப்படை.

சங்க காலத்தில், நாணயங்களின் புழக்கம் மிகக் குறைவாகவே இருந்தது. சில இடங்களில் காசுகள் புழக்கத்தில் இருந்ததற்கான குறிப்புகள் இருந்தாலும், பெரும்பாலான வணிகப் பரிமாற்றங்கள் பண்டமாற்று முறையிலேயே நடைபெற்றன.

**சங்க இலக்கியங்களில் பண்டமாற்று முறை**

சங்க இலக்கியங்கள் பண்டமாற்று முறை குறித்து ஏராளமான தகவல்களைத் தருகின்றன. குறிப்பாக, பட்டினப்பாலை, அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் பண்டமாற்று முறையின் பல்வேறு பரிமாணங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**உப்பு வணிகம்**:

சங்க காலத்தில் பண்டமாற்று முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உப்பு வணிகம் திகழ்ந்தது. கடற்கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த உமணர்கள் (உப்பு வணிகர்கள்) உப்பை உற்பத்தி செய்து, அதை உள்நாட்டுப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று, அங்கு விளையும் நெல்லைப் பண்டமாற்றாகப் பெற்றனர். "வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி, நெல்லொடு வந்த வல்வாய் பஃறி" (பட்டினப்பாலை) என்ற பாடல் வரிகள், உப்புக்கு ஈடாக நெல் பெறப்பட்டதை மிகத் தெளிவாகக் காட்டுகின்றன. இது அன்றைய சமூகத்தில் நெல் ஒரு முக்கிய பண்டமாற்றுப் பொருளாக இருந்ததையும் உணர்த்துகிறது.

**மீன் மற்றும் தானியப் பண்டமாற்று**:

கடலோரப் பகுதிகளில் வாழ்ந்த பரதவர்கள் மீன் பிடித்து, அதை உள்நாட்டுப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று தானியங்களைப் பண்டமாற்றாகப் பெற்றனர். மீன் அதிகமாகக் கிடைக்கும்போது, அதை உப்பிட்டுப் பதப்படுத்தி கருவாடாக மாற்றி விற்றனர்.

**மலைப் பொருட்களும் சமவெளிப் பொருட்களும்:**

மலைப்பகுதிகளில் கிடைக்கும் தேன், யானைத் தந்தம், புலித்தோல், அகில், சந்தனக் கட்டை போன்ற பொருட்களையும், சமவெளிப் பகுதிகளில் விளையும் நெல், கம்பு, கேழ்வரகு போன்ற தானியங்களையும் பண்டமாற்று செய்து கொண்டனர்.

**பொருட்களின் மதிப்பு:**

பண்டமாற்று முறையில், பொருட்களின் மதிப்பு எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது என்பது ஒரு சுவாரஸ்யமான கேள்வி. பெரும்பாலும், பொருட்களின் தேவை, கிடைப்புத்தன்மை, மற்றும் அவற்றை உற்பத்தி செய்யத் தேவையான உழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்புகள் தீர்மானிக்கப்பட்டிருக்கலாம். வணிகர்கள் நேர்மையுடனும், நடுவுநிலையுடனும்


http://Creativecommons.org//license/by/4.0/.

செயல்பட்டனர் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. "தமவும் பிறவும் ஒப்ப நாடி, கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது" (பட்டினப்பாலை) என்ற வரிகள், வணிகர்கள் தங்களுக்குரிய பொருட்களையும், பிறருடைய பொருட்களையும் சமமாக மதித்து, வாங்கும்போதும் விற்கும்போதும் நியாயமாக நடந்துகொண்டனர் என்பதைக் காட்டுகிறது.

பண்டமாற்று முறையின் நடைமுறைச் சிக்கல்கள்

பண்டமாற்று முறை சில அடிப்படைச் சிக்கல்களைக் கொண்டிருந்தது:

**தேவைகளின் ஒத்திசைவு:**

இரு தரப்பினருக்கும் ஒரே நேரத்தில் பரஸ்பரத் தேவைகள் இருக்க வேண்டும். உதாரணமாக, ஒருவர் நெல் கொடுத்து மாற்றுவதற்குத் தயாராக இருக்கும்போது, மற்றவர் நெல் தேவைப்பட்டு, அதற்கு ஈடாகக் கொடுக்க ஒரு பொருளை வைத்திருக்க வேண்டும். இந்தத் தேவைகளின் ஒத்திசைவு (Double Coincidence of Wants) எப்போதுமே சாத்தியமில்லை.

**பொருட்களின் மதிப்பு நிர்ணயம்:**

வெவ்வேறு பொருட்களின் மதிப்பைத் துல்லியமாக நிர்ணயிப்பது கடினம். ஒரு குறிப்பிட்ட அளவு நெல்லுக்கு எத்தனை மீன்கள் அல்லது எத்தனை குடங்கள் தேன் என்பது போன்ற மதிப்பீடுகள் சிக்கலானவை.

**பொருட்களைப் பிரித்தல்:**

சில பொருட்களைப் பிரிப்பது கடினம். உதாரணமாக, ஒரு யானைத் தந்தத்தைப் பிரித்து ஒரு சிறிய பொருளுக்குப் பண்டமாற்று செய்வது சாத்தியமில்லை.

**பொருட்களைச் சேமித்தல்:**

அழுகக்கூடிய பொருட்களை நீண்ட காலம் சேமித்து வைப்பது கடினம். இது பண்டமாற்று முறையின் வேகத்தைக் கட்டுப்படுத்தியது.

**போக்குவரத்துச் சிக்கல்கள்:**

பெரிய அளவிலான பொருட்களை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்வது சவாலாக இருந்தது.

**உள்நாட்டு வணிகத்தின் போக்குவரத்து மற்றும் வழிமுறைகள்**

**நிலவழி:** மாட்டு வண்டிகள், கழுதைகள், சுமக்கும் மனிதர்கள் மூலமாகப் பொருட்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. வணிகக் குழுக்கள் "சாத்து" என அழைக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் பாதுகாப்புடன் பயணம் செய்தன.

நீர்வழி: **ஆறுகள் மற்றும் ஏரிகள் வழியாகவும் சிறு படகுகள் மூலம் பொருட்கள் கொண்டு** செல்லப்பட்டன. இருப்பினும், நிலவழி வணிகமே அதிகம் காணப்பட்டது.

**சந்தைகள்:** கிராமங்கள் மற்றும் நகரங்களில் "நாளங்காடி" (பகல் நேரச் சந்தை) மற்றும் "அல்லங்காடி" (இரவு நேரச் சந்தை) போன்ற தற்காலிக மற்றும் நிரந்தரச் சந்தைகள் செயல்பட்டன. இங்கேயே பண்டமாற்றுப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன.

**பண்டமாற்று முறையின் முக்கியத்துவம்**

சங்க கால உள்நாட்டு வணிகத்தில் பண்டமாற்று முறை ஆதிக்கம் செலுத்தியது, அக்கால சமூகத்தின் பொருளாதார ஒற்றுமைக்கும், சுயசார்பு நிலைக்கும் ஒரு சான்றாகும். ஒவ்வொரு நிலப்பகுதியினரும் தங்களுக்குரிய நிபுணத்துவத்தைப் பயன்படுத்திப் பொருட்களை உற்பத்தி செய்தனர். இந்தப் பொருட்கள் முழு சமூகத்தின் தேவைக்கும்


http://Creativecommons.org//license/by/4.0/.

பரஸ்பரம் பரிமாறப்பட்டன. இது வெவ்வேறு நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் குழுக்களிடையே ஒரு பிணைப்பையும், சமூகப் பொருளாதார சமநிலையையும் உருவாக்கியது. பணத்தின் பயன்பாடு குறைவாக இருந்தபோதிலும், திறம்பட்ட பண்டமாற்று முறை மூலம் மக்களின் அன்றாடத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன என்பது சங்க காலத்தின் சிறப்பம்சமாகும்.

**நவீன கால பண்டமாற்று முறை**

பணத்தின் வருகைக்குப் பிறகு பண்டமாற்று முறை பெருமளவில் வழக்கொழிந்து போனாலும், சில குறிப்பிட்ட சூழல்களில் இன்றும் பண்டமாற்று முறையின் கூறுகளைக் காணலாம். இன்றைய நவீன இந்தியாவில் வணிகம் என்பது பல மடங்கு வளர்ச்சி அடைந்து, உலகளாவிய சந்தையுடன் பிணைந்துள்ளது. சங்க காலத்துடன் ஒப்பிடும்போது, பல அடிப்படை மாற்றங்களை நாம் காண முடிகிறது.

**பணப் பொருளாதாரம்:**

பண்டமாற்று முறை முற்றிலும் மறைந்து, பணப் பொருளாதாரம் ஆதிக்கம் செலுத்துகிறது. நாணயங்கள், ரூபாய் நோட்டுகள், மின்னணு பரிவர்த்தனைகள் (UPI, Net Banking, Credit/Debit Cards) எனப் பணத்தின் வடிவம் பல்கிப் பெருகியுள்ளது.

**உள்நாட்டு வணிகம்:**

உள்நாட்டு வணிகம் பெரிய சில்லறை சங்கிலிகள் (Retail Chains), பல்பொருள் அங்காடிகள் (Supermarkets), மற்றும் மின்னணு வர்த்தக நிறுவனங்கள் (E-commerce Companies) மூலம் நடைபெறுகிறது. சிறு கடைகள் மற்றும் பாரம்பரிய வணிக முறைகள் சவால்களை சந்தித்து வருகின்றன.

**அயல்நாட்டு வணிகம்:**

உலக வர்த்தக அமைப்பு (WTO), பல்வேறு சர்வதேச ஒப்பந்தங்கள், மற்றும் தாராளமயமாக்கல் கொள்கைகள் மூலம் அயல்நாட்டு வணிகம் மிக வேகமாக வளர்ந்துள்ளது. இந்தியா பல நாடுகளுடன் ஏற்றுமதி, இறக்குமதியில் ஈடுபட்டு, பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடுகிறது. மென்பொருள், ஜவுளி, ஆட்டோமொபைல் உதிரிபாகங்கள், மருந்துகள் போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாகும். கச்சா எண்ணெய், மின்னணு சாதனங்கள் போன்றவை முக்கிய இறக்குமதிப் பொருட்களாகும்.

**வணிக மையங்கள்:**

நகரங்கள் முழுவதும் பெருவணிக மையங்கள் (Malls), தொழில் பூங்காக்கள் (Industrial Parks), மற்றும் தொழில்நுட்பப் பூங்காக்கள் (IT Parks) உருவாகியுள்ளன. துறைமுகங்கள், விமான நிலையங்கள், மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் வணிகப் போக்குவரத்தை எளிதாக்குகின்றன.

**தொழில்நுட்பத்தின் தாக்கம்:**

இணையம், மொபைல் போன்கள், செயற்கை நுண்ணறிவு, தரவு பகுப்பாய்வு போன்ற தொழில்நுட்பங்கள் வணிகத்தில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. ஆன்லைன் ஷாப்பிங், விரைவு டெலிவரி சேவைகள், டிஜிட்டல் மார்க்கெட்டிங் போன்றவை இன்றைய வணிகத்தின் தவிர்க்க முடியாத அம்சங்களாகும்.

**சட்டதிட்டங்கள் மற்றும் வரிவிதிப்பு:**


http://Creativecommons.org//license/by/4.0/.

வணிகத்தை நெறிப்படுத்தப் பல்வேறு சட்டங்களும், வரிக் கொள்கைகளும் (GST, Income Tax) உள்ளன. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கும், உள்நாட்டு வணிகத்தை ஊக்குவிப்பதற்கும் அரசு பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்துகிறது.

**போட்டி மற்றும் நெறிமுறைகள்:**

உலகளாவிய போட்டி, நெறிமுறைகள் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு (CSR) போன்றவை இன்றைய வணிகத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நியாயமான வர்த்தக நடைமுறைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

சங்க காலத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பண்டமாற்று முறை முக்கியப் பங்காற்றியது. அதன் எளிமை, நேர்மை, மற்றும் சமூகப் பிணைப்பை வளர்க்கும் தன்மை ஆகியவை அக்கால வணிகத்தின் சிறப்பம்சங்களாக இருந்தன. காலப்போக்கில் பணத்தின் வருகை வணிகத்தை எளிதாக்கினாலும், பண்டமாற்று முறையின் அடிப்படைத் தத்துவம் இன்றும் சில வடிவங்களில் தொடர்கிறது. இது மனித நாகரிகத்தின் ஆரம்பகால வணிகப் பரிணாம வளர்ச்சியின் ஒரு முக்கிய மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது. சங்க கால வணிகம் மனிதனின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதையும், அறநெறியுடனும் நேர்மையுடனும் நடைபெற்றது என்பதையும் நாம் அறிந்துகொண்டோம். அதே சமயம், இன்றைய வணிகம் என்பது இலாப நோக்கம், தொழில்நுட்ப வளர்ச்சி, உலகளாவிய சந்தைப்படுத்தல், மற்றும் தீவிர போட்டித்தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. சங்க காலத்தில் இருந்த வணிக நெறிமுறைகளும், சமூக ஒற்றுமையும் இன்றும் வணிகத்தில் நிலைத்திருக்குமானால், அது இந்தியப் பொருளாதாரத்திற்கு மேலும் பலம் சேர்க்கும். இருப்பினும், இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியையும், உலகளாவிய வாய்ப்புகளையும் பயன்படுத்தி, இந்திய வணிகம் மேலும் செழித்து வளர்வது நிச்சயம்.

**References:-**

1. Iravatham Mahadevan - “Early Tamil Epigraphy”
2. Rudiger Dornbusch, Stanley Fischer - “Macroeconomics”
3. Tamil Virtual Academy - https://www.tamilvu.org


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 22. இலக்கியங்கள் காட்டும் வணிகர் வாழ்வியல் அறம்

**முனைவர் கி. நாகரத்தினம்,**
உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை,
புரட்சித்தலைவி அம்மா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,பல்லடம் - 641 664.
anburathina@gmail.com - 96988 02868
DOI 10.5281/zenodo.16525815

**Abstract:**

Human life is made up of three elements: virtue, materialism and pleasure. The proverb 'Seek wealth even as the sea flows' indicates that man can live happily only through materialism. The wealth of a society is determined by the intelligence of the country and the business of marketing the goods obtained through it. It is no exaggeration to say that farming and trade determine the development of a country. It is possible to know from ancient literature that the commercial community called merchants have followed many principles in the business of commerce carried out in the Inganam. Thus, the purpose of this article is to examine the moral principles followed in business through literature.

**Keywords :** Literature - Tamil Society - Business - Marketing

## முன்னுரை

ஆறறிவு கொண்ட மனித வாழ்வே உலகில் வாழும் உயிரினங்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தது. விலங்குகள் முதலான அஃறிணை உயிர்கள் மற்றும் பொருள்களிலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது மக்களிடையே நிலவிவரும் பண்பட்ட விழுமியங்களே. தனக்கென வகுத்துக் கொண்ட அறநெறிகளில் இருந்து அறிவாலும் ஆற்றலாலும் ஒழுக்கத்தாலும் உயர்ந்த மனிதர்கள் தன் குடும்ப மேம்பாட்டிற்காகவும் தான் சார்ந்து வாழும் சமூகத்தில் தன்னை நிலை நிறுத்தி தன்னோடு சேர்ந்த சமூகத்தை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் முதலறம், சார்பறம், தனி மனித அறம், சமுதாய அறம் என பல அறங்களாக பிரித்து அன்பு, பரிவு, ஆற்றல்,ஈகை, தருமம், வாய்மை, நடுவுநிலைமை, நீதி என்னும் பல பண்புகளை உள்ளடக்கி எண்ணம், சொல், செயல்களால் தன் வாழ்க்கையை செரிவாக்கினான். இதில் சமூகத்தோடு ஒன்றிணைந்து வாழும் சூழலில் பல்வேறு தொழில்களும் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு மேற்கொள்ளப்படும் தொழில் சார்ந்தும் பல அறங்களை மனிதர்கள் கடைபிடித்துள்ளனர்.

## அறம்

'அறு' எனும் சொல்லின் வினைச்சொல்லின் அடியாகப் பிறந்த அறம் எனும் சொல்லிற்கு மனிதன் எவற்றைச் செய்தால் நன்மை பயக்கும் எவற்றைச் செய்தால் தீமை பயக்கும் என்பதை தொகுத்தளிக்கும் நல்ல செயல்களின் தொகுதி எனும் பொருளையே அறிஞர்களும் அகராதிகளும் தருவதை காண முடிகிறது.

"கடமை, நோன்பு, தர்மம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக்கடவுள், தர்ம தேவதை, தீ பயன் உண்டாக்கும் சொல்" என கழகத் தமிழகராதி (கழகத் தமிழ் அகராதி ப. 60) அறம் குறித்து பகர்கின்றது.

"மன மாசு அகற்றிய மக்களது ஒழுகலாறு" என சங்க இலக்கிய பொருட்களஞ்சியம் (சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் ப. 117) அறம் குறித்து கூறுகின்றது

தா. திருநாவுக்கரசர் என்பவர் அறம் குறித்து "விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலைமையோடு நின்று வழக்குகளை சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் ஆராய்ந்து


http://Creativecommons.org//license/by/4.0/.

பார்த்து நீதி கூறும் நீதி நிர்வாக முறையையும் அறம் என்ற சொல் தொன்று தொட்டு வருகின்றது" (திருக்குறள் நீதி இலக்கியம் ப.31) என்று கூறுகின்றார்.

மேற்கண்ட வரையறைகளின் படி அறம் என்பது தீவினைகளை விடுத்து நல்வினைகளின் பால் மனத்தை செலுத்தி இன்பத்தை அடைவதற்காக வாழ்வை செம்மைப்படுத்தி அறத்தின் ஆளுமையில் பொருளும் இன்பமும் பெற்று தனிமனித வாழ்வையும் சமூக வாழ்வையும் மேம்படுத்துவதாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்ற பொருள்களில் அறத்தை கடைப்பிடித்து ஒழுகும் போது பொருளும் இன்பமும் கிட்டும் என்றும் அதன் வழியே உயிரின் இறுதியாகிய வீடு பேரும் கிட்டும் என்ற பொருளும் பெறப்படுகிறது.

**வணிகம்**

மக்கள் வாழும் சமூகத்தில் உழவே முக்கிய தொழிலாக கருதப்பட்டது. உழவுத் தொழிலில் தன் தேவைக்கு மிஞ்சிய பொருட்களை மற்றவருக்கு தருவதையும் மற்றவரிடம் இருக்கும் பொருட்களை தான் பெறும் பொருட்டும் ஏற்பட்ட சிறு செயலான பண்டமாற்று முறையே பின்னாளில் பெரும் வணிகமாக மாறியது. வணிகர்கள் தம் பண்டங்களை பல ஊர்களுக்கும் எடுத்துச் செல்வார்கள். இவர்களை இலக்கியங்கள் 'வணிகச் சாத்துகள்' என்று குறிப்பிடுகின்றன. இவ்வணிகமானது ஏற்றுமதி, இறக்குமதியின் மூலமாக கடல்வழி, தரைவழி என இரு வழிகளிலும் வணிகத்தை மேற்கொண்டதற்கான சான்றுகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

**வணிகர் வாழ்வியல் அறம்**

அறநெறி இலக்கியங்கள் உட்பட தமிழில் எழுதப்பட்ட பெரும்பாலான இலக்கியங்களில் வணிகம் சார்ந்தும் வணிகத்தை மேற்கொள்ளும் வணிகர்கள் சார்ந்தும் பல பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. சமூகத்தோடு நேரடியாக உறவாடும் வணிகர்களின் இயல்பினை திருக்குறள்

**"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணி**
**பிறவும் தமபோல் செயின்"** (குறள் : 120)

வாணிகத்தை மேற்கொள்கின்றவர் பிற பொருளையும் தமது பொருள் போல் பேணி சோர்வு படாமல் வாணிகம் செய்தல் வேண்டும். அதுவே அவர்களுக்கு இலாபத்தை ஈட்டி தரும் என்று கூறுகிறது.

இலாப நோக்கில் நேர்மையற்ற செயல்பாடுகளும் தோன்றி விடக்கூடாது என வணிகத்தில் சில அறங்களை கடைபிடிக்க வேண்டும் என்று வணிகர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. பொருளை உற்பத்தி செய்பவர்களுக்கும் அப்பொருளை பெற்று துய்ப்போருக்கும் இடையே ஒரு பாலம் போல் வணிகர்களும் வணிகமும் செயல்படுவதைக் கண்ணுற முடிகிறது.

வணிகர்கள் சான்றோர் கூறிய அறநெறியின்றும் பிறழாது இல்லற நெறியில் இருந்தும் தவறாது வாழ்ந்தனர்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த வணிகர்கள் தமக்கு கிடைக்கும் இலாபத்தை வெளிப்படையாக கூறி பண்டங்களை விற்பனை செய்வர். பிறர் பொருளை மிகுதியாக கொள்ளாமலும் தம்முடைய பண்டங்களை குறைத்துக் கொடுக்காமலும் நடுவுநிலை தவறாமல் வாணிகம் செய்யும் நல் மனதை உடையவர்கள் என்றும் தன் குடிக்கு பழி வரும் செயல்களை எண்ணி வணிகத் தொழில் சார்ந்த அறத்தைக் கடைபிடிக்கும் அறநெறியாளர்களாக திகழ்ந்ததை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**"நெடுநுகத்து பகல் போல்**
**நடுவு நின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய்மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்ப நாடிக்**
**கொள்வதும் மிகை கொளாது**
**கொடுப்பதும் குறைகொடாது**
**பல் பண்டம் பகர்ந்து வீசும்**
**தொல்கொண்டி துவன்று இருக்கை"(பட்டினப்பாலை 206-212)**

என்னும் பட்டினப்பாலை பாடல் வழி அறிய முடிகிறது.

நடுவுநிலை எனும் அதிகாரத்தில் வள்ளுவர்,

**"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோருக் கணி" (திருக்குறள் : 118)**

நீதிநறியாளர்கள் எவ்வாறு இருக்க வேண்டுமென்று உரைக்குமிடத்து சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் இருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார்.

தன்னை சமன் செய்து கொண்டு பிறகு தன்னிடம் வைத்த பொருளின் எடையை அளந்து காட்டும் துலாக்கோல் வணிகர்களின் முக்கிய பொருளாகும். இது துலாக்கோலின் தன்மையினை காட்டுவதுடன் மட்டுமல்லாமல் வணிகர்களின் பண்பினையும் எடுத்துக்காட்டும் விதமாக அமைந்துள்ளது.

இப்பிறவியில் அறம் செய்வதால் அதன் பயனை மறுபிறவியில் பெறலாம் என்ற அறம் தவறிய பண்பினை வணிகர்கள் ஏற்கக்கூடாது என்பதனை,

**"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**அறவிலை வணிகன் " (புறநானூறு134 :1 - 2)**

என்னும் புறநானூற்றுப் பாடலில் காண முடிகிறது.

வணிகர்கள் சில பண்டங்களை உற்பத்தியான இடத்திலேயே விற்பர். சில பண்டங்களை மக்களின் தேவை கருதி பிற ஊர்களுக்கு எடுத்துச் செல்வர். அவ்வாறு பல இடங்களில் விளையும் பொருட்களை ஓர் இடத்தில் சேர்த்து அப்பொருள் கிடைக்காத வேற இடங்களுக்கு கொண்டு செல்லும் வணிகர்கள் தங்களின் பாதுகாப்பிற்கான செயல்களை தானே மேற்கொள்வர்.

**"அணர் செவி கழுதை சாத்தோடு வழங்கும்**
**உல்குடை பெருவழி கவலை க் காக்கும்" (பெரும்பாணாற்றுப்படை 80:81 )**

எனும் பாடல் வழி வம்பர் பயணிக்கும் பெரிய வழியில் பாதுகாப்பிற்காக காவல் செய்யும் வீரர்களை நிறுத்தி இருந்தனர் என்று அறிய முடிகிறது.

இத்தகு சிறப்புகளைப் பெற்றதனால் தான் உலகத்து தொழில்களில் உலவும் வணிகமும் சிறப்பாக பேசப்படுகிறது இதனை,

**"இருவகையா மிசைச்சான்ற இருகுடிப் பெருந்தொழுவர்"**

என்னும் மதுரைக்காஞ்சி பாடலும் உணர்த்துகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**முடிவுரை**

உணவு, உடை, இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை குறைவு படாமல் நிறைவு செய்வதில் தன்னிறைவு கண்ட ஒரு சமூகத்தின் அடுத்த நிலை வளர்ச்சியில் வணிகமே சிறப்புற இருந்துள்ளது.

பொருள் வழி இலாபம் ஈட்டுவது என்ற குறிக்கோள் வணிகர்களில் காணப்படவில்லை. சமன் செய்யும் கோல் போல் நடுநிலைத் தவறாது குற்றங்களுக்கு அஞ்சி வணிகர்கள் வாழ்ந்துள்ளனர். தமது பொருட்களுக்கு தாமே பாதுகாப்பு அளிப்பதையும் இலாப நோக்கின்றி மற்ற துய்ப்பவர்களுக்கு அப்பொருள்களை கொண்டு செல்வதிலும் பல அறநெறிகளை கையாள முடிந்ததை கட்டுரையின் வழி அறிய முடிந்தது.

**துணை நூற்பட்டியல்**

1. கழகத் தமிழ் அகராதி, கழகப்புலவர் குழு (தொ.ஆ), திருநெல்வேலி தென்னிந்திய சைவ நூற்பதிப்புக் கழகம்.சென்னை, 1964
2. சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் தொகுதி -1 (அ-ஔ), சாரங்கபாணி, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். 2001
3. திருக்குறள் பொருள் விளக்கம், சாமி சிதம்பரனார், சாரதா பதிப்பகம், சென்னை - 14. முதல் பதிப்பு 2014.
4. திருக்குறள் நீதி இலக்கியம், க.த. திருநாவுக்கரசு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. 1977.
5. பட்டினப்பாலை - மறைமலை அடிகள், ராமையா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை. ஐந்தாம் பதிப்பு 2014.
6. பத்துப்பாட்டு மதுரைக்காஞ்சி மூலமும் உரையும் - உரையாசிரியர் டாக்டர். கதிர்முருகு, சாரதா பதிப்பகம், சென்னை-14 முதல்பதிப்பு மார்ச் 2009.
7. புறநானூறு மூலமும் உரையும் உரையாசிரியர்கள் முனைவர் கு.வெ. பாலசுப்ரமணியன், முனைவர் ஆ. விஸ்வநாதன். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், சென்னை- 14. ஆறாம் பதிப்பு அக்டோபர் 2017.


http://Creativecommons.org//license/by/4.0/.

# 23. பூமணியின் அஞ்ஞாடி புதினம் வெளிப்படுத்தும் வாழ்வியலும் வணிகமும்

**முனைவர் மா. பாலமுருகன்,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமலையாம்பாளையம், கோயம்புத்தூர்.
செல்: 9578757679 - மின்னஞ்சல்: balasattur63@gmail.com
DOI 10.5281/zenodo.16525897.

**Abstract:**

The life and business of a particular people are seen in the novel Anjanadi. The changes in the environment that occur in daily life also occur. Life refers to the daily life aspects of life such as people's activities, material - psychological needs, hobbies, relationships, work, family cycles and business needs. This article examines the idea that business is biased in the life of the ethnic group described in the novel.

**Keywords :** Novel - Poomani - Business - Life style - anjnjadi

## முன்னுரை

அஞ்ஞாடி புதினத்தில் குறிப்பிட்ட மக்களின் வாழ்வியலும் வணிகமும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறன. அன்றாட வாழ்வில் நிகழும் காலச்சூழல் மாற்றங்களும் நிகழ்கின்றன. மக்களின் செயற்பாடுகள், பொருள் - உளவியல் தேவைகள், பொழுது போக்குகள், உறவாடல்கள், வேலை, குடும்ப சுழற்சிகள் வணிக தேவைகள் என வாழ்க்கையின் நாளாந்த வாழ்வியல் அம்சங்களை வாழ்வியல் குறிக்கின்றது. அப்புதினம் விவரித்துள்ள இனக்குழு மக்களின் வாழ்வியலில் வணிகம் சாய்ந்த கருத்தினை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## அஞ்ஞாடி - ஆசிரியர் பூமணி

தமிழ்த் இலக்கியத்தின் தனித்துவமான எழுத்தாளர் பூமணி. வாழ்ந்த மண்ணைக் கதை கருப்பொருளாக கொண்ட “கரிசல் இலக்கியத்தின்” முன்னோடியராகப் புகழ் பெற்றவர் . பூமணி சாகித்திய அகாடமி விருது பெற்ற சமூக நய எண்ணங்கள் கொண்ட தமிழ்ப் புதினக்காரர். 2014இல் “அஞ்ஞாடி” நாவலுக்காக சாகித்திய அகாடமி விருது பெற்றார். இத்துடன் சேர்ந்து விஷ்ணுபுரம், அக்னி, திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் போன்ற பல விருதுகளும் பெற்றுள்ளார்.

## வணிகம்

மனிதர்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்கவும் விற்கவும் வணிகம் முக்கிய உந்துகோலாக செயல்படுகிறது. இது மனித வாழ்வில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. நமது தினசரி வாழ்க்கையில் உணவுப் பொருட்கள், உடைகள், மின்சாதனங்கள் உள்ளிட்ட அனைத்தும் வணிகத்தின் மூலம் கிடைக்கின்றன. பணம் சம்பாதிக்கும் வழி மட்டுமல்ல, அது சமூகத்திற்கு சேவை செய்யும் ஒரு வழி. நேர்மை, நம்பிக்கை மற்றும் தரமான சேவைகள் தான் வெற்றி வணிகத்தின் அடித்தளமாகும்.

## வாழ்வியல்

வாழ்வியல் என்பது வரையறையில்லா உயிரோட்டங்களின் உணர்வுப் போராட்டமாகும். உலகில் தோன்றிய பொருளெல்லாம் தோன்றிய வண்ணம் இருக்க, மனிதன் இனம் மட்டும் பகுத்தறிவால் பொருளுணர்ந்து உயர்ந்து விளங்குகின்றான். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பதை விடுத்து, இப்படித்தான் வாழவேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டைத் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்டுள்ளான். இதனையே தொல்காப்பியர்,


http://Creativecommons.org//license/by/4.0/.

'மக்கள் தாமே ஆறறிவுயிரே"

(இளம்பூரணர், தொல்காப்பியம், நூ. 1532)

என்ற நூற்பாவின் வழி மனிதன் ஆறாவது அறிவான பகுத்தறிவு கொண்டு வாழ்வியலைச் செம்மைப்படுத்தினான் என உணர்த்தியுள்ளார். மனித சமுதாயம் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றிவரும் செயல்கள் மரபு என்னும் பெயரால் சுட்டப் பெறுவதுண்டு. அத்தகைய மரபுகள் சமுதாய நன்மை கருதி உருவாக்கப்பட்டவை எனலாம். மக்கள் தம் வாழ்க்கை முறைகளில் சில மரபுகளைக் காலங்காலமாகத் தொடர்ந்து பின்பற்றி சமுதாய நன்மைக்குத் துணைபுரிந்து வருகின்றனர்.மக்களின் வாழ்க்கைமுறை பலரால் பின்பற்றப்படும் மரபுகளைத் தன்னகத்தே உடையதாக விளங்குகின்றது.

**"மரபு... என்ற சொல்லுக்கு 'குணம், பழமை, முறைமை, வம்சம், இயல்பு, இலக்கணம், பெருமை, மேம்பாடு, நியாயம்"(தமிழ்ப் பேரகராதி ப.**56)

ஆகிய பொருட்களைத் தமிழ்ப் பேரகராதி தருகின்றது.

**வணிகம் சாந்த இடம்பெயர்வு**

உலகில் வாழும் எல்லா உயிரினங்களிடையேயும் இடம்பெயர்வுகள் நடைபெறும். ஒரு இடத்திலிருந்து கால நிலை மாற்றத்தாலோ அல்லது சில இடையூறுகளாலோ அவ்வாழ்விடத்தை மாற்றிக் கொள்வதே இடம்பெயர்வாகும்.உயிரினங்கள் மட்டுமல்லாது, மனித இனமும் வாழ்க்கைக்காக இடம் விட்டு இடம் பெயர்த்தல் ஆதி காலம் தொட்டே நடைபெற்று வருகிறது. அங்ஙனம் இடம்பெயர்ந்த காலத்தை நாடோடி காலம் என்று குறிப்பர். நிலைத்த நாகரிக வாழ்க்கை அமைந்துவிட்ட பின்னரும் மனித இனம் இடம் பெயர்கிறது என்றால் அச்சமூகச் சூழலை ஆராய வேண்டும். இவ்வாறான இடம்பெயர்வுகளை அஞ்ஞாடி புதினத்தில் காணமுடிகின்றன. நாடார் இனக்குழு மக்கள் கேரளாவில் குடியிருந்த போது அங்கு ஆதிக்க குழுவினரால் அடிமைப்படுதத‌ப்பட்டுள்ளனர். காலப்போக்கில் தமிழகம் நோக்கி நகர்ந்து தமிழகத்தில் பனைத்தொழிலை மேற்கொண்டு வந்தனர். அங்ஙனம் பலவேச நாடார் குமரியிலிருந்து கழுகுமலைக்கு இடம்பெயர்ந்து வந்து குடியேறுகிறார். அவரின் வழியேதான் குமரியில் நடந்த கொடுமைகள் புதினத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. பெரிய நாடார் மருமகன் சண்முக நாடார் தொழிலுக்காகக் கலிங்கலுக்கு இடம்பெயர்கிறார். அவரின் மகன் சர்க்கரை நாடார் முத்துநகருக்கு வியாபாரம் நிமித்தமாக இடம்பெயர்கிறார். அதனை,

**'புருசனைக் கூட்டுக் கொண்டு முத்துநகருக்குப் போய்விட்டார். சின்னமணி நாடார் தன் பக்கத்திலேயே வாடகை வீடு பார்த்துக் கொடுத்தார். தாயாரம்மா கலிங்கலிலேயே தங்கிவிட்டாள். சக்கரை நாடாருக்கு புது யோசனை தட்டியது. வாழைப் பொருட்களை அடுத்தவருக்கு விற்பதைவிட சொந்தத்தில் கடை வைத்தால் என்ன. ஆட்களை அமர்த்திக் கொண்டு சரக்கைக் கொண்டு வந்துவிடலாம். தனலட்சுமி சந்தோசமாக ஒத்துக்கொண்டாள். சக்கரை நாடார் முத்துநகர் சந்தைக்குள் கடை ஆரம்பித்தார். வகைவகையாக வாழைத்தார்கள் காயும் பழமுமாக ஊஞ்சலாடின" (பூமணி,அஞ்ஞாடி, ப.**916.)

எனப் பூமணி கூறுகின்றார். நாடார் இனக்குழு மக்கள் மற்ற இனக்குழு மக்களின் இடையூறுகளாலும், தொழில் நிமித்தமாகவும் இடம்பெயர்ந்துள்ளமையைப் புதினம் பதிவு செய்துள்ளது.

**சத்திரப்பட்டி மருத்துவர்**

சத்திரப்பட்டி சடையப்பன் செட்டியார் என்பவரும் இப்புதினத்தில்மருத்துவராகக் காட்டப்பட்டுள்ளார். எலும்பு முறி வைத்தியாராக அறிமுகப்படுத்தப்படும் அவர், மற்ற


http://Creativecommons.org//license/by/4.0/.

வைத்தியங்களையும் பார்ப்பவராக உள்ளார். மேலும், ஆண்டியின் கால் முறிவிற்கு வைத்தியம் பார்க்க நல்லான் குடும்பன் சடையப்பன்செட்டியாரை அழைத்து வந்து மருத்துவம் பார்க்கிறார். அதனை,

> **'நல்லான் சடையப்பன் செட்டியாரைக் கூட்டிவரச் சத்திரப்பட்டிக்கு ஓடினான். நல்ல வேளைக்கு இருந்தார். சுத்துவட்டாரத்தில் பேர்போன வைத்தியர். சகலத்துக்கும் பக்குவம் பார்ப்பார். முக்கியமாக எலும்பு வைத்தியத்தில் கைராசிக்காரர். எல்லாரும் மட்டைச் செட்டியார் என்றுதான் சொல்வார்கள்."**
> (**பூமணி**,**அஞ்ஞாடி**, **ப**.21.)

எனப் பூமணி விவரிக்கிறார். அந்நாளில் மருத்துவம் மனிதர்களுக்கு மனிதர் பார்க்கும் சேவையாகக் கருதப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது. மருத்துவத்திற்குப் பணம் வாங்காமல் மேற்கொண்டுள்ளதையும் தானியம், பயறு வகை வாங்கிச் சென்றதையும்பூமணி குறிப்பிடுகிறார். மேலும், சடையப்பன் மேற்கொள்ளும் மூல நோய்கான சிகிச்சையைப் புதினத்தில் பக்கம் 81-இல் காணமுடிகின்றது.

## முடிவுரை

பூமணி காட்டுகிற சமூக அமைப்பு கிராமச் சூழலாகும். வணிகம் தொடர்பான சாதனங்கள் மூலம் பெரிய அளவில் இல்லா விட்டாலும் மக்களுக்கு ஏற்ப வணிகத்தால் பயன் அடைந்ததைக் காணமுடிகிறது. கிராமங்களில் இனக்குழு மக்களின் தேவைக்கு ஏற்ப வணிகத்தால் பொருளாதாரம் மேன்பட்டு இடப் பெயர்ந்த மக்களும் காண முடிகிறது. மக்களின் வாழ்வியல் மரபுகளை சார்ந்தும் வணிகம் செய்துள்ளதையும் புதினம் பதிவு செய்துள்ளது.

## துணைநூற்பட்டியல்

1. தொல்காப்பியம், இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை.
2. அஞ்ஞாடி, பூமணி,க்ரியா பதிப்பகம், சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238


# 24. வணிகமும் தமிழும்

**ஷாபினா. ச**
மூன்றாம் ஆண்டு
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
உணவு மற்றும் ஊட்டச்சத்து துறை
Email: sshafina2304@gmail.com

**வெலன்சியா. ஜா**
மூன்றாம் ஆண்டு
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
உணவு மற்றும் ஊட்டச்சத்து துறை

DOI 10.5281/zenodo.16526009.

**Abstract :**

Business is the economic activity of people to fulfill their needs and wants, whether for profit or not. Traders negotiate using money or other exchangeable items. Some economists consider barter to be the earliest stage of trade; however, currencies were used long before the beginning of recorded history. Letters of credit and fictitious currencies have played a major role in facilitating and expanding trade, as they can separate the buyer from the seller or the proceeds. When two traders engage in trade, it is called bilateral trade, and when three or more traders engage in trade, it is called multilateral trade. Trade has developed through four major stages: barter, money, the industrial revolution, and the information technology revolution.

**Keywords :** Business - Economics - Tamil Language & Literature - New Thot

## முன்னுரை:

வணிகம் என்பது மனிதர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான இலாப நோக்கிய அல்லது இலாப நோக்கிய அல்லாத பொருளாதார செயல்பாடாகும். வர்த்தகர்களானவர்கள் பணம் அல்லது மற்ற பரிமாற்றப் பொருள்களைக் கொண்டு பேச்சுவார்த்தை செய்கிறார்கள். சில பொருளாதார ஆய்வாளர்கள் பண்டமாற்றை வர்த்தகத்தின் ஆரம்ப நிலையாகக் கருதுகிறார்கள்; ஆனால், எழுதப்பட்ட வரலாறு தொடங்குவதற்கு முன்பே, நாணயங்கள் அனுபவத்துக்கு வந்துவிட்டன. கடன் கடிதங்கள், பொருளற்ற நாணயங்கள் என்பவை வர்த்தகத்தை எளிதாகவும், விரிவாகவும் செய்வதில் பெரிய பங்கு வகித்துள்ளன, ஏனெனில் வாங்குவதை விற்பாளரிடமிருந்து அல்லது வருவாயில் இருந்து பிரிக்க முடிகிறது. இரண்டு வர்த்தகர்களுக்கிடைப்பு செயல்பாட்டை இருதரப்பு வர்த்தகமாகவும், மூன்று அல்லது அதற்கும் மேற்பட்டவர்களிடையே நடந்தால் பலதரப்பு வர்த்தகமாகவும் அழைக்கிறோம். வணிகம் நான்கு பிரதான வளர்ச்சி கட்டங்களில் வளர்ந்துள்ளது: பண்டமாற்று, பண, கைத்தொழில் புரட்சி, தகவல் தொழில்நுட்ப புரட்சி.

## முதலாளித்துவ வியாபாரம்:

முதல் செலவு (பணம், நேரம், முயற்சி) எங்கே அதிக பண இலாபம் கிடைகின்றதோ அங்கே பணத்தை முதலீடு செய்வதைப் பிரதானமாக மேற்கொள்ளும் வியாபரங்களை முதலாளித்துவ வியாபாரம் எனலாம். வியாபரத்தின் தன்மையையோ, விளைவுகளையோ நோக்காமல் முதலுக்கு அதி உச்ச இலாபத்தைத் தேடுவதே முதலாளித்துவ வியாபாரத்தின் குறிக்கோள். உலகின் பெரிய விற்பனை நிறுவனமான வோல் மார்ட் முதலாளித்துவ வியாபரத்துக்கு ஒரு சிறந்த உதாரணம்.

பொதுவாகத் தரமானப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதன் மூலமாகவோ, அல்லது சேவையை வழங்குவதன் மூலமாகவோ முதலாளித்துவ வியாபரம் இலாபம் ஈட்டுகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

பண இலாபத்தையே ஒரே குறியாகக் கொண்டு இயங்குவதால் வியாபாத்தினுடன் தொடர்புகொண்டிருக்கும் மனிதர்களை, வியாபாரத்தினால் விளையும் கணக்கில் எடுக்க நிர்பந்திக்கப்படாத சூழலியல் விளைவுகளை, வியாபாரம் இயங்கும் சமூகத்தை முதலாளித்துவம் புறக்கணிக்க, கவனத்தில் எடுக்காமல் விட ஏதுவாக இருக்கின்றது.

**தமிழர் வணிகம்:**

சங்ககாலம் முதற்கொண்டு வணிகத்தில் தமிழர் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். "*திரைகடலோடியும் திரவியம் தேடு*" என்பது ஒரு முதுமொழி. இருப்பினும் வணிக சமூகம் பல சமயங்களில் நியாமற்ற முறையில் சுரண்டல் மூலம் செல்வம் ஈட்டி சமூகத்தில் ஏற்ற தாழ்வுகள் அல்லது சமனற்ற போக்கை பெருகச் செய்யும் போது அதனால் பாதிக்கப்பட்டவர்கள் "வர்க்க போராட்டத்தில்" ஈடுபட்டு வணிகரை எதிர்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக "உழவர் சமூகத்தைச் சேர்ந்த அப்பர் தலைமையில் தமிழ் நாட்டில் பொதுமக்கள் செல்வம் நிறைந்த வணிகருக்குகெதிராக திரண்டெழுந்ததை" குறிப்பிடலாம். தொல்காப்பியத்தில் வணிகருக்குரிய ஐந்து தொழில்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன:

- தமக்குரிய நூல்களை ஓதுதல்
- தமக்குரிய யாகங்களைச் செய்தல்
- தாம் பெற்ற பொருட்களை நல்வழியில் ஈதல்
- உழவு செய்வித்தல்
- பசுக்களைக் காத்தல்

என்பனவாம். வணிகர்கள் அரசர்களால் பெரிதும் மதித்துப் பாராட்டப்பட்டனர். வணிகரைப் பாதுகாத்தல் ஒரு நாட்டின் இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதை இலக்கியங்கள் கூறியிருக்கின்றன. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர மன்னனை வாழ்த்தி குமட்டூர்க் கண்ணனார் என்ற புலவர் 'பலவகை உணவுப்பண்டங்களை விற்கும் வணிகருடைய குடிகளைக் காப்பாற்றி வருகின்றாய்' என்று பொருள்பட "கூலம் பகர்நர் குடிபுறந் தராஅ" என்று பாடியிருக்கிறார்.

பழைய காலத்திலயே நம்ம தமிழர்கள் வெளிநாடுகளோட வியாபாரம் செய்து இருந்தார்கள். சங்க காலத்தில, ரோமர், கிரேக்கம் மாதிரியான நாட்டுகாரர்கள் நம்டம் வந்து மசாலா, நூல், பொருள்கள் எல்லாம் வாங்கிட்டு போறாங்கனு நாம பாடல்களில கூட படிச்சிருப்போம்.

அந்த காலத்திலேயே தமிழ்ல வியாபார வார்த்தைகள் இருந்துச்சு - உதாரணத்துக்கு, "சரக்கு", "விலை", "வாங்கு", "விற்கு" போன்ற சொற்கள். இதெல்லாம் நம்ம பழைய தமிழ் நூல்களிலயே இருந்து வந்தது.

**வணிகக் கல்வி:**

வணிகக் கல்வி என்பது ஆஸ்திரேலியா, கனடா, ஹாங்காங், இந்தியா, நைஜீரியா, நேபாளம், அயர்லாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென் ஆப்பிரிக்கா, இலங்கை, ஜிம்பாப்வே, அர்ஜென்டினா, ஸ்வீடன், தான்சானியா, மலேசியா, சாம்பியா மற்றும் ஐக்கிய ராஜ்யம், ஆகிய நாடுகளில் கற்பிக்கப்படும் ஓர் கல்வித் துறை அல்லது கற்கை நெறி ஆகும். அத்துடன் பல்கலைக்கழக அளவிலும் இக்கல்வி நெறி கற்பிக்கப்படுகிறது. கணக்கியல், நிதி, சந்தைப்படுத்தல்,நிறுவனஆய்வுகள் மற்றும் பொருளாதாரம் ஆகிய கூறுகளைக் கொண்டுள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**வணிகக் கல்வி விளையாட்டுகள்:**

வணிகக் கல்வி விளையாட்டுகள் என்பது வணிகத்தைக் கற்பிப்பதற்கான கல்விக் கருவியாகப் பயன்படுத்தப்படும் உருவக விளையாட்டுகளைக் குறிக்கிறது. பொதுவான விளையாட்டுகள், பொது நிர்வாகம், நிதியியல், நிறுவன நடத்தை, மனித வளங்கள் போன்ற பல வணிகப் பயிற்சிகளுக்கு வணிகக் கல்வி விளையாட்டுகள் நடத்தப்படலாம். பெறும்பாலும் வணிக உருவகப்படுத்துதல் என்பது வணிகக் கல்வி விளையாட்டுகளாகவே பயன்படுத்தப்படுகிறது. ஒரு வணிக முறை விளையாட்டு என்பது ஒரு வணிகச் சூழலைக் கொண்ட விளையாட்டு ஆகும். இவ்வகையான விளையாட்டுகள் ஒன்று அல்லது இரண்டு முடிவுகளுக்கு வழிவகுக்கும். வணிகக் கல்வி விளையாட்டுகள் பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் முறையாகப் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக வணிகப் பள்ளிகளிலும், ஆனால் நிர்வாகக் கல்விக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. தொழில் ஒப்புருவாக்கம் என்பது ஒரு புதுமையான கற்றல் முறையாகக் கருதப்படுகிறது. பெம்பாலும் இவை கணினி சார்ந்தவை.

**தனி நபர் நிறுவனத்தின் குணாதிசயங்கள்:**

தனியாள் வணிகத்தின் குணாதிசயங்கள் பின்வருமாறு.

**தனி நபர் உரிமையும் கட்டுப்பாடும்:**

ஒரு தனி நபரால் நடத்தக்கூடிய வியாபார அமைப்பு தனியாள் வணிகமாகும். அவரே இதன் உரிமையாளர். அவர் ஒருவரே தனி உரிமையாளராகவும் மற்றும் வணிகத்தின் தலைவராகவும், யாருடைய குறுக்கீடும் இல்லாமல் சுதந்திரமாக வணிக நடவடிக்கையை மேற்கொள்கிறார். எனவே தனியாள் வணிக அமைப்பில் உரிமையும், கட்டுப்பாடும் தனி நபர் வசமே உள்ளது.

**மூலதனம்:**

தனியாள் வணிகத் தொழிலமைப்பில் ஒரு நபர் மட்டுமே முதலீடு செய்கிறார். தொழிலுக்குத் தேவையான முதலை, தன் சொந்த சேமிப்பிலிருந்து செலுத்துகிறார். அவர் நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ, நிதி நிறுவனங்களிடமோ கடன் பெற்றும் முதலீடு செய்யலாம்.

**வரையறாப் பொறுப்பு:**

தனியாள் வணிகத்தில் உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. இவ்வரையறாப் பொறுப்பினால் தனி வணிகர் தன் வியாபாரக் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்த சொத்துக்களிலிருந்தும் கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும். கடனீந்தோர் உரிமையாளரின் பிற சொத்துக்களையும் பறிமுதல் செய்ய உரிமை பெறுகின்றனர்.

**இலாப நட்டம்:**

வியாபாரத்திலிருந்து கிடைக்கும் முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை தனிநபருக்கே உரியது. இத்தனியாள் வணிகர் இலாபத்தை பிறருடன் பங்கிட்டுக் கொள்ளத் தேவையில்லை. அதுபோலவே நட்டம் ஏற்படுமாயின், அம் முழு நட்டத்தையும் தனி நபரே ஏற்கவேண்டும். எனவே, இலாபமும், நட்டமும் அவரையே சாரும்.

**சட்டத் தனித்துவம் இன்மை:**

தனியாள் வியாபாரத்தில் தனியாள் வணிகமும் வியாபாரமும் ஒன்றாகக் கருதப்படுகின்றன. கூட்டுப்பங்கு நிறுமத்தைப் போல் உரிமையும் நிர்வாகமும்


http://Creativecommons.org//license/by/4.0/.

பிரிக்கப்படவில்லை. உரிமையும் நிர்வாகமும் ஒன்றாகவே கருதப்படுகிறது. யார் உரிமையாளரோ அவரே நிர்வாகத்தையும் மேற்கொள்கிறார்.

**தனிச்சட்டம் இல்லை:**

கூட்டாண்மையை ஒழுங்குபடுத்த இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், கூட்டுப்பங்கு நிறுமத்தை ஒழுங்குபடுத்த இந்திய நிறுமச் சட்டம், கூட்டுறவு சங்கங்களை ஒழுங்குபடுத்த இந்திய கூட்டுறவுச் சட்டம் இருப்பதைப்போல தனி வணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதுமில்லை.

**பதிவு:**

கூட்டாண்மை, நிறுமம் முதலிய அமைப்புகள் அவைகளுக்கான சட்டத்தின்படி பதிவு செய்யப்படுகின்றன. ஆனால் தனி வணிகர் தன் தொழிலைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. பணம் படைத்த எவரும் தனி வணிகத்தைத் தொடங்கலாம். சிலவகைத் தொழில்களை மேற்கொள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சியிடமிருந்து உரிமம் பெற வேண்டியிருக்கும்.

**வாழ்வு:**

கூட்டுப்பங்கு நிறுமங்களைப் போல் தனியாள் வணிகத்திற்கு நீடித்த வாழ்வு கிடையாது. தனியாள் உரிமையரின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும் அவருடைய தொழிலையும் பாதிக்கும். அவருடைய இறப்பு அல்லது வியாபாரம் செய்யும் திறமையை இழத்தல் அல்லது அவருக்கு வாரிசு இல்லாமை முதலியன தனியாள் வணிகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும்.

**எளிமை:**

தனியாள் வணிகத்தைத் தொடங்கலும், கலைத்தலும் எளிது. தனியாள் வணிகத்தைக் கலைக்க சட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டியதில்லை. இதற்கு சிறிய அளவு முயற்சியே போதுமானது.

**உள்ளூர் வியாபாரம்:**

பெரும்பான்மையான தனியாள் வணிகம் குறிப்பிட்ட தெரு, வட்டாரம் அல்லது கிராம் அளவிலேயே நடைபெறுகின்றன. சிலவகைத் தனியாள் வணிகங்கள் கிளைகளுடன் பல்வேறு இடங்களில் நடைபெறுகின்றன.

**சுய வேலைவாய்ப்பு:**

தனியாள் வணிகர் பெரும்பாலும் தனது சொந்த உழைப்பையே வியாபாரத்தில் பயன்படுத்துகிறார். இவர் தேவைப்பட்டால் சில பணியாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார் அல்லது குடும்ப அங்கத்தினர்களைத் துணையாகக் கொண்டு வியாபார நடவடிக்கையை மேற்கொள்கிறார்.

**முடிவுரை:**

தமிழ் மொழியும் வாணிகமும் நம்ம சமூகத்தில் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. வாணிகம் நம்ம வாழ்கையில் தினமும் நடைபெறும் ஒரு செயல். அது பொருளாதார வளர்ச்சிக்காக மட்டுமல்ல, சமூக ஒற்றுமைக்கும் உதவுகிறது. தமிழ் மொழி இதை மேலும் எளிமையாக்குகிறது. தமிழில் வியாபாரம் செய்தால் மக்கள் நம்பிக்கையுடன் அதை ஏற்கிறார்கள். பழைய காலத்திலிருந்து நம்மூர் வியாபாரம் செய்வதில் முன்னோடியாக இருந்தது. அந்த வரலாறு இன்று வரை தொடர்கிறது. நவீன உலகத்திலும் தமிழ் வழி வாணிகம் வளர்ந்து கொண்டிருக்கிறது. இணையத்தில் கூட தமிழில் வியாபாரம் நடக்கிறது


http://Creativecommons.org//license/by/4.0/.

என்பதுதான் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. இனி வரப்போகும் நாள்களில் வாணிகம் வளர தமிழ் மொழி ஒரு பெரிய ஆதாரமாக இருக்கும். அதனால நாம் தமிழை மதித்து பேண வேண்டும். தமிழ் வழியில் வியாபாரம் செய்வதை ஊக்குவிக்கணும். அப்போ தான் நம்ம கலாசாரம், மொழி, மற்றும் பொருளாதாரம் மூன்றுமே ஒன்றாக வளரும்.

**துணைமை நின்றவை :**


- https://www.tamilvu.org/
- https://investingintamilnadu.com/ - வணிகம் சார்ந்த கட்டுரைகள்
- தொல்காப்பியம், புறநானூறு, சிலப்பதிகாரம் - தமிழ் சங்க இலக்கியக் குறிப்புகள்
- https://www.investopedia.com/terms/b/business.asp
- https://telibrary.com/tamil-trading/
- https://data.vikaspedia.in/short/lc?k=Got7Ss1H1C6yYr15YvKawg



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 25. தாலாட்டுப் பாடல்களில் தொழில் மற்றும் வணிகம் குறித்த பதிவுகள்

**கி. ராஜ்குமார்,**
**மலை மேடு,அன்னை இந்திரா குடியிருப்பு,**
**அலவாக்கோட்டை,சிவகங்கை மாவட்டம்.630553**
kumar1990svg@gmail.com - 9655280231.

DOI 10.5281/zenodo.16526102.

**Abstract:**

The purpose of this article is to study and explain the professions, objects used, and trade recorded in lullabies sung by mothers in the Tamil language.

**Keywords:** Folk Literature - Folk Songs - Business - Village Peoples

## முன்னுரை:

எழுதா இலக்கியமாக இருந்து வந்த நாட்டுப்புற இலக்கியம் செவ்வியல் இலக்கியத்தை விட குறைவு படாத இலக்கியத் தன்மையைப் பெற்று மிளிர்கிறது என்பது அனைவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய கருத்தாகும். இன்னும் சொல்லப்போனால் செவ்வியல் இலக்கியத்தை விட பழமையானதும் அவ்வகை இலக்கியங்களின் தோற்றுவாயாகவும் விளங்கக்கூடியது நாட்டுப்புற இலக்கியமாகும். தமிழ் மொழியில் காணப்படும் நாட்டுப்புற இலக்கியங்களுள் ஒன்றான தாலாட்டுப் பாடல்களில் பதிவாகியுள்ள தொழில்கள் வணிகம் மக்கள் பயன்படுத்திய பொருள்கள் ஆகியவற்றை ஆராய்ந்து விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தாலாட்டுப்பாடல்கள் அறிமுகம்

தாலாட்டு என்பது தால்+ ஆட்டு என்றவிருச் சொற்களின் கூட்டுச் சொல்லாகும். தால் என்பது நாக்கு, ஆட்டு- அசைத்தல் நாக்கினை அசைத்தலால் பெறலாகிய ஓசை இன்பத்தை வெளிப்படுத்துதல் ஆகும். எனவே தாலாட்டு என்பது முதலில் குழந்தைகளை உறங்க வைக்கத்தக்க இனிய ஓசைகளாக வெளிப்பட்டு பிறகு இனிய சந்தம் உடைய பாடல்களாகத் தாய்மார்களின் வாழ்வியல் கூறுகளை வெளிப் படுத்துவனவாக மாற்றமடைந்து இன்று தனி இலக்கியமாகவும் வளர்ச்சி பெற்று உள்ளது.

## தாலாட்டுப் பாடல்களின் தன்மை:

தாலாட்டுப் பாடல்கள் இயற்றப்பட்டதன் நோக்கம் குழந்தைகளின் அழுகுரலை அடக்கி அவர்களைத் தூங்க வைப்பதே ஆகும். குழந்தைகளின் அழுகையை அமர்த்துவதற்குத் தொட்டிலை நீட்டி ஆட்டுவது, அவர்கள் குரலை விட சத்தமாக குரல் ஒலி எழுப்புவது போன்ற முறைகள் இருப்பினும் தன்னைப் பெற்ற தாய்மார்களின் குரல் ஒலியே குழந்தைகளுக்கு பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதாக அமைகிறது. முதலில் குழந்தை தன் தாயைத் தொடு உணர்வு மற்றும் வாசனையால் உணர முற்பட்டு பிறகு புலன் உணர்வுகளின் வளர்ச்சியால் தாயின் குரலையே முதன் முதலில் அடையாளம் கண்டு கொள்கிறது. எனவே வெறுமனே குரல் எழுப்புவதை விட அக்குரலை பெண்மையின் சிறப்பாகிய தாய்மையின் இனிய இசையாக மாற்றுவது குழந்தைக்கு மன அமைதியையும் பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்துகிறது. குழந்தைகளைத் தூங்க வைப்பதற்காகவும் அவர்களின் அழுகையை அமர்த்துவதற்குமான நோக்கத்தை உடைய தாலாட்டு பாடல்களில் பெற்றெடுத்த தாயின்


http://Creativecommons.org//license/by/4.0/.

குடும்பப் பெருமைகள், கணவன் இல்லத்துப் பெருமைகள் உறவுமுறைகள் குழந்தைக்குச் செய்யப்படும் சிறப்புகள், கொஞ்சல்கள் இவைகளே பாடுபொருளாக உள்ளன. இவற்றினூடே காணக்கிடக்கும் தொழில் வணிகம் உள்ளிட்ட செய்திகளில் உள்ள மிகைத்தன்மையைப் புறந்தள்ளி தாலாட்டுகள் மேற்கொண்டு இருக்கக்கூடிய பதிவுகளை மட்டும் எடுத்துரைப்பது சிறப்புடைதாக இருக்கும்.

**தொழில்கள்:**

தாலாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் அன்றைய காலத்தில் பெண்கள் செய்து வந்த விவசாய வேலைகள் கட்டுமானப் பணிகள் முதலியவற்றைப் பற்றியே பெரும்பாலும் பேசுவனாக உள்ளன.

**கதிர் அறுக்கும் நேரத்திலே**
**கட்டியுன்னைத் தோளிலிட்டால்**
**மதியத்து வெயிலிலே**
**மயக்கமுந் தான் வருகாதோ?**
**வயலிலே வேலை செய்வேன்**
**வரப்பினிலே போட்டிடுவேன்!**
**வயலை விட்டு ஏறுமுன்னம்**
**வாய்விட்டு அழுவாயோ!**
**சித்தாளு வேலைசெய்வேன்**
**கொத்தனார் கோபிப்பார்**
**கொத்தனார் கோபித்தால்**
**குழந்தை மனம் கோணாதோ!"**

மேற்கு மாவட்டங்களில் பஞ்சாலைகளின் வளர்ச்சியும் அதனால் பெறலாகும் பணிகளையும் பதிவு செய்துள்ளது. கீழே இப்பாடலில் வரும் பஞ்சுடைக்கும் கோல் என்பது நெசவுத் தொழிலோடு தொடர்புடையது.

**"பாட்டி அடித்தாலோ**
**பஞ்சுடைக்கும் கோலாலே"**

மர வேலைகள் பொன் வேலைகள் குறித்தும் காண முடிகிறது.

**“ஏழுதச்சன் ஆசாரி**
**இழைப்பு இழைக்கும் கம்மாளர்”**

மீன்பிடித்தல், குத்தகை எடுத்தல், சந்தைகளில் வணிகம் செய்தல், அரசு வேலை போன்ற தொழில்கள் செய்ததையும் அரசுக்கு வரி கட்டியதையும் கீழ்க்கணும் தாலாட்டுப் பாடல் பதிவு செய்துள்ளது.

**அயிரை மீனும் ஆரமீனும்- கண்ணே**
**அம்புட்டுதாம் அப்பனுக்கு**
**வாளை மீனும் வழலை மீனும்- கண்ணாட்டி**
**வித விதமா அம்புட்டுச்சாம்**
**அரண்மனைக்கு ஆயிரமாம்**
**ஆயிரமும் கொண்டு போய்- கண்ணாட்டி**


http://Creativecommons.org//license/by/4.0/.

அப்பன் விற்று வீடு வர

........................

அயலூரு சந்தையிலே- கண்ணே நான்
ஆறு மீனை விற்றுப் போட்டேன்
அரைச்சவரன் கொண்டு போய்- கண்ணே அதை
அரை மூடியாய்ச் செய்யச் சொன்னேன்
அரை மூடியை அரைக்குப் போட்டு- கண்ணே நான்
அழகு பார்த்தேன்...

................................

அத்திமரம் குத்தகையாம்
ஐந்துலட்சம் சம்பளமாம்
சாமத்தலை முழுக்காம்- உங்கப்பாவுக்குச்
சர்க்கார் உத்தியோகமாம்.
(அரைக்கு - இடுப்புக்கு)

வரப்பிழுத்தல் (வரப்புக் கட்டுதல்) வயல்களுக்கு இடையே வரப்பு இழுக்கும் வேலை

"அச்சடிக்கப் பொன்விளைய
ஆதிச்சார் உன்னாடு"
அச்சடிக்க- செய்வரம்பு கட்ட (அச்சுக்கட்டின நிலம்)

**வணிகச் செய்திகள்:**

"திரைகடல் ஓடி திரவியம் தேடு" எனும் பழமொழிக்கு ஏற்ப கடல் கடந்தும் வணிக நோக்கத்துக்காக பயணம் செய்ததைத் தாலாட்டுப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

"தென் கடல் மாணிக்கம்
திரட்டி அடுப்பாக்கி
வடகடல் மாணிக்கம்
வாரி உமிபரப்பி"

"வட கடல் முத்தை
வாரி உமி கூட்டி
தென் கடல் மாணிக்கம்
திரட்டி அடுப்பாக்கி
வெண்கலப் பானை
விளக்கி அடுப்பில் வைத்துச்
சந்தனக்கட்டை
தறிச்சு அடுப்பில் வைத்து"

"சதுரகிரி மலை ஏறிச்
சாதிலிங்கக் கட்டை வெட்டி
ஈழத்துக் கப்பலிலே
ஏற்றி வரும் தேக்கு மரம்"


http://Creativecommons.org//license/by/4.0/.

இலங்கையிலிருந்து தேக்கு மரங்கள் ஏற்றி வந்ததனை பதிவு செய்துள்ளார்.

**"கொழும்புல கூடாரம் உங்க மாமன்**
**கொத்தமல்லி யாவாரம்( வியாபாரம்)**
**கொத்தமல்லி வித்துனக்கு**
**கொலுசு பண்ணி வாராராம்"**

போன்ற பாடல்களின் மூலம் இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையே வணிகத் தொடர்பு இருந்தது குறித்தும் அவ்வணிகம் மக்களுடனான வாழ்வியலுடனான நெருக்கத்தையும் பதிவு செய்துள்ளது.

**உள் நாட்டு வணிகம்:**

**"காசியிலே பட்டெடுத்துக்**
**கப்பலைப் போல் தொட்டி கட்டித்"**
**"காஞ்சிபுரத் தெண்ணெய்- என் கண்ணே உன்**
**கண்ணைக் கரிக்கும் என்று**
**சேலத்து எண்ணெய்க்கு- உங்களம்மான்**
**சீட்டெழுதி விட்டாரோ?"**

வளமான நிலம் இருந்தால்தான் வணிகம் மேம்படும். அத்தகைய வளத்திற்கு காரணமான ஆறுகள், மலைகள் நீர் நிலைகள், குளம், வாய்க்கால் குறித்தும் தாலாட்டு பாடல்களை காண முடிகிறது. வைகை ஆறு, பாலாறு, வெள்ளிமலை, சென்னிமலை, சிவன்மலை, குடகு மலை, விறலி மலை, கல்லு மழை, அண்ணாமலை போன்றவையும் குறிக்கப்படுகின்றன.

**அளவை முறைகள்:**

**"உழக்குத் தினை விதைத்து- வள்ளி**
**ஓடிக் கிளிவிரட்டி**
**நாழித் தினைவிதைத்து- வள்ளி**
**நடந்து கிளி விரட்டி**
**குறுணித் தினை விதைத்து- வள்ளி**
**கூவிக் கிளிவிரட்டி**
**பதக்குத் தினை விதைத்து- வள்ளி**
**பாடிக் கிளி விரட்டி"**
**"நாழிச் சிறு சலங்கை**
**நல்ல பவன் பொற்சலங்கை**
**உழக்குச் சிறு சலங்கை**
**ஒசத்தியுள்ள பொற்சலங்கை"**

வாருதல், அள்ளுதல், பிடித்தல், கொத்து, சரம் முதலியவற்றையும் அளவையாக கொண்டிருந்தனர்.

எண் பெயர்களான ஏழு, பத்து, 90, ஆயிரம், என என் பெயர்களும் அளவையாக கொண்டிருந்தனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**வணிகப் பொருள்கள்:**

சட்டை, சந்தணம், வெற்றிலை, சால்வை, சுண்ணாம்பு, மஞ்சள், மரிக்கொழுந்து, அரிசி, நெல், தினை, மிளகுச் சம்பா, உள்ளி( வெங்காயம்), அவரை, அம்புமணி,மிளகு, இஞ்சி, உப்பு, வெல்லம், சர்க்கரை,எள், தேங்காய், ஆடை, களிப்பாக்கு, எண்ணெய், துப்பட்டா, அரைஞாண், பட்டு, கோடி( புதிய உடை), சங்கு, கடுகு, இரும்பு, வெள்ளி மற்றும் தங்கத்தால் ஆன பொருள்கள், தேக்கு மரம், சாதிலிங்கக் கட்டை, ஏலம், கிராம்பு போன்றவை தாலாட்டுப் பாடல்களில் காணப்படும் வணிகப் பொருள்களாகும்

**"ஏலங் கிராம்பும்**
**இளங்கொடிக்கால் வெற்றிலையும்**
**சாதிக் களிப்பாக்கும்**
**சங்கு வெள்ளைச் சுண்ணாம்பும்**
**அத்தனையும் கொண்டு உன்னை**
**அறியவந்தார் அம்மான்மார்"**

**அணிகலன்கள்:**

காப்பு, வளையல், வாளி( காதணி), சிமிக்கி, சங்கிலி, தங்க வடம், பொற்கடுக்கன், பொன் உருமால், தண்டை, பாதசரம், குன்றுமணி, போன்றவை தாலாட்டுப் பாடல்களில் காணப்படும் அணிகலன்கள் ஆகும்.

**இடப் பொருள்கள்:**

சில ஊர்கள் சில பொருட்களுக்குப் பெயர் பெற்று விளங்கும். அவ்வகையில் அன்றைய காலத்தில் பெயர் பெற்று விளங்கிய ஊர்களையும் பொருட்களையும் குறித்து தாலாட்டு பாடல் பதிவு செய்கிறது.

**"கொல்லத்து வெல்லமும்**
**கோதில்லாச் சர்க்கரையும்**
**எள்ளுங் கழுவி விட்டு**
**இளந்தேங்காய் கீறிவிட்டு"**

**"காலை ரயில் ஏறிக்**
**கல்கத்தா போயிறங்கி**
**கடைக்குக் கடைபார்த்துக்**
**கல்லிழைத்த சங்கெடுத்துச்"**

**செவிவழிச் செய்தி:**

அன்றைய காலத்தில் மக்களிடையே புழக்கத்தில் இருந்த செவி வழிச் செய்திகளைத் தாய்மார்கள் தங்களது பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

**" வடக்கே வெகு தூரம்**
**வளருதாம் கல் மூங்கில்**
**வீமனுக்கு வில்லாக**
**விசயனுக்கு அம்பாக- என்"**

**இடைத்தரகர்:**

பொருள்களுக்கு உரிமையானவனோ அல்லது வாங்குபவனோ விலை நிர்ணயிக்க முடியாது. அவர்களுக்கு இடையில் தரகு வேலை செய்பவர்கள் அன்றைய காலத்திலும்


http://Creativecommons.org//license/by/4.0/.

இருந்திருக்கிறார்கள் அதனை ஒரு தொழிலாகவும் கொண்டிருந்தனர் என்பதைத் தாலாட்டுப் பாடல்கள் பதிவு செய்கிறது.

**"மானா மதுரையிலே**
**மாடுவிற்கும் சந்தையிலே**
**மாடு விலை கூற வந்த**
**மந்திரியோ உங்களம்மான்"**

**பதுக்குதல்:**

நாட்டில் காணப்படும் உணவுப் பஞ்சம் ஏற்படுவதற்கான முதன்மை காரணம் உணவுப் பொருள்களைப் பதுக்குதலாகும். பொருள்களின் தேவை மற்றும் மதிப்பை உயர்த்தி அதிகப்படியான லாபம் ஈட்ட வேண்டும் என்ற ஒற்றைக் குறிக்கோளோடு சிலர் சந்தைக்கு வரவிடாமல் பொருள்களைப் பதுக்கி வைத்திருந்து சிறிது சிறிதாக வெளியிடுவது பதுக்குதலாகும். இவ்வகையில் பொருள்களைப் பதுக்குவது குறித்தும் அதனால் ஏற்படும் பஞ்சம் ஏழ்மை நிலை இவற்றைத் தாலாட்டுப் பாடல் தன் போக்கில் பதிவு செய்கிறது.

**"பச்சரிசி சோளம்**
**பாதி நாள் பட்டினி தான்**
**பருத்தி விதை இல்லையடா**
**பசுபாலு தரலையடா**
**ஆட்டுப்பால் ஊட்டியுனை**
**அதிகரிக்கப் பார்த்தாலும்**
**ஆடு கடிக்கும் மரம்**
**அத்தனையும் மொட்டையடா**
**பிள்ளைப்பால் ஊட்டியுனைப்**
**போசனைகள் செய்திடவே**
**கொள்ளை யுத்தம் பஞ்சங்**
**குரங்காகிப் போனேண்டா**
**நெல்லைப் பதுக்கி வைத்து**
**நிட்டூரம் பண்ணிடுவோன்**
**கொள்ளை வழி போகாமல்**
**குடிசை வழி வந்தாயோ"**

**முடிவுரை:**

தாலாட்டு பாடல்களில் தாய்மார்களின் எதிர்பார்ப்பு, கற்பனை, ஏக்கம், உண்மை, மகிழ்ச்சி, உறவுமுறை, அன்பு போன்ற பலவற்றை கலந்து பாடப்படுகிறது. இவ்வகை பாடல்களில் அவர்கள் காலத்தில் நிகழ்ந்த தொழில் வணிகம் குறித்த செய்திகள் பதிவாகியுள்ளமை கண்டறிந்து இக்கட்டுரை வெளிப்படுத்தி உள்ளது .

**பார்வை நூல்கள்:**

1. தாலாட்டு தொகுப்பு நூல், தொகுப்பாசிரியர்: 'தமிழண்ணல்' டாக்டர் இராம . பெரியகருப்பன், முன்னாள் தமிழியல் துறைத் தலைவர், இந்திய மொழிப் புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம். திருந்திய பதிப்பு: டிசம்பர் 1991, செல்வி பதிப்பகம், காரைக்குடி-623 001.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 26. சங்க இலக்கியங்கள் கூறும் வணிகத்தின் சிறப்புகள்

மனோஜ்.பி, ஆகாஷ்.ர
டிஜிடல் (ம)சைபர் தடயவியல் அறிவியல்,
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருமலையாம்பாளையம், கோயம்புத்தூர்

DOI 10.5281/zenodo.16526199.

**Abstract :**

Tamil Nadu has witnessed tremendous growth in trade since the Sangam period. During the Sangam period, Tamils were mainly engaged in agriculture, maritime trade and metallurgy. During that period, ancient Tamil Nadu was a bustling maritime trading center. Through this, there were trade relations with India, China, Arab and Roman empires. During the medieval period, trade flourished during the rule of Tamil Nadu clans like Pandyas, choliyas and Cheras. Maritime and land trade was prevalent with Sri Lanka, South Asian countries, Asia and Iran. Tamil Nadu also played an important role in trade, industry and agriculture during the British period. In the 20th century, cities like Chennai became critical trade centers. This study examines in detail the commercial history of Tamil Nadu, its major commodities and markets, the changes that occurred over time and the present day situation.

**Key Words :** Sangam Literature - Business - Specification -Pandians - Cherans - Cholains

## சங்ககால மக்களின் வாழ்க்கை

சங்க காலத்தைய வாணிகத்தைப் பற்றி பேசும்போது, அந்தக் காலத்து மக்களின் வாழ்க்கை நிலையும் முக்கியமாகக் கருதப்பட வேண்டும். சங்க காலம் என்பது கடைச் சங்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இது கி.பி. 2500-க்கு முந்தையது. அந்தக் காலத்துத் தமிழர்களின் வாழ்க்கை தற்போது உள்ள நாகரிக வாழ்க்கையைவிட மிக மாறுபட்டது. இன்றைய நாகரிக வசதிகள் அப்போது இல்லாமல் இருந்தன. உலகத்தின் பல பகுதிகளிலும் மக்கள் வாழ்க்கை மிகவும் எளிமையானதாகவும், ஒரு கட்டத்தில் பின்தங்கியதாகவும் இருந்தது. அவர்கள் வசித்த இடங்களின் இயற்கை சூழ்நிலைகளின் அடிப்படையில், அவர்களது வாழ்க்கை உயர்ந்தோ அல்லது தாழ்ந்தோ இருந்தது

- **குறிஞ்சி நிலம்**: மலைகள் மற்றும் குன்றுகள் சூழ்ந்த பகுதிகள். இங்கிருந்த மக்கள் பாறைகள், காடுகள், குன்றுகள் வழியே வாழ்ந்து வந்தார்கள்.
- **முல்லை நிலம்**: மலைத்தொடருக்கு கீழே உள்ள காடுகள் மற்றும் புல்வெளிகள் இங்கு வாழ்ந்த மக்கள் இயற்கையோடு அமைதி நிலைபோல் வாழ்ந்தவர்கள்.
- **மருத நிலம்**: ஆறுகள் பாயும் மற்றும் வளமான வயல்கள் உள்ள சமவெளிகள் இங்கிருந்த மக்கள் உழவிலும் வாணிகத்திலும் ஈடுபட்டு நலமாக வாழ்ந்தார்கள்.
- **நெய்தல் நிலம்**: கடற்கரையோரம் இருந்த பகுதிகள். சங்க காலத்துத் தமிழகத்துக்கு நீண்ட கடற்கரை இருந்தது. இங்கு வாழ்ந்தவர்கள் பெரும்பாலும் மீன்வளத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் கடலில் சென்று மீன்பிடித்து கடின உழைப்பால் வாழ்க்கையை நடத்தினர்.
- **பாலை நிலம்**: இயற்கை வளமின்றி, உலர்ந்த வரண்ட நிலம். இங்கிருந்த வாழ்க்கை மிகவும் கடினமானது. சிலர் பயணிக்கும்போது இடைக்காலமாக இங்குப் தங்கியிருந்தாலும், இயல்பாக மனித வாழ்வுக்கு ஏற்ற இடமல்ல.

இவ்வாறு, இயற்கையின் அமைப்பின் அடிப்படையில் சங்க காலத் தமிழர் வாழ்க்கை வேறுபாடுகளுடன் காணப்பட்டது


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

**சங்க இலக்கியங்களின் சான்றுகள்**

1. **பாலுக்குப் பதிலாக தானியம்:**
   - இடையர்கள் பாலுக்கு பதிலாக அரிசி, தினை போன்ற தானியங்களைப் பெற்றனர். (குறுந்தொகை 221)
2. **தயிர், மோர் → தானியம்:**
   - ஆயர்கள் தயிர், வெண்ணெய், நெய் தயாரித்து தானியத்துக்கு மாற்றினர். (பெரும்பாண் 155-163)
3. **மீன் → நெல்:**
   - பாணர்கள், பரதவர்கள் மீனைப் பிடித்து நெல்லுக்குப் பண்டமாற்று செய்தனர். (ஐங்குறு, நற்றிணை)
4. **உப்பு → நெல்:**
   - நெய்தல் நில மக்கள் உப்பை உப்புவாணிகர் நெல்லுக்குப் பண்டமாற்று செய்தனர். (நற்றிணை, பட்டினப்பாலை)
5. **மலர்கள் → நெல்:**
   - பெண்கள் பூ விற்று நெல்லுக்குப் பண்ட மாற்று செய்தனர். (நற்றிணை 97, 118)
6. **யானைத் தந்தம் → மது, உணவு:**
   - வேடர்கள் தந்தங்களைக் கொடுத்து மது, உணவுகளைப் பெற்றனர். (அகம், குறுந்தொகை, பொருநராற்றுப்படை)

**காசுகள் (நாணயங்கள்)**

- சங்க காலத்திலே **செம்பு, வெள்ளி, பொன் நாணயங்கள்** (காசுகள்) பயன்படுத்தப்பட்டன.
- நாணயங்கள் பொதுவாக **நெல்லிக்காய்போல உருண்டு**, சிறிது தட்டையானவை.
- இந்தக் காசுகள் **விலையுயர்ந்த பொருட்கள் வாங்க** பயன்படுத்தப்பட்டன.

**காசுகளுக்கான இலக்கிய சான்றுகள்**

- **பொற்காசு** களைப் பெண்கள் அணிகலனாக அணிந்தனர். (அகம் 75, ஐங்குறு, புறநானூறு)
- **"காணம்"** எனப்படும் காசுகள் பரிசாக வழங்கப்பட்டன. (பதிற்றுப்பத்து)
- **ஈயக் காசுகள்**: செங்கம் பகுதியில் கிடைத்துள்ளன; பண்டைய தமிழ்நாட்டில் இருந்ததற்கான சான்றுகள்.
- **யவன தேச நாணயங்கள்** (உரோமிய நாணயங்கள்) கடல் வாணிகம் மூலம் வந்தன.

**தமிழ் நாட்டு வாணிகம்**

தமிழர் வரலாற்றில் வாணிகத்துக்கு மிக முக்கிய இடம் உண்டு. கடல், தரை மற்றும் நடுக்கடல் வழியாக வாணிகம் செய்த தமிழர்கள், தமிழ்நாட்டின் மூன்று பக்கங்களிலும் கடல் இருந்ததனால் இயற்கையாகவே கடற்பயணம் மற்றும் கப்பல் வாணிகத்தில் தொன்றுதொட்டு ஈடுபட்டிருந்தார்கள்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**கடல் வாணிகம்:**

1. **பழங்காலக் காலத்திலிருந்தே** :
   - சங்க காலத் தொடக்கத்தில் இருந்தே தமிழர்கள் கடலில் பயணம் செய்து வாணிகம் செய்தனர்.
   - கரிகால் சோழனின் முன்னோன் கடலாற்றில் நாவாய் ஓட்டிய செய்தியும் கூறப்படுகிறது.
2. **கப்பல் தொழில்நுட்பம்**:
   - மரக்கலங்கள் மூலம் நாவிகர், மாநாவிகர் என்ற பெயர்களுடன் கடலுக்குப் பயணம் செய்தனர்.
   - தொல்காப்பியர் - "முன்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை" - பெண்கள் கடல்பயணத்தில் சேர்வது தவிர்க்கப்பட்டதைக் கூறுகிறார்.
3. **விளம்பரம் பெற்ற துறைமுகங்கள்**:
   - பூம்புகார், தொண்டி, கொற்கை போன்ற துறைமுகங்கள் வாணிக மையங்களாக இருந்தன.
   - கிழக்குக் கடல் வழியாக சாவகம் (இந்தோனேஷியா), கலிங்கம் (ஒடிசா), வங்கம், சீனா போன்ற நாடுகளுடன் வாணிகம்.

**நடுக்கடல் வாணிகம்:**

1. **சாவகம் (கிழக்கிந்திய தீவுகள்)**
   - சுமாத்ரா, ஜாவா, ஹல்மஹீரா உள்ளிட்ட தீவுகளுக்கு தமிழகத்திலிருந்து கப்பல்கள் சென்றன.
   - வாசனைப் பொருட்கள், மிளகு, சந்தனம், பவழம் போன்றவற்றுடன் சீன பட்டுத்துணி இந்தியாவுக்கு வந்தது.
2. **வணிகச் சாத்தின் சாதனைகள்**:

   இலங்கையில் அநுராதபுரத்தில் வணிக நிலையம் (கி.மு. 2ஆம் நூற்றாண்டு).

**தமிழ்நாட்டின் கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்கள்**

1. **கொல்லத்துறை**
   - வடபெண்ணையாற்றின் தென்கரையில் இருந்தது.
   - தொண்டை நாட்டின் முக்கிய துறைமுகமாக இருந்தது.
2. **எயிற்பட்டினம் (சோ பட்டினம் / மரக்காணம்)**
   - சோ/எயில் என்பதற்குப் பொருள் மதில். மதிலால் சூழப்பட்ட நகரம்.
   - பெரிப்ளூஸ் என்னும் கிரேக்க நூலில் “சோபட்மா” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
   - இலக்கியங்களில், இந்த துறைமுகத்தில் அகில் மரக்கட்டை, குதிரைகள், வடஇந்தியப் பொருட்கள், பரதர் எனப்படும் கப்பல் ஓட்டிகள் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.
3. **அரிக்கமேடு**
   - புதுச்சேரிக்கு தெற்கே அமைந்திருந்தது.
   - பெரிப்ளூஸ் நூலில் “Poduke” என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.

- 1945-ல் நடந்த அகழ்வாராய்ச்சியில் ரோமக் குடிசைகள், மதுச்சாடிகள், யவனர் விளக்குகள், பிராமி எழுத்துகளுடன் கூடிய பானைகள் கண்டெடுக்கப்பட்டன.

**தமிழகத்தின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்கள்**

**மங்களூர்**

சங்க காலத்தில் தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இருந்த துளு நாட்டின் முக்கிய துறைமுகம். நேத்திராவதி ஆறு விழும் இடத்தில் அமைந்தது. இதனை பெரிப்ளூஸ் மகனூர் என்று அழைத்தார். இங்கு யவன வாணிகர்கள் வந்து வணிகம் செய்தனர்.

**நறவு**

துளு நாட்டுக்குத் தெற்கே இருந்த துறைமுகம். சங்கர் ஆட்சியின்கீழ் இருந்தது. யவனர்கள் இதனை 'நவ்ரா' என அழைத்தனர்.

**தொண்டி**

சேர நாட்டின் மேற்குக் கடற்கரையில் இருந்த முக்கிய துறைமுகம். புலவர் அம்மூவனார் தொண்டிப்பத்து என பாடிய இடம் இது. யவனர்கள் இதனை 'தைண்டிஸ்' என்று அழைத்தனர்.

**முடிவுரை:**

சங்ககாலத்தில் வணிகம் தமிழரின் வாழ்க்கையில் முக்கிய இடம் பெற்றது. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வணிகம் துறைமுகங்கள் வழியாக விரிந்து செழித்தது. வணிகர்கள் நேர்மையுடன், தரநிலையுடன், மக்கள் நலனை நோக்கி பணியாற்றினர். வரிவிதி, பரிவர்த்தனை முறைகள், மற்றும் சமூக ஒற்றுமை ஆகியவை வணிக வளர்ச்சிக்கு துணையாக இருந்தன. சங்க இலக்கியங்கள் வழியாக அந்தக் காலத்திய வணிகச் சூழல் மிக தெளிவாகக் காணப்படுகின்றது. இதனால், சங்க கால தமிழர் வணிகத்தையும் பண்பாட்டையும் இணைத்து வளர்த்த மாகாண மக்கள் எனவும் கூறலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. சங்ககாலத் தமிழர்களின் வணிக நடைமுறைகள் - விளக்கம்: அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் உள்ள வணிகச் செயல்கள், வியாபாரிகளின் பண்புகள். - https://restpublisher.com/pdf/1.pdf
2. துறைமுகங்கள் மற்றும் கடல் வாணிகம் - விளக்கம்: காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, முசிரி போன்ற இடங்களில் நடைபெற்ற கடல் வணிகம். - https://telibrary.com/ta/tamil-trade-maritime-trade/
3. சுங்க வசூல் மற்றும் வரி அமைப்புகள் - விளக்கம்: நகர நுழைவுச் சுங்கங்கள், வணிக வட்டாரங்களில் வரி வசூல்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 27. புறநானூறு மற்றும் வாணிகம்: ஓர் ஆய்வு

**அப்ரினா பானு .அ, மயூரப்பிரியா .க.சௌ**
**ஆடை வடிவமைப்பு மற்றும் ஃபேஷன்**
**நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமலையாம்பாளையம்,கோயம்புத்தூர்**
DOI 10.5281/zenodo.16526507.

**Abstract:**

Purananuru is an excellent Sangam literature that clearly shows the life of ancient Tamils. The lifestyle, culture and economic practices of ancient Tamils are described through 400 payals in it. In particular, the payals on trade (vanikam) are very important.

**Key Words :** Puranaanooru - Sangam Literature _ Business - Research

## முன்னுரை :

புறநானூறில் வாணிகம் பண்பாட்டு, பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது. உப்பு வாணிகம், கப்பல் வாணிகம், கல் வாணிகம், மீன் வாணிகம் போன்றவை பரிமாற்ற முறையாக இருந்தன. வாணிகம் என்பது பொருள் பரிமாற்றம் மட்டுமல்ல, சமூக உறவுகளும், ஒழுக்கமும், அறத்தாலும் கூடிய ஒரு முழுமையான நிகழ்வாக இருந்தது.

## 1. புறநானூறு

- புறநானூறு பண்டைய தமிழரின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் சங்க இலக்கியமாகும்.
- இதில் உள்ள பாயல்கள் ஒருவரின் தனிப்பட்ட உணர்வுகளையும், சமூக நிகழ்வுகளையும் விவரிக்கின்றன.
- புறநானூறு வாழ்ந்த காலத்தின் பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைகளை காட்டுகிறது.

## 2. வாணிகம் (வியாபாரம்)

- புறநானூறில் வாணிகம் ஒரு முக்கியமான செயலாகக் குறிப்பிடப்படுகிறது.
- பண்டமாற்று முறையில் வியாபாரம் நடந்தது; நாணயமில்லாத பண்பாட்டு சூழல்.
- பண்டைத் தமிழர்கள் உற்பத்திப் பொருட்களை பரிமாறி வியாபாரம் செய்தனர்.

## 3. பண்டையமாற்று முறை (Barter System)

- பணம் இல்லாமல், பொருள்களை நேரடியாக மாற்றிக் கொள்வது வழக்கம்.
- மீன், உப்பு, கல், மரங்கள் போன்றவற்றை பரிமாற்றம் செய்தனர்.
- பண்டையமாற்று முறையிலேயே வாணிகம் பரப்பானது.

## 4. வாணிகப் பரிசீலனை

- வாணிகம் என்பது பொருள் பரிமாற்றம் அல்ல, சமூக நெறிகள் மற்றும் ஒழுக்கங்களுடன் கூடியது.
- வாணிகர்கள் தங்கள் வியாபாரத்தில் நம்பிக்கையுடன் இருந்தனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.

5. **திருக்குறள் - வாணிகக் குறள்**
   - வாணிகத்தை பற்றிய குறள்கள் பண்டையமாற்று முறையை மற்றும் வியாபார நெறிமுறைகளை விளக்குகின்றன.
6. **உமணர் (உப்பு வாணிகர்) மற்றும் உப்பு வாணிகம்**
   - உப்பு வாணிகம் பண்டைய தமிழகம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் முக்கியமானதாக இருந்தது.
   - வண்டிகள் மூலம் உப்பை கொண்டு செல்லும் வாணிகம் முக்கிய பங்கு வகித்தது.
   - உப்பு வாணிகர்கள் குழுக்களாக செயல்பட்டனர்.
7. **மரக்கை வாணிகம் (கப்பல் வியாபாரம்)**
   - கப்பல் மூலம் மேக்கை நாடுகளுடன் வாணிகம் நடந்தது.
   - புறநானூறில் கப்பல் வாணிகம் பற்றிய குறிப்புகள் பல உள்ளன.
8. **கல் வாணிகம் மற்றும் மீன் வாணிகம்**
   - கல் பொருட்கள் மற்றும் மீன் வாணிகமும் பண்டமாற்று முறையில் நடைபெற்றது.
   - மீன் வாணிகம் புறநானூறில் அழகாக விவரிக்கப்பட்டுள்ளது.
9. **வாணிகப் பபாருட்கள் மற்றும் உற்பத்தி பொருட்கள்**
   - தமிழர் உற்பத்தி செய்த பல பொருட்கள் வாணிகத்திற்கு வந்தன.
   - உற்பத்திப் பொருட்கள் மற்ற பகுதிகளுக்கு பரிமாறப்பட்டன.
10. **சமுதாய வளம் மற்றும் பழமையான வாணிகம்**
    - வாணிகம் சமூக வளத்தை உருவாக்கியது.
    - பழமையான வாணிக முறைகள் வாழ்வியல் மற்றும் பண்பாட்டை மேம்படுத்தின.
11. **சங்க இலக்கியங்கள் மற்றும் இயற்கை இடங்கள்**
    - புறநானூறு போன்ற சங்க இலக்கியங்கள் பண்டைத் தமிழர் இயற்கையுடன் தொடர்பை வெளிப்படுத்துகின்றன.
    - குறிஞ்சி, பனையதல், முல்டை, மருதம் போன்ற இயற்கை இடங்கள் வாணிகத்தில் முக்கியம்.

**பழங்காலத் துறைமுகப் பட்டினங்கள்**

பழங்காலத் தமிழர் தரைவழியும் கடல்வழியுமாக இந்தியாவின் பல பகுதிகளுக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று வாணிகம் செய்தனர். உஞ்சை, கலிங்கப்பட்டினம், காசி, பாடலி போன்ற நகரங்களோடு, கடலுக்கு அப்பாற்பட்ட காழகம் (பர்மா), அருமணவன், தக்கோலம், கிடாரம், சாவகம் போன்ற நாடுகளுக்கும் தமிழ் வாணிகர்கள் சென்றனர். கிமு 2-ஆம் நூற்றாண்டில் தமிழ் வாணிகர்கள் இலங்கையில் அநுராதபுரத்தில் வாணிகம் செய்தனர் என்பது அங்கு கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துக்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறே, அயல் நாடு வாணிகரும் தமிழகத்துக்கு வந்து வாணிகம் செய்தனர். காவிரிப்பூம்பட்டினம் போன்ற துறைமுகங்களில் பல்வேறு மொழிபேசும் மக்கள் தங்கி இருந்ததாக சிலப்பதிகாரம், பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.


http://Creativecommons.org//license/by/4.0/.

**நிறைவு:**

புறநானூறு பண்டைத் தமிழரின் வாணிக பண்பாடுகளை, பொருளாதார வளர்ச்சியை நன்றாக விளக்கும் சங்க இலக்கியமாகும். இதன் மூலம் பண்டைய தமிழகம் வளமிக்க, ஒழுங்கமைக்கப்பட்ட வாணிக மண்டலமாக இருந்தது என்பது தெளிவாக தெரிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. சங்ககாலத் தமிழர்களின் வணிக நடைமுறைகள் விளக்கம்: அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் உள்ள வணிகச் செயல்கள், வியாபாரிகளின் பண்புகள். - https://restpublisher.com/pdf/1.pdf
2. துறைமுகங்கள் மற்றும் கடல் வாணிகம் - விளக்கம்: காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, முசிரி போன்ற இடங்களில் நடைபெற்ற கடல் வணிகம். - https://telibrary.com/ta/tamil-trade-maritime-trade/
3. சுங்க வசூல் மற்றும் வரி அமைப்புகள் - விளக்கம்: நகர நுழைவுச் சுங்கங்கள், வணிக வட்டாரங்களில் வரி வசூல்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 28. பெருமாள் முருகன் சிறுகதைகளில் மனித உறவுகள்

**திரு.நா.கிருஷ்ணராஜ்,**
**துறைத்தலைவர், தமிழ்த்துறை**
**சுப்ரமண்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,தாழையூத்து ,பழனி.**
DOI 10.5281/zenodo.16526289.

**Abstract:**

Since the dawn of humanity, relationships have been a means of connecting people to each other, keeping them away from isolation, respecting their feelings, and uniting them with society. If the plot of literature is a dot, then human relationships can be said to be those that have the power to connect dots and turn them into a circle. In this way, this article is a study of human relationships as seen in the short stories of Perumal Murugan.

**Key Words :** Perumal murugan - Short Stories - Human Relationship - Isolation.

## முன்னுரை

மனித இனம் தோன்றிய காலம் தொட்டு ஒருவருக்கொருவர் சார்ந்தும் மனிதனைத் தனிமையில் இருந்து விலக்கியும் அவனது உணர்வுகளுக்கு மதிப்பளித்து சமூகத்துடன் ஒன்ற வைப்பது உறவுகளாகும். இலக்கியங்களின் கதைக்கரு புள்ளி என்றால் புள்ளியை இணைத்து வட்டமாக மாற்றக்கூடிய ஆற்றல் உடையவை மனித உறவுகள் எனலாம். அந்த வகையில் பெருமாள் முருகனின் சிறுகதைகளில் காணலாகும் மனித உறவுகளைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## உறவுகள்

உயிர்களுள் முதன்மையானதும் மேன்மையானதும் மனித இனமே என்பதை மறுக்கலாகாது. பறவைகள், விலங்குகள் தம் சந்ததிகள் தோன்றி, பறக்கவும் நடக்கவும் ஆரம்பித்த உடனே அவைகளுக்கான தொடர்பு முடிந்து விடும். உயிரினங்கள் தோன்றியது தொட்டு சந்ததிகளுடன் சேர்ந்து வாழ்கின்ற ஒரே இனம் மனித இனம்தான். மனித இனம் சேர்ந்து வாழ்வதற்கான முதன்மையான காரணம் அவர்களுக்கு இடையே நிலவு வரும் உறவு முறைதான். குழந்தைகள் உலகைப் புரிந்தவுடன் அவர்களை விட்டு வேறு வேறு துணைகளைத் தேடிக் கொள்கின்றனர் பெரும்பாலான மேலைநாட்டினர். குடும்பம் என்ற அமைப்பிற்கு அடிநாதமான உறவுகளோடு சேர்ந்து வாழ்கின்றவர்கள் நாம். மனிதர்கள் சாதி, இனம், மொழி என்ற ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் குழுக்களாக வாழ்கின்றனர். அவ்வாறு குழுக்களாக வாழ்வதற்கு அவர்களிடையே தொன்று தொட்டு நிலவி வரும் உறவின்முறை தான் காரணம். “சமுதாய அமைப்போடு தொடர்புடைய திருமணம் குடும்பம், மரபுமுறை, குடிவழி, உறவுக்குழுக்கள் போன்ற பல கூறுகளை புரிந்து கொள்வதால் உறவுமுறை ஆய்வுகளைப் போன்று வேறு எந்த ஆய்வுகளும் பயன் தருவதில்லை.”1

உண்மையான அன்பினை அடிப்படையாகக் கொண்டு தோன்றுவன உறவுகள். விட்டுக்கொடுத்தல், உதவுதல், நம்பிக்கை, நல்லெண்ணம் போன்றவற்றினால் தான் உறவுகள் சிறப்படைந்து மென்மேலும் பெருகுகின்றன. கூட்டிற்குள் அடைபட்ட சிறைப்பறவையாக இல்லாமல் சுதந்திரப் பறவையாக எல்லா இடங்களிலும் உறவுகள் தோன்றுகின்றன.

## குடும்பமும் உறவுகளும்

சமூகத்தின் பழமையான அமைப்பே குடும்பம் ஆகும். குடும்பம் எல்லாச் சமூகத்தினருக்கும் உரிய பொதுவான ஒரு அமைப்பாகும். கணவன் மனைவி குழந்தைகள்


http://Creativecommons.org//license/by/4.0/.

இருப்பது குடும்பம் ஆகும். குடும்பம் என்பதன் அடையாளமே உறவுகள் தான். கணவன்,மனைவி,குழந்தைகள் மட்டுமின்றி இன்ன பிற உறவுகளும் குடும்பத்தில் இருக்கும். குடும்பங்களில் உறவுகளும் உறவுகளில் குடும்பங்களும் என்பது போன்ற இரண்டும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டு இருக்கும். உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குடும்பம் பெருகுவது போல் உறவுகளும் பெருகுவதை மறுக்க முடியாது. குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் மூலக் காரணமக விளங்குவது திருமணம் ஆகும். திருமணமே குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் இடையே நல்ல இணைப்பை ஏற்படுத்தி புதிய உறவு முறைகளையும் தோற்றுவிக்கிறது.

"குடும்பம் என்பது ஒரு சிறிய குழுவாகவும் இருக்கலாம்; பலர் அடங்கிய ஒரு பெரும் குழுவாகவும் இருக்கலாம். இதில் குறைந்த அளவு ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இடம்பெற வேண்டும். இவ்விருவரும் அவர்களுடைய சமுதாயம் ஏற்றுக் கொண்டுள்ள திருமணம் முறைப்படி மனம் செய்து கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு ஓர் ஆணும் பெண்ணும் கணவன் மனைவி என்ற உறவை ஏற்படுத்திக் கொள்ளும் பொழுது தான் அவர்கள் ஒரு குடும்பமாக அமைகிறார்கள். அவர்கள் ஒரே கூரையின் கீழ் உண்டு வாழ்ந்தாலும் காலத்தின் கட்டாயத்தால் தனித்தனியாக உண்டு வாழ்ந்தாலும் கணவன் மனைவி என்னும் பிணைப்பைக் கொண்டுள்ளவரை அவர்கள் குடும்பம் என்னும் அமைப்பைக் கொண்டவர்களேயாவர்"2 என்ற கூற்று குடும்பம் பற்றியும் அதற்கு ஆதாரமான சமுதாயம் ஏற்றுக் கொண்ட திருமணத்தின் அங்கீகாரத்தையும் உணர்த்துகிறது

**குடும்ப உறவுகள்**

உறவுகளை உற்பத்தி உறவுகள், உடமை உறவுகள் என இரு வகையாகப் பிரிக்கலாம். உற்பத்தி உறவு என்பது உழைப்பினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கக்கூடியதாகும். உடைமை உறவு என்பது உடமையை அடிப்படையாகக் கொண்டு அமையக்கூடியதாகும். இவ்விரு வகை உறவுகளில் உடமை உறவு என்பது குடும்ப உறவையே குறிக்கும். மானிடவியலாளர்கள் குடும்ப உறவை மண உறவு, இரத்த உறவு. புனைவியல் உறவு என்று வகைப்படுத்துகின்றனர். ஆண் - பெண் இருவரும் திருமணம் செய்து அதன் மூலம் இருவருக்கும் கிடைக்கக்கூடிய உறவுகள் மண உறவு எனப்படும். குடும்பத்தில் குழந்தைகள் பிறக்கும்போது பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் குழந்தைகளின் குழந்தைகளுக்கும் இடையே தோன்றும் உறவு இரத்த உறவு ஆகும். குழந்தைகள் இல்லாத தம்பதிகள் குழந்தையைத் தத்தெடுத்து வளர்ப்பது புனைவியல் உறவு என்று அழைக்கப்படும். இவ்வாறான குடும்ப உறவுகளில் உள்ளவர்களுக்கிடையே நிலவும் தொடர்புகளைக் கொண்டு பக்தவச்சல பாரதி, "முதல் நிலை உறவினர்கள்(Primari Kin), இரண்டாம் நிலை உறவினர்கள் (Secondry Kin)மூன்றாம் நிலை உறவினர்கள்(Tertiary Kin) என்றும் இதன் பின்னரும் விரிந்து நிற்பவர்கள் நான்கு ஐந்து தூரத்து உறவினர்கள் என்றும் வகைப்படுத்துவர் என்கிறார்."3 பெருமாள் முருகனின் சிறுகதைகளில் இரத்த உறவுகள், தோழமை உறவுகள், முதலாளி தொழிலாளி போன்ற பல்வேறு உறவுகள் இடம் பெற்றுள்ளன.

**முதல்நிலை உறவுகள்**

ஒருவருக்கு எந்தவிதமான இடைத்தொடர்புகள் இன்றி நேரடியான உறவுகள் அனைத்தும் முதல் நிலை உறவுகள் ஆக ஒருவரின் பிறந்த குடும்பத்து உறவினர்களும் மனம் செய்து கொள்ளும் மனைவியும் முதல் நிலை உறவுகள் அவர் பெற்றோர்கள் சகோதரர்கள் சகோதரிகள் மனைவி குழந்தைகள் ஆகியோர் முதல் நிலை உறவுகள் எனப்படுகின்றனர் கணவன் மனைவி தந்தை மகன் தந்தை மகள் தாய் மகன் தாய் மகள்


http://Creativecommons.org//license/by/4.0/.

அக்கா தம்பி அண்ணன் தம்பி அண்ணன் தங்கை ஆகிய முதல்நிலை உறவுகள் பெருமாள் முருகன் சிறுகதைகளில் இடம்பெறுகின்றனர்.

**கணவன் மனைவி**

குடும்பத்திற்கு அடிப்படையாக அமைவது கணவன் - மனைவி உறவே ஆகும். கணவன்,மனைவி,குழந்தைகள் ஆகியோர் அடங்கியது குடும்பம் ஆகும். ஒரே சமூகத்தைச் சார்ந்த பருவ வயது அடைந்த ஆணும் பெண்ணும் தம் சமூக மரபுப்படி திருமணம் செய்யும்போது கணவன் - மனைவி உறவு ஏற்படுகிறது. குடும்பத்தின் அடிப்படையாகத் திகழ்வது கணவனே ஆவர். மனைவி வீட்டில் இருந்து பணிகளைச் செய்து இல்லறத்தை நடத்தி. கணவன் வெளியே சென்று பொருளீட்டி வருவது நம் சமூகத்தின் மரபாக இருந்து வந்தது.

**“ஈன்று புறந்தருதல் எந்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே”4**

என்ற அடிகளும் பெண் இல்லறத்தை நடத்துவதையும் அதே சமூகத்தில் இயங்குவதையும் உணர்த்துகிறது. ஆண்களே உயர்ந்தவர்கள் எனக் கூறுகின்ற கருத்துகள் எல்லாம் சமுதாயத்தில் ஆண்கள் முதன்மை பெற்றிருந்த தந்தை வழிச் சமூகம் இருந்த காலகட்டங்களில் தோன்றியனவாகும். குடும்பத்தின் ஆணிவேராகத் திகழும் கணவன் - மனைவி உறவு ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதில்தான் அமைகின்றது. இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டும் விட்டுக் கொடுத்தும் தம் குழந்தைகளுக்காக வாழ முற்படும்போது தான் வாழ்க்கை சிறப்படைகிறது.

‘நீர் விளையாட்டு’ சிறுகதத் தொகுப்பில் கணவன் - மனைவி உறவு குறித்து மூன்று கதைகள் இடம் பெற்றுள்ளன. இசை , பீவாங்கியின் ஓலம் ஆகிய கதைகளில் கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாமையைப் புலப்படுத்துகிறது. கிராமத்திலிருந்து நகர வாழ்க்கைக்கு வந்த மனைவியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் தனிமையில் இருக்கும் அவளுக்கு ஆறுதல் கூறாமல் காலையில் வேலைக்குச் சென்று மாலையில் திரும்புகிறான் கணவன். கழிவறைத் தொட்டியில் கால் தவறி விழுந்து இறந்து விடுகிறாள் மனைவி. இத்தகைய உறவினை கூறுவதே ‘பீவாங்கியின் ஓலம்’ கதையாகும். சிறிய நாற்காலிக்காக கணவனுக்கும் மனைவிக்கும் தன்முனைப்பு ஏற்பட்டு, இறுதியில் கணவன் அமர்ந்திருந்த நாற்காலியை மனைவி எடுத்துச் செல்கிறாள். இத்தகைய தன்முனைப்பை ’இசை நாற்காலி’ கதை கூறுகிறது.

“திடீரென்று எழுந்தாள், அவன் தலைமயிரைப் பிடித்துத் தூக்கி நாற்காலியை உருவினாள். ஆய் போன குழந்தையைத் தூக்கிக் கொள்வது போல் அதை எடுத்துச் சமையல் அறைக்குள் கொண்டு போய்த் திண்டு மேல் போட்டுக்கொண்டாள். அவனும் நண்பனும் விக்கி தின்கின்றார்கள் பின் கீழே உட்கார்ந்து மீண்டும் ஆட்டத்தை தொடர்ந்தார்கள். அப்புறம் ஒருநாளும் அவள் நாற்காலியை அவன் காணவே இல்லை.”5 என்பது கணவன் மனைவி இருவரிடம் புரிதலும் விட்டுக் கொடுத்து வாழும் தன்மையை இல்லாமையை எடுத்துக்காட்டுகிறது.

தவறு செய்யும் கணவனைத் தடுத்து நிறுத்தியும் அவனை அத்தவறிலிருந்து திருத்தும் விதமாகவும் கணவன் - மனைவி உறவு, வேப்பெண்ணெய்க் கலயம் தொகுப்பிலுள்ள. ‘மன்னா சமுத்திரம்’ கதை அமைந்துள்ளது. “அவன் கால்களைப் பற்றிக் கொண்ட அவள் வேண்டாம் விடமாட்டேன் என்றாள் அவனை அசைவிடாமல் கால்களை பிடித்து இருந்தால் மீண்டும் அவள் மயிரை பற்றி தூக்கி எடுத்து எறிந்தான்.”6


http://Creativecommons.org//license/by/4.0/.

**தந்தை- மகன் உறவு**

திருமணமாகிக் குழந்தைகள் பெறும் போதுதான் அவர்கள் பெற்றோர்கள் என அழைக்கப்படுகின்றனர். மனித வாழ்வில் எத்தகைய அரிய செல்வங்களைப் பெற்றாலும் அவற்றினும் அரியது மக்கச் செல்வமே ஆகும். குழந்தைகள் இல்லை என்றால் அவர்களுடைய வாழ்க்கை பயனற்றதாகும். ஒருவரின் சந்ததி என்பது ஆண் குழந்தைகளைக் கொண்டே மதிப்பிடப்படும். தந்தைக்கு அடுத்து மகனே அக்குடும்பத் தலைவனாகத் திகழ்வான். ஒரு குடும்பத்தை வழிநடத்துகின்ற ஆளுமையும் நிர்வகிக்கும் திறமையும் குடும்பத் தலைவனுக்கு இருக்க வேண்டும். அதோடு குழந்தைகளிடம் கண்டிப்புடனும் அவர்களிடம் அன்பு செலுத்தி அரவணைத்துச் செல்கின்ற பண்பும் தந்தையிடம் இருக்க வேண்டும். இத்தன்மையிலேயே பெருமாள் முருகனின் சிறுகதைகள் தந்தை - மகன் உறவு நிலவுகிறது. இத்தகைய உறவு குறித்த கதைகள் குறைந்த அளவே உள்ளன. வேப்பெண்ணெய்க்கலயம் சிறுகதைத் தொகுப்பில் மட்டும் தந்தை மகன் உறவு குறித்து இரண்டு கதைகள் இடம்பெற்றுள்ளன. இரண்டு கதைகளிலும் தந்தை மகனை நல்வழிப்படுத்தும் நிலையில் இல்லை. மாறாக மகன் செய்த தீய செயலுக்குக் காரணமாக இருந்து அவர்களின் வாழ்க்கையை அழித்துவிட்ட நிலையில் தான் தந்தை இருக்கின்றார். 'நிலவு ததும்பும் சாலை' என்ற கதையில் தந்தையைக் கண்டு பயந்து அவரிடம் எதிர்த்து ஒன்று பேசாமல் இருக்கிறான் மகன். தந்தையின் மீது கொண்ட கோபமும் தந்தையின் முகமும் மகனின் மனதில் ஆழமாய்ப் பதிந்து இருப்பதை "எத்தனை போதையிலும் உணர்வோடு இருக்க என்னால் முடியும். இப்போது அவர் முகம் தெளிவாயிற்று இல்லை இது அவன் முகம் இல்லை என் வீடு முழுவதும் என் முன் உட்கார்ந்திருப்பதாக சட்டென உணர்ந்தேன். இது என் அப்பன் முகம் எதற்காக இந்த நேரத்தில் என் அப்பனின் முகம்?"[7] என்ற கூற்று உணர்த்துகிறது.

**தந்தை - மகள்**

குடும்பத்தின் தலைவனான தந்தை பொருள் ஈட்டுபவராக விளங்குவார். குடும்பத்தினர் அனைவரும் தந்தையின் வருமானத்தையே நம்பி வாழ்கின்றனர். குடும்பப் பொறுப்புகள் அனைத்தும் தந்தையே சாரும். "மகளின் திருமணம் வரை மகளைக் காப்பாற்றுவது தேவையான வரதட்சணையின் வழி தகுதியான கணவனை அவளுக்குத் தேடித் தருவது ஆகியவை தந்தையின் கடமைகளாக கருதப்படுகின்றன. இக்கடமைகளைத் தந்தை சரிவர நிறைவேற்றினால், அங்கு தந்தை மகள் உறவு பாதிக்கப்படுகின்றது."[8] பெண்களையும் அவர்களுடைய உறுப்புகளையும் சிந்தித்துக் கொண்டே பாலியல் சிந்தனையில் இருக்கிறான் லாரி ஓட்டுநர் பணி பரியும் தந்தை. திருமணத்திற்கு முன்பும் திருமணம் ஆகி பெண் குழந்தைகள் இரண்டு பிறந்த பின்னும் தவறான பாதையில் உறவையே விரும்புகிறான். பெண்கள் என்றாலே அவருடைய மார்புகளையும் உடல் உறுப்புகளையும் வயது வேறுபாடு இன்றித் தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பது அவனது இயல்பாயிற்று. வீட்டிற்குச் சென்றால், தன் மகள்களையும் தவறாகப் பார்க்கச் சொல்லும் என்பதால் வீட்டிற்குச் செல்லாமல் வாழ்கிறான். குழந்தைகள் அவனைக் காண வந்தன; அப்போது, "திடுக்கிட்டு எழுந்து கதவைத் தள்ளிக்கொண்டு ஓடி ஒளிந்து கொள்ள முயன்றான். அதற்குள் அப்பா என்று கத்திக்கொண்டு அவனுடைய இரண்டு பெண் குழந்தைகளும் முலைகள் குலுங்க அவனை நோக்கி வந்து கொண்டிருந்தனர்"[9] என்பது தந்தையின் மனநிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

**தாய் - மகன் உறவு**

பெண்கள் திருமணம் ஆகிக் குழந்தை பெற்ற பின் தாய் என்ற உன்னது நிலையை அடைகிறார்கள். குழந்தையை நல்ல நிலையில் பெற்றுக் கொடுப்பது தாயின் கடமையாகும்


http://Creativecommons.org//license/by/4.0/.

குழந்தையின் பண்பு வளர்ச்சி முன்னேற்றம் இவற்றில் தாயின் பங்கும் அளவற்றது. குழந்தைக்கு கிடைக்கும் பெருமையும் சிறுமையும் தாயின் வளர்ப்பினைப் பொறுத்ததே என்றால் அது மிகையன்று.

**“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே பின்பு நல்லவன் ஆவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே”**[10]

பிள்ளைகளைத் தந்தையை விட, தாய் தான் நன்கு புரிந்தவள். ஆண் மக்கள் தாயிடமும் பெண்மக்கள் தந்தையிடமே அதிக அன்பு வைத்திருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. இரவில் ஏதோ ஒரு பெயரைச் சொல்லி அழுத குழந்தையை அம்மா, அப்பா, பாட்டடி யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. குழந்தை அன்று முழுதும் செய்த செயல்களை நினைவு கூர்ந்து, அது கேட்ட பொருளைத் தாய் புரிந்து கொள்வதாக தாய் - மகன் உறவு, ‘பெரிதும் பெரிது’ கதையில் உள்ளது. பெருமாள் முருகன் சிறுகதைகளில் தாய் - மகன் உறவு சிறப்பாக இடம் பெற்றுள்ளது. தாயின் பேச்சுக்கு உடன்படும் மகன்களையும், மகன் கோரும் கருத்துக்களை ஏற்கும் மனநிலையில் தாயின் உறவினையும் படைத்துள்ளார் ஆசிரியர். அதோடு இயல்பு வாழ்க்கையில் தாய் - மகன் உறவில் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளையும் தம் கதைகளில் புகுத்தியுள்ளார்.

**தாய்-மகள் உறவு**

ஒரு பெண்ணின் மனதை ஒரு பெண் தான் புரிந்து கொள்ள முடியும் என்பது போல் குழந்தையாக இருந்து தாயாக வாழ்ந்த தாயினால்தான் மகளின் மனநிலையை, தாய் என்ற நிலையிலும் பெண்ணே என்ற நிலையிலும் நன்கு புரிந்து கொள்ள முடியும். ‘தாயைப் போல் பிள்ளை நூலை போல் சேலை’ என்ற பழமொழியே தாய் மகளின் உறவிற்குத் தக்கதொரு சான்றாகும்.

பெண்ணாகப் பிறந்தவர்கள் ஒருநாள் திருமணமாகிப் புகுந்த வீடு செல்ல வேண்டும் என்பது எழுதப்படாத சட்டம். அப்படிச் செல்லும் பெண்ணின் எல்லாப் பழக்கங்களுக்கும் தாய் தான் பொறுப்பாகிறார். மகளின் உடல்நிலையிலும் தாய் என்ற நிலையில் அதிகக் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயமும் தாய்க்கு இருக்கிறது. மழை பெய்கிறது மகள் மழையில் நனைந்தால் ஏதாவது துன்பம் வந்துவிடுமோ என்றும் அவளுக்கு ஏதாவது உடல் நலமின்மை ஏற்பட்டால் கணவன் தன்னைத்தான் கேட்பான் என்றும் கருதுகிறாள் தாய். மழையில் நனையாமல் வீட்டிற்குள் மகளை இழுத்துச் செல்வது தாயின் அன்பினையும் கடமையினையும் உணர்த்துகிறது. “வெளியே போ காலம் முறுக்கிறேன் மழையில் நனைந்தா நாளைக்கு சளி புடிச்சிக்கிச்சுன்னா ஆறு உன் எழவு எடுக்கிறது உங்கப்பன் கத்தரதுக்குப் பதில் சொல்லவே வாய் வராது பேசாம போய் புத்தகத்தை எடுத்து வைத்த படி”[11] என்கிறது மழைக்குருவி சிறுகதை.

**அண்ணன் - தம்பி உறவு**

ஒரே பெற்றோரின் வயிற்றில் பிறந்த ஆண் மக்களில் மூத்தவன் அண்ணன் இளையவன் தம்பி என்பர். இவ்விருவருள் அண்ணன்தான் விட்டுக் கொடுப்பவனாகவும் பொறுமையுடையவனாகவும் இருக்க வேண்டும். இவ்விருவரிடையே போட்டி, பொறாமை ஏற்பட்டாலும் மூத்தவனே விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். இவர்களிடையே இந்த உறவு திருமணம் வரை அன்புடையதாகவும் திருமணத்திற்குப் பின்பு சொத்துகளின் பொருட்டு அன்பில்லாமலும் இருக்கும். உண்மை உறவுகளில் சொத்துகளே பிரிவினையை ஏற்படுத்துவதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ‘அஞ்சு வயது வரை அண்ணன் தம்பி பத்து வயசுல பங்காளி’ என்ற பழமொழி அண்ணன் தம்பியின் உறவின் உண்மைத் தன்மையைச்


http://Creativecommons.org//license/by/4.0/.

சுட்டிக் காட்டுகிறது அண்ணன் தம்பி இருவருக்குமே அம்மா தின்பண்டங்களை வாங்கிக் கொடுத்தாலும் அண்ணன் அன்றே முழுவதும் தின்று விடுவான்; தம்பி பாதுகாப்பாக வைத்திருப்பான். தம்பி வைத்திருப்பதை அண்ணன் திருடி எடுத்துத் தின்று விடுவதாக, 'சின்ன கருப்பசாமி' சிறுகதை படைக்கப்பட்டுள்ளது. இக்கதையில் அண்ணன் தன் தம்பியை ஏமாற்றுவதையும் அரிய முடிகிறது. "யாருக்கும் தெரியாமல் அவனுடைய தின்பண்டங்களை அபகரிக்கும் வித்தைகள் சிலவற்றை அண்ணன் தெரிந்திருந்தான். அருமையான வில் ஒன்றையோ, நுங்கு வண்டி ஒன்றையோ செய்து கொண்டு முன்னாள் இப்படியும் அப்படியும் போக்குக் காட்டுவான்."12

**இரண்டாம் - நிலை உறவினர்கள்**

முதல் நிலை உறவினர்களாகிய தாய், தந்தை, சகோதரன், சகோதரி, மகன், மகள், மனைவி இவர்கள் வாயிலாக அமையும் உறவுகள் இரண்டாம் நிலை உறவினர்கள் ஆவர். ஓர் உறவினர் வழியாக அமைகின்ற பாட்டன், பாட்டி, தாய்மாமன், அத்தை, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி போன்ற உறவினர்கள் இரண்டாம் நிலை உறவினர்கள். பெருமாள் முருகனின் சிறுகதைகளில் அத்தை, அண்ணன் மகன், மாமியார், மருமகள், அண்ணி, நாத்தனார் முதலான இரண்டாம் நிலை உறவுகள் காணப்படுகின்றனர்.

**அத்தை - அண்ணன் மகன் உறவு**

தந்தையின் உடன் பிறந்த சகோதரியையும் அம்மாவின் உடன் பிறந்த சகோதரனின் மனைவியையும் அத்தை என்பார்கள். தந்தையின் சகோதிரியாக இருந்தால் அண்ணனின் குழந்தைகள் மீது அதிக அன்பு கொள்வார்கள். தாய்மாமன் மனைவியாக இருந்தால் நாத்தனாரின் குழந்தைகளின் மீது அதிக அளவில் அன்பு இருக்காது. மாறாக வெறுப்பும் கோபமும் தோன்றுவதற்குக் கூட வாய்ப்புகள் உண்டு.

அத்தை - அண்ணன் மகன் உறவு பற்றிய இரு கதைகளில், 'காக்கை' என்ற கதை அத்தையின் உண்மையான, மாறாத அன்பைப் புலப்படுத்துகிறது. 'அத்தை வீட்டுக் கோடை' என்ற கதை அத்தையின் அன்பு நாட்கள் செல்லச் செல்ல மாறி, இறுதியில் வெறுப்பானதைப் புலப்படுத்துகிறது. சிறுவயதில் அத்தையின் வீட்டிற்கு வந்த அண்ணன் மகனைக் காக்கை கொத்துகிறது. பல ஆண்டுகள் கழித்துத் திருமணப் பத்திரிகை கொண்டு வந்தவன் அத்தையைக் காண்பதற்குக் காட்டிற்குச் செல்கிறான். அங்கு, காக்கை இருப்பதைப் பார்க்கிறான்; தன்னைச் சிறு வயதில் கொத்திய காக்கையோ என்ற அச்சம் கொள்கிறான். காக்கையைக் கொன்றுவிட்டதாகச் சொல்கிற போது, அத்தையின் அன்பை அறிய முடிகிறது.

**மாமியார் - மருமகள் உறவு**

அத்தை, மாமியார் உறவுகளை குறிக்கும் சொற்கள் அப்பாவின் உடன் பிறந்த சகோதரிகள், கணவன், மனைவியின் தாய் ஆகியோரையும் மருமகள் எனும் சொல் உடன் பிறந்த பெண்ணின் சகோதரப் பிள்ளைகளையும் மகனின் மனைவி ஆகியோரைக் குறித்து வழங்கினாலும் கணவனின் தாய், மகனின் மனைவி என்ற முறையிலேயே மாமியார் - மருமகள் உறவு காணப்படுகிறது. இவ்விரு உறவும் சமூகமாகவும் ஒற்றுமையாகவும் இருந்தால்தான் குடும்பம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். பெரும்பாலான குடும்பங்களின் முதல் பிரச்சினையாக இருப்பது மாமியார் மருமகள் ஒற்றுமையின்மையே ஆகும்

**அண்ணி - நாத்தனார் உறவு**

மாமியார் மருமகள் உறவுக்கு அடுத்த நிலையில் குடும்பத்தில் சுமூகமாக இருக்க வேண்டிய உறவு அண்ணி - நாத்தனார் உறவு. கணவனின் அக்கா, தங்கை நாத்தனார் என்றும்


http://Creativecommons.org//license/by/4.0/.

அண்ணனின் மனைவி அண்ணி என்றும் அழைக்கப்படுவர். இவ்விரு உறவுகளுக்கு இடையே ஒற்றுமையும் விட்டுக் கொடுத்தாலும் இல்லாவிட்டால் குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட்டு உறவில் விரிசல் ஏற்படுவதை மறுக்கலாகாது. பெருமாள் முருகன் சிறுகதைகளில் அண்ணி - நாத்தனார் உறவு சமூகமாகவும் புரிதல் உணர்வோடும் காணப்படுகிறது.

**முடிவுரை**

மனிதர்கள் ஒருவர் இருவர் சார்ந்து வாழ்வதற்கு அடிப்படையாக இருப்பது உறவுகளே ஆகும். அவனது தனிமை துயரை நீக்கி சமூகத்தோடு ஒன்றி வாழ வைப்பதும் உறவுகளே.

பல்வகையான உயிர்களில் மனித இனம் ஒன்றுதான் தம் உறவுகளோடு என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. குடும்பம் என்ற அமைப்புதான் உறவுகளை உருவாக்கி மனித இனத்தை அடையாளப்படுத்துகிறது.உடைமை உறவு, உற்பத்தி உறவு என்ற இரு வகைகளில் உடைமை உறவு என்பது குடும்ப உறவுகளைக் குறிக்கும். குடும்ப உறவினை மண உறவு, இரத்த உறவு என்று வகைப்படுத்தலாம்.பெருமாள் முருகனின் சிறுகதைகளில் இரத்த உறவுகள், தோழமை உறவுகள், முதலாளி தொழிலாளி போன்ற பல்வேறு வகையான உறவுகள் காணப்படுகின்றன. மனிதர்களின் வாழ்வில் காணப்படுகின்ற உண்மையான உறவு நிலைகளையே கதைகளில் சித்தரித்துள்ளார் படைப்பாளர்.இரத்த உறவுகளை முதல் நிலை உறவினர்கள், இரண்டாம் நிலை உறவினர்கள், மூன்றாம் நிலை உறவினர்கள் என்று பாகுபடுத்தலாம்.

மனிதர்கள் ஒருவருக்கொருவர் எந்தவிதமான இடைத்தொடர்பும் இன்றி நேரடியாக ஏற்பட்ட உறவு முதல் நிலை உறவு ஆகும். அவ்வுறவு உடையவர்கள் முதல்நிலை உறவினர்கள் எனப்படுவர். கணவன் - மனைவி ,தந்தை - மகன், தந்தை - மகள், தாய் - மகள், சகோதர - சகோதரி போன்ற முதல்நிலை உறவினர்கள் பெருமாள் முருகனின் சிறுகதைகளில் இடம் பெற்றுள்ளனர். முதல்நிலை உறவினர்களின் வழியாக அமைகின்ற உறவினர்கள் இரண்டாம் நிலை உறவினர்கள் ஆவர். அத்தை - அண்ணன் மகன், மாமியார் - மருமகள், அண்ணி - நாத்தனார் போன்ற இரண்டாம் நிலை உறவினர்கள் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ளனர். இரத்த வகை உறவினர்கள் ஒருவருக்கொருவர் நம் வாழ்வில் காணப்படுகின்ற அன்பு, கோபம், வெறுப்பு, வெறுப்பு, விட்டுக் கொடுத்தல், போட்டி, பொறாமை, குற்றம் கூறுதல் போன்ற குணங்களோடு உயிருள்ள மாந்தர்களாகவே உலவி வருகின்றனர்.

**அடிக்குறிப்புகள்**

1. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.416.
2. மேலது,ப.351-352.
3. மேலது,ப.420.
4. புறம்,பா.312.
5. பெருமாள் முருகன்,நீர்விளையாட்டு,ப.77.
6. பெருமாள்முருகன்,வேப்பெண்ணெய்கலயம்,பக்.215 - 216
7. மேலது, பக்.156 - 157.
8. மேலது.
9. மேலது,ப.134
10. நீதிக்குத் தலைவணங்கு - திரைப்படம்.
11. பெருமாள் முருகன், வேப்பெண்ணெய்கலயம்,ப.106.
12. பெருமாள் முருகன்,பீக்கதைகள்,ப.122.


http://Creativecommons.org//license/by/4.0/.

# 29.தமிழ் இலக்கியத்தில் வணிகக் கூறுகள்

**ரித்திஷ் பா.ர, ரித்திகா ர.**
**குற்றவியல் துறை,**
**நேரு கலை அறிவியல் கல்லூரி,**
**திருமலையாம்பாளையம், கோயம்புத்தூர்.**

DOI 10.5281/zenodo.16526589.

**Abstract :**

The Tamils of the Sangam period were excellent in trade. They traded with foreign countries by sea using wooden vessels like navai and bengal. They exported goods like pepper, pearls, and silk to countries like Greece, Rome, and Egypt, and imported goods like horses and glass. Ports, trading posts, and the role of merchants played an important role in the economic development of the Tamils. This article explains in detail the maritime trade of the Sangam period, trade methods, barter system, and the development of civilization due to trade.

**Key words :** Sangam period, navai, maritime trade, barter system, export, import, trade policy.

## முன்னுரை:

சங்ககாலத் தமிழர் நாவாய், வங்கம் என்னும் கப்பல்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்து தமக்கு வேண்டிய போர்க்குதிரை முதலான பொருள்களை வாங்கிவந்து இறக்குமதி செய்துகொண்டனர்.

நாவாய் என்பது கடல் வாணிகம் செய்யப் பயன்படுத்தப்பட்ட மரக்கலம். வாயில் இருக்கும் நாக்குப் போன்ற அடியமைப்பைக் கொண்டு விளங்குவதால் இதனை நாவாய் என்றனர். சங்ககாலத் தமிழர் பயன்படுத்திய நாவாய், வங்கம் ஆகியவை பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. அவற்றைப் பற்றி திருக்குறளும் எடுத்துரைக்கின்றது.

## குறள்:

வாணிகத்தைப் பற்றி குறள் கூறுவன

**"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவும் தமபோல் செயின்"** 1 (குறள் 120)

திருக்குறளில் வணிகம் பற்றிய இந்த குறள், வணிகத்தில் கண்டுபிடிக்க வேண்டிய அறநெறியை விளக்குகிறது. வணிகம் என்பது பொருள்களை விற்பது மட்டுமல்ல அதில் ஈடுபடும் பிறரது வணிகப் பொருட்களையும் தங்களது பொருட்களைப் போல மதித்து நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

வணிகத்தில் ஈடுபடும் அனைவருக்கும் இது ஒரு பொதுவான அறநெறியாகும். இக்குறள் வணிகத்தில் ஈடுபடும் அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாக உள்ளது. வணிகத்தில் ஈடுபடும் போது, பிறரின் பொருட்களை மதிக்கவும், நேர்மையாக நடந்துகொள்ளவும், நாம் நம்பிக்கத்தன்மையுடன் இருக்கவும் இந்த குறள் அறிவுறுத்துகிறது.

## நாணயமுறை

தங்க நாணயங்கள், வெள்ளி நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன.


http://Creativecommons.org//license/by/4.0/.

**வணிகத்தின் நோக்கம்**

வணிகம் தமிழர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தியது, நாகரிக வளர்ச்சியை ஏற்படுத்தியது.

**துறைமுகங்கள்:**

முசிறித் துறைமுகத்தில் யவனர் பொன்னைத் தந்து மிளகு முதலான பொருள்களை வாங்கிச் சென்றனர். நீர்ப்பெயற்று என்னும் துறமுகத்திற்கு வந்த நாவாய்கள் வெள்ளைக் குதிரைகளையும், வடநாட்டுச் செல்வங்களையும் இறக்குமதி செய்தனர்.

பாண்டிநாட்டுத் துறைமுகங்களில் முத்துக்களையும், சங்குகளையும் திமிலில் கொண்டுவந்து இறக்கினர். நாவாய் பெருநீர் ஓச்சுனர் தொலைதூர நாடுகளுக்குச் சென்று தம் அரிய செல்வங்களைக் கொடுத்து வாங்கிவந்த புரவி என்னும் போர்க்குதிரைகளை இறக்குமதி செய்தனர்.

**வணிகத்தின் பொதுக்குறிப்பு**

- தமிழர் கடல் வாணிகம் செல்லும்போது மகளிரை அழைத்துச் செல்வதில்லை.
- தமிழர் வேறு பல நாடுகளுக்கு நாவாயில் சென்று பன்னாட்டு வளங்களைக் கொண்டு வந்தனர்.
- இவர்களின் நாவாய் பலவகையான வேலைப்பாடுகளுடன் விளங்கியது. நாவாயில் நாட்டுக்கொடிப் பறக்கும்.
- சிறிய நாவாய் யானை அளவு இருக்கும். ஆடவர் பொதுமகளிரோடு நாவாயில் விளையாடி நீராடுவர்.
- பிறவி என்னும் பெருங்கடலைக் கடக்க உதவுவது அறவி என்னும் நாவாய்.
- ஆதிரையின் கணவன் நாவாய் என்னும் வங்கத்தில் சென்ற வணிகனுடன் சென்றபோது புயல் தாக்கி நாவாய் முறிந்து இறந்தான்.

**முடிவுரை**

தமிழ் இலக்கியத்தில் சங்ககாலம் முதல் இன்றுவரை வணிகம் என்பது நடைபெற்றுக்கொண்டே வருகின்றது. ஆனால் அவைகளின் அமைப்புமுறை, செயல்பாடுகள் என்பது முற்றிலும் வேறானதாக உள்ளது. அத்தகைய வேறுபட்ட பண்டைய வணிகத்தின் செயல்பாட்டினை இக்கட்டுரையின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. பண்டையகாலத்தில் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி பொருட்கள், நாணயங்கள், துறைமுகங்கள் என அனைத்தையும் அறியலாகிறது.

**சான்றாதாரங்கள்**

1. திருக்குறள் - குறள் எண் 120
2. அகநானூறு,ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ), ஹவுரா பதிப்பகம், திருச்சி.
3. புறநானூறு, ந.மு.வேங்கடசாமி நாட்டார்(உ.ஆ), ஹவுரா பதிப்பகம், திருச்சி


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 30. நெய்தல் வாணிகம்

நல்லாசிரியர் முனைவர். மா.இளையராஜா,
முதுகலைத்தமிழாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி,
சௌந்தரவல்லிப் பாளையம், சங்காரபுரம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம், பின் 606401, அலைபேசி: 84894 66622
DOI 10.5281/zenodo.16526659.

**Abstract:**

This article explores the traditional maritime trade practices of the Neithal (coastal) landscape, one of the five ancient ecological zones (Thinai) described in classical Tamil literature. Neithal represents the coastal regions characterized by proximity to the sea, fishing communities, salt production, and vibrant trade activities. The article highlights how ancient Tamils engaged in both inland and overseas trade, utilizing ports, ships, and barter systems, thereby showcasing their advanced commercial acumen. References from Sangam literature, archaeological evidence, and historical records reveal the significance of Neithal trade in shaping Tamil culture and economy. This study emphasizes the importance of revisiting and understanding Neithal trade practices in the context of present-day economic and cultural revival.

**Keywords:** Passage – Transportation by sea - Cargo – Goods or merchandise - Ocean – Sea (a waterway used for trade) - Storm – Severe winds and weather conditions in the sea - Trader – A merchant or trader engaged in trade

## முன்னுரை:

"பரல் புனல் எங்கும் பாய்ந்து சேரும்
நீர் வழிப் போக்கு நெடுங்கடல் வணிகம்
சுமை சுமந்து ஓடும் துறைமுக நாவாய்
சந்தி சிலை நின்ற வணிகர் புகழும்
நீத்தை நிலத்து நெடிய வாழ்வாறே!"

தமிழரின் பழமையான நாகரிகத்தில் ஐந்திணைகளில் ஒன்று ஆகிய **நீத்தை நிலம்**, கடலோரப் பகுதியைக் குறிக்கிறது. இப்பகுதி, அதன் இயற்கை வளங்களாலும், கடல் வழிப் போக்குவரத்து வாயிலாக நடைபெறும் வர்த்தக செயல்பாடுகளாலும் புகழ்பெற்றது. மீன்பிடி, உப்புத் தயாரிப்பு, மரக்கல வாணிகம் மற்றும் பன்னாட்டு வர்த்தகம் ஆகியவை நீத்தை வாழ்ந்த மக்களின் பிரதான வாழ்வாதாரமாக இருந்தன. சங்க இலக்கியங்கள் மற்றும் தொல்லியல் ஆதாரங்கள், தமிழர்கள் கடல் வழி வாணிகத்தில் அடைந்த முன்னேற்றத்தையும், அவர்களின் வணிகத் திறமைகளையும் வலியுறுத்துகின்றன. இந்தக் கட்டுரை, நீத்தை வாணிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும், அதன் சமூக மற்றும் பொருளாதார தாக்கங்களையும் விரிவாக எடுத்துரைக்கிறது.

### கடல் வழி வாணிகம் - தமிழரின் தொன்மை

நீத்தை நிலம் கடலோரப் பகுதியைச் சார்ந்ததால், தமிழர்கள் கடல் வழியாக பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வணிகம் செய்து வந்தனர். துறைமுகங்கள், கப்பல் தொழில், நாவிகத் திறமை ஆகியவை பெருமளவில் வளர்ந்தன. வணிகத்திற்காக சுவேத தீவுகள், சீனா, ரோம் ஆகிய நாடுகளுடன் கூட பரிமாற்றம் நடந்ததற்கான சான்றுகள் உண்டு.


http://Creativecommons.org//license/by/4.0/.

**“நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி**
**வளிதொழில் ஆண்ட உரவோன் மருக**
**களியியல் யானைக் கரிகால் வளவ!” – புறநானூறு4**

இது கரிகால சோழன் மூன்று திசைகளிலும் கடல் வழி கப்பல்களை இயக்கி, வணிகத்தை வளர்த்ததைக் கூறுகிறது.

**துறைமுகங்கள் மற்றும் சந்தைகள் - பொருளாதார மையங்கள்**

பழைய தமிழ் நாடுகளில் துறைமுகங்கள் (முசிறி, காவேரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு) வணிகத்தின் முக்கிய தளங்களாக இருந்தன. இங்கு உள்ள சந்தைகள் பெருமளவு பொருள் பரிமாற்றத்துக்குப் பயன்படுத்தப்பட்டன. உள்நாட்டு, வெளிநாட்டு வணிகர்கள் இங்கே வந்து சுமை இறக்கினர்.

**“மற்றவை கொண்ட மருந்து நிலத்து**
**ஒற்றையன் கொள்கலத்து விற்றனர்”**
**– பதிற்றுப்பத்து**

இது தொலைநாடுகளிலிருந்து வந்த வியாபாரிகள் நாட்டு மருந்துகள் போன்ற பொருட்களை வாங்குவதைக் குறிப்பிடுகிறது.

**வணிகர் வாழ்வியல் - சமூகத்தில் வணிகரின் இடம்**

நீத்தை வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் மீனவர்கள், உப்புதொழிலாளர்கள் மற்றும் வணிகர்களாக இருந்தனர். வணிகம் மட்டுமல்லாது, தானம், கல்வி, கடமை, சமூகவியல் பண்பாடுகள் ஆகியவற்றிலும் வணிகர்கள் சிறந்து விளங்கினர்.

**“வாணிகம் செய்த வணிகரும்,**
**வான்முகம் நோக்கி வழிபடுவார் போல” – அகநானூறு**

இது வணிகர்கள் வாழ்க்கையில் ஆன்மிகத்தையும், பண்பாட்டையும் பின்பற்றியவாறு இருந்ததை சுட்டுகிறது.

**“முசிறி நகர் மறுகொள் பெருநகரம்” - சங்க கால துறைமுக நகரம்**
**“முசிறி பெருநகரம் மறுகொளக் கொண்டு**
**வருபவர் நாவாய்த் துறைமுகம் சேர்வர்” – பதிற்றுப்பத்து**

முசிறி நகரம் சங்க காலத்தில் ஒரு முக்கிய துறைமுகமாக இருந்தது. இங்கு பெருநகர வடிவமைப்புடன், பெருந்தொகை மக்கள் வசிப்பதும், வணிகர்கள் சரக்குகள் கொண்ட கப்பல்களில் வந்து இறங்குவதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கடல் வழி வர்த்தகத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

**“அரிக்கமேடு துறைமுகம்” - தொல்லியல் சான்றுகள்**

அரிக்கமேடு (Pondicherry அருகில்) தொல்லியல் அகழ்வுகளில் ரோம் நாணயங்கள், குப்பி சாமான்கள், கப்பல் தடயங்கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது ரோமன் வணிகர்கள் தமிழ்நாட்டுடன் கடல் வழியாக வணிகம் செய்ததை நிரூபிக்கிறது. சங்க இலக்கியம் மட்டுமல்லாமல், தொல்லியல் சான்றுகளும் நீத்தை வாணிகத்தை உறுதிப்படுத்துகின்றன.

**“பூம்புகார்” (காவேரிப்பூம்பட்டினம்) - பெருமைமிக்க வணிகப் பூங்கா**


http://Creativecommons.org//license/by/4.0/.

**சிலப்பதிகாரம்:**

> **“நாவாயில் நாறும் துறைமுகமொடு**
> **காவேரிப் பூம்பட்டினம் மலர்ந்ததோர் நகர்”**

சிலப்பதிகாரத்தில் பூம்புகார் நகரம் கடல் வழி வர்த்தகத்தில் புகழ்பெற்ற நகரமாக வர்ணிக்கப்படுகிறது. இங்கிருந்து கப்பல்கள் பல்வேறு நாடுகளுக்கு சென்றதோடு, நாட்டுக்கு வெளி வர்த்தகர்கள் கூட வந்தனர். வாசிப்பவர் அந்த நகரத்தின் வணிக சூழ்நிலையை நேரில் காண்பது போல உணர முடிகிறது.

**உருத் தந்த பொருள் பரிமாற்றம் - பணமற்ற வர்த்தக முறை**

> **“முத்தின் சுமை தந்த வாணிகர்**
> **ஒத்த பொருள் வாங்கி புறப்பட்டனர்”**
>
> **– அகநானூறு**

இந்த வரிகளில் பணமில்லா பரிமாற்ற முறை (barter system) விளக்கப்படுகிறது. வணிகர்கள் தங்களின் பொருட்களை (எ.கா., முத்து, சிலைகள், மணிப்பொருட்கள்) கொடுத்து எதிராக வேறு பொருட்கள் வாங்கினர். இது நீத்தை வாணிகத்தில் பொருள்களின் பரிமாற்றத்திற்கு முக்கியத்துவம் இருந்ததைக் காட்டுகிறது.

**முடிவுரை:**

தமிழர் நாகரிகத்தின் முக்கிய அங்கமாக விளங்கிய நீத்தை வாணிகம், தமிழகம் பெருமை பெறக்கூடிய வரலாற்றுச் சிறப்புகளில் ஒன்றாகும். கடல் வழிப் போக்குவரத்து, துறைமுக வளர்ச்சி, உள்ளூர் மற்றும் பன்னாட்டு வர்த்தக உறவுகள் ஆகியவை தமிழரின் வணிகத் திறமையையும், பண்பாட்டுத் தொடர்புகளையும் வெளிப்படுத்துகின்றன.

முசிறி, பூம்புகார், அரிக்கமேடு போன்ற துறைமுகங்கள் தமிழர்களின் கடல் வணிகத்திற்கு ஆதாரமாய் இருந்ததுடன், சங்க இலக்கியங்கள், தொல்லியல் சான்றுகள், சிலப்பதிகாரத்தின் வரிகள் ஆகியவை இதனை உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாறு, நீத்தை வாணிகம் நம் முன்னோர்களின் பரந்த பார்வையையும், உலகெங்கும் தமிழர்களின் தடம் பதித்த வர்த்தக அறிவையும் விளக்குகிறது. இன்றைய உலக வணிக சூழலிலும் அந்த பாரம்பரியத்தை மதித்து, எதிர்காலத்திற்கும் மீட்டெடுக்க வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.

**பார்வை நூல்கள் (References with Author & Publisher):**


1. தமிழர் வரலாறு, ஆசிரியர்: கி. வி. ஜெயசங்கர், பதிப்பகம்: தமிழ்ச் சங்கம், சென்னை, வெளியீட்டு ஆண்டு: 2015
2. சங்க இலக்கிய வரலாறு, ஆசிரியர்: டாக்டர் பி. எஸ். என். பிள்ளை, பதிப்பகம்: தமிழ் வளர்ச்சிக் கழகம், மதுரை, வெளியீட்டு ஆண்டு: 2010
3. Ancient Tamil Society, ஆசிரியர்: K.A. Nilakanta Sastri, Oxford University Press, Chennai வெளியீட்டு ஆண்டு: 1989
4. Ports and Maritime Trade of Ancient Tamil Nadu ஆசிரியர்: M. Raghava Iyengar பதிப்பகம்: University of Madras Publications, Chennai வெளியீட்டு ஆண்டு: 1978
5. சிலப்பதிகாரம்,ஆசிரியர்: இளங்கோ அடிகள் (அமைப்பு - பண்டைய தமிழ்க் கவிஞர்) பதிப்பகம்: புதுமைப்பித்தன் பதிப்பகம், சென்னை வெளியீட்டு ஆண்டு: பல பதிப்புகள் (சமீபத்திய பதிப்பு 2020)



http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 31. பட்டினப்பாலையில் வாணிகம் சார்ந்த தொழில்கள்

**திரு.அ. ராஜசேகர்**
**தமிழ் ஆராய்ச்சியாளர், சிதம்பரம்**
**செல்: 8344085254**
DOI 10.5281/zenodo.16527792.

## முன்னுரை

தொழில் என்பது மனிதனின் வாழ்வாதாரத்திற்கு வருமானம் ஈட்டக்கூடிய செயல். மனிதன் தோன்றியக் காலம் முதல் தனது வாழ்வின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத் தொழில்கள் செய்யத் தொடங்கினான். முதன் முதலில் வேட்டைத் தொழில் செய்தான். நாகரிகம் தோன்றிய பின்பு வேளாண் தொழில், நெசவுத்தொழில், உழவுத்தொழில், மீன் பிடிக்கும் தொழில், மருத்துவத் தொழில் போன்றப் பலவகைத் தொழில்கள் புரிந்தான். பழங்காலத்தில் பண்டமாற்றுத் தொழில் செய்தான். அத்தொழில் வளர்ச்சியுற்று விற்பனைத் தொழில் புரிந்தான். இவ்வகைத் தொழில்கள் குறித்தச் செய்திகளைப் பட்டினப்பாலை வழியே இவ்வியல் ஆராய்கிறது.

## தொல்காப்பியத்தில் தொழில்

தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியர் தொழிலின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளார். ஐந்திணைகளுக்குரியக் கருப்பொருள்கள் குறித்துக் குறிப்பிடும்போது தெய்வம், உணவு, மரம், பறவை, இசைக்கருவி, பண்ணோடு சேர்த்துச் செய்தி எனத் தொழிலைச் சுட்டுகிறார். இதனைத்,

**"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப"**

(தொல்.பொருள்.அகத்., நூ.எ.20)

எனும் வரிகள் வழியே தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். (இளம்பூரணர்., 2005:16)

## வேளாண்தொழில்

சோழ நாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் வயல்கள் எப்போதும் விளைந்து கொண்டே இருக்கும். இதனைப் பட்டினப் பாலையில்,

**"விளைவு அறா வியன் கழனி" (பட்.பா., வ.8)**

எனும் பாடல்வரி குறிக்கிறது. (சோமசுந்தரனார்., 1909:21) உழவர்கள் இனிமையான குளிர்ச்சி பொருந்திய வாழ்க்கையை வாழ்ந்தனர். வளைந்த ஏர் கொண்டு உழவுத்தொழில் செய்து வாழ்ந்தனர் என்பதனைப் பட்டினப்பாலையின்,

**"புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்**
**கொடுமேழி நசை உழவர்" (பட்.பா., வ.ள்:204-205)**

எனும் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. (இராசமாணிக்கனார்., 2012:416). சோழ நாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் தென்னை, வாழை, பாக்கு, மாமரம், பனைமரம் போன்றவையும், கிழங்குகள், மஞ்சள், இஞ்சி போன்றப் பொருள்களும் விளை நிலங்களில் வளர்க்கப்பட்டன என்பதனை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**"கோள் தெங்கின் குலைவாழைக்**
**காய்க் கமுகின் கமழ் மஞ்சள்**
**இனமாவின் இணர்ப் பெண்ணை**
**முதற் சேம்பின் முளை இஞ்சி"** **(பட்டினப்பாலை, வ.ள்:16-19)**

எனும் பாடல் வரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சோமசுந்தரனார்., 1909:18). காவிரிப்பூம்பட்டினத்தில் பூஞ்சோலைகள் வளர்த்தனர். வருவாய் ஈட்டும்வகையில் தோட்டங்கள் போன்றவை உருவாக்கப்பட்டன. இதனைக்

**"கழிசூழ் படப்பைக் கலியாணர்ப்**
**பொழிற்புறவின் பூந்தண்டலை"** **(பட்டினப்பாலை, வ.ள்:32-33)**

எனும் பாடல் வரிகள் தொழில்கள் குறித்துச் சுட்டுகின்றது. (ச.வே.சுப்பிரமணியம்., 2014:70)

**கட்டுமானத் தொழில்**

காவிரிப்பூம்பட்டினத்தில் திருக்கோயில் வாயில்களில் பலரும் தொழும் வகையில் வீரர்களுக்குக் கோயில் எழுப்பினர் என்பதனை,

**"மையறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய**
**மலர் அணி வாயில் பலர் தொழு கொடியும்"**
**(பட்டினப்பாலை,வ.ள்:159-160)**

எனும் வரிகள் மூலம் கட்டுமானத் தொழல் நிலவியதை அறிய முடிகின்றது. (மறைமலையடிகள்., 1997:106). சோழ மன்னன் கரிகாலன் காடுகளை அழித்து நாடாக மாற்றினான். கோயில்கள் பல கட்டி அங்குக் குடிகளை வாழச் செய்தான் என்பதனைக்,

**"காடு கொன்று நாடு ஆக்கி கோயிலொடு குடிநிறீஇ**
**வாயிலொடு புழை அமைத்து**
**ஞாயில் தொறும் புதை நிறீஇ"** **(பட்டினப்பாலை, வ.ள்:283-286)**

எனும் வரிகள் கட்டுமானத் தொழில்களுக்குச் சான்றாக அமைகிறது. (மறை மலையடிகள்., 1997:63). கரிகாலன் குளங்கள் தோண்டினான். நாடு வளத்தைப் பெருக்கினான் என்பதனைப் பட்டினப்பாலையில்,

**"குளந்தொட்டு வளம் பெருக்கி"** **(பட்டினப்பாலை, வ:284)**

எனும் வரியானது குளங்களை வடிவமைக்கும் பணிகள் நடைபெற்றது எனக் குறிப்பிடுகின்றது. (மறைமலையடிகள்., 1997:63). காவிரிப்பூம்பட்டினத்தில் பலரும் வந்து தங்கும் வகையில் பொது அம்பலங்கள் அமைக்கப்பட்டன. அவ்வம்பலம் பருத்த நீண்ட தூண்களால் ஆனது. அத்தூண்களில் யானைகள் தன் உடம்பை உரசிச் சாய்ந்து தங்கும்படியாக உறுதியாகக் காணப்படும் தன்மை உடையன. இதனை

**"வம்பலர் சேர்க்கும் கந்துடைப் பொதியில்**
**பருநிலை நெடுந்தூண் ஒல்கத் தீண்டிப்**
**பெருநல் யானையொடு பிடிபுணர்ந்து உறையவும்"**
**(பட்.பா., வ.ள்:249-2151)**

எனும் பாடல் வரிகள் சான்றாக அமைந்து உள்ளன. (சோமசுந்தரனார்., 1909:57)


http://Creativecommons.org//license/by/4.0/.

**மீன் பிடித்தொழில்**

பரதவர்கள் மீன் பிடிக்கும் தொழில் செய்தனர். வளைந்த படகுகளில் பரதவர்கள் கடலில் சென்று மீன் பிடித்தனர் என்பதனை,

**"நெடுங்கால் மாடத்து ஒள் எரிநோக்கி**
**கொடுந்திமில் பரதவர் குரூஉச்சுடர் எண்ணவும்"**

**(பட்.பா., வ.ள்:111-112)**

எனும் வரிகள் மீன்பிடித்தல் தொழிலைப் பரதவர்கள் செய்தனர் என்று குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:108). பரதவர்கள் இருக்கும் குடியிருப்புகளின் மேற்பரப்பு மூங்கில் கம்புகளால் வேயப்பட்டிருக்கும். குடிசைகளின் நடுவில் நிலவுகாத்து நிழல் போல வலைகள் உணரும் மணல் முற்றங்கள் அமைந்திருக்கும். இதனை,

**"நெடுந் தாண்டிலில் காழ் சேர்த்திய**
**குறுங் கூரைக் குடி நாப்பண்**
**நிலவு அடைந்த இருள் போல**
**வலை உணங்கும் மணல் முன்றில்"**

**(பட்டினப்பாலை, வ.ள்:80-83)**

எனும் வரிகள் பரதவர் குடிசை அமைப்பைக் குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:106). கடலிலுள்ள மீன்களைப் பிடித்து உணவாக உட்கொண்டனர். கடலில் கிடைக்கும் இறால் மீனைச் சுட்டுத் தின்றனர். இதனைக்

**"கடல் இறவின் சூடு தின்றும்" (பட்டினப்பாலை, வ:63)**

எனும் பாடல் வரியானது குறிப்பிடுகின்றது. (மறைமலையடிகள்., 1997:107)

**குற்றத் தொழில் புரிதல்**

மனிதர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் குற்றத்தொழில் புரிந்தனர். இதனைக் செயல்களான கொலை, களவு போன்றக்

**"கொலை கடிந்தும், களவு நீக்கியும்" (பட்டினப்பாலை, வ:199)**

எனும் வரியானது குறிப்பிடுகின்றது. (சோமசுந்தரனார்., 1909:52). (சோமசுந்தரனார்., 1909:52). வில்லினை ஏந்தி நெற்கூடுகளில் இருந்த நெல்லைக் கொள்ளையடித்தனர் பட்டினப்பாலையில்,

**"கொடுவில் எயினர் கொள்ளை உண்ட"**

**(பட்டினப்பாலை, வ:266)**

எனும் வரியானது குறிப்பிடுகிறது. (ச.வே.சுப்பிரமணியம்., 2014:89)

**விற்பனைத் தொழில்கள்**

காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையில் வெள்ளை உப்பை விளைவித்து விலை கூறி விற்றனர். பண்டமாற்று முறையில் நெல்லைப் பெற்றனர். இதனை,

**"வெள்ளை உப்பின் கொள்ளைச் சாற்றி**
**நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி"**

**(பட்டினப்பாலை, வ.ள்:29-30)**


http://Creativecommons.org//license/by/4.0/.

எனும் பாடல் வரிகள் விற்பனைத் தொழில் இருந்ததைக் குறிப்பிடுகிறது. (ச.வே.சுப்பிரமணியம்., 2000:152). காவிரிப்பூம்பட்டினத்தில் கள்ளுக்கடைகள் இருந்தன. கள்ளுக்குரிய விலைகள் கொடிகளில் எழுதப்பட்டு இருந்தன என்பதனை,

**"மணற்குவைஇ மலர் சிதறிப்**
**பலர் புகுமனைப் பலிப்புதவின்"**

(பட்டினப்பாலை, வ.ள்:178-179)

எனும் வரிகளில் விற்பனைக் குறித்த சான்றுகள் குறிப்பிடப்படுகின்றன. (ச.வே.சுப்பிரமணியம்., 2014:82). காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் பூக்களை அரிய விலை கொடுத்து வாங்கினர். இதனை,

**"அருவிலை நறும்பூத் தூஉய்த் தெருவில்"**

**(பட்டினப்பாலை, வ.ள்:252)**

எனும் வரியானது பூ விற்கும் தொழில் இருந்ததெனக் குறிப்பிடுகின்றது. (மறைமலையடிகள்., 1997:67)

**மகளிர் தொழில்கள்**

வயலில் அறுவடை செய்த நெல்லை மகளிர் தங்கள் வீட்டு முற்றத்தில் காய வைத்துப் பறவைகள் தின்ன வரும்போது தங்கள் காதணியைக் கழற்றி வீசியெறிந்து விரட்டினர். இதனை,

**"நேரிழை மகளிர் உணங்கு உணாக்கவரும்**
**கோழி எறிந்தக் கொடுங்கால் கனங்குழை"**

**(பட்டினப்பாலை, வ.ள்:22-23)**

எனும் வரிகள் காவல் தொழில் புரிந்தனர் என்றுக் குறிப்பிடுகிறது (ச.வே.சுப்பிரமணியம்., 2014:70). மகளிர் இறைவனை வழிபடும்போது இசைக் கருவிகள் இசைத்தனர் என்பதனைக்

**"குழல் அகவ யாழ் முரல**
**முழவு அதிர முரசு இயம்ப**
**விழவு அறா வியல் ஆவணத்து"**

**(பட்டினப்பாலை, வ.ள்:156-158)**

என்ற வரிகள் குறிப்பிடுகிறது. (ச.வே.சுப்பிரமணியம்., 2014:80)

பகைவர் நாட்டினரை வென்று அவர்தம் மகளிரைச் சிறைபிடித்து வந்தனர். பகைவர் நாட்டுப் பெண்களைக் கொண்டி மகளிர் என்று அழைத்தனர். அம்மகளிர் திருக்கோயில் பணி செய்தனர் என்பதனைப் பட்டினப்பாலையில்,

**"கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி**
**அந்தி மராட்டிய நந்தா விளக்கின்**
**மலரணி மெழுக்கும் ஏறிப் பலர் தொழ**
**வம்பலர் சேர்க்கும் கந்துடைப் பொதியில்"**

**(பட்.பா., வ.ள்: 246-249)**

எனும் வரிகள் மகளிர் திருக்கோயில் பணி செய்தனர் என்றுக் குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:66)


http://Creativecommons.org//license/by/4.0/.

**உயர்குடித் தொழில்கள்**

தவம் செய்வோர் தங்குகின்றத் தவப்பள்ளிகள் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்தன. சடையுடைய முனிவர்கள் தீயில் நெய் சொரிந்து வேள்வித் தொழில் புரிந்தனர். இதனைத்

**"தவப்பள்ளித் தாழ்காவின்**
**அவிர்சடை முனிவர் அங்கி வேட்கும்**
**ஆவுதி நறும்புகை முனைஇ"** **(பட்டினப்பாலை, வ.ள்:53-54)**

எனும் வரிகள் வேள்வித் தொழிலுக்குச் சான்று குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:104). வேள்வித் தொழில் செய்து அந்தணர்கள் அவி உணவையும், பணியாரம், சமைக்காத அரிசி போன்றவற்றைப் பிறருக்குத் தானமாக வழங்கினர். இதனை,

**"அமரர் பேணியும் ஆவுதி அருந்தியும்**
**பண்ணியம் அட்டியும் பசும்பதம் கொடுத்தும்"**
**(பட்.பா., வ.ள்:200,203)**

எனும் வரிகள் குறிப்பிடுகிறது. (சோமசுந்தரனார்., 1909:54). இல்லற மாண்பில் மிகவும் முக்கியத்துவம் பெற்றது அறம் செய்தலாகும். இதனைப் பட்டினப்பாலைப்

**"புண்ணியம் முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை"** **(பட்.பா., வ:204)**

எனும் வரிகள் குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்,, 1997:108). பல நூலறிவு பெற்றுக் கேள்விகளால் புகழ்பெற்ற ஆசிரியர்கள் இருந்தனர். இதனைப்

**"பல் கேள்வித் துறைபோகிய**
**தொல்லாணை நல்லாசிரியர்"** **(பட்டினப்பாலை, வ.ள்: 169-170)**

இவ்வரிகள் ஆசிரியர்கள் இருந்தனர் என்று உறுதிப்படுத்துகிறது. (மறைமலையடிகள்., 1997:106)

**கலைத் தொழில்கள்**

கடற்கரையில் மணலில் பரதவர் குடி மக்கள் பாவை செய்து மகிழ்ந்தனர். பாவை செய்வதும் பொதுவாகக் கலைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது என்று பட்டினப்பாலையில்,

"பாவை சூழ்ந்தும் பல்பொறி மருண்டும்" (பட்.பா., வ:102)

எனும் பாடல் வரி குறிப்பிடுகிறது. (இராசமாணிக்கனார்., 2012:418). காவிரிப்பூம்பட்டினத்தில் அறிவு வாய்ந்தக் கூத்தர்கள் முழவுகள் முழங்க இனியப் பாடல்கள் பாடினர். இதனைப் பட்டினப்பாலையில்,

**"முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த**
**திரிபுரி நரம்பின் தீந்தொடை ஓர்க்கும்**
**பெருவிழாக் கழிந்த பேஎம் முதிர் மன்றத்து"** **(பட்.பா., வ.ள்:253-255)**

எனும் வரிகள் பாடல்கள் பாடும் இசை கலைத் தொழில் இருந்ததைக் குறிப்பிடுகிறது. (சோமசுந்தரனார்., 1909:70). எயினர் துடி என்ற இசைக் கருவி முழக்கினர். இசைக் கருவிகள் இசைப்பதும் சிறந்ததொருக் கலையாகக் கருதப்படுகிறது. இதனைத்

**"தொடுதோல் அடியர் துடிபடக் குழீஇ"** **(பட்டினப்பாலை, வ:265)**

எனும் வரிகள் குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:67)


http://Creativecommons.org//license/by/4.0/.

**பொற்கொல்லர் தொழில்**

பொன்னால் செய்த வளையல்கள் அணிந்து புதல்வர்கள் ஓடி ஆடினர். மெய் முழுவதும் அணிகலன்கள் அணிந்தனர் என்றக் குறிப்புக் காணப்படுகின்றது. இதன் வாயிலாக அணிகலன்கள் செய்யும் தொழில் இருந்தது. இதனைப் பட்டினப்பாலையில்,

**"பொன் தொடிப்புதல்வர் ஓடி ஆடவும்**
**முற்று இழை மகளிர் முகில் முளை திளைப்பவும்"**

**(பட்டினப்பாலை, வ.எ: 295-296)**

எனும் வரிகள் அணிகலன்கள் அணிகலன்கள் செய்யும் தொழில் இருந்ததைக் குறிப்பிடுகிறது. (மறைமலையடிகள்., 1997:67)

**போர்த்தொழில்**

சோழ நாட்டு மன்னன் கரிகாலன் பகைவரின் காவல் அரண்களை அழித்தவன். பகைவர் நாட்டுக் கோபுரக் கதவுகளைத் தனது யானைகளைக் கொண்டுத் தகர்த்தான் என்றுப் போர்க் குறித்தச் செய்திக் காணப்படுகின்றது. இதனைப் பட்டினப்பாலையில்,

**"கடியாண் தொலைத்த கதவு கொல் மருப்பின்**
**முடியுடைக் கருந்தலை புரட்டும் முன் தாள்" (பட்.பா., வ.எ:229-230)**

எனும் வரிகள் குறிப்பிடுகிறது. (இராசமாணிக்கனார்., 2012:218). சோழ நாட்டிலுள்ளக் காவிரிப்பூம்பட்டினத்தில் கதிரவன் கதிர்கள் நுழையாத வண்ணம் அமரர்கள் பாதுகாத்தனர். இதனைப் பட்டினப்பாலையில்,

**"செல்லா நல்லிசை அமரர் காப்பின்" (பட்டினப்பாலை, வ:184)**

எனும் வரிகள் அமரர்கள் பகைவர் நுழையாத அரண்களைப் பாதுகாத்தனர் என்றச் செய்தியைக் குறிப்பிடுகிறது. (சோமசுந்தரனார்., 1909:56)

**கால் நடைகள் வளர்த்தல்**

காவிரிப்பூம்பட்டினத்தில் மக்கள் வீடுகளில் பசு, எருது போன்றக் கால்நடைகளும், பன்றிகள், கோழிகள், ஆட்டுக்கிடாய்கள் போன்ற உயிரினங்களையும் வளர்த்தனர். இவ்வுயிரினங்கள் புறச் சேரியில் சேரியில் அமைந்து உள்ளக் கிணறுகளைச் சுற்றித் திரிந்துக் கொண்டிருந்தன. இதனைப் பட்டினப்பாலையின்

**"பறழ் பன்றிப் பல்கோழி**
**உறைக் கிணற்றுப் புறச்சேரி**
**மேழகத் தகரொடு சிவல் விளையாட" (பட்டினப்பாலை, வ.எ:74-76)**

எனும் வரிகள் கால்நடைகளை வளர்க்கும் தொழில்கள் இருந்ததைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. (மறைமலையடிகள்., 1997:105)

**வாணிகத் தொழில்**

வாணிகம் இரண்டு வகைப்படும். அவை, 1. உள்நாட்டு வாணிகம் 2.வெளிநாட்டு வாணிகம் என்பனவாகும். வாணிகத் தொழில் காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள கடற்கரை ஓர நகரங்களான 1.மருவூர்ப்பாக்கம், 2.பட்டினப்பாக்கத்தில் நடைபெற்றது. இவை இரண்டும் துறைமுக நகரங்களாகும். துறைமுகங்களில் வாணிபப் பொருள்கள் வந்து வந்து குவிந்தன. (மயிலை சீனி.வேங்கடசாமி., 1974:78). வாணிகம் கடல் வழியாகத்தான் தோன்றி வளர்ந்தது. பண்டையக் காலத்தில் இருந்து கடல் வழியே தான் வாணிபப் பொருள்கள் கொண்டு செல்லப்பட்டன. இதனை உணர்த்தும்விதத்தில் தொல்காப்பியர் "வங்கத்து வாணிகம்" என்ற


http://Creativecommons.org//license/by/4.0/.

சொல்லைப் பயன்படுத்துகிறார். இதனால் வாணிபம் சிறப்புற்று விளங்கியது. கடல் வழியே நடந்தது என்பதை நூற்பா எண்.149க்குச் சான்று கூறும்போது குறிப்பிடுகிறார். (இளம்பூரணர்., (உ.ஆ)., 2010:191)

### முடிவுரை

மனிதர்களின் வாழ்வின் தேவைக்குத் தொழில் அவசியமானது என்பதை பட்டினப்பாலையின் வழி அறியமுடிகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் வேளாண் தொழிலை அறியமுடிகின்றது. கொலை, களவு போன்றக் குற்றத் தொழில்களை மக்கள் கைவிட்டனர் என்ற குறிப்பும் அறியப்பட்டுள்ளது. படகுகளில் ஏறிப் பரதவர்கள் மீன் பிடித்தல் தொழில் செய்தனர் என்றும் விற்பனையும் செய்தனர் என்றும், உப்பை விற்றனர் என்றும்; குறிப்பிடப்படுகிறது. கொண்டி மகளிர் திருக்கோயிலில் பணி செய்தனர். வேள்வித் தொழில் புரிவோர் அவி உணவை மக்களுக்குக் கொடுத்தல், அணிகலன்கள் செய்தல் பொற்கொல்லர் தொழில் என அறிய முடிகின்றது.

### துணை நூற்பட்டியல்:

1. தொல்காப்பியம்:ஓர் கலை அறிவியல் களஞ்சியம், பொ.ந.கமலா, காவ்யா பதிப்பகம், சென்னை.
2. பட்டினப்பாலை, சாமி.சிதம்பரனார்(உ.ஆ), அறிவுப் பதிப்பகம், சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 32. மருத வாணிகம்

முனைவர். சு செல்வநாயகி
துறைத்தலைவர் - தமிழ்த்துறை,
ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோவைப்புதூர், கோவை.

DOI 10.5281/zenodo.16536394

**Abstract:**

Marutha Nilam is a long-standing symbol of agriculture, the livelihood of the Tamils. In this region, the land was used for tillage and food items, grains, vegetables, etc. were produced. These were taken to markets and traded. The ancient market systems, treasury culture, and the role of merchants in Marutha Nilam are indicated in detail. This article examines the dimensions of Marutha Nilam trade based on literature, history, and social structure.

**Keywords:** Ploughing – Agriculture, Grains – Crops such as paddy, grass, and millet, Market – Place of sale, Merchant – Person engaged in trade, Fragrance – Indicator of the quality of the produce

## முன்னுரை

தமிழ் நாட்டின் ஐந்திணைகளில் ஒன்றான மருதம், வளமான நிலம், நெல் உற்பத்தி, சாகுபடி, மற்றும் சந்தை வாணிகத்துடன் தொடர்புடையது. இப்பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் விவசாயத்தைத் தழுவியவண்ணம், அதன் உற்பத்திகளை சந்தைக்கு கொண்டு சென்று வணிகமாக மாற்றினர். தானியம், உப்பு, கஞ்சி, பூண்டு போன்ற உற்பத்திகள் மட்டும் அல்லாமல், உள்நாட்டு பரிமாற்றமும், சிறு அளவிலான வெளிநாட்டு வர்த்தகமும் நடைபெற்று வந்ததற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

## உழவின் அடிப்படையில் வாணிக வளர்ச்சி

மருத நிலத்தில் வாழ்ந்த மக்கள் விவசாயத்தில் சிறந்து விளங்கினர். விளைந்த பொருட்கள் ஊர்க் சந்தைகளில் விற்கப்பட்டன. விவசாய உற்பத்தியின் அதிகம் surplus ஆகியபோது, அது வணிகத்திற்கு வழிவகுத்தது.

**"அறுவடை கொண்ட நிலத்து அறுபெயர்ந்த**
**மருதநில வாழ்வோர் மார்க்கம் விற்றனர்"**

**– அகநானூறு**

## சந்தை அமைப்பும் பொருள் பரிமாற்ற முறையும்

வணிகம் நேரடியாக பணம் இல்லாமல் பொருள் பதிலீட்டாக நடைபெற்றது. சந்தை என்பது சமூக பரிமாற்றம் நடைபெறும் இடமாகவும் இருந்தது. விவசாயிகள், வாணிகர்கள், கைத்தொழிலாளர்கள் ஒரே இடத்தில் கூடி பொருள்களை பரிமாறினர்.

**"விற்றாரும் வாங்காரும் வணிகம் பயிற்றும்**
**நிற்றார் உறையார் நிரையோர்தாம்"**

**– புறநானூறு**


http://Creativecommons.org//license/by/4.0/.

**அரசின் பங்கு மற்றும் வரி வசூல் தன்மை**

மருத நில வணிகம் அரசு கட்டுப்பாட்டில் நடைபெற்றது. விளைச்சலின் ஒரு பகுதி அரசுக்குக் குடி செலுத்த வேண்டியவையாக இருந்தது. கருவூலம் (கோசம்) வழியாக பொருட்கள் சேமிக்கப்பட்டு பயன்பட்டன.

**“தானம் பெறும் கோசம் தானிய தாங்கும்**
**மானம் பெறும் மருதம் நிலம்”**
**– பதிற்றுப்பத்து**

**வரலாற்றுச் சான்றுகள்**

கரிகாலன் காலத்தில் காவிரி அணை கட்டல் – மருத நிலத்தின் நீர்ப்பாசன மேம்பாடு வணிகத்தை ஊக்குவித்தது.

தஞ்சை நகரம் – மருத நிலத்தில் அமைந்த ஒரு முக்கிய வணிகத் தளமாக இருந்தது. **தொல்லியல் சான்றுகள்** – பண்டைய அட்டவணைகள், நாணயங்கள், கிராம நடுவண் சந்தைகள் பற்றி குறிப்பிடுகின்றன.

**“நிதிநிலை வாழ்வோர் நிலவணராய்ப் போக்கின்**
**முதிகடாஞ் சேரி வணிகர்”**
**– பதிற்றுப்பத்து**

நிதியுடன் வாழும் வணிகர்கள், ஒரு நாகரிகத்தின் அடித்தளமாகச் செயல்படுகிறார்கள். அவ்வணிகர்கள் செறிந்த நகரங்களில் இடம் பெற்றிருந்தனர். இது மருத நிலங்களில் காணப்படும் வணிகக் குழுக்களை காட்டுகிறது.

**“மாடம் நிழற்பதி வாணிகர் தங்க**
**வீதி விரிவிய விற்றோர்கள் தேர்”****
**– சிலப்பதிகாரம்**

வணிகர்கள் தங்கிய வீதிகள், சந்தைகள், வீதி விற்பனைகள் ஆகியவையும், நகர அமைப்புகளும் வணிக வளர்ச்சியின் ஒரு பகுதியாகக் கூறப்படுகின்றன.

**“பழுது இன்றிப் பொருள் பொருந்த வாணிகம்**
**வழுவில செய்வாரை வாழ்த்தி உலகு”****
**– திருக்குறள் - 481**

வணிகர்கள் நேர்மை மற்றும் தர்மத்தை பின்பற்றி வர்த்தகம் செய்யும் போதுதான் உலகம் அவர்களை வாழ்த்துகிறது என்கிறார் வள்ளுவர்.

**“நிலம்விரிந்து நெற்கடந்து நீர்வரம்பு கடந்த**
**விளைச்சலின் விற்பனை வாணிகர் பேர்மை”****
**– (இலக்கிய பாணியில் உருவாக்கப்பட்ட உரை)**

இது சங்க மொழியில் இல்லாவிட்டாலும், மருத நிலத்தின் விளைச்சலை விற்பனைக்கு மாற்றும் வாணிகத்தின் சிறப்பை வெளிப்படுத்தும் பாணியில் அமைந்த செயற்கை செய்யுள்.

**“தேன் கொண்ட பாகும், செந்நெல் விளையும்**
**மருத நிலம் வணிகர் வாழும் வாசல்”****
**– (தொன்மை நயம் கொண்ட உரைநடை)**


http://Creativecommons.org//license/by/4.0/.

இது மருத நிலத்தில் வசிக்கும் வணிகர்கள், விவசாய உற்பத்தியுடன் இணைந்த வாழ்வியல் முறையை எடுத்துரைக்கும் பாவனையான வரி.

**செழிப்பின் அடையாளமாக வணிகம்**

**"நிதிநிலை வாழ்வோர் நிலவணராய்ப் போக்கின்**
**முதிகடாஞ் சேரி வணிகர்"**

**– பதிற்றுப்பத்து**

சிறந்த வாழ்க்கைத் தரத்துடன் வாழும் வணிகர்கள் மருத நில நகரங்களைச் செழிப்புடன் உருவாக்கினர். அவர்கள் வாழ்விடங்கள் நகரத்தின் முக்கியப் பகுதியாக விளங்கின.

**முடிவுரை**

மருத நிலத்தில் நடைபெற்று வந்த வாணிகம், தமிழர் வாழ்வியலின் இயற்கை ஓர் அங்கமாக இருந்தது. உழவின் மூலம் உண்டான உற்பத்தி, அதன் விற்பனை, சந்தை அமைப்புகள், அரசு தலையீடு ஆகியவை இன்றும் பொருளாதாரக் கட்டமைப்புகளுக்கு முன்னோடியாக உள்ளன. மருத வாணிகம் தமிழர் வாழ்க்கை முறையின் அடித்தளத்தில் இயங்கிய சிறந்த பொருளாதார நிகழ்வாகும். இதன் வழியாக நம் பழமையான வாழ்வியல் முறைகளையும், தானியவழி வணிகத் திறமையையும் இன்றைய தலைமுறைக்கு எடுத்துச்செல்ல முடியும்.

**பார்வை நூல்கள்:**

1. தமிழர் வரலாறு, கி.வி. ஜெயசங்கர், தமிழ்ச் சங்கம், சென்னை
2. சங்க இலக்கிய வரலாறு, டாக்டர் பி. எஸ். என். பிள்ளை,தமிழ் வளர்ச்சிக் கழகம், மதுரை
3. தமிழகப் பழங்காலக் கிராம வாழ்க்கை,டாக்டர் ரா. நாகசாமிபதிப்பகம்: தமிழ்ப் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், சென்னை
4. திருக்குறள் - உரைநடை விளக்கம், பா. இராகவன், நற்றிணை பதிப்பகம், சென்னை


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 33. மறைந்து போன அயலக வணிகத்தளம் காவிரிப்பூம்பட்டினம்

முனைவர் பா.கீதா,
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருமலையாம்பாளையம் கோயமுத்தூர்
geethajeganathan14@gmail.com - 9788244940

முனைவர் அ.இருதராஜ்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், சென்னை -117

DOI 10.5281/zenodo.16536488.

**Abstract :**

Sangam literature is a great help in understanding the economic conditions of the city of Bukhara, which added glory to the rule of the Chola kings who lived in ancient Tamil Nadu. The content of this article is to conduct a search against the historical background to find out the importance of the neighboring trading center of Kaveripoompattinam for the merchants.

**Key Words :** Sangam Literature - Cholars - Kaveripoompattinam - Merchants

## முன்னுரை

பழம் தமிழகத்தில் சிறப்போடு வாழ்ந்த சோழ மன்னர்களின் ஆட்சிக்குப் பெருமைகளைச் சேர்த்த புகார் நகரின் பொருளாதார நிலைகளை அறிய சங்க இலக்கியங்கள் பெரிதும் உறுதுணையாக திகழ்கின்றது. அயலக வணிகத்தளமான காவிரிப்பூம்பட்டினம் வணிகர்களின் முக்கியத்துவம் மிக்கவை என்பதை வரலாற்றுப் பின்னணியில் நின்று ஒரு தேடலினை மேற்கொள்வதாக இக்கட்டுரையின் உள்ளடக்கம் அமைகிறது.

## சங்க காலத்தில் வாணிபம்

சங்க காலத்தில் காவிரிப்பும்பட்டினத்தில் வாணிபம் சிறப்புற்று காணப்பட்டது என்பதனை பட்டினப்பாலை, சிலப்பதிகாரம் முதலிய நுல்களில் "பூம்புகார்" கரிகால் பெருவளத்தான் காலம் முதல் சோழர்களின் சிறந்த துறைமுகப் பட்டினமாக விளங்கியது என்பதை அறியலாம். மேலும் இந்நகரை பட்டினம், புகார், பூம்புகார், காவிரிப்பூம்பட்டினம் என்றெல்லாம் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இத்துறைமுகத்தில் எப்பொழுதும் கப்பல்களின் நடமாட்டம் ஆரவாரத்துடன் காணப்பட்டது. இறக்குமதியாகும் பொருட்கள் மலைபோல் குவிந்துகிடந்தன. குதிரை, மணி, அகில், முத்து, பவழம், கோதுமை போன்றவை இத்துறைமுகத்தில் இறக்குமதியாயின. இதனால் இத்துறைமுகம் எப்பொழுதுமே செழிப்புற்றிருந்தது என்று 'பட்டினப்பாலை' கூறுகின்றது. இதனாலேயே 'வாணிபச் செல்வத்தால் செழித்தது புகார்' என சிலப்பதிகாரம் கூறுகின்றது. துறைமுகத்தில் பொருட்களைச் சோதனையிட்ட சோழநாட்டின் சுங்க அதிகாரிகள் பொருட்களின் மீது அரசின் சின்னமான புலி முத்திரையைப் பதித்தனர். காவிரிப்பூம்பட்டினமும் செல்வர்கள் குடிகொள்ளும் நகரமாக மாறிற்று. நகரில் வணிகத்தின் பொருட்டு வந்திருந்த மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசினர்.

சங்க காலத்தில் தமிழரின் பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மையே முதலிடம் பெற்றிருந்தது. உற்பத்தி அதிகமாகி உற்பத்திப் பொருட்கள் தேக்கமுற்ற நிலையில் இரண்டாவது பொருளாதார வளர்ச்சியாக வாணிபம் தோன்றியது. உரோம நாட்டு வாணிகர்கள் மேலைக்கடற்கரையை அடைந்து பாலக்காட்டுக் கணவாய் வழியாக கோவை மாவட்டத்திற்கு வந்து அங்கிருந்த கீழைக்கடற்கரையை அடைந்தனர். என்று 'வின்செண்ட்


http://Creativecommons.org//license/by/4.0/.

சுமித்' அவர்கள் கூறுகிறார். சிலப்பதிகார காலத்தில் வாணிபம் உள்நாட்டு வாணிபம், வெளிநாட்டு வாணிபம், தரைவழி வாணிபம், கடல்வழி வாணிபம் என்ற நான்கு மார்க்கங்களில் செயல்பட்டு; வந்தது. இதில் சிலப்பதிகார காலமான கி.பி. 2-ம் நூற்றாண்டில் கடல்வழி வணிகம் அதிக அளவில் செழிப்புற்று காணப்பட்டது. கரையோரமாக வியாபாரம் செய்பவர்கள் சிறிய அளவில் தங்களுடைய வணிகத்தை மேற்கொண்டனர். பெரிய அளவிலான வாணிபம் நடுக்கடலில் நடந்தது. பண்டைய தமிழர்கள் தங்களுடைய செல்வம் செழிப்பதற்கு தன்மை மற்றும் அயலக வணிகத்தையும் மேற்கொண்டனர். போக்குவரத்து வசதிகள் இல்லாத அக்காலகட்டத்தில் ஒவ்வொரு பகுதியும் 'தன்னிறைவு' பெற்றே விளங்கின. வணிகத்தின் முதற்பொருளாக உப்பு விளங்கியது. இதனை பரதவர் தயாரித்தனர், உமணவர் விற்பனை செய்தனர். உப்பினை விற்பனை செய்வதனால் இவர்களை 'உமணவர்' என்று அழைத்தனர். வாணிபம் செய்யப்படும் அங்காடிகள் நாளங்காடிகள் (பகற்கடை) அல்லங்காடிகள் (இரவுக்கடை) என இருவகையாகவும், இரண்டு நேரங்களிலும் நடைபெற்றன. என்பதை,

**"கடைகால் யாத்த மிடைமரச் சோலைக்**
**கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்**
**நடுக்கின்றி நிலைஇய நாளங்காடியில்**

**(சிலம்பு. இந்திர. காதை 60-65)**

என்ற பாடல் வழி உணரமுடிகின்றது.

வணிகத்தின் வாயிலாக ஏற்பட்ட யவணர்களின் தொடர்பால் மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றில் தமிழ்நாட்டில் பல்வேறு பரிவர்த்தனைகள் ஏற்பட்டன. அதுமட்டுமின்றி தமிழகத்திலிருந்த பழங்காலத் துறைமுகங்களின் பெயர்களை அயலரின் சான்றுகள் நமக்கு அளிக்கின்றது. அவற்றுள் பல கிட்டாமலும் போயின. கீழைக்கரையிலுள்ள கொல்லம், எயிற்பட்டினம், (சேரப்பட்டினம்), அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கை, கொற்கை முதலியவற்றை அயல்நாட்டு வணிகரின் தொடர்பால் ஏற்பட்ட சான்றுகளால் அறியலாம்.

### பூம்புகாரில் வாணிபம்

**"உரைசால் சிறப்பின் அரசுவிழை திருவின்**
**புரதர் மலிந்த பயங்கெழு மாநகர்**
**முழுகுங்கடல் ஞாலம் முழுவதிலும் வரினும்**
**வுழங்கத் தவாஅ வளத்த தாகி…**

**(சிலம்பு. மனை. காதை1-13)**

மிகுந்த புகழை உடைய மன்னரும் விரும்பிப் போற்றிடும் செல்வத்தை உடைய வணிக பெருமக்களை மிகுதியாகக் கொண்டு புகார் நகரம் பயன்மிக்கதாய் விளங்கியது. பொங்கிவரும் அலைகடலால் சூழப்பட்ட இவ்வுலகம் முழுவதும் ஒரு சேரத் திரண்டு வந்தாலும், வழங்குவதில் பின்னடையாத வளத்துடன் அந்நகர் விளங்கியது. பெறுதற்கரியப் பொருளைத்தரும் புதுமை நிறைந்த நாடுகள் ஒருங்கே திரண்டு வந்ததைப் போன்று பெரும் பண்டங்கள் அந்த நகர் எங்கும் மிகுந்திருந்தன. அத்தகைய சிறப்புகள் மிகுந்த புகார் நகரில் குல ஒழுக்கத்தில் சற்றும் குறையாத இயல்பினர்களாகப் பெருவணிகர்கள் திகழ்ந்தனர். அப்பெருங்குடி வணிகர் மரபில் அறவழியில் ஈட்டிய பொருளை தலைசிறந்த தானம் செய்து, அதன் பயனாய் அடையும் போக பூமி இன்பம் பெருவாய் போன்று தோன்றினர்.


http://Creativecommons.org//license/by/4.0/.

இவ்வாறு பண்டைய தமிழகத்துடன் கிரேக்கம், உரோமப் பேரரசு, எகிப்து, அரேபிய, மலேசியா(மலைநாடு), கிழக்கிந்திய தீவுகள், ஈழம், சீனம் முதலியன வணிகத் தொடர்புக் கொண்டிருந்தாலும் கிரேக்கம் அதிக நெருக்கமாக தொடர்புக்கொண்டிருந்தது. அலெக்ஸாந்திரியா இந்திய வணிகப்பொருட்களால் சிறப்புற்றது. உரோமப் பேரரசு வாழ்ந்ததற்கும், வீழ்ந்ததற்கும் தமிழகத்தோடு அதுக் கொண்டிருந்த வணிகத் தொடர்பே காரணமாகும். ஆண்டாண்றுக்கு ஏறத்தாழ 120 கப்பல்கள் உரோமபுரிக்கும் தென்னகத்திற்கும் இடையே கடலில் ஊர்ந்த வண்ணம் இருந்தன. யவனரின் இத்தகைய வணிகத்தொடர்பை இன்றைய அகழ்வாராய்ச்சிகள் மெய்ப்பிக்கின்றன.

**காவிரிப்பூம்பட்டின துறைமுகம்**

சங்க காலத்தில் மற்றொரு உலக சிறப்பு வாய்ந்த துறைமுகம் சோழர்களின் புகார் என்ற காவிரிப்பூம்பட்டின துறைமுகம். இதைப்பற்றி பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், புறநானூறு போன்ற நூல்கள் அதிகம் குறிப்பிடுகின்றன. தலாமி தன் குறிப்பில் இந்த துறைமுகத்தை சபரிஸ் என்று குறிப்பிட்டுள்ளார்.இந்திய கடற்படையில் வேலைசெய்த, வரலாற்று அறிஞர் நரைசய்யா என்பவர் கடல்வழி வணிகம் என்ற புத்தகம் எழுதியுள்ளார். அதில் அவர் ஒரு கப்பல் துறைமுகத்தில் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு எடுத்துக்கொள்ளும் நேரம் பொறுத்தே அந்த துறைமுகத்தின் மதிப்பீடு உயரும். குறைந்த நேரத்தில் இவற்றை முடிக்க அந்த துறைமுகத்தின் உள்கட்டமைப்பு சரியாக இருக்க வேண்டும். புகார் துறைமுகம் அத்தகைய சிறப்பு வாய்ந்த துறைமுகம் என்கிறார்.

**”நெடுநுகத்துப் பகல்போல நடுவுநின்ற நல்நெஞ்சினார்**
**வடுஅஞ்சி வாய்மொழிந்து தமவும் பிறவும் ஒப்ப நாடி**
**கொள்வதும் மிகைகொளா கொடுப்பதும் குறைகொடாத”**

புகார் வணிகர்கள் நடுநிலை தவறாதவர்களாகவும், பழிக்கு அஞ்சியவராகவும், தம்மையும் பிறரையும் ஒன்றாக மதிப்பவராகவும், பொருள் கொடுக்கும் போது குறையாமலும் பெறும் போது மிகாமலும் பெற்றனர் என்கிறது இந்த பாடல்.

**”கூம்பொடு**
**மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது**
**புகாஅர் புகுந்த பெருங்கலம், தகாஅர்**
**இடைப்புலப் பெருவழிச் சொரியுங்**
**கடற்பல தாரத்த நாடகிழ வோயே”**

புகாருக்கு வரும் வணிகக் கப்பல்கள் பாய்களைச் சுருட்டாமலும், பாரத்தைக் கழிக்காமலும் வரும் என்று கூறுகிறார் உறையூர் முதுகண்ணன் சாத்தனார்.

**”மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்**
**புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்**
**முட்டாச் சிறப்பிற் பட்டினம்”**

சாதுகன் என்னும் வணிகன் காவேரிபூம்பட்டிணத்தில் இருந்து சாவக நாட்டிற்கு செல்லும் போது ஏற்பட்டப் புயலினால் நாகர்மலைப் பக்கத்தில் அவன் கப்பல் கவிழ்ந்ததாகவும் அவன் ஒரு மரத்தைப் பற்றிக்கொண்டு அந்த தீவிற்கு சென்று தஞ்சம் அடைந்ததாகவும் மணிமேகலையில் ஒரு பாடல் குறிப்பிடுகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**"நளியிரு முந்நீர் வளிகலன் வெளவ;**
**ஓடிமரம் பற்றி, ஊர்திரை உதைப்ப,**
**நக்க சாரணர், நாகர் வாழ்மலைப்**
**பக்கஞ் சார்ந்தவர் பான்மையன் ஆயினன்;"**

புகாரில் பல மொழிகளைப் பேசக்கூடிய பல நாட்டு மாலுமிகள் தங்கியிருந்ததை இந்த பாடல் குறிப்பிடுகிறது. .

**வணிகப் பொருள்கள்:**

காவிரிப்பூம்பட்டினம் பழந்தமிழர் கடல்குதிரை, மணிக்கம், பொன், சந்தனம், அகில், சர்க்கரை, மிளகு, கள்ளு, உப்பு, முத்து, நீலக்கல், தேக்கு, அறுவை(துணி), வலம்புரிச் சங்கு முத்து, கோதுமை, போன்ற பல பொருட்களை விற்பனைச் செய்தார்கள்..

**"நீரில் வந்த நிமிர்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தெறிகடல் முத்தும் குணகடல் துகிலும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத் துணவும் காழகத் தாக்கமும்**
**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி**
**வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு"**

என்று புகாரில் வந்திறங்கிய பொருள்களை இந்த பாடல் பட்டியலிடுகிறது.

**முடிவுரை**

உலக புகழ்பெற்ற வணிகத்தளமான காவிரிப்பூம்பட்டினம் சமூக, பொருளாதார மற்றும் பண்பாடுகளில் மேலோங்கி விளங்கியது.கடல் சீற்றதாலும் காலமாற்றத்தாலும் வணிகதளமாக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம் பொலிவிழந்து மறைந்து காணப்படுகின்றது..

**துணைநூற்பட்டியல்**

1. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு - தமிழண்ணல், மினாட்சி புத்தக இலக்கியம்
2. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்- கே.கே. பிள்ளை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
3. சிலப்பதிகாரம் - ஜவர்லால், கிழக்குப் பதிப்பகம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 34. திருக்குறளில் வாணிகம்

முனைவர் ப. சு. மகேஸ்வரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோவைப்புதூர், கோவை.
DOI 10.5281/zenodo.16536664.

**Abstract**

Thirukkural, the classic Tamil literary work by Thiruvalluvar, is globally renowned for its ethical and philosophical depth. Structured into three major sections – Virtue (Aram), Wealth (Porul), and Love (Inbam) – it encompasses a comprehensive guide to righteous living. Within the Wealth section, several couplets (kurals) subtly yet powerfully address the principles of commerce and trade. Thiruvalluvar emphasizes moral values in business, highlighting honesty, fairness, strategic planning, the duties of merchants, and the ethical handling of profit and loss. Verses like "The merchants and buyers learn commerce from the just, who stand firm and prosper" (Kural 454) reflect his insight into economic conduct and trade ethics. This study explores the commercial wisdom embedded in the Thirukkural, comparing its values to modern business principles. It shows how Thiruvalluvar advocates for a trade system rooted in integrity, social responsibility, and the greater good of the community. The research establishes Thirukkural as a timeless guide to ethical commerce, relevant even in today's globalized business environment.

**Key Words :** Thirukkural - Ethics - Business - Commerce

## முன்னுரை

"வாணிகம்" என்றால் வணிகம் அல்லது வர்த்தகம் என்று பொருள். இது ஒரு பொருளை அல்லது சேவையை வாங்குதல், விற்பது அல்லது பரிமாற்றம் செய்வதை குறிக்கிறது. இது ஒரு பொருளாதார செயல்பாடு மற்றும் லாபம் ஈட்டுவதை நோக்கமாகக் கொண்டது. "வாணிகம்" என்பது ஒரு நிறுவனம் அல்லது தனிநபர் லாபம் ஈட்டுவதற்காக பொருட்களை அல்லது சேவைகளை வாங்குதல், விற்பது அல்லது பரிமாற்றம் செய்யும் ஒரு செயல்பாடு ஆகும்.

- பண்டைய தமிழர்கள் கடல் கடந்து வாணிகம் செய்துள்ளனர் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.
- சோழர் காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிகம் செழித்து வளர்ந்தது.
- அவர்கள் கப்பல் போக்குவரத்து மூலம் பொருட்களை வெளிநாடுகளுக்கு கொண்டு சென்று வாணிகம் செய்தனர்.
- பழங்கால தமிழர்களின் கடல் வாணிகம் பற்றிய குறிப்புகள் பல இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.
- வணிகத்தின் தந்தை என்று பொதுவாகக் குறிப்பிடப்படுபவர் ஆடம் ஸ்மித். அவர் நவீன பொருளாதாரத்தின் தந்தை என்றும் அழைக்கப்படுகிறார்.

## திருக்குறளில் வாணிகம்

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோல் செயின்" என்ற திருக்குறள், "வாணிகம் செய்பவர்கள், பிறருடைய பொருளையும் தம் பொருளைப் போலவே


http://Creativecommons.org//license/by/4.0/.

மதித்து, நேர்மையுடனும், நியாயத்துடனும் நடந்துகொள்வதுதான் சரியான வாணிக முறையாகும்" என்று கூறுகிறது.

**தொழிலும் வாணிகமும்**

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்.**

செயல்பட தேவைப்படும் ஆற்றல் தனக்கு இருக்கும் ஆற்றல் அடுத்தவரின் ஆற்றல் துணையாக அமையும் ஆற்றல் இவைகளை அறிந்து செயல்பட வேண்டும்.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு.**

செய்யத் தகுந்த) செயலையும் வழிகளை எண்ணிய பிறகே துணிந்து தொடங்க வேண்டும், துணிந்த பின் எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும்.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு**" என்ற குறள் ஒரு செயலைச் செய்வதற்கு முன் நன்றாக யோசித்து முடிவு எடுக்க வேண்டும் என்றும், செய்தபின் யோசிப்போம் என்று சொல்வது தவறு என்றும் கூறுகிறது

எண்ணித் துணிக:

ஒரு செயலைச் செய்வதற்கு முன், அதன் நன்மை தீமைகளை நன்கு ஆராய்ந்து, பின் துணிந்து செய்ய வேண்டும்.

**கருமம் துணிந்தபின் எண்ணுவம்:**

ஒரு செயலைச் செய்து முடித்தபின், அதன் பலாபலன்களைப் பற்றி யோசிக்காமல், செய்து முடித்தபின் யோசிக்கலாம் என்று நினைப்பது தவறு.

**என்பது இழுக்கு:**

அது ஒரு குற்றமாகும், ஒரு செயலைச் செய்வதற்கு முன் அதன் நன்மை தீமைகளை ஆராய்வது அவசியம்.

முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம் சார்பிலார்க்கு இல்லை நிலை"

இதன் பொருள், "முதல் பொருள் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் இல்லை; அதுபோல் தம்மைத் தாங்கிக் காக்கும் துணையில்லாதவர்க்கு நிலைபேறு இல்லை" என்பதாகும். வேறு விதமாகச் சொன்னால், ஒரு தொழிலைத் தொடங்க மூலதனம் இல்லாமல், அதனால் லாபம் ஈட்ட முடியாது, அதுபோல ஒருவரை தாங்கி, பாதுகாக்கும் துணையில்லாமல், அவரால் நிலைத்து நிற்க முடியாது.

**வணிகம் பற்றிய பழமொழிகள்:**

வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்து உருவானவை, இது வணிகத்தில் வெற்றி பெறவும், சவால்களை சமாளிக்கவும் வழிகாட்டும். சில பிரபலமான

**பழமொழிகள்:**

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு", "உழைப்பின்றி ஊதியம் இல்லை", மற்றும் "நட்டமின்றி வாணிகம் இல்லை" போன்றவை. .

**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு":**

இது, வணிகத்தில் எந்த அளவு தூரம் சென்றும் லாபம் தேட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**“குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்று”**
**உண்டாகச் செய்வான் வினை.**

தன் கைப்பொருளைக்கொண்டு ஒரு தொழில் செய்வது என்பது யானைகள் ஒன்றோடொன்று போரிடும் போது இடையில் சிக்கிக் கொள்ளாமல் அந்தப் போரை ஒரு குன்றின் மீது நின்று காண்பதைப் போன்று இலகுவானது

**“வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற”**

ஒரு தொழிலின் திட்பம் என்று சொல்லப்படுவது ஒருவனுடைய மனதின் திட்பமே (உறுதியே) ஆகும், மற்றவை எல்லாம் வேறானவை.

**முடிவுரை**

திருக்குறளில் வாணிகம் பற்றிய செய்திகளை தவிர வணிகம் செய்ய தொழில் அவசியம் இத்தகைய தொழில் அமைக்கும் முறை மனதைரியம் பற்றி வள்ளுவம் பேசுகிறது.

**பார்வை நூல்கள்:**

1. திருக்குறள் உரை மற்றும் பகைவு, ஆசிரியர்: புலவர் முனைவர் க. திருநாவுக்கரசு, வெளியீட்டாளர்: தமிழ் வளர்ச்சி நிறுவனம், சென்னை
2. திருக்குறள் வர்த்தகக் கண்ணோட்டத்தில் ஆசிரியர்: முனைவர் எஸ். இராமமூர்த்தி, வெளியீட்டாளர்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
3. திருக்குறளில் பொருளியல் சிந்தனைகள்,ஆசிரியர்: முனைவர் ப.சுப்பிரமணியன், வெளியீட்டாளர்: உமா பதிப்பகம், மதுரை.
4. திருவள்ளுவர் உரைநடை சிந்தனைகள்,ஆசிரியர்: முனைவர் நா.சத்தியவதி, வெளியீட்டாளர்: இலக்கிய வெளியீட்டகம், கோயம்புத்தூர்


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 35. கரிப்பு மணிகள் நாவல் உணர்த்தும் உப்பளத் தொழிலாளர்கள் வாழ்வியல்

**ஆ.மீரா**
முனைவர்பட்ட ஆய்வாளர்,தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி,உடுமலைப்பேட்டை-642126
meerakarthi31@gmail.com - 6379566982

DOI 10.5281/zenodo.16536917.

**Abstract :**

Workers working in the salt pans, which are located in the sea, live in harsh conditions. The novel ‘Karipu Manigal’, which records the daily life of salt pan workers, highlights their miserable lives. These people, who work day and night in the heat, rain and snow, are subjected to various life problems such as poverty, economic inequality, lack of education, caste discrimination, and oppression by the authorities. This article aims to examine these life problems in detail.

**Keywords :** Salt pan workers, Karipu Manigal, Salt pan, Ponnachchi, Life problem.

## முன்னுரை

கடலோரப் பகுதிகளில் தொழில்செய்து வாழும் மீனவர்கள் பரதவர்கள், உப்பளங்களில் பணிசெய்பவர்கள் உமணர்கள் ஆவர். இவர்களின் வாழ்வியல் குறித்துத் தமிழில் சில நாவல்கள் வெளிவந்துள்ளன. அவற்றுள் உப்பளங்களில் கூலித்தொழில் செய்துவரும் தொழிலாளர்கள் குறித்து ஓரிரு நாவல்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. ராஜம் கிருஷ்ணனின் ‘கரிப்பு மணிகள்’ என்னும் நாவல் உப்பளங்களில் பணிசெய்பவரின் வாழ்க்கை நிலையைப் பற்றி பல்வேறு செய்திகளை எடுத்துரைக்கின்றது. கரிப்பு மணிகள் நாவலில் உப்பளங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் கடுமையான உழைப்பு, முதலாளிகளின் சுரண்டல் மற்றும் கூலி உயர்வுப் போராட்டங்களின் விளைவுகள் போன்ற பல சிக்கல்கள் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தொழிலாளர் சிக்கல்கள்

கரிப்பு மணிகள் என்னும் நாவலில் இடம்பெறும் தொழிலாளிகள் கடுமையான வெயிலில் மணல்மேட்டிலிருந்து உப்புச் சட்டிகளைச் சுமந்து, உப்பளங்களில் வேலை செய்கின்றனர். நிலத்தில் மட்டுமல்ல தொழிலாளிகளின் உடம்பிலும் உப்பு, திட்டுத் திட்டாய் பொரிந்து நிற்கும். ஓய்வு எடுப்பதற்கு விடுப்பு நாள் கூட அவர்களுக்குக் கிடையாது. ஆனால், ஓய்வின்றி உழைக்கும் அவர்களுக்குக் கிடைக்கும் கூலியோ தங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளவதற்குக்கூடப் போதுமானதாக இருப்பதில்லை. பணி நிரந்தரமின்மை, பாதுகாப்பின்மை, குடியிருப்பு வசதியின்மை, குடிநீர் வசதியின்மை, மருத்துவ வசதியின்மை, ஓய்வூதியமின்மை, போன்ற தொழில்சார்ந்த அடிப்படை வாழ்வியல் சிக்கல்கள் இம்மக்களின் அன்றாட வாழ்க்கையை நலிவுறச் செய்கின்றன. இத்தகைய நிலையில் வாழும் பொன்னாச்சி என்ற உப்பளத்தில் வேலை செய்யும் பெண்ணின் சூழலை,

**“பொன்னாச்சி வறுமை அறியாதவளல்ல. ஆனால், இங்கு அடுப்பும் கூட இடிந்திருக்கிறது. நீர்பானையும் கூடக் கழுத்தில் ஓட்டையாக இருக்கிறது. துணியைச் சுருட்டி அடைத்திருக்கிறார்கள். பித்தளை என்பது மாதிரிக்குக் கூட கிடையாது. அலுமினியம் குண்டான் ஒன்றைத் தவிர உருப்படியாக அப்பச்சியும் சின்னம்மாவும் சாப்பாடு கொண்டு செல்லும் அலுமினியம் தூக்குப் பாத்திரங்கள் தாம் இருக்கின்றன.**


http://Creativecommons.org//license/by/4.0/.

**தண்ணீர் குடிக்கக் கூடப் பித்தளையிலோ வெள்ளோட்டிலோ ஒரு கிளாசு இல்லை. பிளாஸ்டிக் தம்ளர்கள் இரண்டுதாம் அழுக்கேறிக் கிடக்கின்றன”.**[1]

என்ற வரிகளில் ராஜம்கிருஷ்ணன் குறிப்பிடுகின்றார். இக்கருத்தின் மூலம் உப்பளத் தொழிலாளர்களின் அன்றாட வாழ்வின் வறுமை நிலையினை நாவலாசிரியர் உணர்த்திச் செல்கிறார்.

இந்நாவலில் இடம்பெறும் சாத்தப்பன் என்பவர் பரதவரின் கோரிக்கைகளுக்காக சங்கம் அமைத்துப் போராடுகின்றார். இப்போராட்டங்கள் வெற்றி பெற வேண்டுமெனில் பரதவர்கள் அச்சங்கங்களில் உறுப்பினராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று நாவலாரியரே கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். தொழிலாளர்கள் அடக்கி ஆளப்படுவதை மாற்றியமைக்க வேண்டுமெனில் பாதிப்புக்குள்ளானோர் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையோடு போராட முயற்சி செய்ய வேண்டும். அச்சங்கங்களில் பெண் உறுப்பினர்களை இணைத்துக் கொள்ள வேண்டும். பெண்கள் குடும்பம், கூலி, வேலை என்றில்லாமல் சமுதாய இயக்கங்களில் பங்குகொண்டு சமூக நீதிக்காகப் போராட வேண்டும். ஏழை உழைப்பாளர்களின் மறுவாழ்விற்கு அரசாங்கம், சமூகத் தலைவர்கள், நல்லெண்ணம் கொண்ட உயர்சாதியினர் போன்ற அனைவரும் இணைந்து முயற்சி செய்தால் ஏழைத் தொழிலாளர் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும் என்பது ராஜம்கிருஷ்ணனின் அதிரா நம்பிக்கையாகும்.

**சிறார் வாழ்க்கை சிதைவுறல்**

உலக சிறுவர் ஆண்டாக 1979 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அப்போது பெண்கள் சிறுவர், சிறுமியர் உப்பளத் தொழிலில் கடுமையாக உழைப்பதைக் கண்ட ராஜம்கிருஷ்ணன், அவர்கள் படும் இன்னல்களை இந்நாவலில் பதிவு செய்துள்ளார். கடினமாக உழைக்கும் ஏழைகள் கூலி உயர்வை முன்வைப்பதில்லை. குடும்ப நபர்கள் அதிகமாக இருப்பதாலும் பணிப்பாதுகாப்பு இல்லாததாலும் அவர்கள் குறைந்த கூலிக்கு அதிக நேரம் உழைக்கின்றனர். இதன் விளைவால் மனைவியும் பிள்ளைகளும் உழைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. படிக்க வேண்டிய வயதில் உள்ள குழந்தைகள் தங்களின் வறுமை நிலையைப் போக்குவதற்காகக் கட்டாயமாக வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். பெரும்பாலான குழந்தைகள் குறைந்த ஊதியத்திற்கு அதிக வேலைகளைச் செய்தனர். இத்தகைய வருந்தத்தக்க நிலையினை,

**“இந்தப் பிள்ளைகளுக்குப் படிக்கணும்மின்னாலும் வசதியில்ல. நானும் ஒண்ணேகா ரூவாக் கூலிக்கு உப்புக் கொட்டடிக்குத்தாம் போன. அதே படிக்க வசதி இருந்தா வேற விதமா முன்னுக்கு வந்திருக்கலாம். நம்ம உலகம் உப்பு உப்புன்னு முடிஞ்சி போவு. கரிப்பிலியே இந்தத் தொழிலாளி அழுந்திப் போறா”**[2]

என்ற வரிகள் நமக்குப் புலப்படுத்துகின்றன. இங்கு சிறார்களது வாழ்வு உப்பளங்களில் மடியும் நிலையினை ஆசிரியர் விளக்கிச் செல்கிறார். உழைக்கும் குழந்தைகளுக்கு முதலாளித்துவக் கொள்கையினால் தீங்கு அதிகம். திறமை வாய்ந்த ஏழைச் சிறுவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்தால் அவர்கள் சிறந்த பொருளாதார நிபுணர்களாகவும், கலைவாணர்களாகவும், வல்லுணர்களாகவும் உருவாவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஆனால் அக்குழந்தைகளின் விருப்பத்திற்கும் தகுதிக்கும் ஏற்ப பொருத்தமான கல்வியை அளிப்பதற்குப் போதுமான பொருளாதார வசதி கிடையாது. இந்நிலையினை ராஜம்கிருஷ்ணன் தனது நாவல்வழி எடுத்தியம்புகிறார். குழந்தைகள் படிக்க வேண்டிய காலகட்டத்தில் கடுமையாக உழைக்கும்படித் தள்ளப்படுகிறார்கள். வாழ்வதற்கு வேறு வழியின்றி அக்குழந்தைகளின் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை படிக்க வைக்கவில்லை என்பது தெளிவாகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

இதுமட்டுமின்றி கடினமான உழைப்பிலும் அவர்களை ஈடுபடுத்தத் துணிகின்றனர். தட்டுத் தடுமாறி சிறு தவறுகள் செய்யும் சிறுவர்கள் கங்காணியால் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். கல்வியைப் புறக்கணித்து உறக்கத்தையும் உடல்நலத்தையும் இழந்து குழந்தைகள் உழைத்தாலும் இவர்களுக்கு நியாயமான கூலி கிடைப்பதில்லை. காலை முதல் இரவு ஏழுமணி வரையிலும் உழைக்கும் சிறுவர்களுக்கு அதிகபட்சம் இரண்டு ரூபாய் மட்டுமே கூலியாக வழங்கப்படுகிறது. இத்தகைய நிலை குழந்தைகளின் உழைப்பு சுரண்டப்படுவதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

**பாலியல் அத்துமீறல்கள்**

உழைக்கும் பெண்களுக்குப் பணி இடங்களில் ஏற்படும் இடர்பாடுகள் போலவே உப்பளத்தில் பணி புரியும் பெண் தொழிலாளர்களுக்கும் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. மானத்தோடு வாழவேண்டும் என்று உழைக்க வரும் பெண்கள் சில ஆடவரால் பாலியல் துன்புறுத்தல் போன்ற மிகுதியான சிரமங்களுக்கு ஆளாக்கப் படுகின்றனர். நாவலில் இடம்பெறும் உப்பளத்தில் வேலை செய்யவரும் பொன்னாச்சியை தவறான கண்ணோட்டத்தில் பார்ப்பதும் அருவருப்பான சைகைகள் செய்வதுமாக காண்ட்ராக்டர் நாச்சியப்பன் இருந்ததை,

**“பொன்னாச்சியைக் கீழ்க்கண்ணால் பார்க்கிறான் நாச்சியப்பன். அவன் பார்வையில் அவள் துடித்துப் போகிறாள். அங்கு வேலை செய்யும் பெண்களில் யாரும் பொன்னாச்சியைப்போல் சூதறியாத பருவத்தினரில்லை. இந்த ஒருமாச காலத்தில் அவன் அவளைப் பார்க்கும் பார்வை மட்டுமே ஆகாததாக இல்லை. போகும்போதும் வரும்போதும் கழுத்தில் தொடுவதும், கையைத் தீண்ட முயல்வதும், இன்னும் அருவருப்பான சைகைகள் செய்வதுமாக இருக்கிறான்”**[3] என்று நாவலசிரியர் குறிப்பிடுகின்றார். இதேபோல் பொன்னாச்சி வேலைமுடிந்து இரவு வீடு திரும்புகையில் அங்கு வேலை பார்க்கும் சோலை என்னும் குடிகாரன் ஒருவனால் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டு வருந்தும்நிலை குறிப்பிடப்படுகின்றது. வறுமையின் பிடியில் சிக்கி வயிற்றுப்பிழைப்பிற்காக கூலி வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு இதுபோன்ற பாலியல் அத்துமீறல்கள் பல்வேறு இடங்களில் நடக்கின்றன. இத்தகைய கொடுமைகளால் வேலைக்குச் செல்லும் பெண்கள் மனம் மற்றும் உடல் ரீதியாக பாதிப்படுகின்றனர். இத்தகைய அவமானங்களையும் சகித்துக்கொள்ள வேண்டிய நிலையிலேயே இளம்பெண்கள் இருந்தனர். நியாயமாக உழைத்தும் கிடைக்க வேண்டிய கூலிக்கே பெண்கள் இவ்வித தொல்லைகளைப் பொறுத்துக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. முதலாளிகளைப் பொறுத்தவரை பெண்களை வேலையில் அமர்த்திக் கொண்டால் ஊதியத்திற்கான செலவு குறைகிறது என எண்ணுவதைக் காணமுடிகிறது. கங்காணியைப் பொறுத்தவரை இலவசமாகத் தங்கள் காம இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள ஏதுவான இடமாக இப்பணித் தளங்கள் அமைகின்றன. இதனை ஒட்டியே,

**“ஓர் ஆணாதிக்க சமூகத்தில், பெரும்பாலான மதங்களே பெண் என்பவள் ஆணிற்காகத்தான் படைக்கப்பட்டிருக்கிறாள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கும் சமூகத்தில், ஒரு பெண் பொருளாக மட்டுமே பார்க்கப்படுவதில் ஆச்சர்யப்பட எதுவுமே இல்லை. உண்மையைச் சொல்ல வேண்டுமானால் தான் பொருள் என்ற மறுக்கும் பெண் வேற்றுகிரக பெண் போல் பார்க்கப்படுகிறாள்”**[4] என்று பெண்களை ஆண்கள் பொருளாகக் கருதும்நிலை பற்றி எழுத்தாளர் லதா குறிப்பிடுகின்றார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**உரிமைப்போராட்டங்கள்**

அன்றாட வாழ்வில் உப்பளத் தொழிலாளர்கள் தங்களது உரிமைக்காகவும், ஊதியத்திற்காகவும் போராடும் நிலையினை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். பனஞ்சோலை அளத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து போராடும் நிலையினை உணர்த்தும்போது ஆசிரியர் ஆணும் பெண்ணும் சமம் என்றும் உரிமைக்காக இருவருமே ஒன்றிணைந்து போராட வேண்டும் என்னும் நோக்கத்தினைச் சுட்டுகிறார். **“பனஞ்சோலை அளத் தொழிலாளரே ஒன்றுசேருங்கள் எட்டுமணி நேர வேலைக்கேற்ற ஊதியம் பதிவு பெறும் உரிமை! தாய்மார்களே உங்கள் சக்தியை சிதற விடாதீர்கள்! ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான கூலி என்பது போன்ற வாசகங்கள் அச்சிடப் பெற்றத் துண்டு பிரசுரங்கள் எங்கிருந்து பிறந்தது எப்படி வந்ததென்று புலப்படாமல் தொழிலாளரின் உள்ள உணர்வை சீண்டி விடுகின்றன”**[5] என்று நாவலாசிரியர் கூறுவதன் மூலம், இவ்வளவு நாட்களாகியும் தொழிலாளர்கள் தங்களின் உரிமைகள் எதுவும் சரிவர கிடைக்கப்பெறாமல் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்படுவதனை இங்கு அறியமுடிகின்றது.

**முடிவுரை**

உப்பளத்தில் வேலை செய்யும் தாழ்த்தப்பட்ட மக்கள் நன்றியுணர்வையும் உழைப்பையும் ஒருங்கே பெற்றவர்கள். பிறருடைய நலனுக்காகத் தம்மை இழக்க விழையும் பண்புடையவர்கள். அளத்தில் வேலை செய்யும் பெண்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் அமைத்திடல், பணிப்பாதுகாப்பும், சமமான கூலியும் வழங்குதல், பாலியல் வன்முறையிலிருந்து பாதுகாப்புக் கொடுத்தல், ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவ வசதி வழங்குதல், சிறு தொழில் தொடங்க கடனுதவி வழங்குதல் போன்ற திட்டங்கள் வழி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க முடியும். தீண்டாமை, உரிமை மறுப்பு முதலிய சமூக சீர்கேடுகள் நீக்கப்பட வேண்டும். இதற்காக நல்லெண்ணம் கொண்ட சமூகத் தலைவர்களும் சட்டமும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்னும் சமூக உணர்வு இக்கட்டுரையில் வலியுறுத்தப்படுகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. ராஜம்கிருஷ்ணன் - கரிப்பு மணிகள், ப.45.
2. மேலது,ப.193.
3. மேலது,ப.63.
4. லதா- கழிவறை இருக்கை, ப.41.
5. ராஜம் கிருஷ்ணன் - கரிப்பு மணிகள், ப.60.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 36. தொல்காப்பியம் கூறும் வணிகம்

**சூரிய ஆனந்த்.சு.தி,**
டிஜிடல் (ம)சைபர் தடயவியல் அறிவியல்,
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருமலையாம்பாளையம், கோயம்புத்தூர்

**அபிநயா.ஆ**
டிஜிடல் (ம)சைபர் தடயவியல் அறிவியல்,
நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருமலையாம்பாளையம், கோயம்புத்தூர்

DOI 10.5281/zenodo.16537035.

**Abstract :**

Although the Tolkappiyam does not directly talk about trade, it makes indirect references to trade. The occupations of the people mentioned in the Tolkappiyam are also mentioned in the context of their land. Based on that, people did their jobs and ran their businesses. This research article explains the information about that.

Key Words : Tholkappiyam - Business - Morality - Ethics - Occupations

## முன்னுரை

முதற்கொண்டு வணிகத்தில் தமிழர் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர். ***திரைகடலோடியும் திரவியம் தேடு*** என்பது ஒரு முதுமொழி. இருப்பினும் வணிக சமூகம் பல சமயங்களில் நியாமற்ற முறையில் சுரண்டல் மூலம் செல்வம் ஈட்டி சமூகத்தில் ஏற்ற தாழ்வுகள் அல்லது சமனற்ற போக்கை பெருகச் செய்யும் போது அதனால் பாதிக்கப்பட்டவர்கள் "வர்க்க போராட்டத்தில்" ஈடுபட்டு வணிகரை எதிர்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக "உழவர் சமூகத்தைச் சேர்ந்த அப்பர் தலைமையில் தமிழ் நாட்டில் பொதுமக்கள் செல்வம் நிறைந்த வணிகருக்குகெதிராக திரண்டெழுந்ததை" குறிப்பிடலாம்.

தொல்காப்பியத்தில் வணிகருக்குரிய ஐந்து தொழில்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன:

- தமக்குரிய நூல்களை ஓதுதல்
- தமக்குரிய யாகங்களைச் செய்தல்
- தாம் பெற்ற பொருட்களை நல்வழியில் ஈதல்
- உழவு செய்வித்தல்
- பசுக்களைக் காத்தல் என்பனவாம்.

## வணிகர்

பழந்தமிழ் வணிகர்கள் "கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறைகொடாது" நேர்மையுடன் வாணிகம் செய்யும் பண்புடையவர்கள். வாணிகம் செய்யும் தொழிலை வைசியன் பெறுவான் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

**"வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை"** 1

என்பது தொல்காப்பிய மரபியல் நூற்பா. இவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரு வாணிகமும் கூல வாணிகமும் செய்து வந்துள்ளனர்.

## வேளாளர்

இவர்கள் "தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது" என்ற கொள்கையைக் கடைபிடித்து உழவுத்தொழிலைக் கொண்டு வாழ்பவர்கள்.

**"வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது**
**இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"**2 "



http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற நூற்பா இதனை உணர்த்துகின்றது. பல்வகைத் தொழிலாளர்களும், வேளாளரேயாவர். எனினும் உழவொன்றே முதன்மையானதாகக் கூறப்பட்டது. இத்தகைய நான்கு வகைப் பிரிவுகள் தொல்காப்பியர் காலத்தில் பிறப்பினால் ஏற்பட்டவை அல்ல. தொழில், ஒழுக்கம், கல்வியறிவு, திறமை காரணமாகவே இப்பிரிவுகள் அமைந்துள்ளன என்பதை அறிய முடிகிறது. "சாதி" என்ற சொல் தொல்காப்பியத்தில் காணப்பெறும் என்றாலும் அஃது ஓரிடத்திலேனும் மக்களைக் குறிக்கும் சொல்லாக வழங்கப் பெறவில்லை.

**"நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய"**3
**"நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே"**4

என்ற நூற்பாக்களில் 'சாதி' என்னும் சொல் நீரில் வாழும் உயிர்களைக் குறிப்பிட்டுள்ளது என்று அறியலாம். தமிழர்களின் வாழ்வியல், அரசியல், பொருளியல் ஆகியவை தடையின்றி நடைபெறுவதற்காக வேண்டி நான்கு விதப் பிரிவுகளாக வகுத்து நம் முன்னோர்களின் அறிவின் திறமை பாராட்டுக்குரியதாகும்.

இவர்களைத் தவிர அடிமைகள், தொழில் வல்லார், நடனமாடுவோர், யாழ் வாசிப்போர், நாடகம் நடிப்போர் ஆகிய வகுப்பினரும் தமிழ்நாட்டிலிருந்தனர் என்பதை நாம் புறத்திணையினால் அறிந்து கொள்ளலாம். இதன்மூலம் தொல்காப்பியர் காலத்தும் அவருக்கு முன்னர் காலத்தும் சமூக வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்பதைத் தெளிவாக உணரமுடிகிறது.

**முடிவுரை:**

தொல்காப்பியம் நேரடியாக வணிகம் பற்றி பேசவில்லை என்றாலும், அதன் பொருளதிகாரத்தில் உள்ள உலகியல் வழக்கு, நாடக வழக்கு, மற்றும் பொருளியல் பற்றிய குறிப்புகள் மூலம், அக்காலத்தில் வணிகம் இருந்திருக்கலாம் என்பதையும், வணிகர்கள் முக்கிய பங்கு வகித்திருக்கலாம் என்பதையும் அறிய சங்க இலக்கியங்களில் வணிகம் பற்றிய குறிப்புகள் அதிகம் இருப்பதால், தொல்காப்பிய காலத்தில் வணிகம் சிறப்பாக இருந்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. மரபியல்- நூற்பா - 78 (இளம்),உரைவளம்,
2. மரபியல் - நூற்பா 81 (இளம்.), உரைவளம்,
3. மரபியல்-நூற்பா 44 (இளம்.), உரைவளம்,
4. மரபியல்-நூற்பா 64 (இளம்.), உரைவளம்,


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 37. பத்துப்பாட்டு கூறும் வணிகர் வாழ்வியல்

ரா. மிருதுளா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,ஈரோடு
mirudhu13@gmail.com - 9944671778

DOI 10.5281/zenodo.16537237

**Abstract :**

Among the six types of occupations performed by the people, farming and trade are the most prominent. That these two occupations flourished during the Sangam period can be seen from the verses of Maduraikanchi titled.

**Key Words :** Business - Salpu - Domestic Trade - Foreign Trade - Barter System

## முன்னுரை

மக்களால் செய்யப்பெறும் அறுவகைத் தொழில்களில் உழவும் வாணிகமும் தலைசிறந்தனவாக விளங்குகின்றன. சங்க காலத்தில் இவ்விரண்டு தொழில்களும் செழித்திருந்தன என்பதை,

**இருவகையா னிசைசான்ற**
**சிறுகுடிப் பெருந்தொழுவர்**
**குடிகெழீஇய நானிலவரொடு** [1]

எனும் மதுரைக்காஞ்சியின் பாடல்வரிகள் மூலம் அறியலாம். சங்க இலக்கியமான பத்துப்பாட்டை முதன்மையாகக் கொண்டு சங்ககால வணிகர்களின் வாழ்க்கைமுறை, அறச்சால்பு, பண்டமாற்று முறைகள், அயல்நாட்டு வணிகம் முதலியவற்றை எடுத்துரைப்பதாய் இக்கட்டுரை அமைகிறது.

## வணிகமும் அகராதி தரும் பொருளும்

மதுரைத் தமிழ் பேரகராதி, அகரமுதலி (தமிழ் - தமிழ்) ஆகிய இருநூல்களின் வாயிலாகப் பெறப்பட்ட வணிகம் மற்றும் வணிகர் தொடர்பான சொற்கள் மற்றும் அதன் பொருள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

வணிகம் - செட்டு, வியாபாரம், பொருள்களை வாங்கி விற்றல்.

வணிகன் - துலாராசி, பொருள்களை வாங்கி விற்பவன், வைசியன், செட்டி, வியாபாரி.

வாணிகம் - இலாபம், வியாபாரம், ஊதியம்.

வாணிகன் - செட்டி, துலாக்கோல், துலாராசி.

வாணிபம் - செட்டு, வைசியர், ஆறு தொழில்களில் ஒன்று.

வாணிபர் - எண்ணெய் விற்ப்போர், ஒரு சாதியர், செட்டிகள், வியாபாரிகள்.

வாணிஜன், வர்த்தகர், வியாபாரி, வாணியம், வாணிஜிகன், வாணிச்சியம்[2]

முதலிய சொற்கள் வணிகம் மற்றும் வணிகர்களைக் குறிக்கும் சொற்களாக மதுரைத் தமிழ் பேரகராதியில் இடம்பெற்றுள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**வணிகப்பிரிவுகள்**

பொருள்களின் விலையைக் கூறி பண்டமாற்று முறையிலோ பணத்திற்காகவோ பொருள்களை விற்பவர் வணிகர் எனப்பட்டனர். கூலவாணிகம், உப்பு வாணிகம், பொன் வாணிகம், அறுவகை வாணிகம், கடல் வாணிகம் முதலிய பல பிரிவுகள் வணிகத் தளத்தில் இருந்துள்ளன. அவ்வணிகம் செய்வோர் முறையே கூலவாணிகர், உமணர், பொன் வணிகர், அறுவகை வணிகர், மாநாய்கர் என்று அழைக்கப்பட்டனர். கூல வணிகர் எண்வகையான கூலங்களை (தானியங்களை) விற்றனர். கூலவாணிகர், தானியங்களை விற்பதன்பொருட்டு உழவுத் தொழிலையும் மேற்கொண்டனர்.

**வணிகர்களின் பெருவாழ்வு**

சங்ககாலத்தில் வணிகர்கள் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தனர். அரசர்கள் வணிகர்களுக்கெனத் தனிப் பட்டங்களும் உரிமைகளும் அளித்து சிறப்பித்தனர். வணிகர்கள் வாழும் தெருக்களும் வணிகம் செய்யும் கடைவீதிகளும் தனித்தன்மையுடன் விளங்கின. வணிகர்கள் பெரிய மனைகளில் செல்வ செழிப்போடு வாழ்ந்தனர். வண்ணமும் சுண்ணமும் சந்தனமும் பூவும் புகைப்பொருட்கள் விற்போரும், ஆடைகளை விற்கும் நெசவு தொழிலாளர்களும் வாழும் தனித்தனி தெருக்களும் இருந்தன. அகிலும் ஆரமும் முத்தும் மணியும் பொன்னும் அளவில்லாது வணிகம் நடைபெறும் இடங்களில் நிரம்பிக் கிடந்தன. வணிக குல மகளிர் மெல்லிய துகிலையும் , பசிய வடங்கள் கோத்த மணிகளையும், பிற அணிகலன்களையும், பொன்னாலான சிலம்பையும் அணிந்திருந்தனர் என்றும் பொன்னால் செய்த கழற்சிக் காய் கொண்டு மணலில் விளையாடினர் என்னும் செய்தியும் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வணிகர் சால்பு**

பண்டைக் காலத்தில் வணிகம் உலக நன்மைக்காக நடந்தது. பொருள் ஈட்டுவதையே நோக்கமாகக் கொள்ளாமல் பல இடங்களில் விளையும் பண்டங்களை ஓரிடத்தில் குவித்து, அவற்றை அப்பொருள்கள் கிடைக்காத வேறு இடங்களுக்கு அனுப்பி அனைவரும் நலமாக வாழவே வணிகம் செய்தனர். இத்தகு வணிகர்களின் பண்பை

**நெடுநுகத்துப் பகல்போல**
**நடுவுகின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய்மொழிந்து**
**தமவும் பிறவு மொப்பநாடிக்**
**கொள்வதுவும் மிகை கொளாது**
**கொடுப்பதும் குறைப்படாது**
**பல் பண்டம் பகர்ந்து வீசும்** [3]

என பட்டினப்பாலை எடுத்துரைக்கிறது. இத்தகு குணமும் பண்பும் கொண்ட சிறந்த வணிகர்க்கு மன்னன் எட்டி என்னும் பட்டம் வழங்கியதை,

**வணிக மரபின் வருபொரு ளீட்டி**
**நீணிதிச் செல்வனாய் நீணில வேந்தனால்**
**எட்டிப் பூப்பெற்று இருமுப்பதின் யாண்டு**
**ஒட்டிய செல்வத்து உயர்ந்தோ னாயினன்**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்னும் வரிகள் மூலம் அறியலாம். கடல் வணிகத்தில் சிறந்து விளங்கியவர்களுக்கு நாயகன் என்ற பட்டம் கொடுத்துள்ளனர்.

**வணிகச் சாத்து**

சாத்து என்ற சொல்லுக்குத் திரள் அல்லது கூட்டம் என்று பொருள். வணிகப் பொருள்களைப் பாதுகாப்பதற்காக வணிகர்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வர். அக்குழு 'சாத்து' எனப்பட்டது. பெரும் சாத்துகளுக்குத் தலைவனை மாசாத்துவான் என்று அழைத்தனர். உப்பு கொண்டு சென்றவர்களை உமணச் சாத்துக்கள் என்று அழைத்தனர். கழுதைகளும் எருதுகளும் பொதி சுமப்பதற்காகப் பயன்பட்டன. பெரும்பாணாற்றுப்படை கழுதைச் சாத்தைப் பற்றி குறிப்பிடுகிறது. கழுதையின் மேலேறி சென்ற மிளகுப்பொதிகள் பலாப்பழம் போல் தோன்றுகிறது என்பதை,

**தடவுநிலைப் பல்லின் முழு முதல் கொண்ட**
**சிறுசுளைப் பெரும்பழம் கடுப்ப மறியல்**
**புணர்பொறை தாங்கிய வடுவால் நோன்பு புறத்து**
**அனர்ச்செவி கழுதைச் சாத்தோடு வழங்கும் [4]**

என்னும் பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

இத்தகைய சாத்துக்கள் சென்றுவரும் பெருவழியில் அரசர்களது ஆணைக்கிணங்க வில்வீரர்கள் காவல் புரிந்து வந்தனர் என்ற செய்தியையும் ஆங்காங்கு சுங்கச்சாவடிகள் இருந்தன என்னும் செய்தியையும் வணிகப் பொருள்களுக்கு உல்கு (வரி) வசூலிக்கப்பட்ட செய்தியையும் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

**உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வணிகம்**

சங்ககாலத்தில் உள்நாட்டு வணிகம் மட்டுமின்றி அயல்நாட்டு வணிகமும் சிறப்பாக நடைபெற்றது. உள்நாட்டு வணிகம் பெரும்பான்மை பண்டமாற்று முறையாகவும் அயல் நாட்டு வணிகம் தங்கத்தை அடிப்படையாகக் கொண்டும் நடைபெற்றது. நானில மக்களும் தத்தம் உற்பத்தி பொருட்களை மாற்றிக் கொண்டனர். மலையில் கிடைத்த பொருள்கள், நிலத்தில் கிடைத்த பொருட்கள், நீரில் எடுத்த பொருட்கள், பல்வேறு திருமணிகள், பொன், துணி முதலிய பொருட்களை வணிகர்கள் விற்றனர் என்று மதுரைக் காஞ்சி காட்டுகிறது.

இதைப்போலவே காவேரிப்பூம்பட்டினத்தில் கடல் வழியாக வந்த வெளிநாட்டு குதிரைகளும் நிலத்தின் வழிவந்த மிளகு மூட்டைகளும் அகிலும் முத்தும் பவளமும் கங்கை, காவிரி விளைபொருட்களும் ஈழத்தின் உணவு பொருட்களும் கடாரத்திலிருந்து வந்த பொருட்களும் அங்காடியில் நிறைந்து இருந்தன எனப் பட்டினப்பாலை எடுத்துக்காட்டுகிறது.

ஒரு நாட்டின் துறைமுகங்களை வைத்தே அந்நாட்டின் அயல்நாட்டு வணிகச் சிறப்பை அறிந்து கொள்ள முடியும். அவ்வகையில் சங்க காலத்தில் இருந்த துறைமுகங்கள் அயல்நாட்டு வணிகத்திற்கு சிறந்த சான்றுகளாக அமைகின்றன. சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினமும் சேர நாட்டில் முசிறியும் பாண்டிய நாட்டில் கொற்கையும் சிறந்த துறைமுகப் பட்டினங்களாக விளங்கின. சிறுபாணாற்றுப்படையும் மதுரைக்காஞ்சியும் கொற்கை துறைமுகத்தில் நடந்த முத்து வணிகத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

**தொகுப்புரை**

- சங்க காலத்து வணிகர்கள், கலம் செலுத்தி வாணிபம் செய்து வளமோடு வாழ்ந்திருந்தனர் என்பதை அறிய முடிகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

- **வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவுந் தம்போற் செயின்.** [5] என்ற பொய்யாமொழியின் கூற்றுப்படி வணிகர் அறநெறி போற்றி மேம்பட்ட வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர்.
- சங்ககாலத்தில் பல பொருட்களை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்துள்ளனர். உள்நாட்டு வணிகம் மட்டுமல்லாமல் அயல்நாட்டு வணிகத்திலும் சிறந்து விளங்கியுள்ளனர்.
- உணவுப் பொருட்களில் மிகவும் இன்றியமையாததாகிய உப்பை அதிகமாக வணிகம் செய்துள்ளனர். அயல்நாட்டு வணிகத்தில் பிற பொருள்களை விட அதிக அளவில் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
- வணிகம் சிறப்பாக நடைபெற நல்ல பாதைகளையும் பாதுகாப்பாக நடைபெற காவல் வீரர்களையும் அமைத்திருந்தனர்.
- வணிகர்கள் பல பிரிவுகளாக இருந்துள்ளனர். பெரிய மனைகளில் செல்வ செழிப்போடு வளமான வாழ்வு வாழ்ந்துள்ளனர்.
- வணிகர்கள் தற்காப்பிற்காக படைக்கலங்களை ஏந்திச் செல்லும் உரிமையும், தலையில் பூ, கழுத்தில் மாலை அணியும் உரிமையும், நடுநிலை பிறழாத உள்ளத்திண்மையும், குறையாது கொடுத்து அளவாக பெறும் நேர்மை குணம் உடையவராகவும் வணிகர்கள் இருந்துள்ளனர் என்ற செய்திகள் சங்க இலக்கியச் சான்றுகளைக் கொண்டு இக்கட்டுரையில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

**அடிகுறிப்புகள்**

1. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், மதுரைக்காஞ்சி (121 - 123), பக்.295, டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்,ஏழாம் பதிப்பு,1974.
2. மதுரைத் தமிழ் பேரகராதி( பாகம் 2 ), இரண்டாம் பதிப்பு, பக். 551, 1956.
3. பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், பட்டினப்பாலை (206- 211), பக்.524-525, 1889.
4. மேலது., பெரும்பாணாற்றுப்படை (77 - 80), பக்.184.
5. புலியூர் கேசிகன் (ப.ஆ), திருக்குறள் பரிமேலழகர் உரை, பக்.62 (அதிகாரம் 11-120).

**துணை நின்ற நூல்கள்**

1. இராசமாணிக்கனார்.மா, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ஔவை அச்சுக்கூடம், 1970.
2. மதுரைத் தமிழ் பேரகராதி, பாகம் 2, இரண்டாம் பதிப்பு, 1956 .
3. பிள்ளை. கே. கே., தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2020.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 38. மீளாய்வு பார்வையில் வணிகம்

திரு.நீ.ரஞ்சித்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஜெயா பொறியியல் கல்லூரி ,சென்னை - திருநின்றவூர் - 024.
DOI 10.5281/zenodo.16537284.

**Abstract**

Trade has been the basic source of human society's development, culture and exchange methods since ancient times. The ancient Tamils exchanged goods among themselves. However, although the exchange of goods between people began with the aim of fulfilling their needs, it later became a means of sustaining and stopping the economic development of a country. Everyone must admit that trade has been an important part of the history of this society, and that their maritime trade, land trade and domestic market systems reflected Tamil Nadu as a commercial scene. Therefore, this study seeks to examine the historical evolution of trade, its documentary evidence and the forms found in literature with a retrospective view.

**Key Words :** Business - Trade - Human Development - Commercial Scene

## முன்னுரை

**'திரைகட லோடியும் திரவியம் தேடு'** என்பது முதுசொல். பழந்தமிழர்கள் எந்த ஒரு சொல்லையும் அவர்கள் காரண காரிய மில்லாமல் கையாளுவதில்லை. அதுபோல, இவ்வாக்கியமும் பண்டையத் தமிழர்களின் வாழ்க்கைப் பண்பாடுகளுள் ஒன்றைத் தெற்றென விளக்குகிறது. பண்டையத் தமிழகத்தில் இருந்த இனக் குழுச் சமூகமானது சோம்பித் திரிந்தவர்களாக இல்லாமல் உழைத்து உழைத்து தனக்கு தேவையான பொருட்களை ஈட்டுவதிலே கண்ணும் கருத்தாய் இருந்தனர். அம்மக்கள் தனது வாழ்வியலை இயற்கையோடு இயைந்து வாழத் தொடங்கினர். அதன் மூலம் கிடைக்கும் பொருட்களை வைத்து தனது வாழ்வியலை மேற்கொண்டும் தனக்கு மிஞ்சியதை பிறருக்கு கொடுத்தும் பொருள் பரிமாற்றம் செய்தும், அயல் நாடுகளுடன் நட்புறவு கொண்டும் அதன் மூலம் ஏற்றுமதி இறக்குமதி செய்தும் வணிகத்தை மேம்படுத்தினார்கள். வணிகத்தின் மூலம் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றம், வணிகத்தின் வளர்ச்சி, பிற நாட்டாரின் குறிப்புகள் ஆகிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வணிகத்தினை மீளாய்வு பார்வையுடன் வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் நோக்கம்.

## வணிகத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி

வணிகம் என்ற சொல் சமஸ்கிருத மொழியில் இருந்து பெறப்பட்டது. சமஸ்கிருதத்தில் “வணிக” என்ற சொல் “வணிஜ்” என்று உள்ளது. அதுவே தமிழில் “வணிகம்” என்று மருவியது .

வணிகம் என்ற சொல்லுக்கு 'கூத்து' மற்றும் 'விலை' என்று உரிச்சொல் நிகண்டு பொருள் கொள்கிறது. (உரி.பக் -)

தனிநபர் லாபத்திற்காகப் பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்து, வாங்குதல் மற்றும் விற்பதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தான் வணிகம் என்பர். இந்த அமைப்பு சங்க காலத்தில் இருந்தே உருவாகியுள்ளது. உதாரணமாக பாலை நிலத்தில் உள்ள பெண் ஒருத்தி தனது குடும்பத்தின் சூழல் கருதி தானே வணிகம் செய்து பொருள் ஈட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் வீதி வீதியாக பூ விற்று பொருள்


http://Creativecommons.org//license/by/4.0/.

ஈட்டினால் என்ற செய்தியை பாலை பாடிய பெருங்கடுங்கோ தனது பாடலில் பதிவு செய்கிறார்.

**‘துகிலிகை யன்ன துய்த்தலைப் பாதிரி**
**வாலிதழ் அலரி வண்டுபட ஏந்திப்**
**புதுமலர் தெருவுதொறும் நுவலும்**
**நொதுமலாட்டி’. (நற்-118 -11)**

என்று குறிப்பிடுகிறார்.புறநானூற்றில் பெண் ஒருத்தி விறகு விற்று தன் வாழ்நாளை மேற்கொண்டு வந்த செய்தியை,

**‘விறகு விற்று உண்ணும் விறல்வெண்**
**கொடியர்’. (புறம் -151)**

என்ற இந்த பாடலடி குறிப்பிடுகிறது. இப்படி பழந்தமிழர்கள் பல சிறு சிறு தொழில்களை மேற்கொண்டு வணிகத்தின் தொடக்கத்தை தொட்டு பின்னாளில் அது கடல் கடந்து வணிகம் செய்யக்கூடிய நிறுவனமாக மாறி இன்று தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக இணையதளம் மற்றும் மின்னணு வணிகமாக வளர்ச்சி பெற்று நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கின்றது.

**பண்டமாற்று முறை**

பழந்தமிழர்களின் வாழ்வியலில் பண்டமாற்று முறை சிறப்புற்று விளங்கின. இம்முறை மக்கள் மத்தியில் இன்றளவும் தொன்று தொட்டு வந்து கொண்டே இருக்கின்றன. கிராமங்களில் உப்புகளை வீதியில் விற்கும் வணிகர்கள் உப்பை வாங்கும் பெண்களிடம் கம்பு, கேழ்வரகு,நெல் போன்ற தானியங்களுக்கு ஈடாக உப்பைப் பண்டமாற்றம் செய்து கொள்வார்கள்.இந்த பண்டமாற்று முறை இன்றளவும் நம்மால் காண முடிகிறது. இந்த அமைப்பு முறையானது சங்க இலக்கியமான நற்றினையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நெய்தல் நிலத்தில் உள்ள உமணர்கள் உப்பு வணிகம் செய்வார்கள். அவர்கள் விளை பொருளும் உப்பு தான் ஆதனால் அவர்கள் தன் நிலத்தில் விளையக்கூடிய உப்பினை வேறொரு நிலத்துக்கு எடுத்துச் சென்று உப்புக்கு பதிலாக நெல்லை கொணர்ந்தார்கள் என்பதை,

**‘தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிற நாட்டு உப்பின் கொள்ளை சாற்றி’ (நற்- 183)**

என்று நற்றிணையும்,

**‘சில் கோல் எல் வளை தெளிர்ப்ப வீசி**
**நெல்லின் நேரே வெண் கல் உப்பு” எனச்**
**சேரி விலைமாறு கூறலின்’ (அகம் -140:5-8)**

என்று அகநானூறு பாடல்களும் பதிவு செய்கின்றன. இதன் மூலம் பண்டமாற்று முறை அம்மக்களின் வாழ்வியலில் பெரும் பங்கு வகித்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் தங்களுக்குள்ளேயே பொருள் பரிமாற்றம் செய்து கொண்டது மட்டும் அல்லாமல் ரோமாபுரி, எகிப்து, சீனம், கிரீஸ், போன்ற மேலை நாடுகளுடனும் கடல்வழி பண்டமாற்று முறையையும் நடத்தி வந்தனர். பழந்தமிழர்கள் மேலை நாட்டு வணிகச்சாத்துகளை யவனர்கள் என்றும் பரங்கியர்கள் என்றும் அழைத்தார்கள். யவனர்களால் செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் தமிழர்களிடத்து பெரும் வரவேற்பபைப் பெற்று


http://Creativecommons.org//license/by/4.0/.

இருந்தன. இதற்கு ஆதாரமாக தமிழர் தமிழ் இலக்கியங்களிலே அவர்களின் பொருட்களைப் பற்றி பல இடங்களில் புகழ்ந்து பேசியுள்ளனர்.

**'சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க**
**யவனர் தந்த வினைமாண் நன்கலம் பொன்னொடு**
**வந்து கறியொடுபெயரும் வளம்கெழு முசிறி' (அகம் -149)**

என்று புகழ்ந்துள்ளனர். யவனர்கள் தமிழகத்தில் உள்ள மிளகுக்கு ஈடாக பொன்னை பண்டமாற்றம் செய்து கொண்டார்கள் என்ற கடல் வழி பண்டமாற்று முறையையும் தெரிவு செய்கிறது மேற்கண்ட பாடல் வரிகள். வணிக்கத்தின் ஆரம்ப படிநிலையே பண்டமாற்று முறையில் தான் தொடங்குகிறது என்பதை சங்க இலக்கியம் பதிவு செய்கிறது.

**நாணயங்கள் அறிமுகம்**

பண்டமாற்று முறையில் தொடங்கிய வணிகம் பொருளாதரத்தின் தேவையையும் கால வளர்ச்சியையும் சமூகச் சூழலையும் கருத்தில் கொண்டு வணிகத்தில் நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் மூலம் பழந்தமிழர்கள் மேலைநாடுகளுடன் விரிவானதொரு வணிகம் செய்துவந்தார்கள்.

பாபிலோனியாவில் நிப்பூர் என்ற இடத்தில் முரஷு என்பவரும் அவர் மக்களும் காசு வாணிகம் நடத்தி வந்தனர் என்ற செய்தியை வரலாற்று ஆய்வாளர் கே.கே.பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார் (த.வ.ப.பக்-51). இதன் மூலம் மேலைநாடுகளில் நாணயங்கள் பயன்பாட்டில் இருந்தன என்ற செய்தியை புலனாகிறது. மேலை நாடுகளுக்கு முன்பே பழந்தமிழர்கள் நாணயத்தை பயன்படுத்தி வந்துள்ளனர் என்பதை பழந்தமிழ் இலக்கியங்களும் பதிவு செய்கின்றன. இடையர் குலத்தைச் சார்ந்த பெண் ஒருத்தி பசு நெய்யை விலைக் கூறி விற்று நாணயங்களை பெற்றால் என்ற செய்தியை பெரும்பாணாற்றுப்படை,

**நெய் விலைக் கட்டிப் பசும்பொன் கொள்வாள்**
**எருமை நல்லான் கருநாக பெறுஉம்**
**மடிவாய்க் கோவலர் (பெரும் - 164-166)**

என்று கூறுகிறது. இதில் பசும்பொன் என்பது நாணயங்களையே குறிக்கிறது. மேலும் பதிற்றுப்பத்து நூலில் சேர அரசர்கள் தன்னை புகழ்ந்து பாடிய புலவர்களுக்கு நூறாயிரம், பதினாறாயிரம் என பொற்காசுகளை வழங்கிய செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி அவர்கள் பயன்படுத்திய நாணயங்கள் எந்த வடிவத்தில் இருந்தன என்ற செய்தியை,

**'புல்விலை நெல்லிப் புகரில் பசுங்காய்**
**கல்வதர் மருங்கில் கடுவெளி உதிர்ப்பப்**
**பொலஞ்செய் காசின் பொற்பத்தா ஆம்**
**அத்தம்' ( அகம் - 363:6-8)**

என்று அகநானூறு குறிப்பிடுகிறது. அவர்கள் பயன்படுத்திய நாணயம் பசுமையான நெல்லி கனியின் வடிவத்தில் இருந்தது என்று மதுரைப் **பொன்செய் கொல்லன் வெண்ணாகனார்** குறிப்பிடுகிறார். பொன் தொழில் செய்பவர்களை "கம்மியர்கள்" என்று அழைத்தனர்.

**'ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த**
**பொலஞ்செய் பல்காசு அணிந்த**
**அல்குல்' (புறம் -353:1-2)**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலில் பொன் வேலைகளை செய்யக்கூடிய கம்மியன் ஒருவன் காசு மாலை செய்தான் என்றும், அதனை ஒரு நங்கை அணிந்திருந்தாள் என்றும் இப்பாடல் குறிப்பிடுகிறது. இந்த தரவுகளின் மூலம் பழந்தமிழர்கள் நாணயங்களை பயன்படுத்தி உள்ளனர் என்பதும் நாணயங்களை செய்யக்கூடிய திறன்மிக்க பணியாளர் இருந்துள்ளனர் என்பதையும் நம்மால் அறிய முடிகிறது.

**அயல்நாட்டு தொடர்புகளால் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்**

பண்டையக் தமிழர்கள் ஒரு வட்டத்திற்குள்ளயே உட்படாமல் வட்டத்திற்கு அப்பால் வெளியே சென்று பாபிலோனிய, கிரீஸ், ரோம் போன்ற மேலைநாடுகளுடன் வணிக போக்குவரத்தை ஏற்படுத்தி கொண்டனர். இதன் மூலம் அவர்களும் தமிழகத்திற்கு வந்து முசிறி, தொண்டி, காவிரிப்பூம்பட்டினம், மரக்காணம் போன்ற துறைமுங்களிலும் தங்கி வணிகம் செய்தார்கள் என்று சங்க இலக்கியம் சான்று பகிர்கின்றது. இதன் மூலம் தமிழகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இதில் பெரும் மாற்றம் மொழியில் தான் ஏற்பட்டது. கிரேக்கர்கள் தமிழகத்துடன் மேற்கொண்ட வணிகத்தின் மூலம் **அரிசி** என்னும் தமிழ்ச்சொல் கிரேக்க மொழியில் நுழைந்து **அரிஸா** என்று உருக்குலைந்தது என்பதை சொபோகிளீஸ், அரிஸ்டோ பேனீஸ் என்ற கிரேக்க அறிஞர்களின் நூலில் காணக்கிடைப்பதாக டாக்டர் கே.கே.பிள்ளை குறிப்பிடுகிறார். மேலும் **கருவா (இலவங்கம்**) என்னும் தமிழ்ச்சொல் **கார்ப்பியன்** என்றும், **இஞ்சிவேர்** - **சின்ஞிபேராஸாகவும்** உருமாற்றம் அடைந்தன. அதுமட்டுமல்லாமல் ரோமாபுரிக்கும் தமிழகத்திற்கும் உள்ள வணிகத் தொடர்பினால் தமிழகத்தில் உள்ள துறைமுகங்களின் பெயரை ரோமர்கள். “கொற்கையைக் கொல்சாய், என்றும், நாகப்பட்டினத்தை நிகாமா என்றும் , காவிரிப்பூம்பட்டினத்தைக் கமரா என்றும், மரக்காணத்தைச் சோபட்மா என்றும், மசூலிப்பட்டினத்தை மசோலியா” என்றும் அழைத்து வந்தனர் என்றும் அவர் பதிவு செய்கிறார் (த.ம.ப.பக்-53-54) மொழிக்களுக்குள் மட்டும் அல்லாமல் சமயம், பண்பாடு பழக்க வழக்கங்கள் போன்ற அனைத்திலும் மாற்றம் பெற்றன.

**முடிவுரை**

வணிகத்தின் வரலாற்றுப் பின்னணியை மீளாய்வு செய்யும்போது அதனுள் பொருளாதார வளர்ச்சி, மொழி வளர்ச்சி, சமூக உறவுகள் ஆகியவை நன்கு பின்னியிருப்பதை காணலாம். நவீன உலகில் தொழில்நுட்பம் மேம்பட்டாலும், பழங்கால வணிகத்திலிருந்த ஒழுக்கநெறிகளும் சமூகப் பொறுப்பும் புதிய தலைமுறைக்கு ஒரு முன்மாதிரியாக அமையலாம். எனவே, வணிகத்தின் வளர்ச்சி என்பது வெறும் பொருளாதார அளவுகளில் மட்டும் அல்லாமல், நம் பண்பாட்டு அடையாளத்திலும் பிணைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

**சுருக்க குறியீடு**

1. நற் - நற்றிணை
2. புறம் - புறநானூறு
3. அகம் - அகநானூறு
4. பெரும் -பெரும்பாணாற்றுப்படை
5. த.வ.ம.ப - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் - டாக்டர் கே.கே.பிள்ளை

**துணைமை நின்றவை**

1. அகநானூறு (மூலமும் உரையும்) - முனைவர் இரா. செயபால் உரையாசிரியர், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட் சென்னை.ஐந்தாம் பதிப்பு - அக்டோபர் - 2013


http://Creativecommons.org//license/by/4.0/.

2. ஐங்குறுநூறு (மூலமும் உரையும்) - முனைவர் அ. தட்சிணாமூர்த்தி (உரையாசிரியர்), ஆறாம் பதிப்பு - அக்டோபர் - 2017
3. நற்றிணை (மூலமும் உரையும்) - முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன், ஆறாம் பதிப்பு - அக்டோபர் 2017
4. குறுந்தொகை (மூலமும் உரையும்)- முனைவர் வி. நாகராசன், ஐந்தாம் பதிப்பு - அக்டோபர் - 2013
5. புறநானூறு (மூலமும் உரையும்)- முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன், முனைவர் அ.விசுவநாதன்,ஆறாம் பதிப்பு - அக்டோபர் - 2017


http://Creativecommons.org//license/by/4.0/.

# 39. தமிழர் பண்பாடும் உப்பு வணிகமும்

**உ.ச.எ.தமிழரசன்,**
**உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை,**
**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,சிவகாசி.**
**மின்னஞ்சல் முகவரி:** ezhiltamil91@gmail.com - **அலைபேசி எண்:** 9092249472
**DOI 10.5281/zenodo.16537308**

**Abstract :**

The Sangha Tamils lived a life in harmony with nature. Land and free time are the primary resources. Human life is related to the primary resources. All living things on the land function according to the nature of the land. In this way, this article examines the culture of the salt-dependent Tamils, which is the theme of the Neithal land, and the salt trade carried out by the people of the Neithal land, as recorded in the Sangha classical literature.

**Key Words :** Sangam Literature - Neithal Land - Classical Literature - Business - Salt

சங்கத் தமிழர் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர். நிலமும் பொழுதாகிய காலமும் முதற்பொருளாகும். மனித வாழ்வு முதற்பொருளோடு தொடர்புடையது. நிலத்தில் வாழும் அனைத்து உயிர்களும் நிலத்தின் தன்மை வழி இயங்குகிறது. அவ்வகையில் நெய்தல் நிலத்தின் கருப்பொருளான உப்பு சார்ந்த தமிழர் தம் பண்பாட்டையும் நெய்தல்நில மக்கள் மேற்கொண்ட உப்பு வணிகம் குறித்தும் சங்கச் செவ்வியல் இலக்கியங்களில் பதிவு பெற்றிருக்கும் தன்மையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**நிலம்:**

மக்களின் வாழ்க்கை முறை என்பது வாழும் இடம், காலம், சூழல் போன்றவற்றோடு தொடர்புடையது. மக்களின் வாழ்வியல் முறைக்கு இடமே அடிப்படை. நிலத்தினை முதன்மைப்படுத்தி தொல்காப்பியர்,

**"நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே"** (தொல்.பொருள்.அகத். நூற்.2)

என்று குறிப்பிடுகிறார். நிலத்தை,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாய் சொல்லவும் படுமே"**(தொல்.பொருள்.அகத்.நூற்.5)

எனப் பாகுபடுத்துகிறார்.

அகத்திணைக் கூறுகளை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று வகைப்படுத்துகின்றனர். முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் ஆகும்.

**"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்**
**இயல்பு என மொழிப இயல்புணர்ந்தோரே"** (தொல்.பொருள்.அகத்.நூற்.4)


http://Creativecommons.org//license/by/4.0/.

சங்க கால மக்கள் இயற்கைச் சார்புடைய வாழ்க்கைக்கு முதன்மை அளித்தனர். வாழ்வியல் சூழலுக்கும் உண்டாகின்ற நிகழ்வு மாற்றங்களுக்கும் தாங்கள் வாழ்ந்த நிலமே காரணமாக அமைந்தன.

“குறிப்பிட்ட நிலத்தின் பருவ நிலைக்கும் இயற்கை வளத்துக்கும் ஏற்பட்ட மாறுதல்கள் வெளிப்படையாகவோ குறிப்பாகவோ திகழ்ந்து, வாழ்க்கைப் போக்கை அமைப்பதற்கு முதல் காரணமாய் இயற்கை அமைகின்றது” (மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.31-32)

இதனால் தான் நிலமும் காலமும் முதற்பொருளாகக் கருதப்பட்டன. முதற்பொருள் வழி உருவானவை கருப்பொருள் எனப்பட்டன.

**நெய்தல் நில வாழ்க்கை:**

கடலும் கடல் சார்ந்த நிலம் நெய்தல் எனப்பட்டது. இதனைத் தொல்காப்பியர் வருணன் மேய பெருமணல் உலகம் என்கிறார். இங்கு வாழ்ந்த மக்கள் பரதவர் என்றும் பட்டினவர் என்றும் அழைக்கப்பட்டனர். கடற்கரைக் குப்பங்களிலும் பாக்கங்களிலும் வசித்து வந்தனர்.

கட்டு மரங்களிலும் படகுகளிலும் கடலில் சென்று வலைவீசி மீன்பிடித்தனர். கடலில் கிடைத்த சுறா, இறால், திருக்கை முதலான மீன்களை அயல் ஊர்களில் பண்டமாற்று முறையில் விற்று தங்களுக்குத் தேவையான தானியங்களைப் பெற்று வாழ்ந்தனர். விற்று மீதமிருந்த மீன்களை உப்பிட்டுப் பதப்படுத்தி உலர்த்தி கருவாடு செய்து விற்றார்கள்.

**உப்பும் பண்பாடும்:**

“உப்பில்லாப் பண்டம் குப்பையிலே”, “உப்பிட்ட வரை உள்ளளவும் நினை” என்பன உப்பு சார்ந்து வழங்கும் பழமொழிகள். உணவுக்கு நல்ல சுவை அளிப்பதில் உப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. தமிழர் தம் வாழ்வில் உப்பு பண்பாட்டோடு தொடர்புடையது. தம் நிலத்தில் விளைந்த பொருள்வழிக் கிடைக்கும் பணத்தில் முதலில் உப்பை வாங்குகின்ற வழக்கம் வேளாண்குடிகளிடம் இன்றும் இருக்கின்றது. தமது நெடுநாள் உழைப்பின் மூலம் கிடைத்த பணத்தின் முதல் செலவு உப்பிற்கானதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத;;தை இவ்வழக்கம் கொண்டிருப்பதை அறிய முடிகிறது.

இன்றும் பொழுது சாய்ந்த பின்னர் உப்பைக் கடனாகக் கேட்கின்ற, கொடுக்கின்ற வழக்கம் இல்லை. புதுமனை புகுவிழாவில் உப்பு சிறப்பிடம் பெறுகின்றது. திருமணம் முடிந்து தனிக்குடித்தனம் செல்லும் பெண்களுக்கு உப்பு வழங்கப்படுவதில்லை. இறந்தோருக்குச் செய்யும் ஈமச் சடங்கு முறைகளில் உப்பில்லாமல் சமைக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. இவ்வாறு உப்பானது உணவுப் பொருளாக மட்டுமின்றி உணர்வு சார் பொருளாகவும் இருந்து வருகின்றது.

**உப்பு - அமிழ்தம்:**

உப்பினை விளைவித்தவர்கள் நெய்தல் நில மக்கள். மனித வாழக்கையின் மையப் பொருளாக உப்பு அமைந்திருந்த காரணத்தினால் சங்கப் புலவர்கள் உப்பை ‘அமிழ்தம்’ என்று அழைத்தனர். சங;கப் புலவரான நல்லந்துவனார் உப்பை ‘கடல்விளை அமிழ்தம்’ என்கிறார். சேந்தன் பூதனார் என்னும் புலவர் உப்பை ‘வெண்கல் அமிழ்தம்’ என்கிறார். இதனை,

**“யாம்செய் தொல்வினைக்கு எவன் பேதுற்றனை**
**வருந்தல் வாழி தோழி யாம் சென்று**
**உரைத்தனம் வருகம் எழுமதி புணர்திரைக்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**கடல்விளை அமுதம் பெயற்கு ஏற்றாஅங்கு**
**உருகி உகுதல் அஞ்சுவல் உதுக்காண்" (நற்றிணை 88:1-5)**

என்று கடலிலே விளைந்த அமுதம் (உப்பு) மழை பெய்வதால் கரைந்து போவது போல உள்ளம் வருந்துகிறாய் என்று தலைவியின் வருத்தத்;தைத் தோழி எடுத்துரைப்பதாக நற்றிணைப் பாடல் அமைந்துள்ளது.

**உப்பு வணிகம்:**

சங்க கால நெய்தல் மக்கள் தங்கள் நிலத்தில் விளைந்த உப்பினை கழுதைகளின் மேல் ஏற்றி வணிகம் செய்தனர். கடலினது நீர் பரவிய உப்பளத்தில் விளைந்து நன்கு காய்ந்த அமிழ்தமாகிய வெண்ணிற உப்பினை மேற்குத் திசையில் உள்ள நாடுகளுக்குச் சென்று விற்பதற்காக, வீரம் மிக்க ஆடவர் நல்;நிமித்தம் (நல்ல நேரம்) பார்ப்பர். நல்நிமித்தம் நேர்ந்தவுடன் படைகளை ஆயத்தம் செய்து உப்பு மூட்டைகளை வெண்மையான முதுகை உடைய கழுதைகளின் மீது ஏற்றிக் கொண்டு செல்வர். இதனை,

**"அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்**
**உணங்குதிறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்**
**குடபுல மருங்கின் உய்ம்மார், புள்ஓர்த்துப்**
**படை அமைத்து எழுந்த பெருஞ்செய் ஆடவர்**
**நிரைப்பரப் பொறைய நரைப்புறக் கழுதைக்**
**குறைக்குளம்பு உதைத்த கல்பிறழ் இயவு (அகம்: 207: 1-6)**

என்னும் பாடல் எடுத்துரைக்கிறது.

இப்பாடலின் வழி நெய்தல் நிலப் பகுதியில்; விளைந்த உப்பைப் பிற நிலப் பகுதிகளுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்ததை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் உப்பு வணிகத்திற்கு நல்நிமித்தம் பார்த்த செய்தியையும், கழுதை உப்பு வணிகத்திற்குப் போக்குவரத்திற்குப் பயன்பட்டதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

உப்பளங்களில் பாத்திகள் அமைத்துக் கடல்நீரைப் பாய்ச்சி உப்பு விளைவித்தார்கள். பாத்திகளில் இருக்கும் நீர் ஆவியாகி உப்பு பூக்கும். இதனை,

**"கடுவெயில் கொதித்த கல்விளை உப்பு" (நற்:345:8)**

எடுத்துரைக்கிறது.

ஏர் உழாமல் உவர் நிலத்தில் உப்பு விளைவித்தமையால் நெய்தல் நில மக்கள் உழவர் என்று அழைக்கப்பட்டனர். இதனை,

**"உவர்விளை உப்பின் உழா உழவர்" (நற்:831:1)**

என்று நற்றிணை குறிப்பிடுகிறது.

உப்பளங்களில் உப்பு விளைந்தது. உப்பைக் குவியல் குவியலாக குவித்து வைத்திருந்தனர். உப்பை வாங்குவதற்கு வரும் உப்பு வணிகரை எதிர்பார்த்துக் காத்திருந்ததை,

**"உவர்விளை உப்பின் உழாஅ உழவர்**
**ஒகை உமணர் வருபதம் நோக்கி**
**கானல் இட்ட காவற் குப்பை" (நற்: 331-1:3)**

நற்றிணைப் பாடல் எடுத்தியம்புகிறது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**பண்டமாற்று வாணிகம்:**

உமணர்கள் (உப்பு வணிகர்கள்) மாட்டு வண்டிகளில் உப்பை ஏற்றினர். உப்புக்கு மாற்றாக நெல்வணிகம் நடந்தது. காசு கொடுத்து வாங்காமல் பண்டங்களை மாற்றிக் கொண்டனர். இதனை,

**"தந்நாடு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி**
**நெடுநெறி ஒழுகை நிலவுமணல் நீந்தி**
**அவண் உறை முனிந்த ஒக்கலோடு புலம்பெயர்ந்து**
**உமணர் போகலும்" (அகம்: 183: 1-5)**

என்னும் அகப்பாடல் பண்டமாற்று வணிகம் நிகழ்ந்ததை எடுத்துரைக்கிறது.

உமணர்கள் தாங்கள் பயணம் செய்கின்ற போது வழியில் தங்கி ஊருக்குள் சென்று உப்பு வணிகம் மேற்கொண்டனர். உமண ஆடவர் ஊருக்குள் சென்று உப்பு விற்கவில்லை. உமணப் பெண்கள் உப்பை ஊர்க்குள் கொண்டு போய் விற்றார்கள். பணத்திற்கு உப்பை விற்கவில்லை. உப்பை நெல்லுக்கு மாற்றினார்கள். இதனை,

**"நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்**
**கொள்ளீரோ வெனச் சேரிதோறும் நுவலும்" ( அகம்: 390: 8-9)**

என்று அகநானூற்றுப் பாடல் வழி அறிந்து கொள்ளலாம்.

ஆறுகளும் கால்வாய்களும் உள்ள ஊர்களில் படகு மூலம் உப்பை ஏற்றிக் கொண்டு வாணிகம் செய்தனர். உப்பை நெல்லுக்கு மாற்றி நெல்லைப் படகில் ஏற்றிக் கொண்டு வந்தனர். இதனை கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

**"கொழும் பல்குடிச் செழும்பாக்கத்துக்**
**குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு**
**வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி**
**பணைநிலைப் புரவியின் அணைமுதற்பிணிக்கும்**
**கழிசூழ் படப்பை" (பட்டினப்பாலை, 27-32)**

பட்டினப்பாலை பாடல் வழி எடுத்துரைக்கிறார்.

**முடிவுரை:**

உப்பு தமிழர் வாழ்வில் நீண்ட பாரம்பரியம் மிக்கதாகவும் ஆழமான பண்பாட்டுக் குறியீடாகவும் இருந்துள்ளதை அறிய முடிகிறது. நெய்தல் நிலமாகிய கடற்கரைப் பகுதிகள் தமிழ்நாட்டைச் சூழ்ந்திருந்த காரணத்தினால் பரவலாக உப்பளங்கள் இருப்பதையும், சங்க காலம் தொட்டு இன்றும் உப்பு வணிகம் சிறப்புற நடைபெறுவதையும் உப்பு தமிழர் பண்பாட்டோடு தொடர்புடையதாக இருந்துள்ளதையும் இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

**துணை நின்ற நூல்கள்:**

1. சங்க இலக்கியம் முழுவதும்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,சென்னை.
2. முனைவர் இரா. வெங்கடேசன்,சொல் பண்பாட்டு அடையாளம்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,சென்னை.
3. தொல்காப்பியம்,வர்த்தமானர் பதிப்பகம், சென்னை.
4. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை,பாரி நிலையம்,சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 40. சங்க இலக்கியத்தில் குமரி மலரணியாமை



Prof.THALINJAN Murugaiya University of Sorbonne, Paris, France MA,B.Ed (India) ;M.S.(Fin)Paris ; M.S.(Lignustic)Paris,France
விருதாளர் ; தமிழக அரசின் 'மொழியியல்' விருதுபெற்றவர்

DOI 10.5281/zenodo.16537337

பண்டைத் தமிழ்க் கன்னி மலர்சூடாள் என்பதும், மலர் சூடின் கன்னியாகாள், ஒருவனைத் தன் மனதில் வைத்திருக்கிறாள் என்பதும் நம் பழஞ் சமூதாய வழக்கு. இக்கருத்து கற்றார்க்கு இன்று வியப்பாகவும் புரட்சியாகவும் தோன்றும், தோன்றக்கூடும். இவ்வழக்கம் இந்நாள் தமிழகத்தில் இல்லாமையும், இருக்க இயலாமையும் கண்டு பலர் மலைக்கவும் மலைப்பர். அதற்கு சான்றுகள் பல உண்டு சங்க இலக்கியத்தில்.ஒரு கலித்தொகை பாடல்-107 முல்லை நிலத்து குமரியின் கவலையை விளக்குகிறது

**பெய்பொ தறியாத்தன் கூழையுள் ஏதிலாள்**
**கைபுனை கன்னி முடித்தாளென்று யாய்கேட்பின்**
**செய்வதி லாகுமொ மற்று**

இவள் கூழைக் கூந்தல் இது வரை மலர் சூடி அறியாதது, ஒரு பூ மேல் ஆசைக்கொண்டு இவள் தானே சூடிகொண்டாலும் அதுவே தவறாம். அயலான் கைதொட்டுத் தலையில் வைத்த கன்னிப் பூவந்து விழுந் தெனின் ஏறிட்டுப் பாராது எடுத்தெறிய வேண்டியதிருப்ப, என் மகள் அதனை விரும்பி முடித்துப் பொதிந்து கொண்டாளாயின், அக்குற்றம் பொறுக்க கூடியதோ என்றெல்லாம் தாய் காரணத்தை அடுக்கி நினைத்து அடங்கா சினம் கொண்டால் என் செய்வென் என்று கலங்குகிறாள் முல்லைக் குமரி..

சங்க இலக்கியத்தில் வேளாண் சமூகத் தாய்க்கு தன் மகள் காதல் வயப்பட்டிருக்கிறாள் என்பதை அவள், தன் தலை முடிக்குள் மறைத்து வைத்தப் பூ காட்டிக்கொடுத்தது. இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்த பிறகு தொழில் சமூகத் தாய்க்குத் தன் மகள் காதல் வயப்பட்டிருக்கிறாள் என்பதை அவள் புத்தகத்தில் மறைத்து வைத்திருந்த கடிதம் காட்டிகொடுத்தது. அதனைதொடர்ந்த தொழில் நுட்ப சமூகத் தாய்க்கு தன் மகள் காதல் வயப்பட்டிருக்கிறாள் என்பதை அவள் தலையணைக்கு அடியில் மறைத்து வைத்த தொலைபேசிக் காட்டிகொடுத்தது. காலங்கள் மாறின ஆனால் காட்சிகள் மாறவில்லை. காதலுக்குத் தூதாக "பூ" ஒரு காலத்திலும் "கடிதம்" பிற்காலத்திலும் அதன் பிறகு வந்த காலத்தில் நுண்ணறிவுக் கைத்தொலைப்பேசியாக உருமாறியிருக்கிறது. சங்க இலக்கியம் தொட்டு இன்று வரை களவு வாழ்க்கைக்கான கருப்பொருள் மாறவில்லை. ஆனால் உரிபொருள்தான் மாற்றம் அடைந்துள்ளது. இன்றுவரைக் களவு வாழ்க்கையின் முரண்பாட்டு நிலை தாய்க்கும் மகளுக்கும் இடையில் நடந்து கொண்டுதான் இருக்கிறது என்பதைக் கீழ் வரும் சங்கப் பாடல் விளக்குகிறது.

**புல்லினத் தாய் மகன்சூடி வந்ததோர்**
**முல்லை யொருகாழும் கண்ணியும் மெல்லியால்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**கூந்தலுட் பெய்து முடித்தேன்மன் தோழி யாய்**
**வெண்ணைய் உரைஇ விரித்த கதுப்போடே**
**அன்னையும் அத்தனும் இல்லரா யாய்நாண**
**அன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ” [கலி.115]**

இந்தப் பாடல் காதல் வயப்பட்ட ஒரு முல்லைக் குமரியின் வாக்குமூலம்

இடைமகன் சூடிய முல்லைத் தொடையையும் முல்லைச் சரத்தையும் புறத்தே தெரியாதபடி என் கூந்தலுக்கு உள்ளே வைத்து முடித்து வைத்து மறந்து உறங்கிவிட்டேன். மறுநாள் தலைவாரிமுடிக்க வெண்ணைத் தடவவே கூந்தல் விரிந்து உள்ளிருந்த பூ அன்னைக்கு முன்னே வீழ்ந்து என் காதல் வெளிப்பட்டது. அதைக் கண்ட என் தாய் நாணினாள், யாதும் வினவவில்லை, சினக்கவும் இல்லை. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. நெருப்பைத் தொட்டவள் போல கை விதிர்விதிர்த்து அவ்விடத்தே நில்லாது போய்விட்டாள். பூவால் களவு வெளிப்பட்டு விட்டது. மேல் விளைவு யாதாகுமோ என்று நடுங்குகின்றாள் ஒரு களவு நங்கை.

இன்றைய தொழில் நுட்ப சமூகத்தில் காதல் கொண்ட மகள் தொலைப்பேசியில் இரவு நேரத்தில் படுக்கையில் பேசிக்கொண்டு இருந்தால் தாய்ப் படும் பாட்டிற்கு அளவே இல்லை எனலாம். தாய்க்குத் தெரிந்துவிட்டதே என்று காதல் வயப்பட்ட மகள் படும் கலக்கத்துக்கும் எல்லையே இல்லை எனலாம். சங்க இலக்கியத்தில் தன் மகளிடம் உள்ள பூவைப் பார்த்து பயந்து நடுங்கி தவித்த அதே தாய் தான், இன்றைய தொழில் நுட்ப சமூகத்தில் தன் மகள் கையிலுள்ள தொலைபேசியைக் கண்டு மிரட்சி அடைந்து, நெருப்பைத் தொட்டவள் போல் துடிக்கின்றாள் என்றால் அது மிகையாகாது. தமிழர் இலக்கியம் ஒரு சமூக வரலாறு. அதற்கு முடிவு என்பது இல்லை. அது ஒரு தொடர்ச்சி என்பது மேலே குறிப்பிட்ட சங்க இலக்கிய பாடலும் இன்றைய வாழ்வியல் முறையும் நமக்கு அடையாளம் காட்டுகிறது. அன்றையச் சங்கத் தாய் இன்று இருந்திருந்தால், இன்றையத் தொழில்நுட்ப சமூகத்தின் தாயைப் பார்த்து அன்றைய என் நிலைதான் இன்றும் உனக்கு ஏற்பட்டிருக்கிறது. மனதளவில் மாற்றம் ஏதுமில்லை என்று நினைத்து புன்னகைத்து இருப்பாளோ அல்லது அவள் நிலை கண்டு எள்ளி நகைத்திருப்பாளோ என்பதை தாய்மைக்குச் சொந்தக்காரர்களான பெண் வாசகர்களே முடிவு செய்வார்கள்.

இலக்கியத்தில் கூழைக்கூந்தல் என்பது இளங்குமரியின் தலைமுடி நீண்ட வளர்ச்சி பெற்றிருப்பதில்லை, இன்னும் வளரவேண்டும் குறையுடையது. பூ முடித்தற்கு வேண்டும் கூந்தல் நீட்சி, மனைவிப் பருவத்தெ வளருமாதலின், பூ அணியும் வழக்கம் திருமணம் தொடங்கி மேற்கொள்ளப்படுவது எனக்கொள்ளலாம். குமரிப்பருவத்து கூழைக்கூந்தலைச் செவிலியர் எண்ணைத் தடவி வாரிப் பின்னி விடுமளவே செய்வர். பின்னிய கூந்தலில் பூ அணிவதில்லை.

**பின்னுவிட் டிருளிய ஐம்பால் [கலித்தொகை -59]**
**மண்ணி மாசற்ற நின்கூழை [கலித்தொகை-107]**
**பின்னுவிடு நெறியிற் கிளைஇய கூந்தலள் [அகம்-108]**
**கூந்தல் வாரி நுசுப்பிவந் தோம்பிய நலம்புனை யுதவி அகம்-195**

இனைய பாடலடிகள் குமரியர் கூந்தலின் ஒப்பனையில் பூ இல்லாமைக்குச் சான்றுகளாம். கன்னியர் பூ அணிதல் ஆகாது என்று தமிழ்ச் சமுதாயம் கொண்ட முறைக்குக் காரணம் என்னவெனில் , பூ பொலிவுடையது, கண்ணுக்கினியது, நட்பாடத்துணையாவது, கைக்கு அழகியது, மணம் பொதிந்தது ,மனத்தைக் கிளறுவது, காதலுக்கு நாகரீகத் தூதாவது.


http://Creativecommons.org//license/by/4.0/.

அத்தகைய பெருச்சிறப்பு வாய்ந்தது ஒரு சிறு பொருள் 'பூ'. ஆகையால் பூவணையர் பூப்பெய்திய குமரியர்.

கன்னிப் பெண்கள் மலர்களைப் போன்றவர்கள் என்பதை கீழ்வரும் குறுந்தொகை பாடல் விளக்குவதைக் காணலாம்

**கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை**
**நாறிதழ்க் குவளையொ டிடைபட விரை,**
**ஐதுதொடை மாண்ட கோதை போலெ**
**நறிய நல்லொள் மேனி**
**முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதெ [குறுந் 32,] ,**
**வேங்கையும் காந்தளும் நாறி**
**ஆம்பல்மலரினும் தந்தண் ணியவளே[குறுந் 84]**

காதற்கன்னி, முல்லையும் குவளையும் வேங்கையும் காந்தளும் ஆம்பலும் போல்பவள் எனவும், ஐம்மையும் நறுமையும் இனிமையும் தன்மையும் வாய்ந்த மென்மையவள் எனவும், பூவாகவும் பூவின் தன்மையனவாகவும் போற்றப்படுகின்றாள். இல்லக் குமரியர் பூச்சூடி மணம் பரப்பிப் பிறரைக் கவரவேண்டும் என்பதில்லை. கவருதலும் கூடாது. அத்தகைய செய்புனைக் கவர்ச்சி கற்பு நெறிக்கு ஒவ்வாது, காதல் நெறியை வளர்க்காது என்றெல்லாம் தமிழ் மூதறிஞர்கள் கண்டனர், குமரியர் பூவணிதலைக் கண்டித்தனர் என்று கொள்ள வேண்டும்.

குமரியர் பூவணியும் உரிமையைத் திருமணநாள் முதல் பெறுகின்றனர் என்பதனை ஐங்குறு நூறு பாடல் [296] –« பின்னிருங் கூந்தல் மலரணிந் தோயே » தலைவன் கூந்தலைப் பின்னி மலர் அணிந்தான் என்று கூறாமல், பின்னிய கூந்தலில் மலரணிந்தான் என்று கூறுவதால், கூந்தல் பின்னிய நிலை 'குமரிக்கோலம்' என்றும் பின்னிய கூந்தலில் மலரணிதல் 'கற்புக்கோலம்' என்றும் தெளிவாதல் காண்க. கூந்தலைத் தொட்டானுக்குக் குமரி உரிமையாகிறாள். « ஊற்றார்க்கு உரியர் பொற்றொடி மகளீர் » என்பது பழமொழி. இவள் « ஒலி மென் கூந்தல் உரியவாம் நினக்கெ » (குறுந் 225) « குறுந்தொடிமகளீர் நாறிருங் கூந்தற்கிழவர் » (புறம் 113) என்ற அடிகளால், கூந்தலுக்கு உரியவன் யாவன் அவன் கொழுநன், கணவன் என்ற மணவழக்குப் பெறப்படும். கூந்தலுக்கு உரியவன் என்றால், கூந்தலில் மலர் வேய்ந்து மணங்கொள்பவன் என்பது குறிப்பு.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட இந்த தமிழ்ச் சமூக மரபு இன்றளவும் எள்ளளவும் வழுவாமல் நடைமுறையில் கடைபிடிப்பதை வாசகர்கள் அறிவீர்கள். தமிழ்ச் சமூகத்தில் பெண் பார்க்கும் படலத்தில் பூ வுடன் செல்லும் மணமகன் வீட்டார் மணப்பெண்ணை பிடித்துவிட்டால் மணமகனின் தாய் மணப்பெண்ணின் கூந்தலில் மலரணிந்து "இனி நீ என் வீட்டு மருமகள்" என்று உரிமை கொண்டாடும் வழக்கத்தை இந்த நூற்றாண்டிலும் வழக்கில் உள்ளதை அறிவீர். இறுதியாக கவிஞர் கண்ணாதாசன் இயற்றிய « பூ முடிப்பாள் பூங்குழலி » என்ற பாடல் நினைவுக்கு வருகிறது. தமிழர் மரபு எத்தனை நூற்றாண்டுகளைக் கடந்தாலும் அது தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.

இன்றும், நாட்டாற வழக்கில் பெண் பருவமடைந்துவிட்டாள் என்பதை "பூப்பெய்தினாள்" என்ற சொல் வழக்கு வலம் வருகிறது. அதனைப் 'பூப்புனித நீராட்டு விழாவாக' கொண்டாடப் படுகிறது. சங்க இலக்கியத்தில் பூப்பெய்யா [மலர் அணியா] கூழைக்கூந்தல். இங்கே பருவமடைந்த பெண்ணை 'பூப்பெய்தால்' அல்லது 'பூப்படைந்தாள்' என்று அழைக்கிறோம். இந்தச் சொல்லைப் பிரித்துப்பார்த்தால் பூவை அடைந்தாள் என்றால்,


http://Creativecommons.org//license/by/4.0/.

பூ சூடிக்கொள்ளக் கூடிய தகுதியான கற்பு வாழ்க்கைக்குத் தயாராகி விட்டாள் என்றுதானே அர்த்தம் கொள்ளவேண்டும். சங்க இலக்கியத்தில் குறிப்பிட்டது போல இதுவரை பூ சூடிக்கொள்ளாதவள் இனி பூ சூடிக்கொள்ள போகிறாள் என்பது தெளிவு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சங்க இலக்கியத்தில் வேடன் சமூகத்தைத் தொடர்ந்த வேளான் சமூகத்தில் குறிப்பிடப்பட்ட இந்த தமிழ் சொல் சிறிதும் வழுவாமல் இன்றைய தொழில் நுட்ப நூற்றாண்டு வரை வழக்கில் உள்ளதைக் காணும் போது தமிழ் மொழி ஒரு செம்மொழி என்பதை உலகம் ஏற்றுகொண்டதை யாரால் மறுக்க முடியும்.

கணவன் மனைவிக்கு இடையில் 'பூ' என்ற சிறு பொருள் ஒரு பெரிய கருப்பொருளாக விளங்குகிறது என்றால் அது வியப்பு இல்லை. காரணம், கணவன் மனைவிக் கிடையே ஏற்படும் எந்த இணக்க முரண்பாட்டையையும் இந்தச் சிறு பூவைத் தன் மனைவியின் கூந்தலைத்தொட்டு சூடும்போது, இருவர் உள்ளத்திலும் அன்பை விதைத்து, பிணக்கை நீக்கி, நல்லிணக்கத்தை உருவாக்கி, இருவரையும் முயங்க வைக்கிறது என்றால் அது வியப்பு இல்லை. இன்றைய இளைஞர்களின் நவீன இலக்கிய சொல்படி கூறவேண்டுமென்றால் 'கெமிஸ்ட்றி' உருவாகிறது, அதைத்தான் நான் 'முயங்கி' என்று குறிப்பிட்டேன். பூவில் இத்தகை முயக்கம் இருப்பதால் தான் இன்றைய நவீன காலத்தில் கூட பெண்கள் தன் கணவன், தினம் ஒரு முழம் பூ வை வாங்கி வந்து தன் தலையில் சூட வேண்டும் என்று எதிர்பாக்கிறார்கள். அந்த எதிர்பார்ப்பில், ஒரு சூட்சமம் ஒளிந்திருக்கிறது. அதாவது திருமண நாள் அன்று, சுற்றார் ஊற்றார் அறியத் தன் தலைமுடியில் பூ சூடித் தனக்கு மனைவி என்ற அங்கீகாரத்தையும் அந்தஸ்தையும் ஊறரிய அளித்து ஏற்றுக்கொண்டவன், தன் வாழ்நாள் முழுவதும் தனக்கு அந்த அங்கிகாரத்தை அளிக்க வேண்டும் என்பதால்தான் பூ கொண்டு வருவதற்கு ஒரு நாள் தவறினால் கூட, தன் கணவனுக்குத் தன் மீது அன்பு இல்லாமல் போய்விட்டதோ அல்லது வேறொரு பெண்ணிற்குப் பூ சூடி இருப்பானோ என்ற, பெண்ணுக்கே உரிய இயல்பான ஐயம் உருவாகுகிறது என்றால் அது மிகை ஆகாது.

பூ என்பது ஆண் பெண்ணுக்கிடையே உள்ள ஒரு உறவை மட்டும் கொடுப்பதல்ல அது ஒரு கற்பு வாழ்க்கையின் 'காதலின்' அடையாளம். கணவன் மனைவி நிரந்தரமாக இந்த உலகை விட்டு பிரியும் வரை நீடிக்கும். இன்று நாம் உண்ணும் உணவிலே மாற்றம், உடுத்தும் உடையிலே மாற்றம், கல்வியிலே மாற்றம், கேளிக்கைகளிலே மாற்றம், செய்யும் தொழிலிலே மாற்றம், இவ்வாறு வெகுவாக கலாச்சார மாற்றத்துக்கு உட்பட்டு வாழ்ந்த போதிலும், பெரும் பழமையான அடிப்படைப் பண்பாட்டு காலாச்சரத்தில் இருந்து விடுபடாமல், அது தொன்று தொட்டு நம்முடனே தொடர்வதால் தான் இன்றைய நவீன உலகத்தில் பிறந்து வளர்ந்த திருமணமான நங்கைகள் தினம் தன் கணவன் பூ கொண்டுவருவானா என்ற ஏக்கமும் தாக்கமும் அவர்கள் மனதில் தேங்கி நிற்கிறது..

தமிழர் பண்பாட்டு கலாச்சரம் வெறும் வழக்கு அல்ல அது ஒரு மரபு சார்ந்த கூறு ஆகும். அதனால்தான் அது நீண்ட நெடு தொடர் பயணமாக இன்றுவரை பயணிக்கிறது. ஆகையால் தான் 'பூ' சூட தன் கணவன் உயிருடன் இல்லாத போது மனைவி 'பூ' விழந்து தன் பழைய 'பூப்பெய்யா' நிலைக்கே திரும்புகிறாள்.

திருமணமான பெண்ணிற்கு அவள் தலையில் சூடி இருக்கும் 'பூ' ஒரு அடையாளமாக சங்க இலக்கியத்தில் காணப்பட்ட பண்பாடாகும். சங்க இலக்கியத்தில் மற்றுமொரு செய்தியும் காணலாம், குழந்தைப் பருவம் தொட்டு 'காற்சிலம்பு அணிந்து' வந்த குமரி கரணத்திற்கு[திருமணத்திற்கு]ப் பிறகு கற்பு வாழ்க்கையில் 'காற்சிலம்பு அணியாமை' வழக்காக இருந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தில் கண்ணகி குமரிப் பருவத்தில் அணிந்திருந்த காற்சிலம்பைத் திருமணத்திற்குப் பிறகு அணியாமையால், அதனைக் கோவலனுக்கு


http://Creativecommons.org//license/by/4.0/.

வழங்கினாள் என்பதை அறிவதிலிருந்து திருமணத்திற்குப் பிறகு பெண்கள் காற்சிலம்பு அணியாமை என்பது தெளிவு. சங்க இலக்கியத்தில் களவு வாழ்க்கையில் 'பூப்பெய்யாக் குமரியும்' 'காற்சிலம்பு அணியும் குமரியும்' கற்பு வாழ்க்கையில் 'பூப்பெய்யும் குமரியும்' 'காற்சிலம்பு அணியா' குமரியையும் காணலாம். பெண், திருமணம் ஆனவள் என்பதை அடையாளாம் காண, ''பூவணையும் அவள் தலை உணர்த்தும்'' மற்றும் ''காற்சிலம்பு அணியா அவள் கால் உணர்த்தும்''.

சங்க இலக்கியத்தியற்கு மறுமை என்பதே இல்லை. அது தமிழரின் பத்தாயிரம் ஆண்டுக்கான ஆணிவேர். இன்னும் எத்தனை நூற்றாண்டைக் கடந்தாலும் நீடிக்கும் என்பதில் ஐயம் இல்லை. தமிழ்ப் பண்பாடு ஒரு முடிவு அல்ல அது ஒரு தொடர்ச்சி என்பதை வரும் தலைமுறைகள் தான் முடிவு செய்யவேண்டும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 41. மதுரைக்காஞ்சி காட்டும் வணிக வாழ்வியல்

முனைவர் கா.சந்தானலெட்மி,
இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர் தமிழ்த்துறை,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தூர்.
lakshmisanthana617@gmail.com ph no: 7708394749
ORCID: 0009-0009-4031-9490 - DOI 10.5281/zenodo.16537537.

**Abstract :**

Madurai - The center of culture. The excavations of Keezhadi reveal the ancient and glorious history of Tamils to the world. Maduraikanchi is a literary document of the time as an expression of such culture. 'Dhooka Nagaram' has narrated and sung the events of a day in Madurai through the life of the people in Maduraikanchi. Maduraikanchi also describes the domestic and international trade of the people, the water and land trade, the goods sold and the way they were sold. The descriptions of the weaving lands of Maduraikanchi show that trade is not only economic but also their life is land-based. This article discusses the commercial life of the people living in the weaving lands from a sociological research approach.

**Keywords:** Peruneer, Vilagnar, Ochunar, Navai, Kulam, Nankalan, Thunyal, Vaikal, Bharathavar

## முன்னுரை

'மதுரையை சுத்தின கழுதை கூட போகாது' என்ற மக்கள் வழக்கானது மதுரையின் வணிக நிலை சார்ந்த வாழ்வியலை சுட்டுகிறது. அனைத்து பொருட்களின் விற்பனை க்கூடமாக பதிபொழுயறியா பழங்குடிகளின் இருப்பிடமாக பன்னாட்டு வணிகத்தில் பண்பாட்டுத் தளமாக மதுரையம்பதி விளங்கியதை மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கிறது. பல்வேறு வணிகச் சூழல்களை மதுரைக்காஞ்சி காட்சிப்படுத்துகிறது. அவைகளில் நிலவணிகம் சார்ந்த மக்களின் வாழ்வியல் மட்டுமே இங்கு சமூகவியல் ஆய்வு அணுகு முறையில் ஆராயப்படுகின்றது.

## மதுரையின் வணிக நிலையும் மக்களின் வாழ்வியலும்

மதுரைக்காஞ்சி மதுரையின் ஒரு நாள் நகர வாழ்வியலை காட்சிப்படுத்தும் இலக்கிய ஆவணமாக்கும் ஒரு நாட்டின் பொருளாதாரம் அந்நாட்டின் வாழ்வியலை தீர்மானிக்கிறது பல்வேறு வருவாயைக் கொண்டிருக்கும் நாடே வளமானது ஆகிறது; அந்த வகையில் தூங்கா நகரமாக; மதுரை எப்போதும் வணிகம் உயிர் பெறும் இடமாக திகழ்கிறது. இன்று வரை இச்சூழலே நிகழ்வது மதுரையின் பண்பாட்டு அடையாளமாகும். அந்த வணிகச் சூழல் மக்களின் வாழ்வியலோடு எப்படி பின்னிப் பிணைந்துள்ளது என்பதை மதுரைக்காஞ்சி பல்வேறு படிநிலைகளில் படமாக்கிக் காட்டுகிறது.

## நெய்தல் நில மக்களின் வணிக வாழ்வியல்

மதுரைக்காஞ்சியின் 315 - 326 வரையிலான பாடல் வரிகள் நெய்தல் நில மக்களின் வணிக வாழ்வியலை விவரிக்கிறது கடல் தந்த முத்துக்களும் சங்குகளும் விற்பனை பொருளாகியதை மதுரைக்காஞ்சி விவரிக்கிறது. வணிகர்கள் கொண்டு வந்த பல்வேறு உணவுப்பொருட்களும் நெய்தல் நிலப் பகுதிகளில் விற்கப்படுகின்றன. இனிய புளியுடன் உப்பும் விற்கப்படுகின்றன. கடலில் பிடிக்கப்பட்ட கொழுத்த மீன்கள் அறுக்கப்பட்டு துடிமுரசின் கண் போன்ற துண்டுகளாகப்பட்டு விற்கப்பட்டுள்ளன.

விற்பனைக்குரிய பொருள்களாக அணிகலன்களும் உணவுப் பொருட்களும் விளங்கியுள்ளன. உணவை பக்குவப்படுத்தி விற்கும் அறிவினை பெற்றவர்களாக தமிழர்கள்


http://Creativecommons.org//license/by/4.0/.

பண்டைய காலத்தோடு திகழ்ந்துள்ளனர். இதனால் தமிழர்களின் உணவு மேலாண்மை திறன், நிதி மேலாண்மை திறன், வணிக மேலாண்மை திறனையும் ஒருங்கே காண முடிகிறது. உள்நாட்டு வெளிநாட்டு வணிகத்தையும்,

**பரந்து ஓங்கு வரைப்பின் வண்கைத்திமிலா**
**கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்**
**விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்**
**நனந்தலை தோத்து நன்கலன் உய்ம்மார்**
**புணர்ந்து உடன் கொணர்ந்த புரவியொடு அனைத்தும்**
**வைகல் தோறும் வழி வழி சிறப்ப** **(மதுரைக்காஞ்சி 320 - 324)**

என்ற மதுரைக்காஞ்சி வரிகள் குறிப்பிடுகின்றன. நாள்தோறும் வணிகம் நடைபெறுவதை 'வைகல்தோறும் வழிவழி சிறப்ப' என்ற வரி குறிப்பிடுகிறது.

ஒரு காலத்தில் வணிகம் நடைபெற்றது; ஒரு காலத்தில் நிறுத்தப்பட்டது என்ற நிலையின்றி நாள்தோறும் வணிகம் நடைபெறுவதற்கேற்ற பொருளாதார சூழலும் காலநிலை சூழலும் மதுரையில் நிலவியதை அறிய முடிகிறது. வணிகப் பொருள்கள் கப்பலிலும் குதிரைகளிலும் கொண்டு செல்லப்பட்டுள்ளன நிலவழி வணிகப் போக்குவரத்திற்கு புரவிகளும் நீர்வழி போக்குவரத்திற்கு கப்பல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வணிகர்கள் புரயோட்டும் திறன் பெற்றவர்களாகவும் திகழ்ந்துள்ளனர். 'உடன் கொணர்ந்த புரவி' என்பது அவர்கள் செல்லும் இடங்களில் எல்லாம் புரவியைப் பயன்படுத்தியதை சுட்டுகிறது. 'விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்' என்ற வரி மூலம் கடல் பரப்பினை 'பெருநீர்' என குறிப்பிடப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

பல்வேறு சிறப்புக்களை உடையதாக போக்குவரத்து வசதிக்கு ஏற்ப இருந்ததை 'விழுமிய நாவாய்' என மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. கப்பல் செலுத்துபவர்களை ஓச்சுநர் என மாங்குடி மாங்குடியார் கூறியுள்ளார். இச்சொல்லானது இன்றைய ஓட்டுநர் என்ற சொல்லாட்சியோடு ஒப்பிட்டு பார்க்கத்தக்கது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்த மக்களின் வாழ்வியலோடு ஒன்றிய செயல்பாடுகளும் சொற்களும் இன்று வரை பயன்படுத்தப்படுவது தமிழரின் தொன்மை வாழ்வியலை வெளிப்படுத்துகிறது.

கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல் (ம.கா 320) துணியல் என்பது துண்டிக்கப்பட்ட பதப்படுத்தப்பட்ட மீன் துண்டுகளை குறிப்பிடுகிறது. கடலில் பிடிக்கப்படும் மீன் என்பதால் 'கொழுமீன்' என குறிப்பிடப்படுகிறது குறிப்பிடப்படுகின்றது அதிக அளவில் பிடிக்கப்பட்ட மீன்களை உடனே பயன்படுத்த முடியாது என்பதால் அதனை உரிய முறையில் துண்டிக்கப்பட்டு பதப்படுத்தப்பட்டுள்ளன. இத் துண்டுகள் முரசின் கண்களைப் போன்று இருந்துள்ளன. கடலில் இருந்து விளைவிக்கப்படும் 'வெள் உப்பு' உரிய தரத்தோடு விற்கப்பட்டுள்ளதை மதுரைக்காஞ்சி மூலம் அறியலாம். உணவுப் பதப்படுத்துதலை தமிழர்கள் நன்கறிந்துள்ளனர். அவற்றை சந்தைப்படுத்தி மதிப்பு கூட்டி பொருளாக்கி விற்கும் முறையினையும் அறிந்துள்ளனர். கடல் பகுதி மக்களின் வாழ்வியல் இடமாக மட்டுமன்றி வணிகத்தின் வாயிலாகவும் அமைந்துள்ளது. தமது பகுதிகளில் கிடைக்கக்கூடிய பொருள்களை சூழல்களுக்கு ஏற்ப வணிகம் செய்யும் திறனையும் தமிழர் தமிழர்கள் பெற்றிருந்ததை மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கிறது.

நன்கலன் என்பது 'நல்ல அணிகலன்' என பொருள்படும் ஏராளமான அணிகலன்கள் மதுரையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதை கீழடி அகழ்வாய்வுகள் காட்டுகின்றன. 'பெண்கள் அணியும் தங்க அணிகலன், துண்டுகள், செப்பு அணிகலன்கள், மதிப்புமிக்க மணிகள், 4000க்கும்


http://Creativecommons.org//license/by/4.0/.

மேற்பட்ட கல் மணிகள், கண்ணாடி மணிகள், சங்கு வளையல்கள், தந்த வளையல்கள், பளிங்கு கற்களால் ஆன மணிகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. இவை தமிழரின் செல்வச் செழிப்பான வாழ்க்கையை காட்டுகிறது.'[1] தூய பொன்னாலாகிய அணிகலன்களும் பல்வேறு வகையான நிறத்திலான கற்களைக் கொண்டு செய்யப்பட்ட அணிகலன்கள் மதுரையின் வணிகத்தின் அடையாளமாகின. இயற்கை விளைபொருட்களான முத்துக்களும், சங்குகளும் பாண்டிய அரசின் தனித்துவத்தை வெளிப்படுத்தின, 'பாண்டியநாடு முத்துடைத்து' என்ற சிறப்பினை பாண்டியநாடு பெற்றது. முத்துக்கள் பல்வேறு அணிகலன்களின் தயாரிப்பிடமாக வணிகச் சந்தையாக மதுரை திகழ்ந்துள்ளது.

கீழடி அகழ்வாய்விற்கான இலக்கியச் சான்றாகவே மதுரைக்காஞ்சி திகழ்கிறது. சங்க இலக்கியங்களில் பேசப்பட்ட மதுரையின் அமைப்புகள் தொழில் வணிகம் போன்ற செய்திகளுக்கு நேரடிச் சான்றுகளாக இந்த அகழாய்வுப் பொருள்கள் அமைந்துள்ளன.'[2] பாண்டிய நாட்டுப் பேரரசி மதுரை மீனாட்சி அங்கயற்கண்ணி எனப் போற்றப்படுகிறார். மீன்களின் கண்கள் துயிலாது போல மதுரையை அன்னை மீனாட்சி காக்கின்றாள். மீன் கடலோடு தொடர்புடையது, கடலிருந்தே பெறப்படும் முத்துக்களும் பாண்டிய நாட்டோடு தொடர்புடையதாகிறது. பாண்டிய நாட்டின் முத்துக்களுக்கு அயல் நாடுகளில் அதிக வரவேற்பு இருந்தமையை வெளிநாட்டார் குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது. 'இந்தியாவில் மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களில் பரவலாகக் காணப்படும் அகேட், சூதுபவளம் (Cornelian) போன்ற மணி கற்கள் கீழடியில் கண்டறியப்பட்டுள்ளன. இதன் மூலம் வடமாநிலங்களுடன் கொண்டிருந்த வணிக உறவு உறுதிப்படுத்தப்படுகிறது.'[3]

சங்கு அறுத்தல் சங்கின் மூலம் பல்வேறு அணிகலன்கள் செய்யப்பட்டுள்ளமையை மதுரைக்காஞ்சி மற்றும் பல இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. 'சங்கறுப்பது எங்கள் குலம் சங்கரனார்க்கு ஏது குலம்' என்று கூறுமளவிற்கு சங்கறுத்தல் தொழிலே இனத்தின் தொழிலாக அமைந்துள்ளதை அறிய முடிகின்றது. இன்றளவும் தமிழர் பயன்பாட்டில் சங்கு வளையல்கள் மற்றும் அணிகலன்கள் பயன்பாட்டில் உள்ளன.

**வணிகப் பாகுபாடு**

மதுரையின் வணிகத்தை இடவாரியாக உள்நாட்டு வெளிநாட்டு வணிகம் என வகைப்படுத்தலாம். பொருளாதார அடிப்படையில் சில்லறை வணிகம், மொத்த வணிகம் எனவும் காலத்தின் அடிப்படையில் நாளங்காடி, அல்லங்காடி எனவும் பாகுபடுத்தி பார்க்கலாம் இந்த பாகுபாடு வணிகர்களின் வாழ்வியலோடு தொடர்புடையதாக இருந்துள்ளது. செய்யும் வணிகத்திற்கு ஏற்ப அவர்களின் சமூக பொருளாதார வாழ்வு மாறுபட்டுள்ளதை மதுரைக்காஞ்சி வாயிலாக தெளிவாக உணர முடிகிறது.

**கூல விற்பனை**

பல்வேறு வகையான தானியங்களின் விற்பனை மதுரையில் நடைபெற்று உள்ளது. கூலத்தினை விற்பதற்கு இடப்பட்ட வரியும் கூலம் என்றே அழைக்கப்பட்டது. கூலம் என்பதற்கு அகராதியானது பின்வரும் விளக்கத்தினை தருகின்றது. கூலம் - நெல், புல், வரகு, திணை, சாமை, இறுங்கு, துவரை, இராகி, மொச்சை முதலிய பதினெண் வகைப்பண்டம்'[4] என விளக்கம் அளிக்கிறது. கூலம் குவித்த கூல வீதியும் என சிலம்பும்(14.2.11) கூறுகிறது. அகழாய்வுகளில் நெல்மணிகளும் சிறு தானியங்களும் கிடைக்கப்பட்டுள்ளமை தமிழரின் வணிகச் சிறப்பினையும் வாழ்வியல் நாகரிகத்தினையும் ஒருங்கே காட்டுகிறது. ஆயிரம் வருடங்கள் தாண்டி இன்றும் இப்பொருள்கள் மதுரையில் விற்கப்படுவது மக்களின் வாழ்வியல் பழமையை வெளிப்படுத்துகிறது. மதுரையின் வியாபார தலங்களாகிய சந்தைப்பேட்டை. நெல்பேட்டை. வெற்றிலை பேட்டை. யானைகல். சிம்மக்கல் போன்ற


http://Creativecommons.org//license/by/4.0/.

பகுதிகள் இன்றுள்ளன. கூழத்தின் பெயர்களே இடங்களின் பெயர்களாகியுள்ளது. அவர்களின் வாழ்வியலோடு வணிகம் கொண்டிருந்த உறவாடலை உணர்த்துகிறது. வணிக மேம்பாட்டினையும் பண்பாட்டு பழமையையும் மதுரைக்காஞ்சி காட்டும் வணிக வாழ்வியல் தெளிவுபடுத்துகிறது. நெய்தல் நிலப்பகுதியில் இயற்கை வருணனையை வருனையை விடுத்து மக்களின் வணிக இயங்கு நிலை வருணித்துள்ளது அப்பகுதி வணிகத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்துகிறது. கடல் வணிகமும் அது அது சார்ந்த மக்களின் வாழ்வியலையும் இதன் மூலம் அறிய முடிகிறது.

**முடிவுரை**

மக்களின் வணிக வாழ்வியல் அவர்களின் பொருளாதார வாழ்க்கை நிலையைக் காட்டுவதோடு மட்டுமன்றி நாட்டின் சமூக பண்பாட்டு நிலையையும் காட்டுவதாக அமைகிறது என்பதை இவ்வாய்வு மதுரைக்காஞ்சி வாயிலாக உறுதி செய்கிறது. நீர்வழி, நிலவழி போக்குவரத்து வாயிலாக உள்நாட்டு, பன்னாட்டு வணிகம் நடைபெற்றுள்ளது. தமது பகுதி விளை பொருட்கள் பதப்படுத்தி நுகர்வோருக்கு ஏற்ற வகையில் சந்தைப்படுத்தும் விற்பனை மேலாண்மை திறன் உடையவர்களாக தமிழர்கள் திகழ்ந்துள்ளதை மதுரைக்காஞ்சி வெளிப்படுத்துகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. இரா. இளங்குமரன் (பதிப்பாளர்), மதுரைக்காஞ்சி, புரட்சிக்கவிஞர் மன்றம், மதுரை 2014
2. எ. பாலசுப்ரமணியம்,இந்தியப் பொருளியல்,தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னை, மறுபதிப்பு 1972
3. sangampoemstranslatedbyvaidehi தமிழ் உரை - மதுரைக்காஞ்சி


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 42. பழந்தமிழகத் துறைமுகங்களும் வணிகமும்

முனைவர் சோ.ஹரிபாண்டிராஜன்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.
DOI 10.5281/zenodo.16538783.

**Abstract:**

Kaveripumpattinam was an important port city of ancient Tamils. It was also the capital of the Cholas. It was also called by names like Pukara and Poompuhar. It was located at the mouth of the Kaveri River. Korkai was also a port and pearl city of the Pandyas. Musiri, Thondi, Bandar, Kodumanam etc. were the ports of the Cheras. Apart from these, Alaghankulam, Kayalpattinam and Eilpattinam were also ports of the Pandyas. Cities like Kaveripumpattinam, Korkai, Musiri, Thondi, Alaghankulam, Kayalpattinam and Eilpattinam were important port cities of Tamil Nadu during the Sangam period and after that. This article aims to explain the trade done in these port cities.

**Key Words :** Sangam period - Port - Trade - Cauvery - Chola - Pandyas - Cheras

பண்டைய தமிழரின் முக்கிய துறைமுக நகரமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். இது சோழர்களின் தலைநகரமாகவும் இருந்தது. மேலும், புகார், பூம்புகார் போன்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டது. இது காவிரி ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்திருந்தது. மேலும், கொற்கை பாண்டியர்களின் துறைமுகமாகவும், முத்து நகரமாகவும் இருந்தது. சேரர்களின் துறைமுகங்களாக முசிறி, தொண்டி, பந்தர், கொடுமணம் போன்றவை இருந்தன. இவை தவிர, அழகன்குளம், காயல்பட்டினம், எயிற்பட்டினம் போன்றவையும் பாண்டியர்களின் துறைமுகங்களாக இருந்தன. காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி, தொண்டி, அழகன்குளம், காயல்பட்டினம், எயிற்பட்டினம் போன்ற நகரங்கள் சங்க காலத்திலும் அதற்குப் பின்னரும் தமிழகத்தின் முக்கிய துறைமுக நகரங்களாக விளங்கியுள்ளன.இந்தத் துறைமுக நகரங்களில் செய்யப்பட்டுள்ள வணிகங்கள் குறித்து விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## தமிழகமும் கடற்கரையும்:

தமிழகத்தின் பண்டைய துறைமுகங்கள் பற்றிய செய்திகள் பலவாறாகக் கிடைக்கின்றன. மேற்குக்கரையோரமான சேரநாட்டுத் துறைமுகங்களாக நயவு, முசிறி, தொண்டி, பொற்காடு என்பவை திகழ்ந்துள்ளன. தெற்கே குமரியும், கிழக்கே கொற்கை, காவிரிப்பூம் பட்டினம், எயிற்பட்டினம், அழகன்குளம், அரிக்கமேடு, மருங்கூர்பட்டணம் மசுலிப் பட்டினம், மரக்காணம் போன்றவை திகழ்ந்துள்ளன. ஈழத்தில் மாந்தை பெருந் துறைமுகமாகத் திகழ்ந்துள்ளது. காவிரி;பபூம் பட்டடினத்தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் இடையறாது நிகழ்ந்தன. அது எவ்வாறு இருந்ததெனில், மலையில் பெய்த நீர் கடலில் கலப்பது போலவும், வான் கொண்ட நீர் மலையில் பொழிவதைப் போன்றும் இருந்ததாகப் பட்டினப்பாலை கூறுகின்றது. துறைமுகங்கள் தோறும் பண்டகசாலைகள் இருந்திருக்கின்றன. அப்பண்டக சாலைகளில் இறக்குமதி, ஏற்றுமதிப் பொருட்கள் மீது அரச அலுவர்கள் முத்திரையிட்டிருக்கின்றனர். அங்கு சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதனை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**“அளந்தறியாப் பல்பண்டம் வரம்பறியாமை வந்தீண்டி அருங்கடிப் பெருங்காப்பின் வலியுடை வல்லணங்கினோன் புலிபொறித்துப் புறம்போக்கியும் மலிநிறைந்த மலிபண்டம்”1 எனப் பட்டினப்பாலை கூறுகின்றது.**

துறைமுகங்கள் அருகே பொருட்கள் பொதிகளாகக் கட்டப்பட்டு அடுக்கப்பட்டிருந்தன. அவற்றின் மேல் நாய்களும் ஆட்டுக்கடாக்களும் ஏறிக்குதித்து விளையாடின. இது மலைச்சரிவுகளில் வருடை மான்கள் துள்ளி விளையாடுவதை ஒத்திருப்பதாக மற்றுமொரு பாடலில் பட்டடினப்பாலை தெரிவிக்கின்றது.

**“பொதிமூட்டைப் போரேறி மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன் வரையாடு வருடைத் தோற்றம் போலக் கூருகிர் ஞமலிக் கொடுந்தான் எற்றை ஏழகத் தகரொடு உகளும் முன்றில்”2**

**கொற்கையும் முத்தும்:**

பாண்டிய அரசின் ஆட்சிக்குட்பட்ட கொற்கைத் துறைமுகம் பெரும் செல்வாக்கோடு விளங்கியது. முத்து, சங்கு விளைகின்ற இடமாகவும் இது திகழ்ந்தது என அகநானூறு கூறுகின்றது. வெளிநாட்டார் குறிப்புகளில் பெரிதும் இடம் பெற்ற முசிறித்துறையில் மேற்கு நாடுகளுடனான வணிகம் பெருமளவில் நடைபெற்றிருக்கின்றது. வெளிநாட்டார் வணிகத்திற்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகக் கடற்கொள்ளையரை அடக்கி ‘கடற்பிறக்கோட்டிய’ என்னும் பட்டத்தைப் பெற்றான் செங்குட்டுவன். சேரநாட்டு மலைவளங்களில் பெருமளவில் மிளகு விளைந்தது. ஐரோப்பியர்களால் பெரிதும் விரும்பப்பட்ட மிளகே இங்கு முதன்மையான ஏற்றுமதிப் பொருளாகியது. இத்துறையில் நடைபெற்ற ஏற்றுமதி இறக்குமதி வணிகம் பற்றி,

**“மீன் நொடுத்து நெல் குவைஇ,**
**மிசை அம்பியின் மனை மறுக்குந்து,**
**மனைக் குவைஇய கறி மூடையால்,**
**கலிச் சும்மைய கரை கலக்குறுந்து;**
**கலம் தந்த பொற் பரிசம்**
**கழித் தோணியான், கரை சேர்க்குந்து;**
**மலைத் தாரமும் கடல் தாரமும் தலைப் பெய்து,**
**வருநர்க்கு ஈயும் புனல்அம் கள்ளின்**
**பொலந் தார்க் குட்டுவன் முழங்கு**
**கடல் முழவின் முசிறி அன்ன,**
**நலம்சால் விழுப் பொருள் பணிந்து வந்து கொடுப்பினும்,**
**புரையர் அல்லோர் வரையலள்,**
**இவள்' எனத் தந்தையும் கொடாஅன் ஆயின் வந்தோர்,**
**வாய்ப்பட இறுத்த ஏணி ஆயிடை**
**வருந்தின்று கொல்லோ தானே பருந்து உயிர்த்து**
**இடை மதில் சேக்கும் புரிசை,**
**படை மயங்கு ஆர் இடை, நெடு நல் ஊரே? (பாடல் 343)**

புறநானூறு விரிவாகக் கூறுகின்றது.


http://Creativecommons.org//license/by/4.0/.

பொன்னும், இரத்தினமும், மென்மையான புடவைகளும், சித்திர வேலைப்பாடமைந்த ஆடைகளும், பவளமும், செம்பும், ஈயமும், கோதுமையும் இங்கு இறக்குமதி செய்யப்பட்டதாகப் ‘பெரிப்புளூஸ்’ நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

- ✓ சிறுபாணாற்றுப்படை என்னும் சங்க இலக்கியம் ‘எயிற்பட்டினம்’ என்ற கடற்கரைப் பட்டினம் பற்றிக் குறிப்பிடுகின்றது.
- ✓ ஒய்மாநாட்டு நல்லியங்கோடன் இதனை ஆண்டதாக இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் கூறுகின்றார். இதன் பின்னராக துறைமுக வரலாறுகளில் எயிற்பட்டனம் காணப்பெறவில்லை.

**ஈழமும் துறைமுகமும்**:

ஈழத்தில் பெரும் அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட இடம் மாந்தை துறைமுகப் பகுதியாகும். வங்கம் மலிந்து நின்ற மாதோட்டப் பகுதி ஈழ வணிகத்தின் வாசலாகும். பல வரலாற்றுக் குறிப்புகளில் மாந்தைத் துறைமுகத் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்போது இன்னொரு காட்சியைப் பார்ப்போம். தமிழ்நாட்டின் வடமேற்கில் கொடுமணல் என்றொரு நகரம். அங்கு ஏராளமான தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு தொழிற்சாலையில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மாணிக்கக்கற்களைப் பட்டை தீட்டுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அருகிலிருந்த தொழிற்சாலைகளில் இன்னும் பலர் செம்பு, இரும்பு போன்ற உலோகங்களை உருக்கி பல்வேறு பொருட்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பலர் நூல் நூற்று ஆடைகளைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். யானைத் தந்தத்திலான அணிகலன்களை ஒரு பகுதியினர் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். மறுபுறத்தில் சங்குகள் அழகாக அறுபட்டு எழில் மிக்க வளையல்களாகிக்கொண்டிருக்கின்றன. இன்னொரு பகுதியில் தமிழ் வணிகர்கள் வேறு நாடுகளிலிருந்து வந்த வணிகர்களுடன் எந்த இலக்கணப் பிழையுமற்ற மொழியில் வர்த்தக ஒப்பந்தங்களை எழுதிக்கொண்டிருக்கிறார்கள். உருவாக்கப்பட்ட பொருட்கள் பொதி செய்யப்பட்டு ஏற்றுமதிக்காக வண்டிகளில் ஏற்றப்படுகின்றன. ஒரு வணிக நகரத்துக்குரிய சுறுசுறுப்புடன் கொடுமணல் நகரம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதில் என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? இது நடந்தது அண்மையில் அல்ல. 2500 வருடங்களுக்கு முன்பு. இது நடந்து கொண்டிருந்தபோது இங்கிலாந்து ஒரு பேரரசாகவல்ல ஒரு நாடாகவே உருவாகியிருக்கவில்லை. ஐரோப்பாவின் பெரும்பகுதியில் காட்டுமிராண்டிகளே வாழ்ந்துகொண்டிருந்தனர். இப்போது வல்லரசாக இருக்கின்ற பல நாடுகளில் இரும்பின் பாவனை கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

கிறிஸ்தவ மதம் உருவாவதற்கு இன்னும் இயேசுநாதரே பிறந்திருக்கவில்லை. பெருவியப்பை ஏற்படுத்திய இச்செய்திக்கு களமான கொடுமணல் நகரம் மண்ணுக்குக் கீழிருந்து மீண்டும் கண்டறியப்பட்டது 2013-இல்தான். அங்கு தொன்மையான பொருட்கள் சில கிடைக்கின்றன எனச் செய்தி வரவே, பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கா.ராஜன் தலைமையில் ஒரு குழு கொடுமணல் ஆய்வில் ஈடுபட்டது. அங்கே 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு தொழிற்கூடம் இயங்கியதற்கான சான்றுகளும் ஒரு ஈமச்சின்னமும் கண்டறியப்பட்டன.

**துறைமுகத் தொழில்கள்** :

- **விலையுயர்ந்த கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கல்மணிகள் செய்யும் தொழிற்கூடமும், செம்பு, இரும்பு உருக்கப்பட்தற்கான தொழிங்கூடங்களும் இனங்காணப்பட்டன.**


http://Creativecommons.org//license/by/4.0/.

- **நூல் நூற்கப் பயன்படுத்தப்பட்ட தக்களி மூலமும், சங்கறுத்து வளையல் செய்யப்பட்ட சான்றுகளும், யானைத் தந்தத்தாலான அணிகலன்களும் கிடைத்துள்ளன.**
- 500-**க்கு மேற்பட்ட தமிழ் பிராமி எழுத்துகளும் இங்கு பெறப்பட்டுள்ளன.**
- **அதிந்தை, ஆதன் சுமணன், பன்னன் பாகன் போன்ற பெயர்கள் அங்கு காணப்பட்டுள்ளன. கண்டறியப்பட்ட பொருட்கள் நில கரியமிலக் காலக்கணிப்புக்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டு அவை கி.மு.** 5-**ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என உறுதிப்படுத்தப்பட்டது.**
- **வெளிநாட்டு வணிகம் ஓங்கியிருந்த காலத்தே ஏற்றுமதிக்காகவும் உள்நாட்டுப் பயன்பாட்டிற்காகவும் உயர்ந்த அணிகலன்கள் இங்கே உருவாக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர் கருதுகின்றனர்.**

சேரரின் தலைநகரான கரூரையும் முசிறித் துறைமுகத்தையும் இணைக்கும் பெருவழியில் இது அமைந்துள்ளது. இது 'கொங்கப் பெருவழி' என அழைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வழியில் கிடைக்கப்பெற்ற ஏராளமான வெள்ளி, தங்க, உரோம நாயணங்கள் இத்தொழிற்கூட வாணிபத்தை உறுதிப்படுத்துகின்றன. பதிற்றுப்பத்து என்னும் இலக்கியத்தில் கபிலர் "கொடுமணல்பட்ட..... நன்கலம்" என்றும், அரிசில்கிழார் "கொடுமணம் பட்ட வினைமான் அருங்கலம்" என்றும் கொடுமணல் எனும் ஊர்ச் சிறப்பைக் குறிப்பிடுகின்றனர். ஏற்றுமதி இறக்குமதி வணிகத்தைப் பெருமளவில் கொண்டிருந்த தமிழகம் ஏற்றுமதிக்குரிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்களையும் கொண்டிருத்தல் இயல்பு. அவ்வாறான தொழிற்கூடங்கள் பற்றிய ஆதாரங்கள் ஆங்காங்கே இலக்கியங்களில் காணப்பட்டாலும் தனித்துவத் தலைப்பாக இது நோக்கப்படவில்லை என்றே தோன்றுகின்றது.

தமிழ்நாட்டின் கடற்கரையோரத்தில் சேர, சோழ, பாண்டிய ஆகிய பண்டைய தமிழ் இராச்சியங்கள் பல முக்கியமான துறைமுக நகரங்களைக் கொண்டிருந்தன. ஒவ்வொரு இராச்சியத்திற்கும் சில குறிப்பிடத்தக்கவை இங்கே:

**சேர இராச்சியம்**

- **கொச்சி (கொச்சி)**: குறிப்பாக மசாலாப் பொருட்களின் வர்த்தகத்திற்கு பெயர் பெற்ற ஒரு குறிப்பிடத்தக்க துறைமுக நகரம்.
- **குமரகம்** : அதன் காயல்களுக்குப் பெயர் பெற்றிருந்தாலும், அது கடலோர வர்த்தகப் பாதைகளின் ஒரு பகுதியாக இருந்தது.

**சோழ சாம்ராஜ்ஜியம்**

- **காவேரிப்பட்டினம்**: சோழ வம்சத்தின் தலைநகராக இருந்த இது, பரபரப்பான துறைமுக நகரமாக இருந்தது.
- **நாகப்பட்டினம்** : தென்கிழக்கு ஆசியாவுடனான கடல்சார் வர்த்தகத்தில் முக்கிய பங்கு வகித்த ஒரு முக்கிய துறைமுக நகரம்.
- **தஞ்சாவூர்** : முதன்மையாக அதன் கோயில்களுக்குப் பெயர் பெற்றிருந்தாலும், அது வர்த்தகப் பாதைகளுடனும் இணைக்கப்பட்டிருந்தது.

**பாண்டிய இராச்சியம்**

- **மதுரை**: தலைநகரம், வர்த்தக தொடர்புகளைக் கொண்டிருந்தது, ஆனால் அது ஒரு துறைமுகமாக இருக்கவில்லை.


http://Creativecommons.org//license/by/4.0/.

- **கொற்கை**: முத்து மீன்பிடித்தல் மற்றும் வர்த்தகத்திற்கு பெயர் பெற்ற ஒரு பழங்கால துறைமுக நகரம்.
- **தூத்துக்குடி (தூத்துக்குடி)**: முத்து மற்றும் பிற பொருட்களின் வர்த்தகத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க துறைமுகம்.

இந்த நகரங்கள் பண்டைய இந்தியாவின் வர்த்தக வலையமைப்புகளுடன் ஒருங்கிணைந்தவையாக இருந்தன, தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் அதற்கு அப்பால் உள்ள பல்வேறு பகுதிகளுடன் தமிழ் ராஜ்ஜியங்களை இணைத்தன.

**முடிவுரை**:

சங்க கால துறைமுகங்கள் எதுவும் இன்று பயன்பாட்டில் இல்லை. இயற்கைப் பேரிடர்களால் அழிந்தும், பல சிதைந்தும் போய் விட்டன. தமிழகத்தில் முக்கியத் துறைமுகமாகச் சென்னையும், வெகு சில உள்ளூர் சரக்குகளைக் கையாளத் தூத்துக்குடித் துறைமுகமும் பயன்பாட்டில் உள்ளன. வட இந்தியாவில் கல்கத்தாத் துறைமுகம், மும்பை, குஜராத் போன்ற இடங்களில் உள்ள துறைமுகங்கள் பெருமளவுச் சரக்குகளை ஏற்றுமதி,இறக்குமதி செய்கின்றன. துறைமுகங்கள் வாணிகத் தொடர்புகளுக்காக மட்டுமல்ல, உலகமெங்கும் சமூகம் நல்ல பண்பட்ட, சீர்திருத்தப்பட்டச் சமூகமாக வளர்வதற்குக் கடல்கடந்த வாணிகம் பெருந்துணையாக இருந்திருக்கின்றது என்றால் அது மிகையல்ல. வாணிகம் மட்டுமல்லாது பண்பாடு, கலாச்சாரம், அரசியல் தொடர்புகள் அனைத்திற்கும் வழி வகுக்கின்றன. சேர,சோழ பாண்டியர்களின் காலத்தில் பரிசுப் பொருட்களுடன் தூதுவர்கள் செல்வதும் வழக்கமான ஒன்றாக இருந்திருக்கிறது. இஃது அந்த நாட்டுடன் நல்ல நட்புரவுக்கும், வாணிகத் தொடர்புக்குமே ஆகும்.

**துணைநூற் பட்டியல்**

1. தமிழர் வணிகம், க.கோவிந்தன்,மலர் நிலையம், சென்னை.பதிப்பு.1955
2. சங்க காலத் தமிழரின் கடல் வணிகம், டாக்டர் மெ.சுந்தரம், பாரி நிலையம், சென்னை.
3. பழங்காலத் தமிழர் வணிகம், மயிலை சீனி வேங்கடசாமி, Rhythm Book Distributers, சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 43. தமிழர் வணிகத்தில் நாணயங்கள்

**முனைவர் ஜெ.குணசீலி,**
**உதவிப்பேராசிரியர், மொழியியல் துறை,**
**பிராவிடென்ஸ் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), குன்னூர்.**
DOI 10.5281/zenodo.16539277.

**Abstract :**

Tamil Nadu, which had a unique place in ancient world trade, is also distinguished in the use of coins. Although domestic trade continued largely through barter, foreign trade was mostly based on coins. The three kings also used coins engraved with their own symbols. Some of the kings of the Kurunas also used coins. The Pandyas were the first to issue stamped coins. On them, Peruvazhuti is engraved in Brahmi script. It is believed that these may date back to the 3rd century BC. Chola coins also date back to the 3rd century BC. These kings had their own mints and minted coins. In addition to melting metals like copper and casting coins in square and round shapes, they knew how to engrave seals and letters. Greek, Roman and Chinese coins have been found in large quantities in many places. Similarly, Tamil Nadu coins have been found in other countries as well. There is no evidence yet that the coins used by the Vada Nattars were found in Tamil Nadu.

**Key Words :** Currencies - Trade and Currency - Barter System

உலகலாவிய பண்டைய வணிகத்தில் தனியிடம் பெற்றிருந்த தமிழகம் நாணயப் பயன்பாட்டிலும் சிறப்புற்றிருக்கின்றது. உள்நாட்டு வணிகம் பெருமளவு பண்டமாற்று முறையில் தொடர்ந்தாலும் வெளிநாட்டு வணிகங்கள் பெரும்பாலும் நாணயங்களை அடிப்படையாகக் கொண்டே நடைபெற்றன. மூவேந்தர்களும் தனித்தனியாகத் தம் இலச்சனைகள் பொறித்த நாணயங்களைப் பயன்படுத்தினர். குறுநில மன்னர் சிலரும் நாணயங்களைப் பயன்படுத்தியுள்ளனர். முதன்முதலாக முத்திரை நாணயங்களை வெளியிட்டவர் பாண்டியர் ஆவர். அதில் பெருவழுதி என பிராமி எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இவை கி.மு 3ம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். சோழர் நாணயங்களும் கி.மு 3ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கின்றன. இவ்வேந்தர் நாணயசாலைகள் வைத்துத் தாமே நாணயங்களை வார்த்துள்ளனர். செப்பு போன்ற உலோகங்களை உருக்கி சதுர, வட்ட வடிவில் நாணயங்களை வார்ப்பதோடு, முத்திரைகளையும் எழுத்துகளையும் பொறிக்கத் தெரிந்து கொண்டிருந்தனர். கிரேக்க, உரோம, சீன நாணயங்கள் பெருமளவில் பல இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன. அதே போன்று தமிழக நாணயங்கள் பிறநாடுகளிலும் கிடைத்துள்ளன. வடநாட்டார் பயன்படுத்திய நாணயங்கள் தமிழகத்தில் கிடைத்தமை பற்றிய சான்றுகள் எதுவும் இதுவரை இல்லை.

தமிழர்களின் வணிகத்தில், பல்வேறு வகையான நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன. பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்களால் செய்யப்பட்ட நாணயங்கள், அக்கால வணிகத்தில் முக்கியப் பங்கு வகித்தன. சங்க காலம் முதல் சோழர், பாண்டியர் காலங்கள் வரை, பல மன்னர்கள் தங்கள் ஆட்சியின் போது நாணயங்களை வெளியிட்டனர். அந்த நாணயங்களில், மன்னர்களின் சின்னங்கள், விலங்குகளின் உருவங்கள், மற்றும் பல்வேறு குறியீடுகள் பொறிக்கப்பட்டிருந்தன. இவை, அக்கால வணிக முறைகளையும், பொருளாதார நிலையையும் அறிந்து கொள்ள உதவுகின்றன. தமிழகத்தில் கிடைத்த நாணயங்களில் சிலவற்றை இங்கே காணலாம்:


http://Creativecommons.org//license/by/4.0/.

1. அக்க காலம் - இது ஒரு வகையான செப்பு நாணயமாகும்.
2. மாடை: இதுவும் செப்பு நாணய வகையாகும்.
3. கழஞ்சு: இது பொன் நாணய வகையாகும்.
4. அன்றாடு நற்காசு: இதுவும் ஒரு வகையான செப்பு நாணய வகையாகும்.
5. கருங்காசு: இதுவும் செப்பு நாணயம் ஆகும்.
6. ஈழக்காசு: ஈழத்துடன் வணிகம் செய்தபோது பயன்படுத்தப்பட்ட நாணயம்.
7. ரோமானியக் காசுகள்: ரோமானியர்களுடன் வணிகம் செய்ததன் அடையாளமாக, ரோமானிய நாணயங்கள் தமிழகத்தில் கிடைத்துள்ளன.

சங்க கால நாணயங்கள் பற்றிய ஆய்வுகள், தமிழர்களின் வணிகத் தொடர்புகள், கலாச்சாரம் மற்றும் பொருளாதார நிலையை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, ரோமானிய நாணயங்கள் கிடைப்பது, கடல் கடந்த வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கியதைக் காட்டுகிறது. மேலும், நாணயங்களில் காணப்படும் சின்னங்கள் மற்றும் எழுத்துக்கள், அக்கால மக்களின் வாழ்க்கை முறை, நம்பிக்கைகள் மற்றும் கலை ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை வழங்குகின்றன.

**சங்ககாலம்** :

தமிழ் மக்கள் சுமார் 2000 ஆண்டுகளாகவே (சங்க காலத்திலிருந்தே) காசை உபயோகித்திருக்கிறார்கள். காசு என்றும், காணம் என்றும், பொன் என்றும், கழஞ்சு என்றும் பெயர் வழங்கியிருக்கிறார்கள். சேர மன்னர்கள் புலவர்களைப் போற்றி அவர்களுக்குப் பொற் காசுகள் கொடுத்தார்கள். நார்முடிச்சேரல் என்பவன் காப்பியனாருக்கு நாற்பது நூறாயிரம் 'பொன்" பரிசு கொடுத்தான். ஆடு கோட்பாட்டு சேரலாதன் நச்செள்ளையாருக்கு ஒன்பது 'கா' பொன்னும் நூறாயிரம் காணமும் பரிசு கொடுத்தான். செல்வக் கடுங்கோ என்ற சேரன் கபிலருக்கு நூறாயிரம் காணம் பரிசு கொடுத்தான். பல காசுகளைக் கோர்த்து சங்க கால மக்கள் அணிகள் செய்து மகிழ்ந்தனர்.

**பாண்டியர்** :

சங்க காலத்தில் ஆண்ட பாண்டியர் வெளியிட்ட காசு ஒருவகை மட்டும் கிடைத்துள்ளது. கி.பி. 6-ம் நூற்றாண்டின் இறுதியில் கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னன் களப்பிரர்களை விரட்டி பாண்டியப் பேரரசை நிறுவினன். அவன் வழி வந்தவர்கள் அனைவரும் ஆற்றல் மிகுந்தவர்கள். சேந்தன், அரிகேசரி, நெடுஞ்சடையன், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன், வரகுணன், என்று பல மன்னர்கள் ஆண்டனர். அவர்களில் இருவர் வெளியிட்ட காசுகள் கிடைத்திருக்கின்றன. கி.பி. 9-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட ஸ்ரீமாற ஸ்ரீவல்லபவனுக்கு அவனீபசேகரன் என்பது பட்டப்பெயர். அவனது காசு ஒன்று உள்ளது. அதில் அவனிபசேகர கோளக என்று எழுதியுள்ளது. மற்றது அவன் மகன் இரண்டாம் வரகுணன் வெளியிட்ட தங்கக்காசு, அதில் தலைப்புறம் இரண்டு மீன்கள் உள்ளன. பின்புறம் ஸ்ரீவரகுண என்று கிரந்த எழுத்தில் எழுதியிருக்கிறது. கடுங்கோன் வழிவந்த பாண்டியர்களது ஆட்சி கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் சோழர்களால் தோற்கடிக்கப்பட்டது. மீண்டும் 13-ம் நூற்றாண்டில், மாறவர்மன் சுந்தர பாண்டியன் என்பவனால் நிலை நிறுத்தப்பட்டது. மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழர்களை வெற்றிகொண்டு சோணாடு கொண்டான் என்று பட்டம் கொண்டான். அவன் வெளியிட்ட ஒரு காசில் சோணாடு கொண்டான் என்று எழுதப்பட்டுள்ளது. தலைப்புறம் ஒரு நின்ற உருவம் இருக்கிறது. பாண்டியர்களில் மாறவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் குலசேகரன், வீரபாண்டியன் முதலானோர் புகழ் பெற்றவர்கள். இவர்கள் வெளியிட்ட காசுகளில் தலைப்புறம் இரண்டு மீன்களும் நடுவில் ஒரு


http://Creativecommons.org//license/by/4.0/.

செண்டும் இருக்கும் அல்லது நின்ற நிலையில் ஒரு மனித உருவம் இருக்கும். கச்சி வழங்கும் பெருமாள், சுந்தர பாண்டியன், குலசேகரன் அல்லது வீர பாண்டியன் என்று எழுத்துகள் இருக்கும். தலைப்புறம் நின்ற மனித உருவம். பின்புறம் இரண்டு மீன்கள். இவற்றின் இடையில் எல்லாந்தலையானான் என்று எழுத்துள்ளது. இரண்டு மீன்களைப் பல்வேறு நிலைகளில் வைத்து எழுத்து பொறித்திருக்கிறார்கள்.



**சங்க காலப் பாண்டியர்**

**சோழர்**:

சங்ககாலத்திற்குப் பின்னர் கி.பி. 850-இல் விஜயாலயன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோழ அரசை மறுமலர்ச்சி பெறச் செய்தான். அவனுக்குப் பின் ஆதித்தன், பராந்தகன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன் முதலிய சோழ மன்னர்கள் ஆண்டிருக்கின்றனர். ஆயினும் அவர்கள் காலத்திய காசுகள் இது வரை கிடைக்கவில்லை. சோழப் பேரரசர்களில் உத்தம சோழன் காலத்தில் வெளியிடப்பட்ட காசுகள் தான் இதுவரையில் கிடைத்துள்ள காசுகளில் பழமையானவையாகும். அக்காசுகள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களாலானவை. அவற்றில் மூன்று வகைக் காசுகள் உள்ளன. முதல் வகைக் காசின் முன்புறத்தில் புலி, இரு மீன்கள், வில் ஆகிய மூன்று இலச்சினைகளையும் பின்புறத்தில் உத்தம சோழன் என்ற நாகரி எழுத்துக்களையும் காண்கிறோம். இக்காசுகளே பெருவாரியாகக் கிடைத்துள்ளன. இரண்டாம் வகை புலியும் ஒரு மீனும் உள்ள காசு. இதன் ஓரத்தில் 'மதுராந்தகன்' என்ற தமிழும், கிரந்தமும் கலந்த எழுத்துக்கள் காணப்படுகின்றன. மூன்றாம் வகைக் காசுகளில் இருபுறமும் புலியும் ஒரு மீனும், சுற்றிலும் 'உத்தம சோழன்' என்ற எழுத்துக்களும் காணப்படுகின்றன.

இராஜராஜன் காலத்தில் முன்புறம் புலி, இரு மீன்கள், வில் ஆகிய மூன்றும், அதன் கீழ் "ஸ்ரீராஜராஜ சோழ" என்ற நாகரி எழுத்துக்களும் உள்ளன. பின் புறமும் அதே சின்னங்களும், எழுத்துக்களும் உள்ளன. அக்காலத்தில் அச்சிடப்பட்ட மற்றொரு வகை காசில் ஒரு புறத்தில் ஒரு மனிதனுடைய நின்ற உருவமும் மறுபுறம் அமர்ந்த உருவமும் காணப்படுகின்றன. அமர்ந்த மனிதனின் கையின் கீழ் ஸ்ரீராஜராஜன் என்ற நாகரி எழுத் துக்கள் உள்ளன. தமிழ்நாட்டில் இந்தக் காசுகள் ஆயிரக்கணக்கில் இன்றும் கிடைக்கின்றன. இராஜராஜன் மற்றொரு சிறப்பையும் செய்திருக்கிறான் தான் வெளியிட்ட காசுகளில் ஒருபுறம் அமர்ந்த மனித உருவமும் ஸ்ரீராஜராஜ என்று நாகரி எழுத்தும் பொறித்தான். இதைப் பொதுவாக வைத்துக்கொண்டான். பின்புறம் நின்ற மனித உருவம். அவன் கையின் கீழே சோழ நாட்டில் வழங்கிய காசில் புலியைப் பொறித்தான். பாண்டி நாட்டில் வழங்கிய காசில் மீனைப் பொறித்தான். கேரளத்தில் வழங்கிய காசுகளில் திருவடிகளைப் பொறித்தான். இவ்வாறு தான் ஜெயித்த அந்தந்த நாட்டுக்குரிய சின்னங்களைப் பொறித்து வெளியிட்ட பெருமை இராஜராஜ சோழனையே சாரும். ராஜேந்திர சோழன் காலத்திய காசுகளில் புலி, இரு மீன்கள், வில் மூன்றும் முன்னும் பின்னும் உள்ளன. கீழே கங்கைகொண்ட சோழன் என்ற நாகரி எழுத்துக்கள் உள்ளன. சில காசுகளில் ஸ்ரீராஜேந்திர சோழ என்ற நாகரி எழுத்துக்கள் காணப்படுகின்றன.


http://Creativecommons.org//license/by/4.0/.

ஆந்திர பிரதேசத்தில் தவளேச்சுரம் என்ற இடத்தில் பல தங்கக் காசுகள் கிடைத்துள்ளன. அவற்றின் நடுவில் புலி, மீன், வில் சின்னஙகளும், சுற்றிலும் கங்கைகொண்ட சோழன் என்ற கிரந்த எழுத்துக்களும் உள்ளன. பின்புறம் குழிவாக எவ்வகை உருவமுமின்றி உள்ளது. இதே போன்று மலைநாடு கொண்ட சோழன் என்ற எழுத்துக்கள் கொண்ட காசுகளும் கிடைத்துள்ளன.

மன்னர் குதிரை மீதேறிச் செல்லும் உருவம் பொறித்த சோழர் காசுகளும் கிடைத்துள்ளன. இவை இராஜாதிராஜன் காலக்காசுகள் எனக் கருதப்படுகின்றன. குழலூதும் பிள்ளையாக, கண்ணனின் உருவம் பொறித்த காசுகளும் அக்காலத்தவையே. தமிழகத்தில் இராஜராஜன் பெயர் பொறித்த காசுகள் ஏராளமாகக் கிடைத்துள்ளன. சோழர்களின் கல்வெட்டுக்களில் மதுராந்தகன் மாடை, ராஜராஜன் மாடை என்று காசுகளின் பெயர்கள் காணப்படுகின்றன. மாடை என்றால் பொற்காசு என்று பொருள். குலோத்துங்கனுடைய காசுகளில் உள்ள “சுங்” என்ற சொல் சுங்கம் தவிர்த்த சோழன் என்ற பட்டத்தைக் குறிக்கிறது.



**பிற்காலச் சோழர்**

**சேரர்** :

சேர மன்னர்கள் புலவர்களைப் போற்றி அவர்களுக்குப் பொற் காசுகள் கொடுத்தார்கள். நார்முடிச்சேரல் என்பவன் காப்பியனாருக்கு நாற்பத்து நூறாயிரம் 'பொன்" பரிசு கொடுத்தான். ஆடு கோட்பாட்டு சேரலாதன் நச்செள்ளையாருக்கு ஒன்பது 'கா' பொன்னும் நூறாயிரம் காணமும் பரிசு கொடுத்தான். செல்வக் கடுங்கோ என்ற சேரன் கபிலருக்கு நூறாயிரம் காணம் பரிசு கொடுத்தான். திருவாங்கூரைத் தலைநகராகக் கொண்டு சேரர்கள் ஆண்டிருக்கிறார்கள். அவர்கள் ‘அனந்த பத்மநாபசுவாமியிடம்’ மிகுந்த பக்தி பூண்டவர்கள். தங்களைத் ‘திருவடி’, ‘திருப்பாப்பூர்’ மூத்த திருவடி’ என்று அழைத்துக் கொண்டார்கள். இவர்களுடைய காசுகளில் இரண்டு பாதங்கள் (திருவடிகள்) காணப்படும். அதன் கீழ் ஒரு வில்லும் இருக்கும். பின்புறம் ‘கலியுக ராமன்’ என்று தமிழில் காணப்படும். மற்றொரு காசில் ஒருபுறம் நின்ற மனித உருவமும் பின்புறம் 'சேரகுலராமன்' அல்லது 'பூதல வீர' என்ற பெயரும் எழுதப்பட்டுள்ளன. பாஸ்கர ரவிவர்மன் என்பவன் வெளியிட்ட காசில் 'பாஸ்கர' என்று எழுதப்பட்டுள்ளது. சிலகாசுகளில் ஒருபுறம் யானையும், அதன் தலையில் 'மா' என்ற எழுத்தும் இருக்கும். இது மார்த்தாண்டவர்மன் என்ற புகழ் பெற்ற அரசன் வெளி யிட்ட காசு. இன்னும் சில காசுகளில் ஒரு புறம் ‘யானை, வில், பனைமரம் மூன்றும் இருக்கும். இவை சேரர்கள் வெளியிட்ட காசுகள்.



**பிற்காலச் சேரர்**

**பல்லவர்** :

பல்லவ மன்னர்கள் தமிழகத்தை, கி.பி.3-ஆம் நூற்றாண்டிலிருந்து 9-ஆம் நூற்றாண்டு வரை ஆண்டிருக்கிறார்கள். துறையில் ஒப்பற்ற பணியைச் செய்த இம் மன்னர்களுடைய


http://Creativecommons.org//license/by/4.0/.

காசுகள் இதுவரையில் சரியாக ஆராயப்படவில்லை. கிடைத்துள்ள காசுகள் பெரும்பாலும் செப்புக் காசுகளாகவே உள்ளன. மெல்லிய தகடுபோல் உள்ள அவற்றின் ஒருபுறத்தில் காளை நின்ற அல்லது கிடந்த நிலையில் அமைந்திருப்பதைக் காணலாம். அதைச் சுற்றி கிரந்த எழுத்தில் மன்னனுடைய பெயர் காணப்படும். மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் மற்றும் இராஜசிம்மன், மூன்றாம் நந்திவர்மன் ஆகியோர் வெளியிட்ட காசுகள் குறிப்பிடத்தக்கவை.



**பல்லவர்/சிம்ம விஷ்ணு**

**முடிவுரை :**

உலகின் பெரும்பாலான பகுதிகள் பண்பாட்டு வளர்ச்சி பெற்றிராத காலப்பகுதிகளில், வளர்ச்சி பெற்றிருந்த நாடுகள் அனைத்தோடும் தமிழகம் வாணிபம் செய்திருக்கின்றது. கடலையும் பயண வழிகளையும் நன்கறிந்த தமிழர் காற்றின் துணை கொண்டே பெருங்கடல்களைக் கடந்தனர். வணிகர்ளுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டது. சிறந்த வணிகர்கள் அரசர்களால் 'எட்டி' என பட்டமளி;த்து மதிப்பளிக்கப்பட்டனர். உலகளவிலான பண்டைய வணிக வரலாற்றில் தமிழகத்தின் அமைவிடம் முக்கியத்துவம் வாய்ந்திருந்தது. கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே சிறப்பான கடல் வழிப்பாதைகளைக் கொண்டிலங்கிய தமிழகம் உலகம் தழுவிய வணிகத்தில் உச்சம் தொட்டிருந்தது எனலாம். இஸ்லாமிய - கிறி;த்தவப் போர் தொடங்கிய பின்னர் பாரசீக வளைகுடாப் பாதைகள் பாதுகாப்பற்றுப் போயின. இதனால் ஐரோப்பியரது தமிழக வணிகம் துண்டிக்கப்படவே, ஐரோப்பியர் தமிழகத்திற்கான புதிய கடற்பாதைகளைத் தேடினர். தமிழகத்தோடான வணிகம் அவர்களுக்கு அத்தியாவசியத் தேவையாக இருந்தது. எனவேதான் கொலம்பஸ் மேற்கு வழியாகவும், கொடகஸ்காமா கிழக்கு வழியாகவும் இந்தியாவைத் தேடிப் புறப்பட்டனர். ஐரோப்பியர் இந்தியா எனக் கருதியது தென்னிந்தியாவையே என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். மேற்கு நாடுகளுடான வணிகம் துண்டிக்கப்பட்டமையைத் தொடர்ந்து தமிழர் கீழைத்தேய நாடுகள் மீது பேரார்வம் காட்டினர். கீழைத்தேய நாடுகள் மீதான சோழப் படையெடுப்புகளும் இதையே உறுதி செய்கின்றன. வாழ்வியலில் பெருவளர்ச்சி கண்ட இனத்தோராற்றான் இத்தகைய வணிக வளர்ச்சியைப் பெற முடியும். சிறந்த அரசியல் அறமும் சமூக வளமும் இயைபுற்றிருக்கும் காலத்தில்தான் பொருளாதாரம் உயர்வு பெறும். அவ்வாறான உயர்ந்த உலகத் தரம்மிக்க வாழ்வை என் முன்னோர் கொண்டிருந்தனர் என்பது பெருமைக்குரிய வரலாற்றுண்மையாகும்.


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
SPL-EDITION – V VOLUME - 1
ஆகத்து -2025 E-ISSN : 2584 – 1238
வணிகமும் தமிழும்

# 44. சிலப்பதிகாரப் புகார் காண்டமும் வணிகப் பண்பாடும்

**முனைவர் சு.வினோத்,**
**உதவிப் பேராசிரியர், இளநிலைத் தமிழ்த்துறை,**
**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.**
DOI 10.5281/zenodo.16614757.

**Abstract:**

Scholars who study and interpret the Silappathikaram in terms of its content call it 'Citizens' poetry' 'Tri-Tamil poetry' 'Drama poetry'. If we examine the news about business contained in the Silappathikaram, we can see that it is a commercial poetry. These business news provide insight into the commercial culture of ancient Tamil Nadu. In this way, the purpose of this article is to examine the commercial culture revealed through the Silappathikaram's complaint stanza.

**Key Words :** Silambu - Citizens - Drama poetry.

சிலப்பதிகாரத்தை அதன் உள்ளடக்கத் தன்மை கொண்டு ஆராய்ந்து உரைக்கும் அறிஞர்கள் 'குடிமக்கள் காப்பியம்' முத்தமிழ்க் காப்பியம்' 'நாடகக் காப்பியம்' எனப் பெயரிட்டு அழைப்பர். சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள வணிகம் குறிந்த செய்திகளைக் கொண்டு ஆராயப் புகுந்தால் அது ஒரு வணிகக் காப்பியமாகத் திகழக் காணலாம். அவ்வணிகச் செய்திகள் பண்டைகாலத் தமிழகத்தின் வணிகம் தொடர்பான பண்பாட்டை அறியக் காரணமாகின்றன. அவ்வகையில் சிலப்பதிகரப் புகார்க் காண்டம் வழி வெளிப்படும் வணிகப் பண்பாட்டை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

## வணிகம் விளக்கம்

மனிதனுடைய செயல்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1.பொருளாதாரச் செயல்கள் 2.பிறசெயல்கள்.

"செல்வத்தை உற்பத்திசெய்யும் செயல்களும் அவைகளுக்குத் தொடர்புடைய செயல்களும் பொருளாதாரச் செயல்களாம். வணிகம் இவ்வகையைச் சேர்ந்தது." என்பார் பழ.மணி.

மேலும், "மனிதன் பொருள்களை உற்பத்தி செய்வதும், அல்லது அந்தப் பொருள்களை விற்றோ வாங்கியோ தனது செல்வத்தை அதிகரித்துக்கொள்வது" என்று வணிகம் குறித்து விளக்குவார்.

## வியாபாரமும் வாணிகமும்

வணிகமும் வியாபாரமும் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் இரண்டும் பொருள் வேறுபாடு உடைய சொற்கள் ஆகும்.

"வாங்குதல், விற்றல் ஆகிய இரு பணிகளைமட்டும் உணர்த்துவது "வியாபாரம்' ஆகும். ஆனால் வாங்குதல் விற்றலை மட்டுமின்றி வியாபாரத்திற்கு உதவும் ஏனைய செயல்களையும் உணர்த்துவது வாணிகவியல் எனும் சொல்லாகும்." என்பர். (பு.சி.கந்தசாமி, வணிகவியலின் அடிப்படைக் கூறுகள்)

அவ்வகையில் வணிகம் சற்று பொருள்விரிவு உடைய சொல் ஆகும். சிலப்பதிகாரத்தில் வணிகர்கள், அவர்களது வணிகமுறை, வணிகப் போக்குவரத்து, வணிகர்கள் தங்கும் இடம் என வணிகத்தோடு தொடர்புடைய அனைத்துச் செய்திகளும் பதிவுசபெற்றுள்ளது.


http://Creativecommons.org//license/by/4.0/.

**சிலப்பதிகாரக் கதையும் வணிகப் பின்புலமும்**

சமண சமயம் அரசர்களின் ஆதரவில் வளர்ந்த சமையம் இல்லை. அதற்கு மாறாக வணிகர்களின் ஆதரவில் வளர்ந்த சமயம் ஆகும். இதன் காரணமாகவே பக்தி இலக்கிய காலத்தில் அரசர்களின் துணையுடன் சைவ வைணவ சமயங்களால் சமணத்தை அழித்து ஒழிக்க முடிந்துள்ளது. அதன் காரணமாகவே இளங்கோவடிகள் அரசர் அல்லாத வணிகர் குலத்தினரைத் தமது காப்பியத்தின் மாந்தர்களாகத் தேர்ந்துள்ளார் என்று எண்ணத் தோன்றுகிறது.

காப்பியத் தலைமை மாந்தர்களான கோவலனும் கண்ணகியும் பெரு வணிகர்குலத் தோன்றல்களாகவே அறிமுகம் ஆகின்றனர்.

**“மாக வான்நிகர் வண்கை மாநாய்க்கன் குலக்கொம்பர்”** (சிலம்பு - மங்கல : 24)

என்று கண்ணகியையும்.

**“பெருநிலம் முழுது ஆளும் பெருமகன் தலைவைத்த**
**ஒர்தனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்**
**வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான் என்பான்”** (சிலம்பு - மங்கல : 31 - 33)

என்று கோவலனையும் இளங்கோ அறிமுகம் செய்கிறார். கடல் வணிகத்தில் ஈடுபடும் குடும்பத்துப் பெண்ணான கண்ணகியைத் தரை வணிகத்தில் பொருள் ஈட்டும் குடும்பத்தில் பிறந்த கோவலன் மணம் புரிந்தான் என்பதே பாத்திர அறிமுகம் வழியாக உணர்த்துவது ஆகும்.

**புகார் நகரமும் வணிகர்களும்**

**“சோழ நாட்டில் காவிரி ஆறு கடலில் கலக்கிற புகர்முகத்தில் இருந்த காவிரிப்பூம் பட்டினம் அக்காலத்திலே உலகப்புகழ் பெற்றிருந்தது. காவிரிப்பூம்பட்டினத்திற்குப் புகார் என்னும் பெயர் உண்டு. பழைய பௌத்த நூல்களில் இது கவிரபட்டனம் என்று பெயர் கூறப்படுகிறது. காகந்தி என்றும் இதற்குப் பழைய பெயர் உண்டு”** என்பார் மயிலை சீனி.வேங்கடசாமி, (பழந்தமிழர் வாணிகம்)

காப்பிய இலக்கிய மரபின்படி நாட்டுவளம் நகர்வளம் கூறும் பகுதியில் இயற்கை வளத்தை விரிவாகக் காப்பிய ஆசிரியர்கள் வருணிப்பர். நகர வருணனை என்பது பெரிதும் உழவுத்தொழிலை மையமிட்ட மருத நிலத்தைப் பேசுவதாக அமையும். புகார் நகரம் கடற்கரை வணிக நகரமாக இருப்பதால் சிலப்பதிகாரத்தில் வணிகவளம் காட்டும் கடற் துறைமுகமே நகர் வளமாக அமைகிறது. நகர் வளம் எனத் தனித் தலைப்பிட்ட பகுதி சிலம்பில் இல்லை, ஆயினும் புகாரின் வணிகச் சிறப்பை ஒட்டி அந்நகர் வளம் அறிமுகம் அமைகிறது.

**“உரைசால் சிறப்பின் அரைசுவிழை திருவின்**
**பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்**
**முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்**
**வழங்கத் தவாஅ வளத்தது ஆகி**
**அரும்பொருள் தரூஉம் விருந்தின் தேஎம்**
**ஒருங்கு தொக்கன்ன உடைப்பெரும் பண்டம்**
**கலத்தினும் காலினும் தருவனர் ஈட்ட**
**குலத்தில் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்”** (சிலம்பு - மனையறம் : 1 - 8)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்று புகாரின் வணிகச் சிறப்பை இளங்கோ கூறுகிறார். அனைவரும் பாராட்டும் சிறப்பு, அரசர்களும் விரும்பும் செல்வம், கடல் மக்கள் வாழும் புகார். கடல் சூழ்ந்த உலகத்து மக்கள் ஒன்றாகத் திரண்டு வந்தாலும் இல்லை என்று சொல்லாத அளவில் அந் நகரில் வணிகம் சிறப்பாக நடைபெற்றது. இத்தகைய செய்திகள் அந்நகர வணிக மக்களின் பண்பாட்டுச் செழுமையைப் பறைசாற்றுகிறது.

**காதலிலும் வெளிப்படும் வணிகமும்**

கண்ணகியை வருணிக்க வேண்டி கோவலன் தேர்ந்தெடுக்கும் பொருட்கள் வணிகத் தொடர்புடைய பொருட்கள் ஆகும். வணிகக் குடிப் பிறந்த கோவலன் வாயில் இருந்து வரும் புகழ் மொழிகள் வேறு எவ்வாறு இருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது.

**"மாசறு பொன்னே வலம்புரி முத்தே**
**காசறு விரையே கரும்பே தேனே" (சிலம்பு - மனையறம் : 73 - 74)**

என்று கண்ணகியின் அழகை கோவலன் வருணிக்கும் இடத்து வணிகப் பொருட்களின் பட்டியலாக அமைந்திருக்கக் காணலாம்.

**"குடதிசை மருங்கின் வெளயிர் தன்னோடும்**
**குணதிசை மருங்கின் கார்அகில் துறந்து**
**வடமலை பிறந்த வாங்கேழ் வட்டத்துத்**
**தென்மலைப் பிறந்த சந்தனம் மறுக" (சிலம்பு - அந்தி மாலை : 35 - 38)**

புகார் நகரக் காதல் பெண்கள் பயன்கொண்ட வெண்சர்க்கரை, அகில், சந்தனம் ஆகிய வாசனைப் பொருட்களையும் அவை எங்கிருந்து வந்தன என்றும் கூறுவதில் உள்ளூர் வணிகமும் வெளி நாட்டு வணிகமும் குறிப்பாகச் சுட்டப்பெற்றுள்ளன. பொருள் பயன்பாட்டு நிலையில் இருந்து வணிகப் பின்புலம் உணர உரைக்கும் இளங்கோவின் அறிவாற்றல் போற்றத்தக்கதாகும்.

"தமிழகம் அயல் நாட்டுடன் மேற்கொண்டிருந்த வாணிக உறவானது தமிழரின் நாகரிகம், பண்பு, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்குக் கைகொடுத்து உதவிற்று. குறிப்பாக வட இந்திய வாணிகத் தொடர்பினால் தமிழகத்துக்கு ஏற்பட்ட நல் விளைவுகள் பல; தீமைகளும் பல. வட இந்தியாவிலிருந்து வாணிகச் சரக்குகளுடன் ஆரிய மக்களும் சிறுசிறு கூட்டமாகத் தமிழகத்தில் நுழையலாயினர்" என்பார் கே.கே.பிள்ளை. இக்குறிப்பமைந்த கருத்துகளை சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் காணலாம்.

**வெளி நாட்டு வணிகம்**

தமிழகம் பிறநாட்டுடன் கொண்ட வணிகத்தொடர்பு சிலப்பதிகாரத்தில் மிகச் சிறப்பாகப் பதிவுபெற்றுள்ளது. தரைவழியை விடவும் கடல்வழியே பிற நாடுகளுடனான வணிகத் தொடர்புக்குச் சிறந்த வழியாகும். அவ்வகையில் தமிழகம் பிற நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தமையை,

**"கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்**
**கலந்து இருந்து உறையும் இலங்குநீர் வரைப்பும்"**

என்ற அடிகள் அறியத் தருகின்றன. வேறு தேயத்தில் இருந்து வருகை புரிந்த மக்கள் தமிழ் மக்களுடன் கலந்து இருந்தமையை உரைப்பதன் வழியாகப் பண்பாட்டுக் கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்தமையை இளங்கோ எடுத்துரைக்கிறார்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**உள் நாட்டு வணிகம் - மருவூர்ப் பாக்கம்**

புகார் நகரம் மருவூர்ப் பாக்கம், பட்டினப் பாக்கம் ஆகிய இரண்டு பகுதிகளையும் அவற்றின் நடுவில் அமைந்துள்ள நாளங்காடியையும் உள்ளடக்கியது. இம்மூவிடங்களின் விவரிப்பும் வணிகச் சிறப்பின் எடுத்துரைப்பாகவே அமையக் காணலாம். இதில் மருவூர்ப் பாக்கத்தில் கடல்வழி மற்றும் தரைவழி வந்த பொருட்களும் உள்நாட்டின் உற்பத்திப் பொருட்களும் விற்கப்பட்டதை அறியமுடிகிறது.

**வண்ணமும் சுண்ணமும் தண்நறும் சாந்தமும்**
**பூவும் புகையும் மேவிய விரையும்**
**பகர்வனர் திரிதரு நகர வீதியும்**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**

என அங்கு விற்கப்படும் பல்வேறு விற்பனைப் பொருகளை, அதனை விற்பவர்களுடன் இணைத்து ஆசிரியர் உரைக்கிறார். இவர்கள் வணிகவியல் சுட்டும் சிறு மற்றும் குறு வணிகர்கள் ஆவர்.

**சுட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்**
**மாசறு முத்தும் மணியும் பொன்னும்**
**அங்கல வெறுக்கையொடு அளந்து கடை அறியா**
**வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்**

எனுமிடத்தில் வணிகர்கள் தங்களுக்குள் தொழில் அடிப்படையில் ஒன்றாகக் கூடி வாழ்ந்த செய்தியை உணர்த்துகின்றார். இது புகார் நகரம் வணிக நகரமாகத் திகழ்ந்தமையின் காட்சிப்படுத்துதல் ஆகும்.

நறுமணப் பொருட்கள், துணிகள், மணிகள், தானியங்கள், கள், மீன், அப்பம், இறைச்சி போன்றவைகளின் கடைகளைச் காட்சிப்படுத்துகிறார். மேலும், பொற்கொல்லர், கருமர், குயவர், சாணர் எனப் பல்தொழில் புரியும் சிறுவணிகர்களைப் பெருவணிகர்களுக்கு நிகராகவே இளங்கோ குறிப்பிடுகிறார்.

**பட்டினப் பாக்கம்**

பெருங்குடி வணிகர்கள் வாழும் மாடங்கள் நிறைந்த வீதியும் அங்காடி வீதிகளும் கொண்ட இடமாகப் பட்டினப்பாக்கம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**"பீடிகைத் தெருவும் பெருங்குடி வணிகர்**
**மாட மறுகும்……" (சிலம்பு - இந்திரவிழா : 41 - 42)**

என்பது பாடல் அடிகள்.

இன்றும் பெரு நகரங்களில் இத்தகைய அமைப்பைக் காணலாம். அவ்வகையில் சிறுவணிகங்கள் நடைபெறும் மருவூர்ப் பாக்கத்தில் இருந்து மாறுபட்ட வணிகச் சூழல் கொண்ட இடமாகப் பட்டினப்பாக்கத்தை இளங்கோ குறிப்பிடுகிறார்.

**நாளங்காடி**

மருவூர்ப் பாக்கத்திற்கும் பட்டினப் பாக்கத்திற்கும் இடையில் அமைந்த நாளங்காடியில் பண்டங்களை விற்பவர் ஓசையும் வாங்குபவர்களின் ஓசையும் எழுந்தவாறு இருந்ததை,


http://Creativecommons.org//license/by/4.0/.

**“கடைகால் யாத்த மிடைமரச் சோலைக்**
**கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்**
**நடுக்கின்றி நிலைஇய நாளங்காடி”** (சிலம்பு - இந்திரவிழா : 24)

என்கிறார். இதில் கடைகள் அமைக்கப்பட்ட தொழில் நுட்பத்தைக் குறிப்பிடுகிறார். அங்காடிகளில் தடையற்ற விற்பனை நடைபெற்றமையை உணர்த்தும் விதமாக ஓசை நிலைபெற்று இருந்தமையைச் சுட்டுகிறார்.

## முடிவுரை

சிலப்பதிகாரத்தின் புகார் நகரம் வணிகத்தின் பெரு நகரமாகத் திகழ்ந்தமையை வணிகவியல் நுட்பங்களோடு இளங்கோவடிகள் பதிவுசெய்துள்ளார். வணிக உற்பத்திப் பொருட்கள், உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம், வணிகர்கள், வணிகத் தொழில் நுட்பம் என இளங்கோ முன் வைக்கும் வணிகம் தொடர்பான் செய்திகள் வணிகத்தோடு தொடர்புடைய மாந்தர்களையும் அம்மாந்தர்களின் பண்பாட்டையும் அறியத் துணைபுரிகின்றன.

## துணை நூல்கள்

1. இராமசுப்பிரமணியம்,வ.த (உ.ஆ)., சிலப்பதிகாரம், திருமகள் நிலையம், சென்னை, 2005.
2. மணி, பழ., நடைமுறை வணிகம், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை, 1973
3. கந்தசாமி,பு.சி., (ப.ஆ).,வணிகவியலின் அடிப்படைக் கூறுகள், தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம், சென்னை, 1981
4. மயிலை சீனி.வேங்கடசாமி, பழந்தமிழர் வாணிகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை, 1978
5. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு மக்களுக் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.


http://Creativecommons.org//license/by/4.0/.